THE MAHARANI

A pictorial Magazine for Girls' Schools and Home Read.

மஹாராணி.

புத்தகம் 2 இலக்கம் 1

ஜூன் 1888

JL
Y15 m211, M87
M87. 2.
161438

Let us live for our Children."—(FROEBEL).

அமிழ்தினுமாற்றவினிதே தம்மக்கள்
சிறுகையளாவிய கூழ். (நூல்) - குறள்.

THE MAHARANI.

A PICTORIAL MAGAZINE FOR GIRLS' SCHOOLS AND HOME READING.

COMMENCED ON THE ROYAL JUBILEE DAY-JUNE 1887.

மஹாராணி.

புத்தகம். 2.] ஜனவரீ 1888ஹ். [இலக்கம். 1.

CONTENTS.	Page.	அட்டவணை.	பக்கம்.
GOVINDASAMI—A STORY OF PEASANT LIFE—CHAPTER 5	169	கோவிந்தசாமி என்னும் குடியானவன்கதை (தொடர்ச்சி.)	169
GOOD WORDS FOR ALL... ...	174	பொதுநீதிகள்	174
THE ELEMENTS	175—176	பஞ்சபூதம்	175–176
THE LATE EMPEROR WILLIAM	177	ப்ருஷியாதேசத்துச் சக்கரவர்த்தி ...	177
HOW TO MAKE A HOME COMFORTABLE ...	177	குடும்பம் சுகமாயிருக்கச் செய்வதெப்படி ...	177
SHORT STORIES FROM THE HISTORY OF ENGLAND	178	இங்கிலாந்துதேச சரித்திரத்தில் தெரிந்தெடுத்த சிறுகதைகள்	178
A CONVERSATION BETWEEN A MOTHER AND HER DAUGHTER	182	தாய்க்கும் மகளுக்கும் நடந்த சம்பாஷணை...	182
TRAINING THE SENSES	183	பஞ்சேந்திரியங்களைப் பண்படுத்தல்	183
A TRIP TO HOLLAND...	184	உலாந்தாதேசம்	184
HOME TALKS ABOUT ANIMALS—THE BEAR	186	கரடியைப்பற்றிய சம்பாஷணை ...	186
HOW TO AVOID QUARRELS ...	187	சண்டைநேரா திருக்கச் செய்வதெப்படி ...	187
NEW PATTERNS OF EMBROIDERY	189	புதியமாதிரித் தையல்	189
FLOOR DECORATIONS	191	கோலம்	191
DIALOGUE	193	பெண்கள் சம்பாஷணை	193
A MISCHIEVOUS DOG	195	ஒரு துஷ்டநாய்...	195
USES OF HOT WATER... ...	195	வென்னீரின் உபயோகம்	195
PUZZLES AND RIDDLES ...	196	விடுகதை புதிர்முதலியன ...	196
NEWS	196	விருத்தாந்தம்	196

கோவிந்தசாமிகதை.

[illegible]நாயகன் தலையிலெழுத்தும் அவனுக்கு இடப்பட்டபேறும்.

(153-ம் பக்கத்தொடர்ச்சி.)

குழந்தைபிறந்த ஆறுவதுநாளில் பிள்ளைபெற்ற அறையிலேசெய்யப்படும் நோன்பு முக்கியமானது. குழந்தைகளைக் காப்பாற்றுந் தேவதையாகிய ஷஷ்டியென்பவளை அன்றுபகலெல்லாம் கும்பிடுவதுமன்றி, குழந்தையின் ஆயுள்பிரமாணமுதலிய ஜாதகபலன்களையெல்லாம் எவராலும் அழிக்கப்படாத எழுத்தில் பிரமதேவனால் அன்று ராத்திரிதான் அதன்நெற்றியில் எழுதப்படும். படைப்பவனாகிய பிரமதேவன் வரும்போது தன்கையோடு எழுதுகோலையும், மையையும் கொண்டுவருகிறதில்லை யாதலால், அவன் எழுதும்படி மையையும் எழுதுகோலையும். சூதிகாகிருகத்தின் வாசற்படியில் ஜாக்கிரதையாய்

161438

வைத்திருப்பார்கள். வரதனாவது அல[illegible]ன் அவன் தம்பிமார்களாவது [illegible]க்கு வைக்கப்பட்டவர்களல்ல. [illegible] அவர்களுக்கு எழுதவுந்தெரியாது; படிக்கவுந்தெரியாது; அவர்கள்வீட்டிலே மையுங்கிடையாது; லேகனியுங்கிடையாது. இந்தவிஷயத்தில் அந்த வீட்டிலுள்ள மற்றெல்லோரிலும் அலங்காரிக்கு அதிக கருத்துள்ளவளாதலால், அவள் இதற்கென்று முந்தியே அடுத்தவீட்டுக்காரன் ஒருவனிடமிருந்து மையையும் எழுதுகோலையும் இரவலாகவாங்கிப் பிள்ளைபெற்ற அறையின் வாசற்படியண்டை வைத்திருந்தாள். பிரமதேவன் இன்னகாலத்திலேதான் எழுதவருவானென்பது மட்டும் நிச்சயமல்ல; அந்தராத்திரியில் அவன் தனக்கிஷ்டமானபோது வரலாம்; அவன்வரும்போது யாரேனும் ஒருவர் விழித்துக்கொண்டிருக்கவேண்டியது அவசியமாதலால் பெரும்பான்மையாய் மருத்துவச்சிதான் அப்படிவிழித்துக்கொண் டிருப்பது வழக்கம். ஆதலினால் ரூபாம்பாளின் தாய் அன்று இரவெல்லாம் கண்ணைமூடவேயில்லை. அந்தவீட்டில் மற்றவர்களெல்லாருந் தூங்கினார்கள். அந்தவீட்டிற்குப் பெரியவளாகிய அலங்காரிமட்டும் அந்தக்குழந்தையின் தலையிலெழுத்து எப்படியாகுமோவென்ற விசாரத்தினால் உடனுக்குடன் விழித்துக்கொள்ளுவாள். அன்று ராத்திரி இன்னது நடந்ததென்று ரூபாம்பாளின் தாயாருக்குமாத்திரந் தெரியுமேயல்லாமல் வேறொருத்தருக்குந் தெரியாது; மறுநாட்காலையில் அன்றுராத்திரி நடந்ததையெல்லாம் கதையாகச் சொன்னாள். இந்தக்கதையைப் படிப்பவர்கள் நன்றாய் அறியும்பொருட்டு அதை அவள்வாய்மொழியின்படி நடந்தவண்ணஞ் சொல்லுகிறோம்:—

பாதிராத்திரியான பின்பு யாரோ நடந்துவரும் அடியோசை கேட்டது; மையையும், எழுதுகோலையும் வைத்திருந்த அறையண்டைதான் அதிகமாய்க் கேட்டது. அதன்பின்பு அந்த அடியோசையானது அங்கிருந்து அறையில் தாயண்டையுறங்குங் குழந்தையிருந்தவிடமட்டுங் கேட்டது. அதன்பின்பு, எவரேனும் கடிதமெழுதிக்கொண் டிருக்கும்போது கேட்கும் ஓசையைப்போலக் காகரவென்று எழுதுமொலிகேட்டது; ஆனால் அதை எழுதினவன் உருவத்தைமட்டுங் காணவில்லை. ஆனாலும் விளக்குவெளிச்சத்தில் பார்க்கும்போது குழந்தை உதடசையப் புன்னகை செய்வதைக்கண்டேன். பின்பு சற்றுநேரத்திற்குள்ளெல்லாம், போனவன் திரும்பிவரும் அடியோசைகேட்டது. உடனே நான் அந்த அறையின் கதவண்டை ஓடிப்போய் நின்றுகொண்டு, ஆண்டவனே! நல்லெழுத்தாய் எழுதினீரோ என்று கேட்டேன். பிரமதேவன் என்னை நன்றாயறிவார்; அவர் எனக்குப் பலமுறை பிரத்தியக்ஷம்; அவர் இன்னபடி குழந்தையின் நெற்றியிலே எழுதினேனென்று பலதரம் என்னோடு சொன்னதுண்டு; ஆனால் இது தேவரகஸ்யம். நான் இதைப்பற்றி ஒன்றையும் வெளியிடுவதுகூடாது; அப்படிக்கின்றி உங்களிடம் வெளியிட்டால் அவர் உடனே என்மேற் கோபங்கொண்டு என் கழுத்தைத் திருகிக் கொன்றுவிடுவார். அம்மா அலங்காரி! நீர் ஒன்றுக்கும் விசாரப்படவேண்டாம்; ஏனெனில், உமது பேரனுடைய நெற்றி நல்லது என்றாள்.

இப்படி ரூபாம்பாளின் தாயார்சொன்னதை வரதனும் அவன் தம்பிகளும் நம்பினார்களென்று நாம் நிச்சயமாய்ச்சொல்லக்கூடாது; ஆனால் அந்தவீட்டிலிருந்த பெண்டுகளெல்லாரும், பிரமதேவன் அந்தக்குழந்தையின் நெற்றியில் எழுதியதையெல்லாம் ரூபாம்பாளின் தாயோடு சொன்னானென்பதை நிச்சயமென்றே நினைத்தார்களென்பதிற் சந்தேகமில்லை.

குழந்தைபிறந்த எட்டாநாள் அஷ்டகௌரியம் (எட்டுச்சோழி) என்கிற நோன்பு கொண்டாடப்பட்டது. அன்றுமுழுவதும் அலங்காரியும், ஆநந்தியும் மிகவும் வருந்தி யுழைத்தார்கள்; அவர்களிருவரும நெல்லைப்பொரித்து அந்தப்பொரியால் சோதி செய்துகொண்டிருந்தார்கள். வரதன் அந்தக்கிராமத்துக் காசுக்கடைச்செட்டியாரிடமிருந்து அன்றைச் செலவுக்கு வேண்டியமட்டும் சோழிகளை வாங்கிக்கொண்டுவந்தான். அன்று அந்திப்பொழுதானதும் அவ்வூரிலுள்ள சிறுவர்களில் அநேகர் அந்தவீட்டுக்கு வந்தார்கள்; அப்படி வந்தவர்களின் பெரும்பான்மையோர் குடியானவன்வீட்டுப் பிள்ளைகளேயாம்; அந்தச்சிறுவர்கள் அத்தனைபேரும் வருமபோதே முச்சில்களையெடுத்து வீசிக்கொண்டு பிரசவித்த அறையண்டைவந்து, "எட்டுச்சோழி! ஆலங்காய்ச்சோழி! குழந்தைசுகமா?" என்று காதுசெவிடுபடும்படி பெருங்கூச்சலிட்டு நின்றார்கள். அலங்காரி மருத்துவக்கிழவி இவர்களைக்கண்டு அந்தச்சிறுபிள்ளைகள் சிரித்துக்கூத்தாடி, முச்சிலைக் கொட்டிச்செய்த வேடிக்கை கொஞ்சமல்ல. இவர்கள் இப்படிச்செய்துகொண்டிருக்கையில் ஒருகூடையில் சோழி, நெற்பொரி, வறுத்தபயறு இவற்றைக்கொண்டுவந்து முற்றத்தில் நின்றுகொண்டு தன்னைச் சூழ்நின்ற சிறுவர்கள் தலைமேலே வாரி இறைத்தாள். அப்பொழுது அந்தச்சிறுவர்கள் ஒருத்தர்மேலொருத்தர் விழுந்து ஒருத்தர்காலை ஒருத்தர்மிதித்து ஆவலோடு அவற்றைப் பொறுக்கிக்கொண்டசெய்த பரிகாசத்துக் களவில்லை. இவ்விதம் வரதன் மகளின் எட்டுச்சோழி நோன்பு வேடிக்கையாய் நடந்தது; இதனால் அலங்காரிக்குண்டான சந்தோஷத்திற்கெல்லையில்லை.

சுந்தரி பிள்ளைபெற்ற இருபத்தோராவது நாளில் சூதககிரகத்தினின்றும் வெளியேவந்து முதலாவது ஸ்நானஞ்செய்த பின்பு நைஷ்டிபூஜை செய்தானவுடன் அந்த வீட்டிலுள்ள எல்லாரோடுஞ் சேர்ந்திருந்தாள். சுந்தரிக்குப் புண்ணியாகவசனமாயிற்றென்றாலும், அவள் எப்பொழுதும் விடாமல் தன்குழந்தையைப் பாதுகாப்பதிலேயே அவள்காலமெல்லாஞ் சென்றுவிட்டதனால் வழக்கப்படி அவள்செய்துவந்த வீட்டுவேலைகளையெல்லாம் உடனே செய்ய வாய்க்கவில்லை. ஆயினும் அந்தக்குழந்தையினால் அவளுக்கு அத்தனை வருத்தமுமில்லை; அதன் அத்தையும் பாட்டியும் அதை அடிக்கடி பார்த்துக்கொண்டிருப்பார்கள்; அதன் தமக்கையாகிய மாலதி எப்பொழுதும் அதன்பக்கத்திலேயே உட்கார்ந்து அது தன்னுடைய சின்னக்கைகளையும் விரல்களையும் அசைப்பதைக்கண்டு மகிழ்ந்து கொண்டிருப்பாள். அந்தக்குழந்தைக்கு எவ்விதமான உடையுமில்லை. இங்கிலாந்துமுதலிய சீதள தேசங்களில் இருப்பதுபோல குழந்தைக்குச் சளி பிடித்துக்கொள்ளுமோவென்கிற விசாரம் வங்கநாட்டாருக்கில்லை; ஆதலினால் அந்தநாட்டார் தங்கள் குழந்தைகளையெல்லாம் வஸ்திரமில்லாமலே நிர்வாணமாய்விட்டு வைத்திருப்பார்கள். அவர்கள் குழந்தையின்மேல் கடுகெண்ணெயைத் தடவி வைத்திருப்பார்கள்; நெஞ்சாங்குழியிலும் நடுமார்பிலுந்தான் எண்ணெயை அதிகமாகத் தடவுவார்கள்; சுந்தரி குழந்தையை ஒவ்வொருநாளும் சிறிது நேரமளவும் ஒரு பலகையில்விட்டு வெயிலில் வைத்திருப்பாள். ஐரோப்பிய வைத்தியர் இதைக் கண்டால் திகைத்துப்போய்க் கைகளைத் தூக்கிக்கொண்டு, அவர்கள் குழந்தையைக்கொல்லுவதாகவே நினைப்பார். ஆனால் வங்கநாட்டிலுள்ள குடியானவர் வீட்டுப் பெண்களுக்கு இதன் அருமை நன்றாய்த் தெரியும்; இவ்வாறு குழந்தைப் பருவமுதற்கொண்டு வெயில்காயும்படி வைத்திருக்

தால்தான் பின்பு பெரியவர்களானபொழுது நன்றாய் வேலைசெய்யும்படி தேகத்தில் பலமுள்ளவர்களா யிருப்பார்களென்பதை அவர்கள் அறிவார்கள். குழந்தைப்பருவத்தில் வெளியில் போட்டுவைத்திருப்பது நல்லதே; ஏனெனில், இவ்வுலகத்திலுள்ள மிகவும் உஷ்ணமான நாடுகளிலொன்றாகிய வங்கநாட்டில் கடுவெளியில் உக்கிரமாய்க் காயும்போதும் அங்குள்ள குடியானவர்கள் தலையிலேதுணியில்லாமலிருக்கிறார்களென்றாலும் அதனால் ஒருநோயுமுண்டாகிறதில்லை. வெயில் காய்ந்து தலைகெட்டியாகி விடுவதனால் அக்கினிநக்ஷத்திரத்தின்போது ஆதித்தன் நெருப்பாய்க்கொளுத்துகையிலும் அது அவர்களுக்கு ஒன்றுஞ்செய்கிறதில்லை.

குழந்தை பிறந்து ஏழுமாதமாகிச் சம்பா அறுப்பறுத்தானதும் குழந்தைக்கு அன்னப்பிராசன நோன்பு செய்வார்கள். குழந்தைக்கு முதலில் அன்னத்தை ஊட்டுவதனால் இதற்கு அன்னப்பிராசனமென்று பெயர். செல்வமுடைய இந்துக்கள் தங்கள் குழந்தைகளுக்கு முதலில் அன்னத்தை யூட்டும்போது அதிகமான ஆடம்பரத்தோடு செய்வார்கள். வரதன் ஏழையாதலால் அவன் அதிகமாகச் செலவழிக்கக்கூடவில்லை; ஆயினும் அவன் வைதிகத்திலே சிரத்தையுள்ளவனாதலாலும், தன்முன்னோர்கள் செய்துவந்த நோன்புகளையெல்லாம் விடாமற் கொண்டாடுவதில் பற்றுள்ளவனாதலாலும் அவனாலியன்றமட்டும் அதற்கென்று சிறிது செலவழிக்கவேண்டியது அவசியமென்று நினைத்தான். முதலில் ஷஷ்டிதேவதைக்குப் பூஜைசெய்தார்கள்; அதன்பின்பு வரதன் தனது பந்துக்களில் சிலரைமாத்திரம் அழைத்துவைத்துக்கொண்டு அவர்களுக்கு விருந்திட்டான். வங்கநாட்டில் விருந்திட வேண்டுமானால் அப்படிக்கொன்றும் அதிகமாகச் செலவாகாது:—சோறு, பருப்பு, உருளைக்கிழங்கு, கத்தரிக்காய் கீரை இவற்றைச்சேர்த்துச் சமைத்தகறி, கடுகெண்ணெய், புளி இவற்றோடு தனித்தனியே சமைத்த மீன்கறி, தயிர் இவைகளேயாம். விருந்துசாப்பிடவந்தவர்கள் பெரிய அறையின் தாழ்வாரத்தில் இரண்டுவரிசையாகத் தரையிலே உட்கார்ந்தார்கள். அந்நாட்டில் பெண்களும் புருஷர்களும் ஒரேபந்தியில் உட்காராமல் தனித்தனியே சாப்பிடுவது வழக்கம். ஒவ்வொருவருக்கும் வாழையிலைபோட்டு, இடது பக்கத்தில் பித்தளைபாத்திரத்தில் தாகத்துக்குத் தண்ணீரும், வலதுபக்கத்தில் உப்பும் வைக்கப்பட்டது. அங்கே பந்திபரிமாறவந்த அலங்காரி ஒரு பெரிய பாத்திரநிறைய அன்னத்தை எடுத்துக்கொண்டு வந்து அங்கே வந்திருந்தவிருந்தினர் ஒவ்வொருவர் இலையிலும் பரிமாறினவுடன் பருப்பை யெடுத்துக்கொண்டு வந்து அன்னத்தின்மேல் விட்டாள். பின்பு அவள் கூட்டுக்கறியைக் கொண்டுவந்து இலையிலிட்டாள். உடனே எல்லோரும் உண்ணவாரம்பித்தார்கள். இவ்வாறு அவர்கள் உண்ணும்போது அவர்களுக்கு அதிக உயர்ந்த உணவாகிய புளியிட்டமீன்கறியைக் கொண்டுவந்து பரிமாறினாள். அன்று வரதன்வீட்டுக் குளத்தில் ஒவ்வொன்றும் பத்துப்பன்னிரண்டுசேருள்ள இரண்டு பெரியமீன்கள் பிடிக்கப்பட்டமையால் அந்த விருந்தில் மீன்கறி மிகுந்திருந்த தாகையால் எல்லோருக்கும் கொண்டாட்டம். வரதன் தன் மகனுக்குச்செய்யும் அன்னப்பிராசன நோன்பின் மகிழ்ச்சியால் வந்த விருந்தினரை வேண்டியமட்டும் வயிறார உண்ணவேண்டுமென்று உபசரித்தான். அலங்காரி தனக்குப் பேரன்பிறந்தானென்ற மகிழ்ச்சியினால் மெய்மறந்து அவர்கள், "அம்மா; வேண்டாம வேண்டாம், போதும் போதும் இனிமேல் போடவேண்டாம் நீர்

போட்டதில் பாதியையுண்ணவும் எங்களாலாகாது" என்று கெட்டியாய் இரைந்து சொல்லியும் கேளாமலே அவள் மீன்கறியை இலை நிறைய வாரி வாரிக் குவித்துவிட்டாள். அவர்களெல்லோருஞ் சாப்பிட்டானபின்பு ஒருவர் இலையிலாவது ஒரு அணுவளவாவது மிஞ்சவில்லை. கடைசியில் அலங்காரி ஒரு பெரிய பானைநிறையத்தயிரை யெடுத்துக்கொண்டு வந்தாள். வந்ததயிர்கெட்டியாயிராததினால் அது இலையில் நில்லாதென்றும், அதையுண்பது வருத்தமென்றும் யாரும்நினைக்கக்கூடும். ஆயினும் சாமர்த்தியமுள்ள அந்தவிருந்தினர் இலைக்கு நடுவே சோற்றினால் வட்டமாகத் தொட்டிகட்டவே அதில் அலங்காரிதயிரை வார்க்கும்போது அது அப்படியேநின்றுவிட்டது. எல்லோருஞ்சாப்பிட்டாயிற்று. உண்டதினால் வலதுகைஎச்சலாய் விட்டதனால்ஒவ்வொருத்தரும்தன் இடதுகையினால் பித்தளைச் சொம்பையெடுத்து அது எச்சிலாய்போகாதபடி அதை உதட்டுக்குமேலே தூக்கித் தாகத்துக்குச் சாப்பிட்டார்கள். அதன்பின்பு அவர்கள் தங்கள் வாயையும் கையையும் அலம்புவதற்காகக் குளத்திற்குவிரைந்து சென்றார்கள்; கையலம்பிவிட்டுவந்ததும் தாம்பூலம் போட்டுக்கொண்டார்கள்; அந்நாட்டார் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு இவற்றோடு கொத்துமல்லிவிதை, கடிச்சை, கிராம்பு, கருவாப்பட்டை, ஏல முதலியவற்றை கலந்து போட்டுக்கொள்ளுவார்கள். இதானதும் அத்தனைபேரும் முற்றத்தில் விரித்திருந்த பாயில் உட்கார்ந்து வேண்டியமட்டும் திருப்தியுண்டாமளவும் உக்காக் குடித்தார்கள். வந்திருந்தவர்கள் அக்குழந்தைக்கு அன்விந்தசாமியென்று நாமகரணஞ் செய்தார்கள். விருந்தினரெல்லாம் அந்தக்குழந்தையைப்பலவாறு வாழ்த்தினார்கள்.

குழந்தைகளைக்காக்குந்தேவதை.

குழந்தைகளைக்காக்குந் தேவதையாகிய ஷஷ்டியைப் பூஜைசெய்வதைப்பற்றி முந்திய அத்தியாயத்திலேயே சொல்லியிருக்கிறோம். குழந்தைகளுக்குண்டாகும் பலவகையான ஆபத்துகளினின்றும் அவர்களைக் காப்பாற்றுபவள் ஷஷ்டிதேவதையாதலினால் அந்த தேவதையைப்பற்றிச் சிறிதுசொல்லுகின்றோம்.

இந்த அண்டமானது ஆணுருவும் பெண்ணுருவங்கொண்ட எந்தமூலப் பிரகிருதியினால் அடைக்கப்பட்டிருக்கிறதோ அந்தப்பரம்பொருளின் ஆறிலொரு கூறுக்குத்தான் ஷஷ்டியென்று பெயர். ஷஷ்டிபூஜையைப்பற்றி அடியில் கண்டவாறு சொல்லப்பட்டிருக்கிறது:— ஸ்வாயம்புமநுவுக்குப் பிரியவிரதன் என்றோர்பிள்ளை. அந்தப்பிள்ளை உற்சாகத்தோடு தனியேயிருந்து வெகுகாலமளவும் அருந்தவஞ்செய்து கொண்டிருந்தான். இறுதியில் அவன் பரமதேவனது வேண்டுகோளால்மணம்புரிந்து கொள்ளவேண்டியதாயிற்று. அவன் கல்யாணஞ்செய்து வெகுகாலமளவும் பிள்ளையில்லாதிருந்ததினால் அவன் காசியப மகரிஷியினிடஞ்சென்று புத்திரகாமேஷ்டியாகஞ் செய்துவிக்கவேண்டுமென்று அவரைப் பிரார்த்தித்தான். அந்தமகரிஷி அவ்வாறே அந்தயாகத்தைச் செய்து அது முற்றுப் பெறுகையில் அதன் சேஷத்தை அவன் மனையாளிடங்கொடுத்து உண்ணச் சொன்னார். அவள் அதை உண்டதுமுதல் கர்ப்பவதியாகிப் பத்தாவதுமாதத்தில் உருக்கிவிட்ட தங்கம்போல மன்மதாகாரமான ஓர்புத்திரனைப் பெற்றாளெனினும் அது பிறக்கும்போதே மரித்துவிழுந்தது. பிரியவிரதன் அதைக்கண்டு துன்பமடைந்து அதைத் தகனஞ்செய்தற் பொருட்டு முதுகாட்டுக்குக் கொண்டுபோய்ச் சிதையிலேற்றினான். அப்

பொழுது அவன் தலைக்குநேரே ஆகாயத்தில் கோடைகாலத்துச் சூரியனைப்போலச் சுடரொளிகொண்ட மகாரூபவதியான ஓர் தேவதை பிரசன்னமானாள். அந்தத்தெய்வமகளை அரசன்கண்டு ஆனந்தபரவசனாகி தாயே! நீர் யாரென, அவள், நான் கார்த்திகேயன் மனைவி; நான் எந்தக்குழந்தையையும் தாயினும் பதினாயிரமடங்கு மேலாக அன்போடாதரிப்பவள்; நான் மூலப்பிரகிருதியின் ஆறிலொரு பங்காதலால் என்னை இவ்வுலகிலுள்ளோர் ஷஷ்டியென் பார்களென்று சொல்லி அந்தக்குழந்தையைச் சிறையினின்று மெடுத்துவைத்துக்கொண்டு உயிர்ப்பித்து அதைத் தன்னோடு கூடச் சுவர்க்கலோகத்துக்கு எடுத்துக்கொண்டு போகப்பார்த்தாள். அரசன் இதைக் கண்டு அச்சமுற்றுத் தூண்போல நின்று அந்தத்தேவதையைப் பலவாறு தோத்திரஞ்செய்து தன்பிள்ளையைத் தன்னிடங்கொடுக்கும்படி பிரார்த்தித்தான். அவன்செய்த வந்தனை வழிபாட்டிற்காக அந்தத்தேவதை அவனிடத்தில் அன்புகூர்ந்து, ஸ்வாயம்புமனுவின் மைந்தா! நீ மூன்றுலோகங்களை ஆண்டுவருகிற பெரும்புகழுடையவன்; நீ உன்கால முழுமையும் எனது புகழை எங்கும் பரவச்செய்வாயாயின் இந்தக் குழந்தையை உன்னிடங் கொடுத்துவிடுவேனென்றாள். அவ்வண்ணஞ் சொல்லக்கேட்ட அரசன் நல்லதென்று உடனே அதற்கிணங்கித் தன்மகனை எடுத்துக்கொண்டு சந்தோஷமுடையவனாகி அரண்மனைக்குச்சென்றனன். ஷஷ்டிதேவதை தன் புத்திரனைப் பிழைப்பித்ததற்காக அந்நன்றியை மறவாதிருக்கும்படி ஆடம்பரத்தோடு அவளைப் பூஜைசெய்துகொண்டுவந்தான். அன்றுமுதல் ஷஷ்டிபூஜையானது இந்து தேசத்தில் எங்கும் பிரசித்தமாயிற்று. பிள்ளையில்லாதமனையாள் ஒவ்வொருத்தியும் மாதந்தோறும் சுக்லபக்ஷம் ஷஷ்டியிலும், பிள்ளைபெற்றபின்பு குழந்தை பிறந்த ஆறுவது நாளிலும், இருபத்தோராவது நாளிலும், அன்னப்பிராசனத்தின்போதும் ஷஷ்டிபூஜை செய்வதுண்டு.

பொது நீதிகள்.

ஆலயத்துக்குப்போவதேன்?

சிலர் காலாற உலாத்திவரப்போகிறார்கள்.

சிலர் சந்தோஷமாய் பேசவும் சிரிக்கவும் போகிறார்கள்.

சிலர் நேசர்களைச் சந்திக்கப்போகிறார்கள்.

சிலர் வேலையில்லாமல் காலத்தைக்கழிக்கப்போகிறார்கள்.

சிலர் மனோவிகாரங்கொண்டு போகிறார்கள்.

சிலர் செய்யும் குற்றத்தைமறைக்க கபடவேஷம் போட்டுப்போகிறார்கள்.

சிலர் வியாபாரத்தைக் குறித்துப்போகிறார்கள்.

சிலர் நடையுடை பாவனைகளைப் பார்க்கப்போகிறார்கள்.

சிலர் காற்றோட்டமாய்த் தூங்கப்போகிறார்கள்.

சிலர் பிச்சையெடுக்கப்போகிறார்கள்.

சிலர் பொருள் அபகரிக்கப்போகிறார்கள்.

விவேகிகளோ கடவுளைத் தொழவேண்டுமென்றே போகிறார்கள்.

1. புருஷனிடத்தில் சாவித்திரிபோல்நடந்த பதிவிரதை.
2. பிள்ளையிடத்தில் சந்திரமதியைப்போல் அன்பு பாராட்டிய தாயார்.
3. பேரப்பிள்ளைகளிடத்தில் குந்திதேவியைப் போல் உருக்கமுள்ளபாட்டியார்.
4. பெரியோர்களிடத்தில். அனசூயையைப்போல் பக்திபண்ணவள்.
5. விருந்தினரிடத்தில் த்ரௌபதியைப்போல உபசாரஞ்செய்தவள்.
6. ஏழைகளிடத்தில் கௌசல்யாதேவியைப் போல இரக்கமுள்ளவள்.
7. கடவுளிடத்தில் சபரியைப்போல் தேவபக்தியுள்ளவள்.

அன்பான சிநேகிதனை ஆபத்திலே அறி.

பஞ்சபூதங்கள்.

(இதற்குப் படங்களை முன்பக்கத்தில் காண்க.)

இராகம் - புன்னாகவராளி, ஏகதாளம்.

பஞ்சபூத வகையினைத்தும்
பகுத்துச் சொல்லுகிறேன் - நீங்கள்
பக்ஷமாகக் கேட்பீரென்று
மனதி லெண்ணுகிறேன்.

பிருதிவு அல்லது - மண்.

நவரத்னங்களும் பாஷாணம்கந்தகம்
காலு திக்கிலுங்கண்டு - எடுப்பர்
நாவிற்ருசியையுண் டாக்கும்உப்பும்நல்ல
பாத ரசமும்உண்டு.

மண்ணிருப்பதனால் அதன்மேலேநின்று
வல்லமை பேசுகிறோம் - பல
வர்த்தகமும்சுபா சுபங்களும்செய்து
மகிழ்ச்சி கொள்ளுகிறோம்.

மண்ணேபிறப்பு இறப்புக்குமிட
மாக யிருக்குதுபார் - அந்த
மகாதேவன் அருளுக்குக்கை
மாறு செய்பவர்கள்யார்.

அப்பு அல்லது - ஜலம்.

அப்புவென்னும் ஜலத்தினலுண்
டாகும் அதிசயம் - கேளும்
அதன்பெருமையை அறிந்துகொண்டால்
ஆருக்கு மில்லைபயம்.

நீரேபிராணு தாரமென்றுமுன்
னோர்கள் சொன்னசொல்லை - நாம்
நினைத்துப்பார்க்கில் ஜீவராசிகட்
கதைவிட வேறேயில்லை.

தாமரைஆம்பல் கொட்டிநெய்தல்
ஜலத்தில் பூர்க்குமே - அங்குள்ள
சகலவிதமச் சங்கள்சிலர்க்கு - சந்
தோஷமுண் டாக்குமே.

ஜலத்தைத்தள்ளினோர் தாயைத்தள்ளினோர்
தாணியில் யாரோ - எந்த
சராசரமும் ஜலத்தாலேதழைத்
திருக்க நீபாரோ.

தேயு அல்லது - அக்கினி.

தேயுவென்னும் அக்கினிமெத்த
சிறந்த பொருளது - நன்றாய்த்
தேர்ந்தபெரியோர் கண்டிருப்பார்கள்
நாம்சொல்லப் போகாது.

அன்னமயம் பிராணமயம்
என்று சொன்னரே - அந்த
அன்னத்தைவேகச் செய்யாவிட்டால்
என்ன செய்வாரே.

உடம்பினிற்கு டிருக்குமளவும்
உயிரும் வாழ்ந்திருக்கும் - இந்த
உடலைவிட்டு அக்கினிபிரிந்தால்
கட்டையாய் வீழ்ந்திருக்கும்.

உணவுக்குத்தக்க படியெல்லாஞ்செய்து
உண்ணச் செய்யுதே - அதற்கு
ஒப்பிலாத அக்கினிமகத்வம்
உனக்கே தெரியுதே.

வாயுவு அல்லது - காற்று.

வாயுவென்னுங் காற்றைப்பார்த்தால்
உருவமே யில்லை - மேலே
வந்துபடும்போது கண்டசுகத்தினைச்
சொல்ல வாயில்லை.

மூச்சொடுங்கினால் பேச்சொடுங்குமென்னும்
மொழிகேட் டிருப்பீரோ - ஜெகம்
முழுதும்அசைந்துக் கொண்டிருப்பதையும்
கண்ணால்பார்த் திருப்பீரே.

தோல்துருத்தியில் காத்துப்பூந்திருக்கும்
ருதறி யாமலே - நம்மைச்
சும்மாப்போராடு தையோபோராசை
தொகுத்துப்பார் நூலாலே.

காற்றுமழைக்கும் பயப்படென்றசொல்லை
கற்றவர் சொல்லக்கண்டோம் - வரும்
கனத்தமப்பும் மின்னல்மின்னும்பூச்சியும்
காற்றினால் கண்டுகொண்டோம்.

ஆகாசம்.

ஆகாசமென்ப தளவுக்கெட்டாதே
யறிவுக்கும் எட்டாதே - இதை
அறிவாராரோ அறிந்தவராரோ
அதுவுந் தெரியாதே.

ப்ருஷியா தேசத்துச் சக்கரவர்த்தி.

சக்கரவர்த்தியாகிய உல்லியம் என்பவர் தமது ராஜதானிக்கு வெகுதூரத்திலுள்ள ஓர் நாட்டிற்குப் போயிருக்கும்போது, அங்குள்ள ஓர் கிராமபாடசாலை மாணுக்கர் அவரை உபசரித்தார்கள். அப்பொழுது அந்தச் சக்கரவர்த்தி அங்கிருந்த தாம்பாளத்திலின்றும் ஒரு கிச்சிலிப்பழத்தை யெடுத்துத் தமது கையிலே வைத்துக் கொண்டு, சிருஷ்டிவர்க்கத்துள் இது எதைச்சேர்ந்தது என்று கேட்க, அங்கிருந்த அழகான ஒரு சிறுபெண் அவரை நோக்கி, ஐயா! இது மூலவர்க்கத்தைச்சேர்ந்தது என்றாள். பின்பு அவர் தமது பைக்குள்ளிருந்து ஒரு மொகராவை யெடுத்துக் காட்டி, குழந்தாய்! இது எந்தவர்க்கத்தைச் சேர்ந்தது சொல்லென, அந்தச்சிறுமி, ஐயா! இது தாதுவர்க்கத்தைச் சேர்ந்ததென்றாள். அவர் மீண்டும் அந்தக் குழந்தையைப்பார்த்து, அப்படியானால் குழந்தாய்! நான் எந்தவர்க்கத்தைச் சேர்ந்தவன், உனக்குத் தெரியுமா என, நல்ல புத்திசாலியான அந்தக்குழந்தையானது முகம்வாடி, சக்கரவர்த்தியை ஜந்துவர்க்கத்தில் சேர்ந்தவரென்று சொன்னால் அவருக்கு அதனால் எங்கே யொருகால் கோபமுண்டாகுமோ வென்று அஞ்சி, அதற்கு எவ்வாறான உத்தரஞ்சொல்லலாமென்று சற்றே யோசித்து நிற்கையில், அதன்மனதில் பளிச்சென்று ஓர் யுக்தி தோன்றி, "ஐயா! நீர் தேவவர்க்கத்தைச்சேர்ந்தவர்" என்று சொல்லியது. அவர் இதைக்கேட்கவே மனம் உருகி அவருடைய கண்ணில் நீர்பெருகியது. உடனே அவர் மகாபக்தியோடு தமது கையை அந்தக் குழந்தையின் தலைமேல் வைத்து, அம்மா! கடவுளின் பேரருளினால் நீசொன்னபடியே அவர் திருநாட்டில் எனக்கும் கொஞ்சம் இடங்கிடைப்பதாக வென்றார்.

சுகமாயிருக்கச் செய்வதெப்படி?

குழந்தைகளைப் பெற்றோர் நல்லவழியில் நடக்கும்படி செய்வதற்கேற்ற இடம், வீடு. தகப்பன் வெளியேபோய்ப் பாடுபட்டுத் தேடிக்கொண்டு வந்து போடுவதைத் தாய் சிந்தாமற் சிதறாமல் கண்ணுங்கருத்துமாய்ப் பார்த்துவருகிறாள்; ஆதலினாலேதான் அவளை வீட்டின்தலைவி யென்கிறோம். வீடென்றால், அதில் கூடம், மடைப்பள்ளி இவையேயன்றி, வீட்டிலுள்ளவர்களுக்குத் தக்கபடி பள்ளியறைகளு மிருக்கவேண்டும். வீடுசிறிதாயிருந்து படுக்கையறை ஒன்றிருந்தாலும் அது சுத்தமாயிருக்கவேண்டும்.

தாய்செய்யும்நன்றி:—நல்லதாய் தன்குடும்பத்தாருக்கு பசியாற உணவை யளிக்கவேண்டும். வீட்டில் சிறிதேனும் அசுத்தமில்லாதபடிக்கும், நன்றாய்க் காற்றோட்டமிருக்கும்படிக்கும் பார்த்துவரவேண்டும். வீட்டிலுள்ளவர்களின் வஸ்திரங்கள் கிழிந்திருக்குமானால் அவற்றை நன்றாய்த் தைக்கவேண்டும். சுறுசுறுப்பாக வீட்டிலுள்ள எந்தவேலைகளையும் பதறாமற் செய்யவேண்டும். வீட்டில் எந்தெந்தப் பண்டங்களை எங்கெங்கே வைக்கவேண்டுமோ அந்தக் கிரமந்தப்பாமல் அவற்றையெல்லாம் ஒழுங்காய் வைத்திருக்கவேண்டும். தன் மக்களையும் அவ்வாறே செய்துவரும்படியாகப் பழக்கவேண்டும். இப்படி தாய்செய்துவருவதனால் இவை அனைத்தும் தம்குடும்பத்தின் நன்மைக்கென்பது அவர்களுக்கு நன்றாய்ப் புலப்படும்.

தந்தைசெய்யும் நன்றி:—தந்தை நல்லவராயிருந்தால், தம் குடும்பத்தை நன்றாக வைத்திருப்பதினாலேயே பேரானந்தமடைவார். அந்தக் குடும்பத்தில் ஏதாவதொன்று செய்யப்படவேண்டுமானால், அவர் மனைவியும், மக்களும் "தந்தை, வீட்டுக்கு வரும்போது அதைச் செய்வார்"

என்று சொல்வதை நாம் பலவாறு கேட்கிறோம். வீட்டில் தொட்டிலை மாட்டவோ, கட்டிலைப் பூட்டவோ, மாட்டைக் கட்டவோ, ஆட்டை ஓட்டவோ எந்தவேலையையும் தகப்பன்றான் செய்யவேண்டும். நல்ல தந்தையானவன் தனக்கு ஒழிந்த நேரங்களில் நல்ல புத்தகங்களிலே சொல்லப்பட்டிருக்கிற அருமையான விஷயங்களை யெடுத்துத் தன்மனைவி மக்களுக்கு அறிவு விருத்தியுண்டாகும்படிப் படித்துக்காட்டுவான்; அன்றியும் அவர்கள் வீட்டுவேலைகளைச் செய்யும்போது அவர்களுக்கு விளையாட்டுப்போல தான் சிறுவனாயிருந்தகாலத்தில் நேர்ந்த பல விஷயங்களை யெடுத்துப் பேசுவான். தன் மக்களுக்குக் கல்வி யறிவூட்டுவதில் எப்பொழுதும் கருத்தா யிருப்பான். இவ்வாறு பெற்றோர் தம்மக்களுக்கென்று பாடுபடுவார்களேயானால் அவர்கள் தங்களுக்குப் பருவம்வந்து பெரியவர்களான காலத்தில் இவ்வுலகில் நல்லவர்களென்று பெயரெடுப்பது எளிதாகும். இவ்வாறு பழகியவர்கள் பெரியவர்களானபோது தாங்கள் சிறுவயதில் செய்ததை நினைக்கும்போதெல்லாம் இன்பமாயிருக்கும்.

மக்கள்செய்யும் நன்றி:—குழந்தைகள் தங்கள் தாய்தந்தையருக்குச்செய்யும் நன்றி ஒன்றல்ல. மூத்தபிள்ளைகள் தகப்பன்செய்யவேண்டிய வேலைகளை யெல்லாம் தாங்களே செய்யப் புறப்படலாம். அப்படியே மூத்தபெண்கள் தங்கள் தாய்க்குத் துணையாகி அவள் செய்யவேண்டிய வேலைகளிற் பலவற்றைத் தாங்களே செய்யலாம். ஒருதாய்வயிற்றிலே பிறந்தவர்கள் ஒருவருக்கொருவர் ... ஒருவருளத்துக் காமரைப்போலிராமல் எலியும்பூனையும்போலச் சண்டையிடுவது மிகவுந் தீயது. தங்கள் தங்கைகளாயினும், தம்பிகளாயினும் அழுதால் அவர்களுக்கு வேடிக்கையாகக் கதைசொல்லிப் பாட்டுப் பாடி அவர்களைச் சமாதானப்படுத்தவேண்டும். வீட்டில் ஏதேனும் கலகமுண்டானால் "நிணற்றுத் தவளைக்கு நாட்டுவளப்பமேன்" என்று குழந்தைகள் அதைக் காதிலே போட்டுக்கொள்ளாமலே யிருக்கவேண்டும். பெரும்பான்மையாய்ச் சிறுகுழந்தையில்லாதவீடு எங்குமரிது. குழந்தையிருப்பதே வீட்டுக் கழகாகும். சிறுகுழந்தைகளின் மழலைமொழிகளைக் கேட்பது யாவருக்கும் பேரானந்தமாயிருக்கும்.

"குழலினிதியாழினி தென்பதம்மக்கண்
மழலைச்சொற் கேளாதவர்."

தந்தை வெளியிலிருந்து அந்திப்பொழுதில் வீடுவந்து சேர்ந்தவுடன் தன்குழந்தையை யெடுத்து மடிமேல்வைத்து உச்சிமோந்து அதனோடு கவலையற்று விளையாடுவதைப்போல மனதுக்கு இனிமையானது வேறுண்டோ? கடவுளின் பேரருளால் நன்மக்களைப் பெற்றுச் சுகமாய்வாழ்ந்திருப்பதே இல்வாழ்வான் பெறும் பேறும்.

இங்கிலாந்துதேச சரித்திரத்தில்

தெரிந்தெடுத்த

சிறுகதைகள்.

வெகுகாலத்திற்கு முன்னே இங்கிலாந்துதேசத்தில் ஒருராஜா இருந்தான். அவனுக்கு உல்லியம் என்று பெயர். முதலாவது உல்லியம் என்றும் அவனுக்குப் பெயர் வழங்குவதுண்டு. ஏனென்றால் அவனுக்குமுன்னே உல்லியம் என்கிற பெயரையுடைய அரசன் வேறொருவனுமில்லை; அந்தப் பெயர்பெற்ற ராஜாக்களில் இவன்தான் முதல்வன். இந்த அரசன் இங்கிலாந்தின்மேல் படையெடுத்துவந்து அதற்குமுன் அங்கிருந்த ஹாரல்டு என்னும் அரசனை ஜயித்துத் தானே இங்கிலாந்துக்கு அரசனானபடியால் அவன் வெற்றிபெற்ற உல்லியம்என்னும் விருதுப்

ஜயசீலனுன
முதலாம் உல்லியம்
பிறந்த ௵ 1027.
இறந்த ௵ 1087.

இவ்வரசன்
இங்கிலாந்து தேசத்தை
வென்று
அரசாட்சிசெய்தது
20 ௵ காலம்.

பெயர் பெற்றான். அவனுக்கு ரோபர்ட்டு, உல்லியம், ஹென்ரி என மூன்று பிள்ளைகள். ரோபர்ட்டு என்பவன் தைரியமும் உதாரகுணமும் உள்ளவன். ஆனாலும் அவனுக்கும் துணிச்சலும் முன்கோபமும், மூர்க்ககுணமும், அதிகம்.

இரண்டாவதுபிள்ளை உல்லியமென்பவனிடத்திலோ ரோபர்ட்டினுடைய நல்லகுணங்களில் ஒன்றாயினும் சிறிதும் இல்லை; கெட்டகுணங்களே மிகவும் அதிகமாயிருந்தன. அவன் சூதும் கபடமும் உள்ளவன்; அதனால் ரோபர்ட்டைப்போலத் தகப்பனுக்குமனவருத்தமான காரியமொன்றும்செய்யத்துணியவில்லை.

ஹென்ரி என்னும் மூன்றாவது பிள்ளையோ மிகவும் நல்லவன், தகப்பனுக்கு அடங்கினவன். இஷடர்களுக் கெல்லாம் தன்னாலான உதவி செய்பவன். அப்படியே படிப்பில் மிகவும் கவனமுள்ளவன். அதனால் அவனை யெல்லாரும் நல்ல படிப்பாளியென்று பெயரிட்டுக் கூப்பிட்டார்கள்.

மூத்தவனான ரோபர்ட்டு கெட்டகுணமுள்ளவனாயிருந்தானல்லவா? அதனால் அவனுக்கு உண்டான துன்பத்தைச் சொல்லுகிறேன்கேள்.

ஒருநாள் ரோபர்ட்டு,உல்லியம்,ஹென்ரி, இந்த மூன்றுபேரும் தம் தகப்பனரு

டைய கோட்டை வாயிலின் முன்புறத்தில் விநோதமாக விளையாடிக்கொண்டிருந்தார்கள். அப்போது பலவிதமான முரட்டாட்டங்களை ஆடினார்கள்.

ஒருவர்க்கொருவர் மிகுந்த கோபமுண்டாகும்படியாக அப்படி விளையாடிக்கொண்டிருக்கும்போது ஹென்ரி ஒரு பெரிய குடம்நிறையத் தண்ணீர் கொண்டுவந்து ரோபர்ட்டின் தலையில் கொட்டினான்; அதனால் அவனுடைய உடம்பும் அழகான உடுப்பும் நனைந்துபோயின. அதைக்கண்டபோது ரோபர்ட்டுக்கு மிகுந்த கோபமுண்டாயிற்று. இப்போது வயதுவந்தவனாகவும் எல்லாருக்கும் பெரியவனாகவுமிருப்பதனால் அவன்விவேகமும் பொறுமையுமுடையவனாயிருக்கவேண்டுமெல்லவா? அப்படிக்கில்லாமல் கோபத்தினால் உடனே கத்தியைக் கையிலெடுத்துக்கொண்டு தன் சகேதரர்களை காயப்படுத்தப்போனான்.

இதற்குள் அந்தக்கூச்சலைக்கேட்டுத் தகப்பன் ஓடிவந்து அவர்களுடைய சண்டையை விலக்கிவிட்டு, ரோபர்ட்டு செய்யத்துணிந்தது மிகவும் பொல்லாதகாரியமென்று தெரிந்து அவனைநன்றாகத் தண்டித்தான்.

இப்போது ரோபர்ட்டு செய்யவேண்டிய காரியமென்ன? தான்செய்தது குற்றம்தானென்று சொல்லி மன்னிப்பு கேட்டுக்கொண்டு, தான்தெரியாமல் அப்படிசெய்துவிட்டதற்குப் பரிதாபப்படவேண்டுமல்லவா? அப்படியில்லாமல் இன்னும் அதிகமாய்க் கோபங்கொண்டான். அதன்மேல் தன்தகப்பன் மற்ற இரண்டுபிள்ளைகளிடத்திலும் பக்ஷபாதமாயிருக்கிறானென்று சொல்லி அன்றுஇராத்திரி அரண்மனையைவிட்டு வெளியில் ஓடிப்போய்விட்டான். இளங்கன்று பயமறியாது என்பதுபோல இவன் காளைப்பருவமானதால் நன்மைதிமைதெரியாமல் மதிகெட்டு குடிகளைத்தகப்பனுக்கு விரோதமாய்க் கலகம்செய்யும்படி தூண்டிவிட்டு, தன்னைப்போன்ற சில முரட்டுப் பிள்ளைகளோடு சேர்ந்துகொண்டு இன்னும் என்னகலகம் செய்யலாமென்று நாடெங்கும் ஓடித்திரிந்தான்.

இப்படிப்பட்ட சிலவிஷமங்கள் செய்து வருகையில் இவன் ஒருசமயத்திலே எவரும் செய்வதற்கு மனந்துணியாத கொடியதீச்செயல் ஒன்றுசெய்வதற்கு இருந்தான், அதாவது தன் சொந்தத்தகப்பனையே கொலைசெய்யநினைத்தான். ரோபர்ட்டு எவ்வளவு துஷ்டனாகத்தானிருந்தாலும், இந்தக் கொடிய செய்கை அவன் மனதினாலேகூட நினைக்கத் தக்கதன்று; ஆயினும் அவன் சிறிதும் விவேகமின்றி அயோக்கியமான நடக்கையுள்ளவனாயிருந்ததனால் மதிமயங்கி இத்தன்மையான கெட்ட எண்ணத்துக்குள்ளானான்.

இங்கே ஒரு விசேஷமுண்டு அந்தக் காலங்களில் அரசர்களானாலும், பிரபுக்களானாலும் எப்போதும் உடம்புமுழுதும் மறைய கவசம் அணிந்துகொண்டேயிருப்பார்கள். கவசமாவது இரும்பு அல்லது பித்தளைக்கம்பிகளால் பின்னப்பட்ட ஜீரா அக்காலங்களில் சத்துருபயம்மிகவும் அதிகமாகையால், சத்துருக்கள் விடும் பாணங்களால் தமக்கு ஒருபோதும் உபத்திரவம் உண்டாகாதிருக்கும்படி அவர்கள் அப்படி கை கால் தலை முகம் உடம்பு எல்லாவற்றையும் கவசத்தினால் மூடிக்கொண்டிருப்பார்கள்.

அவர்கள் கவசம் தரித்து கொண்டிருக்கும்பொழுது முகங்கூட நன்றாய் மூடப்பட்டிருக்குமாதலால் அவர்கள் இன்னாரென்றே அடையாளம் தெரியாது. இப்படி

அன்று எழுதினவன் அழித்து எழுதுவானா?

யிருக்க ஒருசமயத்தில் கவசம்தரித்துகொண்டு அரசன் குதிரைசவாரி வரும்போது ரோபர்ட்டு அவனைப்பார்த்து அவனை அடிக்கும்படி எதிர்த்துப்போனான்.

கவசம் தரித்திருந்தபடியால் அவன் அரசனென்பது ரோபர்ட்டுக்கு நன்றாய்த்தெரியவில்லை; ரோபர்ட்டும் கவசம்தரித்திருந்தபடியால் அவன் இன்னானென்று அரசனுக்கும் தெரியவில்லை; அப்படியே அவர்கள் வெகுநேரம் சண்டை செய்தார்கள். ரோபர்ட்டு வாலிபனாகவும் மிக்க பலசாலியாயுமிருந்ததனால் அவன் கடைசியில் கிழவனான தகப்பனை அடித்துக் கீழேதள்ளினான். பிறகு ரோபர்ட்டு அவனைக் கத்தியினால் குத்தப்போனபொழுது ராஜன்தலையிலிருந்த தலைமூடிய ஜீரா கீழேவிழுந்துபோயிற்று; அப்போது தகப்பன் முகம் ரோபர்ட்டுக்கு நன்றாய்த்தெரிந்தது.

அவன் தன் தகப்பனென்று தெரிந்தபோது ரோபர்ட்டினுடையமனம் எவ்வாறுதத்தளித்ததோ அதைச்சொல்ல நம்மால்முடியாது, நீங்களே நான் தெரிந்துகொள்ளவேண்டும். எவ்வளவு தான் துஷ்டனாயிருக்கட்டும், தன்னைப் பெற்றுப் போதித்த பிதாவையே கொல்ல நினைக்கின்ற கொடிய பிள்ளை உலகத்திலெங்கேயாவது உண்டா? தகப்பனைப்பார்த்தவுடனே ரோபர்ட்டு அவன் பாதங்களில் விழுந்து பணிந்து, அத்தன்மையான கொடிய பாதகம் செய்வதினின்றும் தன்னைத் தப்புவித்தற்காகக் கடவுளைக் கையெடுத்துத் தொழுது, தன் பிழையைப் பொறுத்துக் கொள்ளும்படி தகப்பனை வேண்டிக்கொண்டு, அரசன் குதிரை கொல்லப்பட்டமையால் தன்குதிரைமேலேயே அவனை ஏற்றி அழைத்துக்கொண்டுபோனான்.

இதனால் துர்க்குணங்களுக்கு இடங்கொடுப்பது போலக் கொடியது வேறொன்றுமில்லையென்பது தெளிவாகின்றதல்லவா? அதற்கு இடம் கொடுத்ததனாலல்லவா தன்மனதில் அப்படிப்பட்ட எண்ணமில்லாதிருந்தும் ரோபர்ட்டு பெரிய பாதகமான தந்தையைக்கொலை செய்யும்படியான தருணத்திற்கு வந்து விட்டான். அப்படியே அவன் அந்தச் செய்கை செய்திருப்பானானால் பின்பு அவன் பழியைப்போக்க எவராலாகும். எல்லா வுலகங்களையும் ஆக்கி அளித்து அழிக்கின்ற கடவுளாலேதானாகுமா? என்றைக்கும் அவன் தீராத துன்பத்தையே அனுபவிக்கும்படியாகும்.

ஆயினும் அவன்தான் தன் குற்றங்களுக்குத்தக்க பயனை அனுபவியாமல் போகவில்லை எப்படியெனில் இவன் மூத்தகுமாரனாயிருந்தும், உல்லியம் அரசன் மரணகாலத்தில் தன்ராச்சியத்தை தன் சிறியகுமாரர்களுக்கே கொடுத்துவிட்டுப் போயினான். அவர்கள் இருவரும் முறையே இங்கிலாந்தில் அரசுசெலுத்தி வந்தார்கள். ரோபர்ட்டுதான் அரசனாக வேண்டுமென்று தன்னாலானவளவும் பிரயாசைப்பட்டுப் பார்த்தான்; சாத்தியப் படாமல் போயிற்று. அதனால் அவன் நார்மண்டிக்கு டியூக் என்னும் சிற்றரசனாகவே யிருந்தான்.

இந்த துர்க்குணமில்லாதிருந்தால் இவன் யாவராலும்கொண்டாடப்பட்டுச் சிறந்த ராஜாவாகி அரசு செலுத்தலாமல்லவா? அதுபோலக் கடைசியில் இருபத்தெட்டு வருஷகாலம் சிறை செய்யப்பட்டிருந்தான். ஏனெனில் இவனைத் தன்னிச்சையாக விட்டுவிடாமல் தன் சகோதரர்களோடு கலகஞ் செய்து கொடிய தீமைகளையும் விளைவிப்பானென்று அவனை அவ்வாறு நிர்ப்பந்தப் படுத்தி வைத்திருந்தார்கள்.

இதுவரையில் தேசயாத்திரை செய்த குடும்பத்தார் சுதேசத்துக்குத் திரும்பி வந்து அங்கங்கே போன விடங்களில் தாங்

அன்னப்பிடி வெல்லப்பிடி ஆச்சுது.

கள் கண்ட அதிசயங்களை யெல்லாம் வீட்டி லிருப்பவர்களோடு விநோதமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது, நமது தேசம் மிகவும் புராதன மான தேசமாயிருந்தாலும் புதிய ஜனங்களாகிய ஐரோப்பாகண்ட வாசிகளிடத் திருந்து நாம் அறிந்துகொள்ளத்தக்க விஷயங்கள் பலவுண்டென்றும் அவர்கள் இத்தேசத்தாரிடத்தில் மதிப்புள்ளவர்களாகவே யிருக்கிறார்களென்றுஞ்சொல்லிக்கொண்டார்கள். இப்படி சுதேசம்வந்து சேர்ந்து ஒருவருஷமானபிறகு மற்றொரு மாமனிடத்தி லிருந்து ஒருகடிதம்வந்தது. அவன், உலாந்தா தேசத்து வியாபாரம் செய்கிற வர்த்தகன். அதனால் அவன் அப்போது உலாந்தா தேசம் போவதாயும் தன்னுடன்வர இஷ்டமானால் மருமகனையும் அவன் தங்கையும் அவர்களுடைய பிரியதாயார் முத்தம்மாளையுங்கூட அழைத்துக்கொண்டுபோய் ஐரோப்பா கண்டத்தைக் காட்டுவதாயும் எழுதியிருந்தான். இப்படி அவன்பிரீதியால் யாத்திரைக்கு வரும்படி அழைத்ததைக்கண்டு இவர்கள் மூன்றுபேரும் மிகவும் சந்தோஷப் பட்டார்கள். முன்தடவை அவ்விடம் போய்வந்தவர்கள், நீங்கள் எங்களுடன் வரக்கூடாமல் இங்கேயே நின்றிருக்கும்படி நேரிட்டதே; இப்போது நீங்கள் யாத்திரை போய் அங்கங்குள்ள அதிசயங்களைப் பார்த்துவருவது சரியான காரியந்தான் என்று ஆதரவாய்ச் சொல்லிப் பிரயாணத்திற்கு வேண்டியவைகளைச் சேகரிக்கத்தொடங்கினார்கள்.

உடனே பிரயாணம் சித்தமாயிற்று. முத்தம்மாள் அந்த இரண்டுபிள்ளைகளோடு கப்பலேறிப் புறப்பட்டபோது, தாங்கள் போகும் ஒவ்வொரு தேசத்தி லிருந்தும் சமாசாரகடிதங்கள் அனுப்புவதாயும், முன்னே யாத்திரை போனவர்கள் எழுதியனுப்பியதுபோலவே தாங்களும் பாட்டுக் கடிதங்களாகவே கண்ட அதிசயங்களை எழுதுவதாயும் சொல்லிப் புறப்பட்டார்கள்

அப்படியே அவர்கள் கப்பலேறி நெடுங் கடல் பிரயாணம்சென்று முதலில் உலாந்தாதேசம் சேர்ந்து ஐரோப்பாவின் வடநாடுகளையெல்லாம் பார்த்துக்கொண்டு ருஷியாதேசத்து வழியாய்த் திரும்பினார்கள். மார்க்கத்தில் அந்தந்த தேசத்தை அவர்கள் வர்ணித்துஎழுதியது மிகவும் விநோதமாயிருப்பதால் அதை இப்பத்திரிகையில் சிற்சிலவாய் எழுதிவருவோம்.

தாயுக்கும் மகளுக்கும் நடந்த சம்பாஷணை.

ஒரூரில் மூன்று வயதுள்ள ஒருபெண் குழந்தைக்கு விவாகஞ்செய்வதாக நிச்சயித்து, அதற்காகப் பந்தல்முதலிய கல்யாணத்திற்கு வேண்டியதைச் சித்தஞ்செய்தார்கள். இதை எல்லாம் பார்த்துவிட்டு அந்தப் பெண்குழந்தை பின் வரும்விதமாய்த்தன்தாயைக்கேட்டது. அதாவது:—

மகள். நம்முடைய வீட்டில் இவ்வளவு அலங்காரம் செய்கின்றார்களே, எதுக்கடியம்மா.

தாய். உனக்கு நாளைக்கு கல்யாணமடியம்மா.

ம. கல்யாணமென்றால் என்ன.

தா. கல்யாண மென்றால் தாலிகட்டுகிறது.

ம. தாலிஎன்றால் என்ன.

தா. இதோ என்கழுத்தில் தாலியிருக்கிறது பார். இதைப்போலே ஒன்றைச்செய்து உன்கழுத்திலே கட்டுகிறது.

ம. உன் கழுத்திலிருக்கிறதாலியை எடுத்து, என் கழுத்தில் ஒருநிமிஷத்தில் நீயே கட்டிவிடலாமே. இதற்கு இவ்வளவு ஆடம்பரமென்ன.

தா. நான் கட்டக்கூடாது புருஷர்கள் கட்டவேண்டும்.

ம. அப்படியானால், அப்பா எனக்குத் தாலிகட்டட்டும். அண்ணா கட்டட்டும். பரிசாரகன் கட்டட்டுமே.

தாய். அவர்களெல்லாருங் கட்டக்கூடாது. வேறேபுருஷன்தான் உனக்குத் தாலி கட்டவேணும்.

ம. எந்தப்பயல் எனக்குத் தாலிகட்டுவான். ஒருபயல் என்னைத் தொடுவானா.

தா. அப்படி எல்லாம் தூஷிக்காதே. புருஷன்மேலே நீ பக்ஷமாயிருக்கவேணும். எத்தனையோ பெண்கள் புருஷனோடு உடன்கட்டையேறி யிருக்கிறார்கள்.

ம. உடன் கட்டை யென்றால் என்ன அர்த்தம்.

தா. புருஷன் இறந்துபோனால் அவனோடுகூட பெண்சாதியும் அக்கினிப்பிரவேசஞ் செய்கிறது. இதுதான் உடன்கட்டையேறுதல்.

ம. அப்பப்பா இது என்னாலே யாகாது. எனக்குக் கல்யாணமே வேண்டாம்.

தா. நீ உடன்கட்டை யேறவேண்டியதில்லை. நீபுருஷன்மேலே அவ்வளவு பக்ஷமாயிருக்கவேண்டுமென்பதற்காகச் சொன்னேன்.

ம. புருஷன்மேலே நான்மட்டும் பக்ஷமாயிருக்கிறதா. புருஷன் என்மேலேபக்ஷமாயிருக்கவேண்டியதா இல்லையா?

தா. புருஷனும் உன்மேலே பக்ஷமாயிருக்கவேண்டியது தான்.

ம. அப்படியானால் நான் முந்தி இறந்துபோனால் புருஷனும்கூட உடன்கட்டையேறுவானா.

தா. இப்போது ஒருவரும் உடன்கட்டை யேறுகிற வழக்கமில்லை. உன்னுடைய அலப்பு வாயை மூடிக்கொண்டு சும்மா இருக்கமாட்டாயா.

மகள். நான் சும்மா யிருக்கவேமாட்டேன். புருஷன் என்னோடுகூட உடன்கட்டையேறச் சம்மதித்தால்தான் நான் தாலி கட்டிக்கொள்வேன். அல்லாமற்போனால் தாலிகட்டிக் கொள்ளவேமாட்டேன். அவன்கட்டினாலும் அதற்கு இடங்கொடுக்கவேமாட்டேன்.

இவ்வகையாகச் சொல்லித் தாலிகட்டிக் கொள்ளவே மாட்டேனென்று அந்தப் பெண்குழந்தை பிடிவாதஞ்செய்தது. இதை எல்லாம் கேட்டு பெற்றோர்களும் பந்துக்களும் அறியாத சிறுபிராயத்தில் கல்யாணஞ்செய்ய ஆரம்பித்தால் கல்யாணத்தின் பிரயோஜனம் தெரியாமல் இவ்வளவுதூரம் வீண்தர்க்கம்பேசிற்று. ஆகையால் பத்து வயதுக்குப் பிறகு கல்யாணஞ்செய்யலாம் என்று நிறுத்திவிட்டார்கள்.

பஞ்சேந்திரியங்களைப் பண்படுத்தல்.

மெய் வாய் கண் மூக்குச் செவிகளால் உணர்ச்சி மிருகங்களுக்கேவிசேஷம், மனிதஜாதிக்கு அவ்வளவு கூர்மையாயிருக்கவில்லை என்று சிலர் எண்ணுகிறார்கள். இது பிசகு. அமெரிக்காவிலுள்ள காட்டு மனிதருக்குக் கூர்மையான தூரப்பார்வையும் வாசனை பிடித்து வழியறியும் சக்தியும் பூரணமா யமைந்திருப்பதால் வேட்டைநாயைப்போல் அடிச்சுவடை மோந்துபார்த்து மான்முதலான ஜந்துக்கள் அந்த வழியாய்ச்சென்று இவ்வளவு நேரம் ஆயிற்று என்று ஒருநொடியில் சொல்லுவார்கள். வேட்டைக்காரர் பலர் இருண்ட நிசியிலும் இலைகளுடைய சல சல சத்தத்தைக் கேட்டு இன்ன மரமென்று அறிந்துகொள்வார்கள். நெடுங்கடலில் கப்பலோட்டும் மாலுமிகளுக்கும் விஸ்தாரமான பாலைநிலத்தில் சஞ்சரிக்கும் காட்டாட்களுக்கும் வெகு தூரத்திலிருக்கிற பொருளைக்கூட திட்டமாய் நிதானிக்கும் தூரதிருஷ்டி உண்டு எனக் கேட்டிருக்கிறோமே, மேலும் ஆபிரிக்காகண்டத்திலிருக்கிற நீக்ரோஜாதி ஜனங்களுக்குப் பூனைக்கண்போன்ற கூர்மையான கண் பார்வையும், நாய் மூக்கைப்போல் மணம் பிடித்தறியும் நாசி சக்தியும், புலிக்காதைப்போல் சொற்பசத்தமும் கேட்டறியத்தக்க செவி யுணர்ச்சியும் உண்டாம், ஆகையால் அவர்கள் காட்டு மிருகங்களைப்போலவே தங்கள் கண் மூக்குச் செவிகளுடைய கூர்மையினால் ஆகாரத்தைச் சம்பாதித்துக்கொண்டு ஜீவிக்கிறார்களாம்.

இந்த திருஷ்டாந்தங்களையெல்லாம் யோசித்துப் பார்க்குமிடத்தில் மனிதஜாதிக்கும் மிருகஜாதியைப்போலவே இயல்பாக பஞ்சேந்திரியங்கள் தீக்ஷண்யமாகத்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன; ஆகிலும் நாட்டார் அவைகளைப் பண்படுத்தாமையால் மந்தமாகப்போயிருக்கின்றனவென விளங்குகின்றது.

உலாந்தாதேசம்.

(சஞ்சிகை முதல்பக்கத்தில் இத்தேசப்படத்தைக்காண்க.)

இராகம் - கமாஸ் தாளம் ஆதி.

தேசங்களைப்பார்த்துவரப் போகுறோம்நாங்கள்-எங்கள்
க்ஷேமத்தையெழுதுகிறேன் அறிவீர்கள்

நாங்கள்கப்பலேறிகடல் மேலேபோகும்-போது
நல்லநல்லஅதிசயம் ஈதாகும்

நீங்கள்கூடவில்லையென்னுங் குறைமாத்ரம்-எங்கள்
நெஞ்சைவிட்டொழியவில்லை அணுமாத்ரம்

அத்தையம்மாளுக்குகன கம்மாளுக்கும்-கொஞ்சம்
அசவுக்கியம்கண்டது இருவருக்கும்

பித்தந்தலையெடுக்காமல் வருத்தப்பட்டு-இப்போ
பிராணபயமில்லாமல் சுகப்பட்டு

நாங்களெங்கேயிருக்கிறோ மென்றறிய-உனக்கு
நல்லமனம்உள்ளதால் சொல்வேன்தெரிய

உலாந்தாதேசத்தில் வந்திருக்கிறோம்-இங்கே
உள்ளஅதிசயம்சொல்ல மனங்கொள்கிறோம்

இவ்விடத்தில்ஏழைகளும் பாதக்குறடு-போட்டு
எவ்விடமும்திரிவதே ஏற்பாடு

வருஷமுழுதும்ஆசை கொள்வதிரண்டு-பனியில்
வருந்தாதிருக்கநல்ல யுக்திகொண்டு

சக்கரபாதக்குறட்டின் மேல்நடப்பதும்-நின்று
சற்றுநேரம்நல்லசுருட் டைப்பிடிப்பதும்

பனிக்கட்டியாகிவிட்ட தண்ணீரின்மேல்-வெகு
பரபரப்பாய்ஓடுகிறார் பாதக்குறடால்

பனிக்காலத்திலேஇங்கு சூரியன்எட்டி-வந்து
பார்ப்பதில்லைகனவிலும் இதுவேகெட்டி

கோயிலுக்கும்பாதக்குற டிட்டுப்போகிறார்-பாதக்
குறடிட்டேகடைகட்கும் போய்வருகிறார்

இவ்வூரில்சிலசில ஆறுகளாக-வெட்டி
எங்கெங்கும்கடல்நீரை கால்வாயாக

பனியின்பெருமையெல்லாம் இங்கேகாணும்-இதைப்
பாராதிருப்பவர்க்கு என்னதோணும்

பனிக்கட்டிமேல்நடப்ப துல்லாசம்-அவர்
பாரின்மேல்நடக்கவென்றால் பிரயாசம்

ஆறுகளிலும்கால் வாய்களிலும்-நிதம்
அங்கங்கேபடகேறி செல்லுதலும்

அன்னம் இட்டார்வீட்டில் கன்னம் இடலாமா.

இருப்புப்பாதையொன்றிங் கேஉண்டாகும்-அப்போ
இந்தபடகுகொள்ளை யொழிந்துபோகும்

ஆம்ஸ்திரடாம்நகரைநீ பார்த்ததில்லையே-இப்போ
அதையும்தெரிந்துகொள் காகிதத்திலேயே

மேடைமாளிகையெல்லாம் சலத்தால்சுற்றி-இங்கே
வேலைக்காரர்கள்செய்கிறார் வெகுநேத்தி

கால்வாய்மீதுபோகவர இந்தஊரார்-கருங்
கல்லினால்வாராவதி கட்டியிருக்கிறார்

கடலிலேகப்பல்கள் அனந்தமிதக்கும்-அது
காடுமூடிக்கொண்டதுபோல் காண்பிக்கும்

பயிரிடுந்தொழில்களில் கைதேர்ந்தோர்-சிலர்
பக்ஷமாய்க்கடல்மேற்செல்ல மனமுவந்தோர்

காற்றால்சுழலுகின்ற யந்திரம்ஒன்று-எங்கும்
கழனிக்குநீர்ப்பாச்சக் கண்டோம்இன்று

பசுமாடுகன்றுநல்ல புல்லைக்கண்டு-அதன்
பசிதீரஉண்ணுதற்குப் புலங்களும்உண்டு

நாநாவிதபுஷ்பச்செடி விருக்ஷங்களும்-பல
நந்தவனச்சிங்காரத் தோட்டங்களும்

கனகநிறச்சொக்காய் கம்பளிகுல்லாய்-மேலே
கனமில்லாதிருக்கின்ற ரவசல்லா

குல்லாக்கள்பலபல வர்ணத்தினாலே-போட்டு
கொண்டைப்பூசெய்துவைத்தார்கள் சொர்ணத்தினாலே

மஞ்சள்பட்டுதுப்பட்டாவில் அழகாக-ஜாலர்
வைத்துதைத்தது தோளில்போட்டார்ஒயிலாக

கம்பளிமிதியடியைக் காலிற்பூண்டு-விசையாய்
கடுகடுகவைக்கிறார்கள் ஓர்தாண்டு

உலாந்தாதேசத்திலுள்ள பெண்களைப்போலே-தங்கை
உடுப்புடுத்துகிறாள் ஒவ்வோர்தினுசாலே

இவ்வூரின்கடற்கரை அழுத்தமதாய்-உண்டு
எல்லோரும்விளையாடலாம் சந்தோஷமதாய்

உனக்கும்மாமாவுக்கும்மாமிக்கும் அங்ஙனம்-உள்ள
உற்றார்உறவோருக்குஞ் சொல்லென்வந்தனம்

நாளையதினம்டென்மார்க்கு தேசயாத்ரையும்-செய்ய
நாங்கள்போகிறோம்உங்க ளனைவோரையும்

அத்தையாரும்என் தங்கையும்விசாரிக்கிறார்-உனக்கு
அன்புள்ளவன் நானென்றுநீயேபார்.

அன்னம் ஒடுங்கினால் அஞ்சும் ஒடுங்கும்.

கரடி.

பேரன்—ஐயா, 'சிலநாளைக்குமுன் தெருவில் ஒருகரடியை இருப்புச்சங்கிலியால் கட்டிப் பிடித்துக்கொண்டு வந்து வெகு விநோதமாய் ஆட்டுவித்தார்களே. அவ்விதமான ஆட்டங்கள் ஆடும்படி கரடிக்குக்கற்பிப்பது எப்படி?

பாட்டன்—ஆம்குழந்தாய், எந்தமிருகமாகட்டும், முதலில்பிடித்துப்பழக்குவதே கஷ்டந்தான்; அதிலும் ஆட்டம் கற்பித்துக்கொடுப்பது மிகவும் கஷ்டம். வாத்தியங்களின் ஓசையைக்கேட்பதே கரடிக்கு அருவருப்பாயிருக்கும். ஆனாலும் கரடியைப் பிடித்து வைத்துக்கொண்டு அதனண்டை வாத்தியங்களை யடித்து அவ்வோசை மெல்லமெல்ல அதற்கு வழக்கமாகும்படி செய்வார்கள். அது வழக்கமான பிறகு கரடியின்கையில் ஒருகோலைக்கொடுத்துக் கூத்தாடப் பழக்குவார்கள். அப்படியே பிற்பாடு மெல்லமெல்லக் குதிக்கவும் கரணம்போடவும் கம்பங்களின்மேலேறியாடவும் பழக்குவார்கள். அப்படி பழக்கும்போது சொன்னபடி கேளாவிட்டால் கரடிகளை மிகக்கொடுமையாக தண்டிப்பதாகவும் சொல்லுகிறார்கள். இருப்புக்கம்பிகளைக் காய்ச்சி வைத்துக்கொண்டு அவற்றாலும் அடிப்பதுண்டாம்.

பேரன்—முதலில் கரடியை எந்தத்தேசத்திலிருந்து பிடித்துவருகிறார்கள்?

பாட்டன்—குழந்தாய், கரடி இப்பூமியில் ஏறக்குறைய எல்லாத்தேசங்களிலும் உண்டு; குளிர்ந்த சீமையான வடநாடுகளில் விசேஷம். அந்தக் குளிருக்குக் காவலாகத்தான் அதனுடம்பில் ஸ்வாமி அவ்வளவு அதிகமாய் மயிரைச் சிருஷ்டித்திருக்கிறார்.

பேரன்—ஆம் உண்மைதான், கரடிக்குப்பிடித்தவிடமெல்லாம் மயிர் என்று பழமொழி கூடச் சொல்லுகிறார்க ளல்லவா? கரடிக்கு மாத்திரம் உடம்பில் அத்தனைமயிரேன் என்று நான் இதுவரையில் சந்தேகம் கொண்டிருந்தேன்; இப்பொழுதுதான் அந்தச்சந்தேகம் தீர்ந்தது. ஆனால் குளிர்ந்த சீமையிலுள்ள மிருகங்கள் எல்லாவற்றிற்கும் இப்படிதான் உடம்பில் மயிர் அடர்ந்திருக்குமா என்ன ஐயா?

பாட்டன். ஆம், எல்லாவற்றிற்கும் அப்படிதானிருக்கும். மயிரினால் கம்பளம் முதலியவை செய்து வருகின்றனவே, அவையெல்லாம் அத்தேசத்து மிருகங்களின் மயிர்தானே. அத்தேசத்தில் கரடிகள் பெரியமரங்களின் பொந்துகளைத் தமக்கு இருப்பிடமாய் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன, குளிர்காலமெல்லாம் அவை வெளிப்படாமல் அந்தப் பொந்திலேயே படுத்திருந்து வசந்தகாலம் வந்தவுடனே வெளியேவரும்.

பேரன். வெளிப்படாமல் உள்ளே படுத்திருந்தால் அப்போது அவை உணவுக்கு என்னசெய்யும் ஐயா?

பாட்டன். அந்தக்காலத்தில் அதற்கு உணவுகிடையாது; உணவில்லாமலே தான் சும்மா இருக்கும்.

பேரன். ஐயா, கரடி துஷ்டமிருகங்களான புலிமுதலியவைகளில் சேர்ந்ததா, சாதுவான மான் முதலியவைகளில் சேர்ந்ததா?

பாட்டன். புலிகரடியென்று சேர்த்துச் சொல்லுகிறார்களே கேட்டதில்லையா? கரடிமனிதர்களைக் கொல்லும் கொடுமையுடையது. நடுக்காட்டில் ஒண்டி சண்டியாயகப்பட்டுக் கொண்டால் அவர்களைக் கரடி உயிரோடு விடாது; தூக்கிக்கொண்டுவந்துபிடித்து அடிக்கும்.

பேரன். ஆனால் அந்தக்கொடிய மிருகத்தினின்றும் தப்பித்துக்கொள்ள வழியொன்று மில்லையா?

அன்னநடைநடக்கப்போய்த் தன்னடையும் கெட்டாப்போல.



பாட்டன். இல்லையென்று சொல்லக்கூடாது, ஒருவழி உண்டு; வெகுதந்திரமாய்த் தப்பிததுக்கொள்ள வேண்டும்.

காடி பின்னங்காலால் நின்று கூத்தாடும் குணமுடையது. எவராகிலும் அதனெதிரில் ஒருகோலைக் காட்டினால் இது கூத்தாடச் சொல்வதற்கு அடையாளமென்று எழுந்துநிற்கும். இதன்றியும் காடி வெகு தந்திரமுள்ள மிருகமாதலால் அடிக்கடி தனக்கு ஏதாவது அபாயம் வருகிறதோ வென்று எழுந்து நின்று சுற்றிப்பார்த்துக்கொண்டே போகும். அப்படி அதுநிற்கும் தருணங்களில் ஓடிப்போய் ஒளித்துக்கொள்ளலாம்.

பேரன். இந்தக்கேட்க எனக்கு வெகு பயமாயிருக்கிறது, காடிகையில் அகப்பட்டுக்கொள்ளாமல் வெகு ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமையா. காடியினால் மனிதர்களுக்கு ஏதாவது உபயோகமுண்டோ?

பாட்டன். காடிகளைப் பிடித்துப் பழக்கித் தெருக்களில் கொண்டுவந்து ஆட்டம் ஆட்டுவித்துப் பணம் சம்பாதிக்கிறார்களல்லவா? இதன்றியும் அநேகர் அமெரிக்காமுதலியதேசங்களில் காடிகளை வேட்டையாடி அடித்து உணவு பொருளாகவும் உபயோகப் படுத்துகிறார்கள். அதின் தோலும் பற்பல வேலைகளுக்கு உபயோகப்படுகின்றது. காடி அத்தனை கொடியமிருகமானாலும் பழக்கினால் பசுவைப்பார்க்கிலும் சாதுவாகிவிடும்.

சீமையில் விசித்திரமான பலமிருகங்களையும் சேர்த்துவைத்திருக்கும் சிங்காரத் தோட்டத்தில் அநேகம் காடிகளும் பிடித்துவிட்டிருக்கிறார்கள். அவைகண்ட விடமெல்லாம் ஓடி உபத்திரவம் செய்யாதபடி இருபது அடி ஆழமான ஒருபள்ளத்தில்விடப்பட்டிருக்கின்றன. அந்தப்பள்ளத்தின் அடியில் அவைபடுக்கவும் விளையாடவும் அறைகள் எற்படுத்தியிருக்கின்றார்கள். அந்தப்பள்ளத்தின் மத்தியில் கம்பமொன்று நாட்டப்பட்டிருக்கின்றது. அந்தக்கம்பத்தில் கால்வைத்து மேலே ஏறும்படி கிட்டக்கிட்டப் படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் அந்தக்காடிகள் அடிக்கடி அந்தக்கம்பத்தின் நுனியிலேறிக்குதித்துக் கூத்தாடி விளையாடுவதுண்டு. அதைப் பார்க்கவருகின்றவர்கள் நின்று வேடிக்கைப்பார்ப்பதற்கு அந்தக்கம்பத்தின் நுனிக்குச் சரியாய் ஏற்ற விடம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அங்கே வந்து வேடிக்கைப் பார்க்கிறவர்கள் கையில் ஏதாயினும் பழம் பணியாரங்களை வைத்துக்கொண்டு காடிக்குக்காட்டி யழைத்தால் காடி கம்பத்தின்மே லேறிவந்து கூத்தாடிக்கையை நீட்டும்.

பேரன். தாதா. இப்போதுநான் காடியின் சங்கதி இன்னதென்று நன்றாய்த்தெரிந்துகொண்டேன்.

சண்டையுண்டாகாதிருக்கும்படி செய்வதெப்படி?

காஞ்சனமாலையென்னும் ஒரு பெண்ணானவள் தன்வீட்டுவேலைகளையெல்லாஞ் செய்துமுடித்துவிட்டு மத்தியானத்துக்குமேல் அடுத்தவீட்டுக்காரியாகிய வகுளாபரணத்தோடு வெற்றிலைபாக்குப் போட்டுக்கொண்டே வேடிக்கையாய் வார்த்தைசொல்லிக்கொண்டிருந்தாள். அப்பொழுது காஞ்சனமாலை வகுளாபரணத்தை நோக்கி, அம்மா வகுளாபரணம்! நாம் தனித்தனியே குடித்தனஞ் செய்துவருவதனால் செலவு இரட்டியாகின்றது; இனிமேல் நீரும் நானும் ஒத்துவாழ்ந்து ஒரேகுடித்தனஞ்செய்தால்வாரமொன்றுக்குத் தலைக்கு ஒருரூபாய்மிஞ்சும் இவ்வாறு மிஞ்சுகிற பணத்தைச் சேர்த்து வைத்திருப்போமானால் நமக்கு வருஷத்துக்குத் தலைக்கு ஐம்பத்திரண்டு ரூபாய் முதலாகும். நம்மைப்போன்ற ஏழைக்குடிகளுக்கு இவ்வளவு பெருந்

தொகை ஒருவருஷத்தில் சேருகிறதாயிருந்தால் அது எவ்வளவு பெருமையுடையது. அன்றியும் நீரும் நானும் ஒருமைப்பட்டு வாழ்ந்திருப்போமானால் இருவரும் ஒருவர்க்கொருவர் எவ்வளவோ அநுகூலமாயிருக்கும்; இப்பொழுதோவெனின், சாப்பிட்டுவிட்டு, ஒருவரும் பேச்சுத்துணைக்கில்லாமல் பூனையோடும், நாயோடும் உறவாடிச் சீராட்டிக் காலத்தைப் போக்கவேண்டி வருகின்றது; இப்படிக்கு நான் சொல்லுவதெல்லாம் உமக்கெப்படித்தோற்றுகின்றதென்றாள்.

காஞ்சனமாலை இப்படிச் சொன்னதை வருளாபரணங்கேட்டு, அம்மா! நீர்சொன்ன ஏற்பாடு மிகவும் நன்றாயிருக்கிறது; இப்படிச்செய்ய எனக்கு முற்றும்சம்மதமே; ஆனால் இதுவிஷயமாக ஒன்றைமட்டும் நன்றாய் ஊன்றிப்பார்க்கவேண்டும்:— நாமிருவரும் சண்டையில்லாமல் ஒத்துவாழ்ந்து ஒரேகுடித்தனஞ் செய்யக்கூடுமோவென்பதுதான் நான்கொண்டிருக்கும் பெரிய சந்தேகமென்றாள்.

அதற்குக் காஞ்சனமாலை அக்கா! என்னவார்த்தை சொல்லுகிறீர்? நாமிருவரும் தேனும்பாலும்போல ஒருமைப்பட்டு வாழ்ந்திருப்போமென்பதற் கையமேன்? இரண்டு கையையுந் தட்டினாலல்லவோ சத்தங்கேட்கும்? இருவரும் ஏககாலத்தில் சேர்ந்து விரோதப்பட்டால் மட்டுந்தானே சண்டையுண்டாகும் "ஒருவர்பொறை இருவர்நட்பு" என்ற நீதிவாக்கியத்தின்படி அப்படிக்கு எப்பொழுதாவது சண்டையுண்டாகிறதாயிருந்தாலும் நாமிருவரும் சண்டையிட்டு நில்லாமல் நம்முள் ஒருத்தி ஒதுங்கிக்கொண்டால் சண்டை எப்படி உண்டாகும்? சண்டையுண்டாவதற்குக் காரணமாகிய இருவருள் நான் ஒருத்தியாகமாட்டேன்; ஆதலினால் நாம் வீண்காலம் போக்காமல் சீக்கிரத்தில் ஒன்றாய்ச்சேர்ந்து குடித்தனஞ் செய்வதே நலமென்று எனக்குத் தோற்றுகின்றது. ஆதலினால் தாங்களிருவரும் நாளைமுதல் தனிக்குடித்தனஞ் செய்வதைவிட்டு ஏககுடும்பமாய் வாழ்வோமென்று தீர்மானித்துக்கொண்டார்கள்.

மறுநாள் உதயமானது முதல் அவர்களிருவரும் ஒருகுடித்தனஞ்செய்து வந்தார்கள். அவர்கள் முதலில் ஆலோசித்தபடியே எல்லாஞ் சரியாய் நடந்தேறிவந்ததென்றாலும் முதல்வாரத்தின் கடைசிநாளிலேதானே சிறிது கலகமுண்டாயிற்று: இருவரும் தைத்துக்கொண்டிருக்கையில், சிறுகுழந்தைகளுக்குத் தைக்கும் பரிகையுயில் எத்தனை குத்துக்குத்தித் தைக்கவேண்டுமென்பதைப் பற்றி விவாதமுண்டாகவே, அவ்விருவருள் ஒவ்வொருத்தியும் தான்மட்டுமே தையல்வேலையை நன்றாய்ச் செய்யவல்லவளென்று அகம்பாவங்கொண்டிருந்தவர்களாகையால், வருளாபாணம் இருபதுகுத்துப் போதுமென்றும், காஞ்சனமாலை முப்பதுகுத்து அவசியம் வேண்டுமென்றும் வாதாடத் தலைப்பட்டார்கள். அந்தவேளையில் காஞ்சனமாலைக்குத் தான் ஆதியில் அவளோடு சொன்னபடி "சண்டையிடுவதற்குக் காரணமாகிய இருவருள் நான் ஒருத்தியாகமாட்டேன்" என்று சொன்னவாக்கியம் அவளுக்குநினைவில்வரவே, அவள் ஐயோ! என்னபாவஞ்செய்யத் தலைப்பட்டேன்! நான் ஆதியில் வருளாபரணத்தோடு சொன்னதென்ன; இப்போது சொல்லுவதென்ன? சண்டைசெய்யும் இருவருள் நான் இரண்டாவதாகேனென்று சொல்லி வாயைமூடிக்கொண்டாள்.

அன்னைக்கு உதவாதான் ஆருக்கு உதவுவான்.

புதியமாதிரித்தையல்.



வர்ணம்தீர்த்த இந்த சித்திரத்தையல்மேல்வரிச்சட்டத்தைப் பார்த்து மூலைக்குமூலை அளவு சரியாக பூத்தையல்தைக்கும் வகையை முழுதும் விவரித்து எழுதிக் காட்டக்கூடாமையால் இரண்டு மூன்று குறிப்புகளைமாத்திரம் இதனடியில் காட்டுகிறோம்.

1. இந்த எள்ளுப்பூத்தையல் வேலைக்கென்றே பலகண்வைத்து நெய்திருக்கும் ஜாலர்துணியின்மீதே கெட்டிச்சாயம் ஏற்றிய பலவர்ணமான பட்டுநூல்களாலாவது பருத்திநூல்களாலாவது இந்த மேல்வரிச்சட்டத்தில் காட்டிய புள்ளிகளின் கணக்கின்படி மூலைமூலை தவறாமல் தையல் ஒட்டி எள்ளுத்தையல்போடவும். மேல்வரிச்சட்டத்தில் கண்ட சாயங்களேற்றிய நூல்களையே உபயோகிக்க வேண்டுமென்கிற அவசியமில்லை. அவரவருடைய புத்திக்கு அழகாய்த்தோன்றுகிற வர்ணநூல்களை உபயோகித்துக்கொள்ளலாம்.

பட்டுநூலல்லாமல் பருத்திநூல்களால் தையல்வேலைசெய்தால் அது கெட்டிச்சாயம் தீர்த்த நூல்களாகவே யிருக்கவேண்டும். சாதாரணமான சாயச் சூரணத்தில் தோய்த்த நூல்களால் வேலைசெய்ததுணியைத் தண்ணீரில் நனைத்த உடனே சாயங்கள் ஒன்றோடொன்று கலந்து துணிபார்க்க வழங்காமல் கெட்டுப்போகும்.

ஜாலர்துணியில் பூப்போட்ட இடம்தவிர மற்ற இடங்களில் வர்ணநூல்களை ஓட்டி நிறைத்துவிட வேண்டியதில்லை.

2. மேல்வரிச்சட்டப்பிரகாரம் சாதாரணமான ரெட்டுத்துணியிலும் எள்ளுத்தையல்வேலை பலவர்ணமான பெர்லின் சிமைக்கம்பளநூலால் செய்யலாம். அப்படிச்செய்தால் பூவைச் சுற்றியிருக்கிற இடங்களைக் கறுப்பு அல்லது ஊதா அல்லது சிவப்பு இந்தச்சாயம் கனமாய் ஏற்றிய கம்பளிநூலால் தைத்து நிறைத்துவிடவேண்டியது அவசியம்.

3. இந்தச்சஞ்சிகையிலும் இனிவரும் சஞ்சிகைகளிலும் ஓட்டிவரும் மேல்வரிச்சட்டப்பூவேலை மாதிரியாக கற்றுக்கொள்ளும் பெண்கள் கையாளும் துண்டுவஸ்திரங்களில் ஓரங்களில் பட்டைப் பூத்தையல் போடலாம்; கைக்குட்டைகளில் மூலைப்பூவேலை செய்யலாம்.

பெண்கள் சம்பாஷணை.

சுந்தரம். தாயே 'நல்லம்மா!' பள்ளிக்கூடத்துக்குப் போகவேண்டிய நேரமாயிற்று; ஆதலினால் நீ சற்றேநில்லு; நானும் உன்னோடுகூட வருகிறேன்; நாமிருவருஞ் சேர்ந்து போகலாம்.

நல்லம்மாள். அம்மா சுந்தரம்! நீ இப்பொழுதுதான் தூங்கி யெழுந்திருந்தாயோ? மணியடித்தது உன்காதில் படவில்லையோ? நாம் இப்பொழுதே புறப்பட்டுப் போவோம் வா.

சாந்தம்மாள். நல்லம்மா! இவ்வளவு காலையில் எங்கேபோகிறாய்? உன்கையிலே கொண்டுபோகிற மூட்டையென்ன?

நல்லம்மாள். நாங்கள் பெண்கள் படிக்கும் பாடசாலைக்குப் போகிறோமென்று உனக்குத் தெரியாதா? பள்ளிக்கூடத்துக்குப் போகும்பெண்கள் தங்கள் புத்தகங்களையும், கற்பலகையையுந் தவிர்த்து வேறெதைக் கொண்டுபோவார்கள்?

சாந்தம்மாள். அடிப்பெரியவீடுகிற பெண்களுக்குப் படிப்பென்னத்திற்கு? சோற்றுப்பானைகளை அலம்புவதற்குப் படிப்பு வேண்டியது அவசியமோ?

அமிருதம். நாம் சாஸ்திரங்களைக் கற்றுக்கொண்டுதான் சமையல்வேலை செய்யப்போகிறோமோ? படிக்கிறமகாராஜிகள் சுகமாய்ப்படிக்கட்டும்; நாம்போய் விளையாடுவோம் (என்று அவள் சாந்தம்மாளின் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு போகப்பார்த்தாள்.)

சுந்தரம். அக்கா! நீர் இப்படிச்சொல்லுவது சரியோ! நாம் அடிப்பண்டை அடிமைபோல வேலைசெய்தாலும் நமக்குக் கல்வியறிவிருப்பது நன்றன்றோ.

சாந்தம்மாள். கல்வி! கல்வி! என்று பிதற்றுகிறாயே; அரசாளுகிற பெண்களுக்கல்லவோ கல்விவேண்டும்? குடும்பங்களிலுள்ள பெண்களுக்கு வீட்டிலுள்ள சமையல் பாத்திரங்களைக் கழுவிக்கொண்டுதானேயிருக்கவேண்டும்?

நல்லம்மாள். எல்லோருக்கும் பயன்படுகிறதாகிய கல்வியறிவு குடும்பங்களிலுள்ளபெண்களுக்குப் பயன்படாமலா போகும்?

அமிருதம். பெண்கள் கல்விகற்றிருந்தால் அவர்களுக்கு நல்லவேலைகளகப்படுமோ?

சுந்தரம். அவர்களுக்கு உத்தியோகங் கிடையாவிட்டாலென்ன? கற்றமனையாள் வீட்டிலா மந்திரியாவாள்; தன் மக்களுக்கு ஹிதோபதேசஞ் செய்வாள்; தன்கணவனுக்கு உற்றதுணையாவாள் (இதைக் கேட்டதும் சாந்தம்மாளும் அமிருதமும் குலுங்கநகைத்தார்கள்)

சாந்தம்மாள். ஆ! ஆ! வெகு நன்றாயிருக்கிறது! மனைவி அரசனாகிய தன்கொழுநனுக்கு மந்திரியென்றோ சொல்லுகிறாய்? என்ன அழகு!

அமிருதம், "தையல்சொற் கேளேல்" என்று ஔவையார் சொல்லியிருக்கவில்லையா? பெண்கள்சொல்லும் யோசனையைக்கேட்பவன் மதியீனனல்லவா?

நல்லம்மாள். இவ்வாறான அலப்புவாய்ச்சிகளோடு பேச என்னாலாகாது.

சுந்தரம். அக்கா, அமிருதம் நாம்போவோம் வா; இப்படிப்பட்ட ஏடாகூடமான பெண்களோடு நமக்கேன் வாதம்? (என்று அவள் நல்லம்மாளைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு போகப் பார்த்தாள்.)

சாந்தம்மாள். அம்மா சுந்தரம்! சுந்தரம்! நீயேன் இத்தனை துன்பப்படுகிறாய்? உன்னோடு வார்த்தைசொல்லக்கூட என் இடந்தாமாட்டேனென்கிறாய்?

ஆகாதகாலையில் பிள்ளைபிறந்தால் அண்டைவீட்டுக்காரனை என்னசெய்யும்.

அமிருதம். அவள் யார்தெரியுமா? இவள் மகாதுஷ்டையல்லவா?

சுந்தரம். நான் பொல்லாதவளென்பதை நீதானே கண்டாய்? உன்னைப்போலத்துடுக்காய்ப் பேசுகிறவளை நான் இவ்வுலகில் எங்குங் கண்டதில்லை.

நல்லம்மாள். ஏன் வீண்சண்டையிடுகிறாய்? நல்லவார்த்தைப் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் போகலாகாதா?

சாந்தம்மாள். அம்மா! சண்டையேன்? இன்னம் இரண்டொரு சந்தேகங்களைத்தெளியவைத்துவிட்டுப் போகலாமே.

சுந்தரம். சந்தேகங்களைத் தெளியவைத்துக்கொள்ளுவதினாலென்னபயன்? நீ படித்தால்மட்டுமே உனக்குப்பெருமையுண்டு.

அமிருதம். ஆ! படிப்பினாலென்ன பெருமையுண்டாகும்? தீமைதானுண்டாகும்.

சாந்தம்மாள். படிப்பினால் பெருமையுண்டானால் அது நலமேயாம்; அப்படிக்கல்லாமல் ஒருத்திபடியாமல் உள்ளதாளுள்ளமட்டும் நிந்திக்கப்படுவதோ அழகு?

நல்லம்மாள். படிப்பதோ நிந்திக்கத்தக்கது? படிப்பின் அருமை தெரியாதமூடர்களைத் தவிர்த்துப் படிப்பு இழிவானதென்று சொல்லத்துணிபவர் யாவர்? உனக்கேன் இத்தனை அவிவேகம்?

அமிருதம். அம்மா! நீ சாஸ்திரங்களை ஓதி யுணர்ந்த வித்துவானைப்போலப் பேசுகிறாய். இன்றளவும் நம்மை நமது முன்னோர் படிக்கவைக்கவில்லையே.

சுந்தரம். இதற்குமுன்னெல்லாம் பெண்களைப் படிக்க வைக்கவில்லையென்பது மெய்யே; ஆனால் நாமும் நமது ஆயுள்காலமெல்லாம் அஞ்ஞானமென்னும் ஆழ்ந்த கடலில் அமிழ்ந்ததானிருக்கவேண்டுமோ?

சாந்தம்மாள். கற்றோரோ கண்ணுள்ளவர்களோ? மற்றவர்களெல்லாம் கண்ணில்லாதவர்களோ?

நல்லம்மாள். "கற்றவர்களே கண்ணுற்றவர்; மற்றவர்கள் முகத்தில் இரண்டுபுண்ணுடையவர்கள்" போல் குருடராய்த் திரிபவராம்; "கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" என்று திருவள்ளுவநாயனார் சொல்லியிருக்கிறார்.

அமிருதம். புண்ணுக்கு நாற்றமிராதோ? பட்டப்பகலில் கண்தெரியாததுபோல நமது கண்களைப் புண்ணென்று என்பிதற்றுகிறாய்?

சாந்தம்மாள். அம்மா அமிருதம்! இத்தனை பதட்டமாய்ப் பேசாதே. அணிகளையணிந்து, மஞ்சட்பூசி, அழகிய வஸ்திரங்களை யுடுத்திக்கொள்ளுவதினால் நாம் மற்றப்பெண்களைவிடப் பலமடங்கு அழகுடையவர்களா யிருக்கிறதில்லையோ?

அணிகளும் துணிகளும் மேனுக்குமட்டுந்தானழகு. நற்குண நற்செய்கைகளோடு இவற்றை ஒப்பிட்டுப் பார்க்கையில் அவை இவற்றிற்கு எம்மாத்திரம்?

அமிருதம். அது நரியும் திராக்ஷப்பழமும்போலாகும். நீகற்றவளல்லாமையால், இப்படி பேசுவதிலேதான் உனக்குத்திருப்தியுண்டு.

நல்லம்மாள். நீ அப்படி நினைக்கிறாய்; அதனால் எங்களுக்காவதென்ன! நீ எங்களை நிந்திப்பதனால் எங்கள் செல்வமெல்லாம் மறைந்துபோய்விடுமா என்ன? நல்லது உனக்குவந்தனம். எங்களுக்கு உத்தரவு கொடு; நாங்கள்போய் வருகிறோம்.

சாந்தம்மாள். எங்கள் நிமித்தம் உங்கள் விளையாட்டு இவ்வளவுநேரம் தடைபட்டதாகையால் உங்களுக்கு அனேகவந்தனம்; நீங்கள் சுகமாய்ப் போய்வரலாம்.

ஆகாதபஞ்சாங்கத்துக்கு அறுபதுநாழிகையும் தியாச்சியம்.



ஒரு துஷ்டநாய்.

ஒருகுடித்தனக்காரன் ஒருநாயை வளர்த்தான். அந்தநாயானது தெருவிற் போகிறவர்மேல் விழுந்து குலைக்க ஆரம்பித்தது. அதைக்கண்ட எஜமானன்நாயினது கர்வமடங்க கழுத்திற் சங்கிலியைக்கட்டி அதில் ஒருமுழத்துண்டு கட்டையைக் கட்டிவைத்தான். அதை அந்தநாயானது தனக்கு அழகாயிருக்க பெரிய ஆபரணம்போட்டதாக மெத்த கம்பீரமாகத்தான் எந்தநாய்களைக்கண்டாலும் ஓடி மேல்விழாமலும் குலைக்காமலும் இருந்தது. இதற்கு நெடுநாளாய்ப் பழக்கமுடைய ஒருநாயானது இந்த கர்வம்படைத்த நாயைப்பார்த்து நீ என்ன மெத்த முறுக்காயிருக்கிறாயே; உனக்குப்போட்டிருக்கும் ஆபரணத்தினாலல்லவா? அந்தஆபரணத்தின்சங்கதிதெரியாதோ நீசெய்கிற துர்நடத்தைக்குத்தக்கபடி கழுத்திற் போட்டிருக்கும் கட்டையால் அடைந்திருக்கும் இகழ்ச்சி தெரியாமல் கர்வங்கொண்டிருக்கிறாயே சிச்சி இதென்னமதிகேடென்று. சொல்லிப்போய்விட்டது.

நீதி. தன்குற்றம் தானறிபவரில்லை: பிறர்கண்ணுக்குத்தோன்றும் நமது கோணலான நடத்தை நமது கண்ணுக்குத் தோன்றாதாம்.

கதாசாரம். இக்காலத்தில் சிலபிள்ளைகள் தெய்வபக்தியில்லாமை தாய்தந்தையருக்கு அடங்காமை உபாத்தியாயரை மதியாமை சத்தியத்தைக் காக்காமை நாணயமில்லாமை இவைகளை யெல்லாம் நற்குணங்களாக எண்ணி தற்புகழ்ச்சி செய்து கொள்ளுகிறார்களே. அவர்களுக்குப் புத்திவரும்படி இந்தக்கதையை நாயின்மீதேற்றிச் சொல்லப்பட்டதாம். துர்மார்க்கத்திற்குச் செய்த அவமானத்தை நாயானது எப்படிநன்கொடையாக மதித்ததோ அப்படியே சிலர் மதிக்கிறார்கள்.

வெந்நீரின் உபயோகம்.—வெந்நீரை வைத்தியத்துக்குக் கையாளாதவர்கள் ஒருவருமில்லை. வயிற்றுநோய், மார்நோய், மூச்சடைப்பு, இல்வாய்வு, தொண்டைநோய் இவைகளுக்குச் சாதாரணமாய் வெந்நீரை உபயோகப்படுத்தி சுகமடைவதை நாம் பார்த்திருக்கிறோமல்லவா. அப்படிக்கிருந்தாலும் வைத்தியர் சொன்னபடி உபயோகிக்க வேண்டுமேயல்லாமல் அவரவர்களுக்குத்தோன்றியபடி வழங்கினால் சிகிச்சா உபசாரமாகாமல் விபரீதமாய் முடியும். குழந்தைகளுக்கு நெஞ்சில் கபம்கட்டியிருந்தால் ஒரு கம்பளித்துண்டை பொங்கக்காய்ந்த வெந்நீரில் தோய்த்துப்பிழிந்து கழுத்தைச்சுற்றி ஆவியிருக்குமளவில் சுற்றிவைத்தால் பத்து நிமிஷத்தில் அந்த கபம் கரைந்துபோகும். பல்நோய்கண்டாலும், சைத்தியத்தால் கன்னத்தில் நரம்பு நொந்தாலும், வெந்நீர் ஒத்தடம்கொடுக்க லகுவாகும். தலைநோய்கண்டால் கால்களை வெந்நீரில் வைத்துக்கொண்டு பிடரியிலும் வெந்நீர் ஒத்தடம் கொடுத்தால் நீங்கிப்போகும். பித்தநீர் வெளிப்படுத்தவேண்டுமானால் வெந்நீரை உட்கொள்ளவேண்டும். நகத்தைச்சுற்றி உண்டாகும் உகிர்ச்சுற்று என்னும் புண்ணுக்கு பொறுக்கப்பொறுக்கப் புண்விரலை தோய்த்தெடுத்தால் சீக்கிரத்தில் ஆறிப்போய்விடும். கட்டிகளையும் ரணங்களையும் வெந்நீரால் அலம்புவதே இதமான உபாரமாகும்.

அஸ்தமன செம்மானம் அடைமழைக்கு லக்ஷணம்.

ஏப்பிரல்மீ புதிர் முதலானவைகளை விடுவிக்கும் வகைகள்.

1. தாமரை இலை மூன்று, பக்ஷி நான்கு.
2. மூன்றேஙிமிஷம்.
3. சகோதரர்கள்.
4. கற்கண்டு; கரும்பு; பலா.
5. மின்னல்.
6. சந்திரன்.
7. புளியமரம்.
8. திரிவிளக்கு.
9. ஜலதாரை.
10. மகாபாரதம்; மாதம்; மரம்; காதம்; பாதம்; ரதம்.

ஜூன்மீ த்து விடுகதைகள்.

1. நாம் அடுத்தடுத்துவிரும்புகிறோம் அது கிடைத்தும் தெரியாமல் இருப்பது எது?
2. துன்பத்தையும் சிறு குழந்தையையும் சிலவே ளையில் ஒப்பிட்டுச் சொல்லுகிறார்கள், அது எப்படி?
3. வினைச்சொற்களை ஏன் பற்களுக்குச்சமான மென்று சொல்லுகிறார்கள்?
4. அண்ணன் தம்பிகள் இரண்டுபேர் மூன்றுதேங்காயை உடைக்காமல் பங்கிட்டுக்கொள்ள வேண்டும்; அது எப்படி?
5. இரண்டுபேர்கள் எண்ணெய்வாங்கப்போனார்கள், ஒருவன் பத்துபடிபிடிக்கும்ஜாடி கொண்டுபோனான், மற்றொருவன் ஏழுபடிபிடிக்கும்ஜாடியும் மூன்றுபடிபிடிக்கும் ஜாடியும் கொண்டுபோனான்; போனவிடத்தில்பத்துபடி ஜாடிக்குமாத்திரம் எண்ணெய்கிடைத்தது; அதை இரண்டுபேர்களும் ஐந்துபடி ஐந்துபடியாய்ப் பங்கிட்டுக் கொள்ளவேண்டும். அதெப்படி பங்கிட்டுக்கொள்ளுகிறது.
6. கல்யாணம் என்பது கத்திரிக்கோலுக்குச் சரியாம்; அதெப்படி?
7. எருக்கிலை பழுப்பதேன், எருமைக்கன்று சாவதேன்?
8. திண்ணைமெழுகுவதேன், தேர் ஓடுவதேன்?
9. ஒருமனிதன் ஒருபெண்ணைப்பார்த்து, வெந்ததை இரண்டைத்தின்று, வேகாததை ஒன்றைத்தின்று, வெந்தத்தின்மேல் நின்று விளையாடுகிற பெண்ணே, உன் தகப்பன் எங்கே போனான் என்று கேட்டான். அதற்கவள் என் தகப்பன் மானத்துக்கு வேலிகட்டப் போனார் என்று சொன்னாள். உன் தாய் எங்கேபோனாள் என்றுகேட்க, அவள் ஒன்றை இரண்டாக்கப்போனாள் என்றுசொல்ல, உன் அண்ணன் எங்கேபோனான் என்று கேட்க, என் அண்ணன் நேற்றுசெத்தவனை இன்றைக்கு உயிராக்கப்போனான் என்று சொன்னாள். இதன் விவரமென்ன?

விருத்தாந்தம்.

நமது மகாராணியாருடைய பெரியமருமகனாகிய ஜெர்மானிய தேசத்துச்சக்கரவர்த்தி ப்ரடெரிக்என்பவர் இரண்டொருவருஷகாலமாய்த் தொண்டைப் பிளவினால் சங்கடப் பட்டுக்கொண்டிருந்தார். இந்த உபத்திரவம் இந்தமாதத்தில் அதிகரித்து நாளுக்குநாள் முற்றி, மாரில் கபம்கட்டிச் சுவாசக்கட்டுமுண்டாகி, நாளது ஜூன்மீ 15வ காலை 11 மணிவேளையில் மாறுகிரோமணியாகிய சக்கரவர்த்தினியும் பட்டத்துப்பிள்ளையாகிய உல்லியம் என்னும்ராஜகுமாரரும் மற்ற மக்களும் பந்துவர்க்கத்தாரும் மந்திரிமார் குருபீடத்தார் முதலானவர்களுங் கண்ணீர்விட்டுக்கொண்டும் கடவுளைப் பிரார்த்தித்துக்கொண்டும் அரண்மனையில் சூழ்ந்துநிற்க, அரசன் தேவஸ்துதி செய்துகொண்டே ஆயாசமில்லாமல் தேகவியோக மடைந்தாரென்று தந்தி சமாசாரம் வந்தது.

சாந்தகுணமுள்ள இந்தச் சக்கரவர்த்தி பட்டம்தரித்துக்கொண்ட மூன்று மாதங்களுக்குள் காலஞ்சென்றதைப்பற்றி ஜெர்மானியர் துயரப்படுகிறதும் தவிர, நமது மகாராணியாருடைய மூத்தகுமாரத்தியாகிய ஜெர்மனி சக்கரவர்த்தினியார் அடைந்த வைதவ்வியத்தையும் அவளுடைய பாலசம்சாரத்துக்கு நேரிட்டதுக்கத்தையும் நினைத்து பிரிட்டிஷ் ராஜியத்துக் குடிகளும் மிக்க வியசனப் படுகிறார்கள்.

Printed and published for the Proprietor at the V. N. Jubilee Press, No. 1, Umpherson Street, MADRAS,

All Rights Reserved.

VK

"Let us live for our Children."—(FROEBEL).
அமிழ்தினுமாற்றவினிதே தம்மக்கள்
சிறுகையளாவிய கூழ். (நூல்) - குறள்.

THE MAHARANI.

A PICTORIAL MAGAZINE FOR GIRLS' SCHOOLS AND HOME READING.

COMMENCED ON THE ROYAL JUBILEE DAY-JUNE 1887.

மஹாராணி.

புத்தகம். 2.] ஆகஸ்டுமீ 1888வு. [இலக்கம். 2.

CONTENTS.	Page.	அட்டவணை.	பக்கம்.
GOVINDASAMI—A STORY OF PEASANT LIFE—CHAPTER 7	197	கோவிந்தசாமி என்னும் குடியானவன்கதை (தொடர்ச்சி)	197
SHELLS AND OYSTERS	201	சங்கு, கிளிஞ்சில், சிப்பி, பலகறை ...	201
THE VIRTUES OF WOMEN	204	ஸ்திரீகள் குணநிசயம்	204
SHORT STORIES FROM THE HISTORY OF ENGLAND—WILLIAM II	205	இங்கிலாந்து தேசசரித்திரத்தில் தெரிந்தெடுத்த சிறுகதைகள்—உ-ம் உல்லியம் ...	205
THE UNCERTAINTY OF LIFE	206	தேகம் அநித்தியம்...	206
A TRIP TO GERMANY	207	ஜெர்மானியாதேசம்	207
HOMELY TALKS ABOUT ANIMALS—THE STAG	208	கலைமான்...	208
CHINNI—A BLIND GIRL	209	கண்ணில்லாச்சின்னி	209
SHORT STORIES	211	சிறுகதைகள்	211
THE CITY OF MECCA	213	மக்காநகரம்	213
ON TRYING	215	ஆகும் ஆகாதென்று பரிக்ஷைபார்த்தல் ...	215
NEW PATTERNS OF EMBROIDERY... ...	217	புதியமாதிரித் தையல்	217
FLOOR DECORATIONS	219	கோலம்	219
THE STORK AND THE FOX	221	கொக்கும் நரியும்	221
PUZZLES AND RIDDLES	222	விடுகதை புதிர்முதலியன...	222

கோவிந்தசாமிகதை.

கிராமஜோஸ்யர்.

கிராமஜோஸ்யர்கள் கிராமவாசிகளுக்கு நாள் நக்ஷத்திரங்களைப் பார்த்துச்சொல்லி அகப்பட்டதையெல்லாம் உபாயமாய்த் தட்டிக்கொண்டு போவதில் கைதேர்ந்தவர்களென்பதை இதனடியில்வருங்கதையால் நன்றாய் அறிந்துகொள்ளலாம்.

கோவிந்தசாமிக்கு அன்னப்பிராசனமாகிச் சிலநாளானபின்பு ஒருநாள் அந்திநேரத்தில் ஒருவன் வரதன்வீட்டுத் தாழ்வாரத்தில் நின்றுகொண்டு வரதனை இரைந்து கூப்பிட, அப்பொழுது கூடத்தில் பிரம்மானந்தமாய் உக்காந்குடித்துக்கொண்டிருந்த வரதன் அங்கிருந்தபடியே, நீர்யார் ஐயா! என்றான்.

ஜோஸ்யன். ஐயா! நான்தான் சூரியகாந்தன்.

வரதன். அவன்குரலைக்கேட்டதும் உள்ளிருந்து விரைந்தோடிவந்து வாசற்படிய

ஸ்டை கின்றுகொண்டு, ஜோஸ்யசாஸ்திரிகளே! இன்று அடியேன்குடிசையில் தங்களுடைய திருவடித்தூள்கள் பட்டதனால் சுதினமாயிற்று. நம்பி கயாராமா! சாஸ்திரிகளுக்குச் சித்திராசனங் கொண்டுவந்து போடென்றான்.

அவர் தமது காலிலிருந்த பாதரட்சைகளை நடையில்தானே கழற்றிவிட்டு உள்ளேபோய் அந்த ஆசனத்தி லுட்கார்ந்துகொண்டு, ஐயா! நீர்சுகமா? உமது குழந்தைக்கு அன்னப்பிராசனச்சடங்கு நன்றாய் நடந்ததென்று கேட்டுச் சந்தோஷப்பட்டேன். அது எப்படி நன்றாயிராமற்போகக் கூடும்? உமது முன்னோர்கள் ஏழைகளென்றாலும், எல்லோரும் மகாநல்லவர்கள்; தெய்வபக்தியுள்ளவர்கள்; உமது மகனுக்குக் கோவிந்தசாமியென்று பெயரிட்டிருக்கிறதாகக் கேள்விப்பட்டேன்; அந்தக்குழந்தை பிறந்தவேளையில் கிரகநிலையும் நன்றாயிருக்கிறதென்றே கேள்வி. இவையனைத்தும் உமக்குள்ள தெய்வபக்தியினாலும், உமது புத்திரனுடைய சுகிருதத்தினாலுமென்றறியும்; குழந்தைக்கு ஜாதகம் எப்பொழுது எழுத நினைத்திருக்கிறீர் என்றான்.

வரதன். கோவிந்தசாமியின்சாதகம் எழுதவேண்டுமென்று எனக்குப் பூரணமான ஆசை யுண்டு; ஆனால் சாஸ்திரிகளே! கேளுங்கள், நான் ஏழையென்பது உமக்குத் தெரியாததல்லவே. ஜமீன்தாருக்குச் செலுத்தவேண்டியபாக்கி இன்னுஞ் செலுத்தவில்லை. முதலாளியிடமிருந்து வாங்கினகடன் அடைபடவில்லை; வீட்டில் கொஞ்சமிருந்ததும் குழந்தைக்கு அன்னப்பிராசனம் செய்வித்ததில் செலவழிந்துபோயிற்று.

ஜோஸ்யன். சம்மானஞ் செய்வதைப்பற்றி இப்பொழுது முதற்கொண்டென்ன விசாரம்; மெல்லக்கொடுக்கும்போது வாங்கிக்கொள்ளுகிறேன்; நீரும் நானும் வெகுநாளைய நேசர்களாதலால், நான் ஜாதகங்கணிப்பதற்காக உம்மிடமிருந்து அதிகமாக வாங்கமாட்டேனென்பது உமக்குத் தெரியாதா?

வரதன். நன்றாய் ஜாதகமொன்று கணிக்கவேண்டுமானால் உமக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும்?

ஜோஸ்யன். ஜாதகமொன்றுக்கு எவ்வளவு கொடுக்கவேண்டு மென்றோ கேட்கிறீர்? இப்பொழுதுதான் சிலநாளைக்குமுன்னே ஒரு செட்டியார் வீட்டுக்குழந்தைக்கு ஒரு ஜாதகமெழுதிக்கொடுத்தேன்; அவர் ஒரு மொகரா கொடுத்தார்.

வரதன். ஒரு மொகராகொடுத்த செட்டியாருக்கும், என்னைப்போன்றவேழைக்குடியானவனுக்கும், வித்தியாசமில்லையா! நல்லது, கோவிந்தசாமிக்கு ஜாதகமெழுதுவதற்காக நான் உமக்கு என்னகொடுக்கவேண்டும்?

ஜோஸ்யன். ஐயா! நீர் ஜாதகமொன்றுக்கு எவ்வளவு கொடுக்கவேண்டுமென்று என்னைக்கேட்டபடியால் ஒரு தங்கமொகராவென்றேன்; உம்மிடமிருந்து அவ்வளவு வாங்கமாட்டேன்; உம்மிடத்தில் விலைபேச எனக்கிஷ்டமில்லை; நான் முதலில் ஜாதகத்தைக் கணித்துக்கொடுக்கிறேன்: அப்புறம் நீர் உமக்கு இஷ்டமானதைக் கொடும்.

வரதன். நானோ ஏழை; நான் உமக்கு என்ன கொடுக்கப்போகிறேன்? தங்களுடைய பெருமைக்குத் தக்கபடி கொடுக்க என்னாலாகாது; ஆனாலும் நீர் ஜாதகத்தை நன்றாயெழுதிக்கொடுத்தால் வருகிற சம்பா நெல்அறுப்பில் இருகலமும், கார் அறுப்பில் இருகலமும்ஆக நாற்கலநெல் உமக்குஅளந்துவிடுகிறேன்.

ஜோஸ்யன். ஐயா! நீர் வரவரக் கையிறுக்கமுள்ளவராய்விட்டீர்; எனக்கு நாற்கலநெல் கொடுப்பதாய் நீரே ஒப்புக்கொண்டுவிட்டீர்; அதனோடு கரும்பு வெட்டும்போது அரைமணங்கு சர்க்கரையுங்கொடும்; நான் உமதுகுழந்தையின் ஜாதகத்தைக் கணித்துத்தருகிறேன்

வரதன். சாஸ்திரிகளுக்குத் தித்திப்புப் பண்டங்களில் அதிக ஆசை. நல்லது அந்தப்படியே தருகிறேன். நீர் கணிக்க ஆரம்பியும்; ஜாதகமெழுதிமுடிய எவ்வளவு காலமாகும்.

ஜோஸ்யன். ஐயா! ஜாதகம் கணிக்கிறதென்றால் எளிதில் முடிகிறதன்று; அதைக் குழந்தை விளையாட்டென்று நினைத்துவிடவேண்டாம். கிரக நிலைகளையும் அவற்றின் சாரங்களையும் அறிய எவ்வளவோ நுட்பமாய்க் கணக்குப்பார்த்துச்செய்யவேண்டும். எவ்வளவு துரிதமாகக்கணித்தாலும் ஒருமாத காலத்திற்குமேலே செல்லும்.

வரதன். நல்லது, ஒருமாதங்கழித்தபிறகே ஜாதகத்தைக் கொண்டுவாரும்; நான் உமக்குச் சொன்னபடியே அறுப்பறுத்ததும் நெல்லையும், கரும்புவெட்டினதும் வெல்லத்தையும் தருகிறேன். ஆனால் நீர் ஜாதகம் நல்லதாயிருக்கும்படி எழுதித்தரவேண்டும்.

ஜோஸ்யன். ஐயா! நீர் பெண்பிள்ளையைப்போலப் பேசுகிறீரே! ஜாதகத்தை நல்லதாகவாவது அல்லது கெட்டதாகவாவது செய்ய என்னாலாகுமா? எல்லாம் உமது மகன்பிறந்த காலத்திலிருந்த கிரகநிலைப்படியல்லவோ இருக்கும்? நல்ல லக்கினத்தில்பிறந்திருந்தால் ஜாதகம் நல்லதாகவேயிருக்கும்; அப்படியில்லாதபட்சத்தில் கெட்டதாகத்தானிருக்கும். நவக்கிரகங்களும், மற்றுமுள்ள தேவதைகளும் இருக்கிற அநுகூலப் பிரதிகூலங்களுக் கேற்றபடித்தான் ஜாதகமும்பொருந்தியிருக்கும். நீர்நல்லவரும், தெய்வபக்தியும், உள்ளவராதலால் உமது குமாரனுடைய ஜாதகம் நன்றாகவேயிருக்குமென்று நினைக்கிறேன் என்றான்.

வரதனோடு சம்பாஷித்துக் கொண்டிருந்த சூரியகாந்தசாஸ்திரி என்கிறவன் காஞ்சனபுரத்து ஜோஸ்யன்; அந்த ஜோஸ்யனுடைய பேரைச்சொன்னால் அந்த ஊராருக்கு அத்தனைநன்றாய்த்தெரியாது; தூமகேது என்று சொன்னால் அது அவன்பேரென்று யாவரும் நன்றாய் அறிந்துகொள்வார்கள். சிலகாலத்துக்குமுன்னே எரியும் விளக்கமாறுக் கட்டைபோல ஆகாயத்திலே தோன்றின தூமகேது அல்லது வால் நக்ஷத்திரத்தைக்கண்டு மகாக்ஷாமமும் ஒருவிதக்காய்ச்சலு முண்டாகுமென்று அவன் சொன்னதினால் அதுகாரணமாக அவனுக்கு தூமகேதுவென்று பிரசித்தமானபேருண்டாயிற்று. வங்கநாட்டில் கிராமந்தோறும் சோதிடர்க ளிருப்பதில்லை; காஞ்சனபுரம் பெரிதானகிராமமானதாலும், அதில் செல்வமுடையோர் பலர் குடியிருந்தமையாலும் அங்கே ஜோஸ்யனிருந்தான். தூமகேது ஆண்குழந்தைகளுக்கு மாத்திரம் ஜாதகங் கணிப்பான்; பெண்குழந்தைகளுக்கு அப்படிகணிக்காமல் அவர்கள் பிறந்தநாளையும், ராசிசக்கரத்தையும் மட்டும் ஒரு சிறு துண்டுக்கடிதத்தில் குறித்துவைப்பது வழக்கம். காஞ்சனபுரத்துக்கேயன்றி அதற்குச் சுற்றுப்புறத்திலுள்ள ஊர்கள் பலவற்றிற்கும் அவனே ஜோஸ்யன். ஜாதகங்கணிப்பது தவிரவும் அவனுக்கு இன்னும் எத்தனையோவேலையுண்டு. எல்லாக்காரியங்களுக்கும் நல்லநாள், கெட்டநாள் இன்னதென்று ஊராருக்கு அவன்தான் அறிந்து சொல்லுகிறவன். இதனால் அவனுக்கு நல்ல வரும்படிகிடைக்கும். இந்த நாட்டுஜனங்கள் கலியாண முதலிய எப்படிப்பட்ட சுபகாரியங்களை

யும் நல்லநாள்பார்த்தே செய்வார்கள்; தூரதேசயாத்திரை போகவேண்டுமென்றாலும் ஜோஸ்யனைக்கண்டு முன்னதாகவே நல்லநாளைப் பார்த்துக்கொள்ளாமல் பிரயாணம் புறப்படமாட்டார்கள். இதுவுமன்றி வருஷப்பிறப்பு நாள்களில் ஊரிலே வைதிக நெறிமுறைதவறாத பெரிய மனிதர்களின் வீடுதோறுஞ் சென்று அவனே பஞ்சாங்கம் படிக்கவேண்டும். புதுப் பஞ்சாங்கம் படிக்கையில் அந்த வருஷபலன், நவக்கிரகபலன், கிரகணம், நன்மை தீமை முதலிய எல்லாவற்றையும்பற்றிச் சொல்லப்படும். சிலஜோஸ்யர்கள் பலவற்றை வாய்ப்பாடமாகவே சொல்லுவதுமுண்டு. ஒருவன் எவ்வளவுதான் ஏழையாக இருந்தாலும் தன்சக்திக்குத்தக்கபடி பஞ்சாங்கம்படிக்கும் ஜோஸ்யனுக்குச் சிறிதாயினும் பொருள்கொடுக்காமலிரான்.

தூமகேதுவுக்கு கணிதம் ஜோஸ்யம் ஆகிய இரண்டுந்தெரியும். அவன் அவ்வளவு சிறந்தவனாதலால் அவ்வூரார் அவனை பிரகஸ்பதியென்றே நினைத்திருந்தார்கள். கணிதத்தில் அத்தனை சாமர்த்தியமிருந்ததினால் அவனுக்கு ஊதியங்கிடைத்தது. யார் வீட்டிலாவது பசுமாடு காணாமற்போனாலும், இன்னும் இவ்வாறு எந்தப்பொருள் காணாமற்போனாலும் தூமகேது தன் வீட்டிலிருந்தபடி தரையில் சக்கரம்போட்டுக் காணாமற்போன பொருள் இன்னவிடத்தில் இவ்வாறிருக்கிறதென்றும், அது இனிமேல் இன்ன விதமாகப்போகிறதென்றுந் தப்பாமற்சொல்லுவானாம். ஆகையினால் காஞ்சனபுரத்திலுள்ள செல்வரும் வறியோருமேயன்றி, சுற்றுப்புறத்து கிராமங்களிலுள்ளவர்களும் தங்கள் நகைநட்டு, மாடுகன்று முதலியவைகள் காணாமற்போனபோதெல்லாம் அவன்வீட்டுக்கு ஆருடங் கேட்பதற்காக இடைவிடாமல் எப்பொழுதும் வந்துகொண்டேயிருப்பார்கள் அவன்சொல்லுகிற ஜோஸ்யங்களில் பலியாமல்போகிறதே அதிகம்; “காக்கையேறிப் பனம்பழம்விழுந்தது” என்ற காகதாளிநியாயப்படி எப்பொழுதேனும் ஒன்றிரண்டுமட்டுந்தான் பலிக்கும். இப்படியிருந்தும் ஜனங்களுக்கு அவனிடத்திலுள்ள நம்பிக்கையினால், பலியாதவற்றைமறந்து, பலிக்குமவற்றிற்காக அவனைச் சமர்த்தனென்று கொண்டாடிவந்தார்கள்.

இப்படிக்கெல்லாமிருந்தும் அவன் ஒருகால் பெரும்பிழை யொன்றைச் செய்தபோது அதை அவர்கள் நெடுநாள்மட்டும் மறக்கவில்லை:—காஞ்சனபுரத்துக்குச் சற்றுதூரத்திலுள்ள ஒரு கிராமத்திலிருந்த இரண்டு கனவான்கள் நல்ல உடுபாவனைகளைத்தரித்து, காணாமற்போன தங்கள் பசுமாடு எங்கேயிருக்கிறதென்று ஆருடங்கேட்கும்படி அவனண்டைபோனார்கள். தூமகேது அவர்கள் பூண்டிருந்த உயர்ந்த வஸ்திரமுதலியவற்றைக்கண்டு அவர்கள் தங்கள்பசுமாடு போனவிடத்தை அறியவந்தவர்களல்லவென்றும், ஏதோ பெரிதான நகைபோனதினாலேதான் தன்னிடம் வந்திருக்கிறார்களென்றும், தங்கநகையோ, தங்கச் சங்கிலியோ, வைர மோதிரமோ இவற்றில் ஏதோ ஒன்றைப் போக்கடித்துவிட்டு வந்திருக்கிறார்களென்றும் நிச்சயித்துக்கொண்டான். அவர்களைக் கண்டவுடன் அவன் தன்வழக்கப்படி தரையில் சக்கரங்கீறி, ஏதேதோ அக்ஷரங்களை அதில் எழுதி, சற்றுநேரஞ்சென்றதும் அவர்களைநோக்கி: “நீங்கள் ஒருபொருளை இழந்துவிட்டு வந்திருக்கிறீர்கள்; அது உலோகத்தினாற் செய்யப்பட்டது; தங்கமோ அல்லது வைரமோவென்றுதான் சற்றுச்சந்தேகம்; ஆம், சந்தேகமில்லை; அது தங்கமோதிரம்; வைரம்வைத்திழைத்தது; அந்தமோதிரத்தை உங்கள்வீட்டு வாசற்பெருக்கியின்வீட்டுக் கூரையின்பின் இரவாரத்தில் சொருகி

.ஆகாயத்தை வடுப்படக் கடிக்கலாமா?

18 309 161438

வைத்திருக்கிறாள்” என்று சொன்னான். இதைக் கேட்டதும் அவ்விருவரும் அவனைப்பார்த்து வயிறெல்லாம் புண்ணாகும்படி சிரித்து, ஐயா! எங்கள் பசுமாடு காணாமற்போனதினால் அது அகப்படுமோ அகப்படாதோ என்று உமதிடத்தில் ஆருடங் கேட்பதற்காகவல்லவோ நாங்கள் இங்கே வந்தோமென, அவன் சிறிதும் லச்சைப்படாமல், ஆம்; ஆம்; நான் தவறிப்போய் வேறுசக்கரத்தைப் போட்டுப்பார்த்தேன்; காணாமல் போனது பசுவே; அது உங்கள் வேலைக்காரி வீட்டிலிருக்கிறது காணீர்களென்றான். கோவிந்தசாமிக்கு சாதகம் எழுதிக்கொண்டிருந்தவன் இவனே.

தூமகேது தான் சொன்ன கெடுப்படி ஒருமாதமானவுடன் கோவிந்தசாமி சாதகத்தைக் கொண்டுவந்தான். பத்துமுழநீளமுள்ள மஞ்சள் கடுதாசியில், எங்கே பார்த்தாலும் ராசிசக்கரங்களும், அம்சசக்கரங்களுமாய்நிறைத்துத் தலைமுதல் அடிவரையிலும் ஸம்ஸ்கிருதபாஷையில் ஜாதகமெழுதப்பட்டிருந்தது. “வேதனூற்பிராயம்நூறு” என்றபடி இந்துக்கள் தங்கள் ஜாதகத்தில் நூறுவருஷ பலன்களையு மெழுதுகிறது வழக்கமல்லவா, ஒவ்வொரு வருஷத்தின் பலனும் இரண்டொருவரியில் சுருக்கமாய் எழுதப்பட்டிருக்கும். “தனதானியவிருத்தி” என்று அதில் பலவிடங்களிலெழுதப்பட்டிருந்தது; அதில் பலகண்டங்களுண்டென்றும் எழுதப்பட்டிருந்தது; அப்பொழுது ஏழரைநாட்டுச்சனி மகாகுரூரமாய்க் கழிவதாதலால் அதன் கொடுமைக்குக் கோவிந்தசாமிதப்பிப்பிழைப்பது அரிதென்றும் எழுதப்பட்டிருந்தது. இவ்வாறு எழுதப்பட்டிருந்த ஜாதகத்தை வரதன் அதிகபக்தியோடு தன்கையில்வாங்கி, அவன்வீட்டுக் கூடத்தின்மூலையில் அவனுடைய நகைநாணயங்களை வைத்திருந்தபெட்டியில் பத்திரமாய் வைத்துப்பூட்டினான். அந்தஜோஸ்யன் கோவிந்தசாமிக்கு உண்டாகப்போகிறதாயெழுதிய கண்டங்களைப் பற்றியாவது, அல்லது நஷ்டங்களைப்பற்றியாவது வாதனேடுசொல்லாமல், கோவிந்தசாமியின் சாதகம் மொத்தத்தில் நல்லது, ஆயுர்பலமுண்டு, லாபஜாதகந்தானென்று சொன்னான். வரதன் தான் சொன்னபடியே அறுப்பறுத்தானவுடன் நெல்லில் நாற்கலமும், கரும்புவெட்டினவுடன் வெல்லத்தில் அரைமணங்கும் ஜோஸ்யனுக்குக் கொடுத்தான்.

சங்கு, கிளிஞ்சில், சிப்பி, பலகறை.

அழகான ஒரு வஸ்திரம்போல் இப்பூமியைச் சூழ்ந்துகொண்டு எல்லாவுலகங்களுக்கும் பிராணாதாரமாயிருக்கின்ற கடலின்காட்சியையும் அதில் உற்பத்தியாகின்ற பொருள்களின் அதிசயங்களையும் இன்னவிதமென்று வர்ணித்தெழுத எவராலுமாகாது. பூர்வகாலத்துவித்துவான்கள் பலர் அவைகளை வர்ணிக்கப்புகுந்து இன்ன இன்னவிதமென்று சொல்லமுடியாமல் சும்மா மயங்கி நின்றார்கள். கடல் எத்தனை ஜீவராசிகளுக்கு வாசஸ்தானமாயிருக்கின்றது! நாம் கிளிஞ்சில், சங்கு, சோழிமுதலான பலவகைப் பொருள்களை வைத்துக்கொண்டு விளையாடுகிறோமே, அவையெல்லாம் என்னவென்று நினைக்கிறீர்கள். அவை கடலில் உற்பத்தியாகின்ற பலவிதமான பூச்சிகளின் கூண்டுகளேயொழிய வேறொன்றுமல்ல. கடற்கரையோரமாய்ச் சிறிது நேரம்போய் நின்றுபார்த்தால் இப்புதுமையை நாம் நன்றாய்க்காணலாம். சிப்பி, சங்கு, நத்தைமுதலான பூச்சிகள்பல உயிருள்ளவைகளாகவே அலையோடு கரையில் அடித்துக்கொண்டுவரும்; மறுபடி அலையோடுகூடவே திரும்பிப்போய்விடும். அப்படிப்பட்ட பூச்சிகள் அநேகம் நாளாவிலே அழிந்துபோக அவற்றின் மேலோடுகளாகிய சிப்பி முதலியவை மாத்திரம்

ஆகாயம் பெற்றது பூமிதாங்கினது.

Y15m211.M87



தனியே வெருவாய்க் கரையோரங்களில் அலைகளால் கொண்டுவந்து ஒதுக்கப்படுவதுண்டு. அவைகளைப் பிள்ளைகளும் பெரியோர்களும் பொறுக்கிக் கொண்டுபோய்த் தாம் விளையாடவும் விற்றுப் பணம்சம்பாதிக்கவும் உபயோகபபடுத்திக் கொள்வார்கள். மகாராஜாக்களும், பிரபுக்களும், தனவான்களும் முத்தாஹாரங்களாகவும், வேறுபல் சிறந்த ஆபரணங்களாகவும் செய்து தரித்துக்கொள்ளுகின்ற விலையுயர்ந்தவையான முத்துக்கள் இத்தன்மையான ஒருவகைக் கடற்பூச்சியின் வயிற்றிலேதான் உண்டாகின்றன.

ஆ! இந்தப் பூச்சிக்கூடுகளும் பூச்சியோடுகளும் எவ்வளவு அற்புதமாயிருக்கின்றன பாருங்கள்! இரத்தினமணிகள் கண்டெடுப்பதற்காகப் பூமியைத் தோண்டுகிறவர்களும், கடலின் அடிப்புறத்திலுள்ள விலையுயர்ந்த பொருள்களைத் தேடியெடுப்பதற்காக முத்துக்குளிப்பவர்களும், சிற்பசித்திரங்களின் விநோதத்தைப் பார்க்கத் தலையை நிமிர்த்துகிறவர்களும், கடற்கரைக்குவந்தால் அங்குள்ள அற்புதமான பொருள்களைக் கையிலெடுத்துப்பார்க்கப் பிரயத்தனப்படாமல் ஒருபோதும் சும்மாநிற்கமாட்டார்கள். கடற்கரையில் அலையினால் ஒதுக்கப்பட்டிருக்கின்ற கிளிஞ்சிலோடு முதலியவெல்லாம் என்னவென்று நினைக்கிறீர்கள்? அத்தனையும் இவ்வுலகங்களைப்படைத்த பெரிய சிற்பியாகிய கடவுளின் கைவேலைப்பாடல்லவா? மற்றும் பலபொருள்களிருக்கட்டும்; சாதாரணமான கிளிஞ்சிலோட்டைக் கையிலெடுத்துப் பாருங்கள்; அதன் உருவம் எத்தனை அற்புதமாய் அமைந்திருக்கிறது! இந்தப் பூச்சியோடுகளில் சில மகாராஜாக்கள் மிகவும் அற்புதமானவையென்று அருமையாகக் காப்பாற்

றிவைத்துக்கொள்ளத் தக்கவையாயிருக்கின்றன. சோழி, சங்கு, பலகறைமுதலானவைகளால் இத்தேசத்திலும் தேசாந்தரங்களிலும் எளியவர்கள் பலர் பலவிதமான ஆபரணங்கள்செய்து அணிந்துகொள்ளுகிறார்கள். மாடு குதிரை முதலியவைகளுக்கும் அவற்றால் அலங்காரம் செய்கிறார்கள். மிகவும் விசித்திரமாயிருக்கின்ற சிலவற்றை விநோதப்பொருட்காட்சிச்சாலையில்வைத்து எல்லோருங்கண்டு வியக்கும்படி செய்கிறார்கள். இத்தேசத்தில் பூர்வகாலத்திலே பலகறையைப் பண்டமாற்றலுக்கு உபயோகமான ஒருவகைச் சிறுநாணயமாய் உபயோகப்படுத்தினதாகவும் தெரியவருகிறது. இக்காலத்திலும் சிலதேசங்களில் அவை இன்னும் அப்படியேவழங்கிவருகின்றன. இந்த விசித்திரமானபொருள்களெல்லாம் தென்கடலிலுள்ள தீவுகளில் மிகுதியாய் அகப்படுகின்றன. கடலில் அந்தந்தப்பாகத்திலுள்ள சீதோஷ்ணநிலைமைக்குத் தக்கபடி அங்கங்கே வசிக்கின்ற பூச்சிகளுக்கு உறைவிடமாய்க் கடவுள் இந்தக்கூடுகளை அமைத்திருக்கிறார் போலும். முக்கியமாய் அழகுக்காகவேயல்லாமல் மிகவும் அருமையானவையென்றுசொல்லி இவற்றில் சில மிக்க விலையேறப்பெற்றவையாயிருக்கின்றன. ஆயிரம் பதினாயிரம் பொன்கொடுத்தும் அவற்றின்மேலாசையுள்ளவர்கள் அவைகளை வாங்கிக்கொள்ளுகிறார்கள். இதைப்பற்றிய சிறுகதையொன்றுண்டு; அதென்னவெனில்:—

பாரிஸ்நகரத்தில் முன்னொருகாலத்திலே ஸ்தாவரசாஸ்திரபண்டிதரான ஒருவர் இக்கடற்பொருள்களில் மிகவும் அற்புதமான ஒன்றைக்கண்டார். அவர் அத்தனையாகப் பணக்காரரல்லாவிடினும் அதை எப்படியாயினும் வாங்கிக்கொள்ளவேண்டுமென்கிற ஆசை அவருக்கு மிக்க அதிகமாயிருந்தது. அதன்விலையோ அதற்குடையவன் மிகவும் அதிகமாய்ச்சொன்னான். ஆனாலும் அதையெப்படியாவது வாங்கிக்கொள்ளவேண்டுமென்று அவர் தன்வீட்டிலுள்ள அருமையான தட்டுமுட்டுகளையெல்லாம் விற்றுத் தன் பெண்சாதிபிள்ளைகளுக்கும் தெரியாமல் அதை வாங்கிக்கொண்டார். பிறகு பெண்சாதி வீட்டில் போய்ப்பார்த்து அங்கிருந்த தட்டுதாம்பாளம் முதலியவை ஒன்றும் காணாதிருக்கக்கண்டு மிகுந்த விசனமடைந்து அச்செய்தியைத் தன்புருஷனிடம் சொல்லப்போனாள். அப்போதுதான் அவர் தாம்விரும்பிய பொருளை வாங்கிக்கொண்டு வந்து உட்கார்ந்தார். பெண்சாதி அழுதுகொண்டுவந்ததைப் பார்த்து அவர் தாம் உட்கார்ந்திருந்த நாற்காலியில் அப்படியே சாய்ந்துகொண்டார். அவர் வாங்கிவந்த புதுமையானபொருள் அவருடைய சாக்கிலிருந்ததனால் அது ஆடையின்கீழே அகப்பட்டுக்கொண்டு அப்படியே மளமளவென்று நெரிந்துபோயிற்று. அதைக்கண்டு அவர் தாம் ஆசைப்பட்ட பொருள் அநியாயமாய்ப் போயிற்றேயென்று தாமும் புலம்ப ஆரம்பித்தார். கடைசியில் அவரைச் சமாதானப்படுத்துவதே அவர் மனையாளுக்குப் பெரிய வருத்தமாயிற்று என்பதாம். இப்படியாகத் தமக்குள்ள ஆஸ்திகளையெல்லாம் விற்றாயினும் வாங்கிக்கொள்ளவேண்டுமென்று ஆசைகொள்ளத்தக்க அத்தனை அற்புதமான பொருள்கள் கடலில் அநேகமிருக்கின்றன.

இப்படியே கடலில் வேரில்லாமலே முளைத்து வளருகின்ற பூண்டுவகைகள் அநேகமுண்டு. அவை மனிதர்களுக்குப் பலவிதமாயுபயோகப்படுகின்றன. பவழக்கொடிகளும் இப்படிக் கடலில் உற்பத்தியாகிற பூண்டுவகைகளுள் ஒன்றேயாம்.

ஸ்திரீகள் குணாதிசயம்.

முகாரி-தாளம் ஆதி.

உலகத்தில் புருஷாளுக் கெப்போதும் ஸ்திரீகளின்
    உதவி யிருக்கவேணும் - அவர்
உதவி யில்லாவிடில் நடமாடித் திரிந்திடும்
    உயிரற்றப் பிணங்காணும்.

கணவர்க்கு நோய்வந்தால் உபசாரம் செய்யக்
    கருத்தவர்க் குண்டாகும் - உடம்பில்
காயங்கள் பட்டாலும் அவர்உப சாரத்தால்
    க்ஷணத்தில் ஆறிப்போகும்.

குண்டு மருந்துகள்பட்டு சண்டையில் இளைத்தால்தாகம்
    கொடுத்திளைப் பாற்றுவாரே - உயிர்க்குயிர்
கொடுத்தா லும்வருத்தப் படுத்தா மலுமிருந்து
    குணமாய்க் காப்பாற்றுவாரே.

அக்கறை யார்க்கென்று அதையோசித்தே அவர்
    அருகினில் இருந்துகொண்டு - நிதம்
அல்லும் பகலும் கண்விழித் திருப்பார்
    அவர்குணம் யார்க்குண்டு.

சிந்தையை மகிழச் செய்பவ ரவரே
    சீராய்க் குடித்தனத்தை - மெத்த
சிக்கன மாகவும் பார்ப்பார் புருஷன்
    தேடும் கனதனத்தை.

நமக்கு உண்டாகும் இன்ப துன்பங்களை
    தமதென் றெண்ணுவாரே - தாங்கள்
நல்ல மனைவியென்று பேரெடுத்துக் கொண்டு
    நம்மைத்துதி பண்ணுவாரே.

இல்லாள் இருந்தால் எல்லாம் உண்டென்று
    எழுதி இருக்கிறரே - நீங்கள்
இதையறிந் தாகிலும் அவர்மனம் நோகா
    திருக்கவே பாரீரே.

தாய்க்குப்பின் தாரமென்று முன்னோர்கள் சொன்னசொல்லைத்
    தவறி நடக்கலாமோ - அதைவிட்டு
தாரத்தின் மனம்நோக நடந்தால் அந்தப்பாவம்
    தானும் சும்மாப்போமோ.

பெண்டீரால் அல்லவோ செல்வம் வருவது
    பின்னை யாரால்வருமே - அந்தப்
பெண்டி ரில்லாவிடும் புலிவாழும் காடே
    பெரிய வறுமைதருமே.

புருஷர்கள் பெரும்பாலும் ஜம்பத்திற்குத் தருமங்கள்
    போலவே பொருள்தருவார் - ஸ்திரீகள்
புகழினை விரும்பாமல் தாதா மறிந்து
    பொருளைக் கொடுத்துவருவார்.

ஆக்கப்பொறுத்தவன் ஆறப்பொறுஞ.

2-ம் உல்லியம்

பிறந்தது 1087.

இறந்தது 1100.

அரசாட்சிசெய்தது 12 வருஷ காலம்.

இந்தப்படத்தில் காட்டிமற்றொரு உல்லியம் என்னும் அரசனைப்பற்றி ஒருகதை சொல்லுகிறேன் கேளுங்கள்:

இவனுக்குக்கூட இரண்டு பெயருண்டு. உல்லியம் என்று பெயருள்ள அரசர்களில் இரண்டாவது அரசனானதையால் இவனுக்கு இரண்டாவது உல்லியமென்று பெயர்; செம்பட்ட மயிருடையவனானதையால் செம்பட்டத்தலை உல்லியம் என்றும் ஒரு பெயருண்டு. முன்னே நான் சொன்னேனல்லவா அவன்தான் இந்த செம்பட்டமயிர் உல்லியம்.

ராபர்ட்டைப்போல அவ்வளவு கபடமாய் இவனுடைய சுபாவத்தை ஜனங்கள் தெரிந்துகொள்வது கடினம்.

இவனுடைய கதை முழுமையும் சொல்வதென்றால் இப்பொழுது சொல்லி முடியாது, அது மிகவும்பெரியது. பெரிய சரித்திரப் புத்தகங்களைப் படிக்கக் கற்றுக் கொள்வீர்களானால் அப்பொழுது நீங்களே படித் தறிந்துகொள்ளலாம். அவனுக்கு மரணம் நேரிட்டது ஒரு அதிசய மாதலால் அதைப்பற்றிமாத்திரம் கொஞ்சம் சொல்லுகிறேன்.

இவன் உல்லியம் ஜயசாலியின் இரண்டாவது மகன். ராபர்ட்டு, ஹென்ரி, என்னும் இவ்விருவர்களுடைய சகோதரன்; இவனும் ராபர்ட்டைப்போலவே கொடியனென்றும், ஆனால் வஞ்சகமும் கபடமும் தந்திரமும் உடையவனென்றும் முன்னமே சொல்லி யிருக்கிறேனே. அதனால்

வால்தர் திரோல்.


Red William shot in the New Forest by Tyrrel.

உல்லியம் ஜயசாலியென்னும் அரசன் வேட்டையாடுவதில் மிகவும் விருப்பமுள்ளவன், விருப்பமென்றால் அற்பசொற்பமன்று, அளவுகடந்தது. அதனால் அவன் குடிகளுடைய நஷ்டத்தைச் சிறிதும் சிந்தியாமல் அவர்களுடைய புலங்களின் மேல் குதிரையேறிச் சவாரிசெய்து அநியாயமாக்குவதும்,

ஆகாயத்துக்கு மையங் காட்டுகிறதுபோல.

நாடு காடுகளாகவும், காட்டுமிருகங்களை வேட்டையாடும்பொருட்டு அடைத்துவைக்குமிடங்களாகவும் செய்வதற்காகக் குடிகளுடைய பூமிகளை அநுகியாய்ப் பிடுங்கிக் கொள்வதுமாகிய இப்படிப்பட்ட கொடுமைகளையும் செய்துவந்தான். இந்தவிஷயத்தில் இரண்டாவது உல்லியம் தகப்பனுக்குப் பிள்ளையென்று சொல்லும்படியாகவே யிருந்தான்.

அவர்கள் இரண்டுபேரும் இவ்வாறு செய்யப்புகுந்தது மிகவும் அநியாயமும் கொடுமையுமானது. ஆனாலும் அதற்குத் தக்க பலனை அவர்கள் அநுபவியாமல் போகவில்லை. பெற்றோர்செய்தவினை பிள்ளையைத் தாங்குமென்றபடி, தகப்பனது தீவினையும் தனதுதீவினையுமாகிய இரண்டும்கூடி செம்பட்ட உல்லியம் தலையில் வந்து வடிந்தது. அதெப்படி யென்பீர்களோ கேளுங்கள்.

அநேகம் எளியகுடிகளை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டு அவ்விடங்களில் புதிதாய் ஏற்படுத்திய ஒருகாட்டில் ஒருநாள் அவன் வேட்டையாடுகையில், அவனுடன் வேட்டையாடிக்கொண்டிருந்த வால்தர் திரெல் என்னும் ஒருதனவான் பக்கத்திலோடின ஒருமானின்மேல் ஒரு அம்பை எய்தான்; அது அதிவேகமாய்ப் பாய்ந்தது. ஆயினும் அது மானின்மேல் படுவதற்கு முன்னமே எதிரிலிருந்த ஒருமரக்கிளையில் தாக்கி ஒருபுறமாய்த் திரும்பி விசைவாதத்தால் அப்பொழுது அம்மரத்தடியில்வந்து செம்பட்ட உல்லியத்திற்கு நேராகச்சென்று அவன் மார்பில் பாய்ந்தது; உடனே அவன் உயிரிழந்து கீழேவீழ்ந்தான்.

இப்படிப்பட்ட துன்பம் தன்னால் விளைந்ததைக் கண்டபோது வால்தர் திரெல் என்பவனுடைய மனம் எத்தன்மையதாயிருக்கும்! அதைப்பார்த்து அவன் மிகவும் பயந்தவனாகித் தப்பித்துக் கொள்ளும்படி, நடந்ததைப்பற்றி எவருடனும் ஒருபேச்சும் சொல்லாமல், அக்காட்டைவிட்டுத் துரிதமாய் வெளியே ஓடினான். ரிங்குவூட் என்னும் பட்டணத்துக்கருகில் ஆவன் என்னும் ஆற்றைத்தாண்டிப்போனான். அவன் அவ்வாற்றைத் தாண்டினவிடத்திற்கு நாளைக்கும் திரெல்படித்துறையென்று பெயர் வழங்குகிறது. அங்கிருந்து அவன் கடற்கரைக்கு ஓடிப் படகேறிப் பிரான்சுதேசத்திற்குப் போய்விட்டான்.

செம்பட்ட உல்லியம் அநியாயக்காரனென்றும் கொடியனென்றும் எல்லோராலும் வெறுக்கப்பட்டவனாதலால் அவனுக்கு இப்படி நேர்ந்த அபாயத்திற்காக ஒருவரும் சிந்தை கலங்கவில்லை. அவனுடைய உடல் அக்காட்டிலேயே தேடுவாரில்லாமல் சிறிதுநேரம் கிடந்தது. பிற்பாடு அவனால் முன்பு சிறுமைப்பட்ட சில எளியவர்களை அவ்வுடலைக்கண்டு பிடித்து ஒருகோயிலுக்குக் கொண்டுபோய்ப் புதைத்தார்கள்.

அந்தப்புதிய காட்டில் உல்லியம் இப்படி அடிபட்டிறந்தவிடத்தில் அதற்கு அடையாளமாய் ஒருகல் நாட்டப்பட்டிருக்கிறது. அவ்விடத்திற்கு யாராவதுபோனால் நாளைக்கும் அந்தக்கல்லைக் காணலாம்.

நேரம் அநித்தியம்.

இராகம் அபுரூபம் - சாபுதாளம்.

நிலையில்லை - தேகம் - நிலையில்லை.

நீர்க்குமிழியைபபோல நிமிடத்தில்போய்
[விடும். (தேகம் - நிலையில்லை.)

ஆகாயத்தைப் பருந்து எடுத்துக்கொண்டு போகுமா

ஜெர்மானியாதேசம்.

(சஞ்சிகை முதல்பக்கத்தில் இத்தேசத்தின் வர்ணப்படத்தைக்காண்க.)

மாமனுடன் யாத்திரைபோன அந்தரம் தன்தகப்பனுக்கும் அந்தைக்கும் எழுதியகடிதம்.

கண்ணிகள் - இராகம் உசேனி - ஏகதாளம்.

என்னைப்பெற்ற தந்தையே அத்தையம்மா
என் கனவிற்கண்டு - கையில் [ளை
எடுத்தேன்காகிதம் எழுதலாமென்
றென்னையெண்ணிக்கொண்டு.

இதுநீங்கள்முன்னே வந்துபார்த்துப்போன
ஜெர்மானியாதேசம் - இங்கே
இருந்துகொண்டு கடிதமெழுதினேன்
வைப்பீர்விசுவாசம்.

நீங்கள்ரைன்நதிப் பிரயாணஞ்சென்றஅந்
நதிக்கரைகளிலும் - மெத்த
நீண்டமலைகளையும்கோட்டைகளையும்
பார்த்தேயிருந்தாலும்.

இந்தஅழகான நகரந்தன்னைப்பார்த்
திருக்கவேமாட்டீர் - முன்னே
இதுஜெர்மன்தேச ராஜதானியென்று
சொல்லக்கேட்டிருப்பீர்.

இதற்குப்பெயரோ பெர்லின்பட்டணம்
என்றேவழங்குது - ஆறு
இந்தநகரத்தைச் சூழ்ந்தமதில்சுவர்
ஓரமாய்ஓடுது.

ஓடும்இந்த ஜீவநதியோ
ஸ்பிரீஎன்றுபேர்கொண்டது-அதைப்போ
ஒருதேசத்திலும் விந்தையானபெயர் [ல்
எங்குமில்லைகண்டது.

இத்தனைபடை வீரரையும்நானெந்த
தேசத்துங்கண்டதில்லை - மேலும்
இத்தேசத்தார்யுத்தத்தில் விருப்பமில்லை
யென்றுநான்சொல்லவில்லை.

சிறியகாலாள்கள் பெரியபோராள்கள்
முகத்திற்சிங்காரம் - நன்றாய்த்
தெரிவதல்லால் பயங்கரமொன்றும்
செய்யார் ஆங்காரம்

சரசமாய்ப்பேசக் கண்டேன்உள்ளத்தில்
சஞ்சலத்தைஎண்ணி - அப்போது
தாங்கள்நொந்திருக்கும் குறிப்பைக்கண்
தந்திரமாய்நேசம்பண்ணி. [டேன்

இத்தேசப்பிள்ளைகள் பள்ளிக்கூடத்திலே
வாசிப்பதிகமே -பிள்ளைகள்
எப்போதாகிலும் விளையாடுவார்களோ
என்றால்அதுமிதமே.

போர்க்கோலஆட்டமும் போர்ச்சேவகர்
போலுமிருக்கிறது-வெளியில் [கோலம்
புறப்பட்டால் யுத்தத்துக்குப்போவார்போ
லுடுப்புதரிக்கிறது. [ல்

குச்சுக்கொம்புகளை ஆயுதமாகக்
கையில்பிடித்துக்கொண்டு - சிரித்து
கும்பல்கும்பலாக வீரரைப்போல்செய்த
குல்லாதரித்துக்கொண்டு.

தெறித்துநடக்க வீதியில்பார்த்தேன்
நேசனானஒருவன் - அங்குள்ள
நீண்டரைன்நதிக் கரையிலிருந்து
வருகின்றானவன்.

அவனுடன்கூட வருகின்றநாய்
அவனைப்போல்கண்டாய் - எங்கும்
அத்தனைஉயரமுள்ளநாயைப்
பார்த்ததில்லைகண்டாய்.

மற்றொருதிசையில் கருங்காலிமுத
லானதேவதாரு - என்னும்
மரமுள்ளகாட்டில் இத்தனையென்று
எண்ணிப்பார்த்தாரு.

அங்கிருக்குமேழை ஜனங்கள்மரத்தை
வெட்டியேஜீவனம் - அவர்
அப்போதைக்கப்போது செய்துகொண்டா
லுறையாது அவ்வனம். [லும்

பளிங்குக்கண்ணாடி சாமான்கள்பலவும்
விசித்ரமாகக்கண்டேன் - அவ்வூரார்
பானமும்சுருட்டும் வாயைவிட்டிருக்கப்
பார்த்ததில்லைவிண்டேன்.

காரசாரசம் பாரம்சேர்த்த
உணவைஅதிகமாய்த் - தின்னக்
கண்டேன்அந்தந்த வீட்டிலுண்டபோது
கலந்துஒருமையாய்.

கிரிஸ்மஸ்பண்டிகை இந்நாட்டில்
மெத்தவேடிக்கையாம் - அது
கிட்டநெருங்குமுன் ருஷியாதேசத்திற்கு
நாங்கள்போகவேண்டுமாம்.

இந்தக்கடிதத்தை இங்கிருந்துநான்
எழுதிமுடித்துவிட்டு - சேனும்
இதோஸ்விடன் தேசத்துக்குப்போகிறேன்
இந்தஊரைவிட்டு.

ஆகாயவல்லிடி அதிர இடிக்கும்.

கலைமான்.

பாட்டன். அடாகுழந்தாய். இதுவரையில் நாம் வேட்டையாடுகிற சில கொடிய மிருகங்களைப்பற்றிச் சொன்னேமே. இப்படியே வேறு கொடியமிருகங்களாலும் மனிதர்களாலும் வேட்டையாடப்படுகிற சாதுவானமிருகங்களும் பலவுண்டு. அவைகளில் மான் என்பதொன்று. அதைப்பற்றிச் சிறிதுசொல்லுகிறேன் கேட்கிறாயா?

பேரன். மான்கதையை அவசியம்சொல்லவேண்டுமையா; நான் ஒருநாள் பாட்டியார் வீட்டுக்குப் போயிருந்தேன், அங்கே சிற்றப்பன் இராமாயணக்கதைச் சொல்லிக்கொண்டிருந்தார். அதில் ஒரு ராக்ஷதன் பொன்மான்போல வேஷம்போட்டுக்கொண்டு சீதாபிராட்டியார் இருந்தவிடத்தில் வந்து, அவர் தன்னைப்பார்த்து ஆசைகொள்ளும்படி செய்தானென்று கதை சொன்னார். அந்தராக்ஷதன் பெயரென்ன? அவன் வேறு ஏதாவது ஒருமிருகம் போல வேஷம்போட்டுக்கொண்டு வாராமல் மான்போல வேஷம்போட்டுக்கொண்டுவந்ததேன் ஐயா.

பாட்டன். குழந்தாய் அந்த ராக்ஷதன் பெயர் மாரீசன். மான் பலகிளைகளோடு நீண்டுவளர்ந்த கொம்புகளோடுகூடி வெகு அழகாயிருக்கின்ற மிருகமாகையாலும், காடுகளில் ரிஷிகள் வாசஞ்செய்யுமிடங்களில் சிறிதும் அச்சமில்லாமல் பசுமாடு போலச் சஞ்சரிப்பதுமன்றி அவர்பக்கத்திலும் படுத்துத் தூங்குவதாதலாலும் அவன் அந்த வேஷமெடுத்துவந்தான். மேலும் மற்றெல்லா மிருகங்களிலும் மிகவும் வேகமாயோடுவது மான். ஆகையால் பிறர் தன்னைப் பிடிக்கவரும்போது அதிகவேகமாயோடி ஒளித்துக்கொள்வதற் கேற்ற வடிவம் அதுதானென்று அவன் அப்படி வேஷம்பூண்டு வந்தது. இப்படியே மகாபாரதத்திலும் ஒருகதையுண்டு. பாண்டவர்கள் வனவாசம் செய்துகொண்டு இருந்தார்களே. அப்போது துரியோதனன் மறுபடியும் அவர்கள் திரும்பி வரவொட்டாமல் அவர்களைக் கொன்றுவிட ஒருதந்திரம் செய்தான்.

பேரன். தாதா, அந்தப்பாம்புக்கொடியோன் மனம் அவன் கொடிக்குறிப்பின் பாம்புபோலவே நஞ்சுள்ளதாயிருக்கின்றது பார்த்திரா. நல்லது அப்பொழுது நடந்ததென்ன ஐயா?

பாட்டன். அதற்கு ஆகாயமேதுணையென்றபடி தருமதேவன் அப்போது அவர்களைக் காப்பாற்றினன். அவர்களைக் காப்பாற்றும் பொருட்டு அந்தத் தருமதேவனும் மான்வடிவம் பூண்டுவந்து அந்த ஆச்சிரமத்திலிருந்த முனிவருடைய மான்தோலைத்தூக்கிக்கொண்டு போனதாகவும், பாண்டவர்கள் அதைப் பின்தொடர்ந்துசென்று, துரியோதனன்செய்த அந்தத் தந்திரத்திற்கு உட்படாமல் தப்பித்துக்கொண்டதாகவும் சொல்லியிருக்கிறது. இப்படியாக மான் அழகிலும் அதிகவேகமாயோடுவதிலும் பேர்பெற்றதாயிருக்கின்றது.

பேரன். தாதா, மான்கள் வாசஞ்செய்யுமிடம் எது, அதை எனக்குச் சொல்லவேண்டும்.

பாட்டன். மான்கள் மற்றமிருகங்களைப்போலக் காடுகளிலேதான் விசேஷமாகச் சஞ்சரிக்கின்றன. அன்றியும் நகரங்களிலும் நாடுகளிலுமுள்ள விசாலமான உத்தியானவனங்களிலும் தோப்பு தோட்டங்களிலும் விசேஷமாகச் சஞ்சரிக்கின்றன. இந்தமான்கள் வடதேசங்களில் அதிகம். அங்கே இது வண்டியிழுப்பதுமுதலியவை வேலைகளுக்கு உபயோகப் படுகின்றன. அநேகர் இதை உணவுப்பொருளாகவும் உபயோகிக்கிறார்கள்.

ஆகாயம்பார்க்கப்போயும் இடுமுடுக்கா.

சின்னி.

பிள்ளைகளே, இப்பொழுதுநான் உங்களுக்கு ஒருகதை சொல்லட்டுமா, கட்டுக்கதையன்று, உண்மையாக நடந்தகதை; சொல்லுகிறேன், கவனமாய்க்கேளுங்கள்.

முன்னொருகாலத்தில் ஒருபட்டணத்திற்குச் சமீபத்தில் ஒருகிராமம் இருந்தது. அந்தகிராமத்திலிருந்துப் பட்டணத்திற்குப்போக நெடுந்தூரமில்லை; சமீபந்தான். இவ்விரண்டுக்கும் நடுவேசாலையொன்றுண்டு. அங்கிருந்து ஒருசந்தில் திரும்பினால் அந்தஊரில் கொண்டுபோய்விடும். அந்தசந்தில் ஒருநாள்காலையில் இரண்டுபேர்போனார்கள். அவர்கள்யாரென்று கேட்பீர்களோ தகப்பனும்அவனுடைய சிறுமகளும். தகப்பன் கொஞ்சம் வயதுசென்று தலைநரைத்திருப்பவன். சின்னி என்கிற அவன்பெண் பார்க்க மிகவும் அழகானது, ஏழெட்டு வயதிருக்கும். தகப்பன் அந்தப்பெண்ணைக் கையைப்பிடித்து அழைத்துக்கொண்டுபோனான். அது தகப்பன்கையைப்பிடித்துக்கொண் டிருந்தாலும், மிகவும் சந்தோஷமுள்ளதாகவே குதித்துக் கூத்தாடிக்கொண்டு நடந்தது. அச்சிறுமி போகும்போது கையில் அரையணா எடுத்துக்கொண்டு போனதனால் அதைப்பற்றிச் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தது.

அப்போது சின்னி தந்தையைப்பார்த்து, அப்பா, நான் என்கையிலிருக்கிற துட்டை என் இஷ்டப்படி செலவுசெய்யலாமா என்று கேட்டது. அதற்குத்தகப்பன், அப்படியே செய்யலாம் குழந்தாய், அதற்காகத் தானே நாம் இப்போது பட்டணத்திற்குப்போகிறோ மென்று சொல்ல, பெண், ஆம்ஐயா, அப்படிச்செய்வதற்குத்தான் நான் விரும்பினது. இந்த அரையணாவுக்கு நாம் என்னவாங்கலாம்? ஏதாவது நல்லதாய்ப் பணியாரம் வாங்கினால், உமக்குக் கொடுக்கவேண்டும், அம்மாளுக்குக் கொடுக்கவேண்டும், தம்பிவந்து அழுவான், எதிர்வீட்டு நொண்டிப்பையன் ஓடிவருவானே, அவனுக்குங் கொஞ்சம் கொடுக்கவேண்டாமா? இத்தனைபேருக்கும் அரையணாவுக்கு வாங்கினால் போதுமா? போதாதே; வாழைப்பழம் வாங்கிக்கொண்டு போகலாமா என்று பற்பல பண்டங்களை நினைத்துப் பேசிக்கொண்டே போயிற்று.

இப்படிப் பேசுகையிலும் அந்தப்பெண் தந்தையின் கையைமாத்திரம் விடாமலே கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டிருந்தது. ஏன் அப்படி அது அவன் கையை விடாமல் பிடித்துக்கொண்டிருந்தது? வேறொரு பெண்ணானால் இந்நேரம் அவன் கையை விட்டுவிட்டு முன்னே ஓடுவாள், அல்லது சாலையோரத்திலுள்ள செடிகளில் பூப்பறிக்கப்போவாள்; அது வசந்தகாலமாகையால் பூக்கள் அதிகமாய்ப் பூத்திருந்தனவே. அப்படி யில்லாமல் சின்னி ஏன் அவன் கையைவிடாமலே பிடித்துக்கொண்டிருந்தாள்? ஏன்அவள் பேசும்போது கூடத்தகப்பன் முகத்தையும் பாராமல் குனிந்துகொண்டேபேசினாள், அது உங்களுக்குத் தெரிகிறதா? ஐயோபாவம்! அந்தப்பெண்ணுக்குக் கண்தெரியாது; சிலநாளைக்குமுன்புதான் வைசூரிகண்டு அவளுக்குக் கண் போய்விட்டது.

இந்தக்கதையைக் கேட்டுக்கொண்டிருந்த பெண்களில் ஒருத்தியான தங்கம்மாள் ஐயா,வைசூரி போட்டினால்எல்லாருக்கும் அப்படித்தான் கண்கெட்டுப்போய்விடுமோ என்றுகேட்டாள். அதற்குக்கதைசொல்லும்பாட்டன்சொன்னதாவது அப்படியில்லை; ஒவ்வொரு சமயங்களில் அதிகமாய்ப்போட்டினால் இப்படிப்பட்ட விகாரங்கள் ஏதாவது நேரிடுவது உண்டு. அதற்காகத்தான் வைசூரிநோய் காணாதபடி பிள்ளைகளுக்குச்சிறுபிராயத்தில் அம்மைகுத்துகிறது. இரண்டொரு வாரத்திற்குமுன் நம்முடையவீட்டுக்குழந்தைகளுக்கு அம்மை குத்தி

ஆக்கிறவன்சலித்தால் அடுப்புப்பாழ்.

னேமே,உங்களுக்குத் தெரியாதா. உங்கள் கையிலேகூட அதோபாருங்கள், அம்மை குத்தினவடு அப்படியேயிருக்கிறதுஎன்று சொல்ல, தங்கம்மாள் ஆனல் இனிமேல் எங்களுக்கு அம்மைபோட்டி. அதனுல் ஒரு விகாரமுமுண்டாகாதே என்ருள்.

அதற்குப்பாட்டன். உங்களுக்கு ஒருநாளுமுண்டாகாது;ஆனுல்நீங்களும்இந்தஅம்மை குத்தினவடுமறைந்துபோனுல் மறுபடி குத்திக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் பிற்காலத்தில் ஒருவேளை வைசூரிகண்டாலும் காணுமென்கிருர்கள். நல்லது, அதுஇருக்கட்டும். அப்புறம் சின்னி கதையைக் கேளுங்கள். அச்சிறுமி தனக்குக் கண்இல்லையே யென்பதை ஒருகுறைவாக எண்ணவேயில்லை; எப்போதும் சந்தோஷமுள்ளவளாகவே யிருக்கிருள். யுக்தி ஆலோசனையும், தன்நயம் பாராட்டாமையும் இவளிடத்தில் மிகவும் அதிகம்.

அங்கிருந்து சிறிதுதூரம் போனபிறகு சின்னி தந்தையைப்பார்த்து, அப்பா நாம் கடையண்டை வந்தோமா என்றுகேட்டது. அதற்குத் தகப்பன், ஆம், வந்தோம், இதோகள்ளுக்கடையா யிருக்கிறது, இங்கே நிற்போமா என்று கேட்க, மகள், ஐயா, என்னை ஏளனம் பண்ணுகிறீரே; பழக்கடையண்டை போனவுடனே எனக்குத்தெரியப்படுத்தவேண்டுமென்றது.

அப்படியே ஆகட்டுமென்று தகப்பன் சொன்னுன். அவ்விருவரும் அங்கிருந்து போகப் புறப்பட்டார்கள். அப்போது சின்னி திடீரென்று அங்கேநின்று தந்தையின் கையைப் பிடித்திழுத்துக்கொண்டு, அப்பா சற்றே உற்றுக்கேளும், அதென்னவோ சத்தம் கேட்கிறது பாரும். யாரோ பாட்டுப்பாடுவது போலிருக்கிறதே; அதென்னவென்று அப்படியேபிரமித்துநின்றது.

அதுகேட்டுத் தகப்பன், ஆம்குழந்தாய், யாரோஒரு சிறுவன் கையில் கின்னரிவாத்தியம் வைத்துக்கொண்டு பாடுகிருன். நாம் அவன்கிட்டப்போய்க் கேட்போமா என்று சொல்ல, மகள், ஆம், போவோம், அவனுடைய செய்திகளையெல்லாம் எனக்கு நீர் நன்ருய் அறிந்துசொல்ல வேண்டுமப்பா என, அப்படியே அவர்களிருவரும் அந்தப் பையனண்டை போனுர்கள்.

போனவுடன் சின்னி ஐயா, இந்தப்பையன் யார், என்னசெய்தி, எனக்குச்சொல்லுமென்று கேட்டாள். தந்தை சற்றே நிதானித்துப் பெண்ணைக் கட்டியணைத்துக்கொண்டு, அம்மா, சின்னி! என்கண்ணே! என்று வாய்குளறக்கூறி, அம்மா, இந்தப் பையன் கண்தெரியாத குருட்டுப்பையன் பாவம் என்ருன்.

அதுகேட்டு அந்தப்பெண், ஐயா, ஆனுல் அவனது கண்கள் என்கண்களைப்போலவே யிருக்கின்றனவோ வென்று கேட்க அவன், அவற்றிலும் கேடாயிருக்கின்றனவென்ருன். ஆனுல் அவனோடுகூட யார்வந்திருக்கிறது? அவன் இந்தப்பாதையில்நின்று ஏன்பாட்டுப்பாடுகிருன்? அண்டையில் யாரோ சிறுவர்கள் பேசுவதுபோல் கேட்கிறதே அதென்ன? இவைகளையெல்லாம் எனக்குத் தெரியச்சொல்லுமையா? என்று மகள்கேட்க, தந்தை, என்செல்வமே, அந்தக்குருட்டுப்பையன் எளியவன்போல் காண்கிறது;அவனைப்பார்த்தால் மிகவும ஏழையாயிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது, அவனுடையதங்கை அவனை யிங்கே அழைத்துவந்திருக்கிருள். யாராவது ஏதேனும் பிச்சைபோடுவார்களென்று அதற்காக இவன் பாட்டுப்பாடிக்கொண்டிருக்கிருன். அவன் தங்கை தரையில் துணியைப்போட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிருள். அதில் சிலர் தம்மிடி துட்டுபோட்டிருக்கிருர்கள். சிலர் தம்கையில்கிடைத்த சிற்றுண்டிகளைப்போட்டிருக்கிருர்கள் என்ருன்.

அதைக்கேட்டுச் சின்னி சற்றுநேரம் ஆலோசித்து, பிறகு தகப்பன் முகத்தைத் தாழ்த்தித் தன் முகத்தோடு சேரவைத்து

ஆக்கினையும்செங்கோலும் அற்றது அரைகாழியிலே.

க்கொண்டு, என்னை அந்த எளியபையன் கிட்ட அழைத்துக்கொண்டு போகிறீரா, என்கையிலிருக்கிற அரையணவை நான் அவனுக்குக் கொடுக்கட்டுமா என்று பரிதாபமாகக்கேட்டது.

அப்படியே அவன் அம்மகளை அந்தப் பையனண்டை யழைத்துக்கொண்டு போனுன். அங்கே இரைந்துகொண்டிருந்த சிறுவர்கள்கூட அதைப்பார்த்துச் சந்தடி செய்யாமல் ஒதுங்கிநின்று, ஒரு குருட்டுப்பிள்ளை மற்ருெரு குருட்டுப்பிள்ளையினிடத்தில் பரிதாபமுற்றுப் பிச்சைகொடுக்க வருகிறதே என்று அந்த விநோதத்தை வியப்புடன் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

பிச்சைபோட்டானபிறகு சின்னி தகப்பனைப்பார்த்து, அப்பா நாம் இனி வீட்டிற்குப்போகலாமா? அதோ சாலையில் பக்ஷிகள் பலவிதமாய்க் கூவுகின்றனவே;அவைகள் கூவுவதைக்கேட்போம். வீட்டிலிருந்து வரும்போது நான் உம்முடன் பேசிக்கொண்டுவந்ததனுல் பறவைகள் கூவுவதை நன்ருய்க் கவனித்துக் கேட்கவில்லை; இப்போது நீர் அவற்றின்பெயர்களையெல்லாம் எனக்குச் சொல்லவேண்டுகிறேன் பாதையோரங்களிலுள்ள அழகான பூக்களில் சில பறித்துத் தாருமையா, அம்மாளுக்குக்கொண்டுபோய்க் கொடுக்கவேண்டும் என்று இப்படி பேசிக்கொண்டே அந்தத் தருமசிந்தையுள்ள சின்னி தந்தையுடன் வீட்டிற்குப்போனுள். அதுவேயன்றி, தான் அரையணு பிச்சைபோட்டதைப்பற்றியாவது, தான் வாங்கவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்த தின்பண்டங்களை வாங்காமற் போனதைப்பற்றியாவது ஒன்றும் பேசவில்லை.

இக்கதையைப் படிக்கின்ற பிள்ளைகளே கண்தெரியாதவளான இந்தச்சின்னியினுடைய கதையால் நாம் தெரிந்துகொள்ளத்தக்க நீதி இன்னதென்று உங்களுக்குத்தெரியவருகிறதா?

அரேபிதேசத்துக்கதை.

அரேபிதேசத்தில் ஒரு கனவான் தனக்குச் சவாரிக்கு உதவத்தக்கசிறந்த சுழிசுத்தங்கள் அமைந்த நல்ல குதிரையொன்றை வைத்திருந்தான். அதைக்கண்ட மற்ருெருவன் குதிரைக்குச் சொந்தக்காரனிடஞ் சென்று, ஐயா! என்னுடைய ஒட்டகமும் கொஞ்சம் பணமும் தருகிறேன்; உம்மிடத்திலிருக்கும் குதிரையை அவசியம் எனக்குக் கொடுத்துவிடவேண்டும் என்று மெத்தவும் வருந்திக் கேட்டான். அதற்கு அந்தக் குதிரைக்காரன் உனக்கு நான் கொடுக்கவேமாட்டேன் என்ருன். இப்படிகேட்டால் கொடுக்கமாட்டான்; இவனைச் சூதுசெய்தே நாம் குதிரையைக் கொண்டுபோகவேண்டுமென்று தனக்குள்ளே நிச்சயித்து அவன் மறுநாள் ஒரு பச்சிலைபைக்கசக்கி சாறுபிழிந்து முகத்தில் பூசிக்கொண்டு பிச்சைக்காரனைப்போல வேஷம்போட்டு, கழுத்தில் ஒரு கயிற்றைக்கட்டி அதைக் காலில் மாட்டிக்கொண்டு, நொண்டிபக்கிரியைப்போல் அந்தக்கனவான் குதிரை ஏறிக்கொண்டு வருகிறவழியில் ஒரு மரத்தடியில் உட்கார்ந்திருந்தான். அப்படியே அந்தக் கனவான் குதிரைமேலேறிக்கொண்டு அவ்வழியே வரும்போது இந்தப் பிசசைக்காரன், ஐயா! என்னை என்வீட்டில் கொண்டுபோய்ச் சேர்த்துவிடவேண்டுமென்று கெஞ்சினுன். அதைக் கண்ணுற்ற கனவான், ஐயா, என் குதிரையின்மேல் ஏறிக்கொள்ளும், நான் உம்மைவீட்டில் கொண்டுபோய் விடுகிறேனென்ருன். அதற்கு அந்தப்பொய்வேஷதாரி, நான் நொண்டியாகசே எப்படி நடந்து குதிரை அண்டையில் வருவேன் நீ இங்கேவந்து என்னை எடுத்துக்குதிரையின்மேல் வைத்துக்கொண்டால் உனக்குப் புண்ணியமுண்டென்று சொன்னுன். அவன்சொல்லை நம்பித் தூக்கிக்கொண்டுவந்து குதிரைமேல் வைத்துத் தானும்

ஆங்காரிகளுக்குத்தான் அதிகாரம்.

ஏறலாமென் றிருக்கும்போது, சபடமான
பக்கிரி குதிரையைத் தட்டிவிட்டான்; அந்
தக்குதிரை அதிவேகமாய் ஓட ஆரம்பித்த
து. குதிரைக்குச் சொந்தக்காரன் அத
ன்பின் ஓ பக்கிரி நில்லுநில்லென்று கூவி
க்கொண்டே ஓட, அவன், நான் பிச்சை
க்காரனும் அல்ல, பக்கிரியும் அல்ல;
முன்னே உன்னை இந்தக்குதிரையை யெ
னக்குக் கொடுத்துவிடும்படி கேட்டவன்
என்றான். அந்தவார்த்தையைக் கேட்டவு
டனே கனவான், நல்லவேலை செய்தாய்;
ஆனால் ஏழை எளியவர் முடவர் கண்ணி
ல்லாதவர்களுக்கெல்லாம் பிச்சை கிடைக்
காமலும் அவர்களை ஒருவரும் நம்பக்கூ
டாமலும் அவர்கள் வாயில் மண்ணைப்போ
ட்டுவிட்டாயே, இதுதான் நீசெய்த சகா
யம்; நீயே யிந்தக்குதிரையைக் கொண்டு
போவென்றான். அந்தவார்த்தை அவனு
க்கு அம்புபோல மனதில் தைத்து உருகி
யது. உடனே அவன் குதிரையை விட்டி
றங்கி, ஐயா, கனவானே, என்னாலே ஏழை
முதலானவர்களுக் கெல்லாம் இடறு சம்
பவிக்குமென்று நான் தெரியாமல் செய்த
பெருங்குற்றத்தைக் கடவுள் முகத்தைப்
பார்த்து மன்னிப்பீர்களென்று உம்மை
மெத்தவும் வேண்டிக் கொள்ளுகிறேன்;
உம்முடைய குதிரையில் நீரே ஏறிக்கொ
ண்டு சந்தோஷமாகப் போகலாமென்று
சொல்லி, தன்னிரண்டு கைகளாலும் சலா
ம்செய்து வீட்டுக்குப்போய்ச் சேர்ந்தான்.

சிறுகதை.

ஒரு சிறுகிராமத்தில் ஒருவனுக்கு இர
ண்டு பெண்கள் இருந்தது. அதில் ஒருபெ
ண்ணுக்கு வயது எட்டு. மற்றொரு பெண்
ணுக்கு வயது மூன்று. இந்த இரண்டு
குழந்தைகளையும் விட்டுவிட்டுத் தகப்பன்
இறந்துவிட்டான். கொஞ்சநாள் பொறு
த்து, இந்த மூன்றுவயது குழைந்தைக்
குத் தகப்பனுடைய கியாபகம் வந்துவிட
வே அந்தக்குழந்தை தகப்பன் நாள்தோ
றும்போய்க் கொண்டிருந்த வழியேநோக்
கி தேம்பித்தேம்பி அழுதுகொண்டே நட
ந்துபோகையில் அவ்வழியேசெல்லும் ஒரு
கிழவி அதற்கு அருகினிற்போய் அதன்
கையைப்பிடித்துக்கொண்டு ஓ குழந்தாய்!
எங்கே ஒண்டியாய்ப் போகிறாயென்று கே
ட்டாள். அதற்கு அந்தக்குழந்தை தேம்பி
த்தேம்பி அழுதுகொண்டு "அப்பாவை
பார்க்கப் போகிறேன்" என்றது. உங்கள்
அப்பா பேரென்ன என்றுகேட்க, அப்பா
தான் என்று சொல்லிற்று. உன் அப்பா
வை உன்தாயார் என்னென்று அழைக்கி
றது என்றாள். அதற்கும் "அப்பா அப்பா"
தான் என்று அழைக்கிறது எனச்சொல்
லிற்று. உங்கள் அப்பாவை யென்னத்திற்
குத் தேடுகிறாயென, எங்கள் அப்பாவின்
மடியில் உட்கார்ந்துகொள்வேன். முத்த
மிடுவேன். அவரை யெங்குங்காணோமே
என்று சொல்லி அழுதது. அந்தக் குழந்
தையினுடைய அக்காள் அத்தருணத்தில்
இந்தப் பெண்ணைக்கண்டு கண்ணும் கண்
ணீருமாய் அழுகிற முகத்தைத்துடைத்து
அழைத்துக்கொண்டு போய்விட்டாள். அ
தை விசாரிக்குமிடத்தில் வீட்டுக்கு இன்
னும் தன்தகப்பன் வரயில்லையே; அவருக்கு
தினந்தோறும் முத்தம் கொடுப்பதை விட்
டு இரண்டு மூன்று நாள் ஆய்விட்டுதே.
நாமாவதுபோய்த் தேடிப்பார்த்து முத்த
மிட வேண்டுமென்னும் ஆவலுடன் தெ
ருவில் ஓடித்தேட ஆரம்பித்ததாகத் தெரி
யவந்தது. பிள்ளைவருத்தம் பெற்றவர்க்
குத் தெரியும். பெற்றோர் முகங்காணாத
பிள்ளை மழைமுகங்காணாத பயிர்போல்
வாடிப்போமல்லவா என்று அந்தக்கிழவி
யும் வழிப்போக்கரும் சொல்லிக்கொண்
டே போனார்களாம்.

ஆசைஅண்டாதாகில் அழுகையும் அண்டாது.



மக்காநகரம்.

நமது தேசத்திற்கு மேற்குக்கடலாகிய
யவன சமுத்திரத்திற்கு அப்பால் மகம்ம
திய மதம் செழித்தோங்குமிடமான அரே
பியா என்று வழங்கும், யவன தேசத்தில்
ஆதியிலே ஏற்பட்ட நகரங்களிலே மக்கா
நகரத்திலேதான் 1200 வருடங்களுக்கு
முன்னே மகம்மது என்னும் மதாசாரியர்
தோன்றினர். அவர் பிறப்பதற்குமுன்ன
மே அவர் தந்தை இறந்துபோய்விட்டார்.
கைம்பெண்ணானதாய் தன் மாமனார் வீட்
டில் வந்து வசித்திருந்தாள். அந்தமாமனா
ரும் மருமகளையும் பேரப்பிள்ளையையும் ஆ
தரித்து வந்தார். மகம்மது இளங்குழந்
தையா யிருக்கையில் அங்குள்ள ஒரு தாதி
அவரை எடுத்து வளர்த்துவந்தாள். மகம்
மது நாளொருமேனியும் பொழுதொருவ
ண்ணமுமாய் வளர்ந்து வந்தார். அவர்
பெரியவரானபின்பு இளமையில் தம்முட
ன் பழகினவர்களிடத்திலும், அபிமானம்
சிறிதேனும் அவரைவிட்டு நீங்கவில்லை.
அவருக்கு எழாவது வயதில் தாயும் இறந்
துபோனாள். அவள் இறந்த இரண்டுவரு
ஷங்களுக்கெல்லாம் அவர் பாட்டனாரும்
இறந்துபோனார். அவர் அவதரித்த இடம்
மக்காவாகையால் அரேபியதேசத்தில் ஆ
தியில் ஏற்பட்ட நகரங்களில் மக்கா என்ப
தே பிரசித்தி பெற்றது. இந்த மக்கா நக
ரமானது மகம்மது பிறப்பதற்கு முன்ன
மே அரேபியதேசத்தில் மதவிஷயங்கள்
செழித்தோங்குவதற்கு மத்தியஸ்தானமா
யிருந்தது. ஆயினும் கிறிஸ்துபிறந்து ஐந்
தாவது நூற்றாண்டிலேதான் அதின் உண்
மையான சரித்திரம் வெளிப்பட்டது.
அங்குள்ள காபா என்னும் ஆலயத்தில்
நீலநிறமான கல்விக்கிரகம் ஒன்றுண்டு.
அதை அங்குள்ளவர்களெல்லாம் கடவு
ளே தங்களிடத்தில் கிருபைகூர்ந்து தந்த
ருளியதென்று மிகுந்த பயபக்தியுடனே
ஆராதித்துக்கொண்டிருந்தனர். கொரிஷ்
என்னும் ஜாதியார் அநாதியான இஸ்மேல்
ஜாதியாரென்று அந்த ஆலயத்திற்குத்தரு

ஆசைகொண்டபேருக்கு ரோஷமில்லை.

மகர்த்தர்களாயிருந்தார்கள். அந்த வம்சத்தில் பிறந்தவர்தான் மகம்மது.

மக்கா நகரமானது செங்கடல் கரைக்கு ஐம்பது மயில் தூரத்தில் மலைகளால் சூழப்பட்டு ஒருபள்ளத்தாக்கில் அமைந்திருக்கின்றது. அந்நகரம் தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்கு அத்தனை அதிசயமாகத் தோன்றாது. அவ்விடத்திலுள்ள வீடுகளெல்லாம் கருங்கல்லால் சீர்திருத்தமில்லாமல் கட்டப்பட்டு சுண்ணாம்பு அடித்திருக்கிறதினாலே ஏக வெளுப்பாய்க் காணப்படும். மூலைக்குமூலை ஒழுங்கில்லாமல் கட்டப்பட்ட வீடுகள் கோணலும் குறுகலுமாய் காபா என்னும் ஆலயத்தைச் சுற்றியிருக்கின்றன. அந்த ஆலயத்தின் சொத்துக்களுக்கெல்லாம் கொரீஷ் என்னும் ஜாதியார் சொந்தக்காரர்களாயிருந்தார்கள். முற்காலத்தில் அந்த ஆலயத்தின் திறவுகோல் ஈமன் ராஜாக்களுடைய சுவாதீனத்திலிருந்தது. அதை எப்படியோ இந்த கொரீஷ் வம்சத்தார் கைப்பற்றிக்கொண்டார்கள். பிறகு எவ்வளவோ பெயர்கள் படை எடுத்துவந்து போர்செய்தும் கலகங்களை உண்டாக்கியும் வெகுகாலம்வரையில் கொரீஷ்ஜாதியார் அதைக் கைவிடாமலே பத்திரமாய் காப்பாற்றிக் கொண்டிருந்தார்கள். சிறு பருவத்திலேயே மகம்மது வாய்மையைக் கைவிடாதவராய் உண்மைதவறாத உத்தமனென்று யாவராலும் கொண்டாடப்பட்டார். நுட்ப புத்தியும் விவேகமும் பக்தியும் அவருக்கு மிகவும் அதிகம். ஆனதால் அவர் கணப்பொழுதேனும் சும்மாயிராமல் ஏதேனும் ஒருவிஷயத்தைப் பற்றி யோசித்துக்கொண்டேயிருப்பார். கூடப்படிக்கும் பிள்ளைகள் விளையாடவரும்படி அழைத்தால் அப்போது அவர் இவ்வாறு விளையாடி வீண்பொழுது போக்குவதற்கல்ல, கடவுள் இப்பூமியில் மனிதர்களைப் பிறப்பித்தது; இதைப் பார்க்கிலும் மிகப்பெரிய காரியம் வேறொன்று இருக்கின்றது என்று சொல்லிவிட்டுத் தன்காரியத்திலேயே கண்ணாயிருப்பார். அவருக்கு பொறுமான வயது வந்தபிறகு அந்நகரத்திலிருந்த கைம்பெண்ணான செல்வச்சிறுமி ஒருத்தி தன்னுடைய வர்த்தக சாலைக்கு மகம்மதுவைத் தலைவராக நியமித்துக்கொண்டாள். மகம்மது சிறந்த புத்தியும் சாமர்த்தியமும் நன்னடக்கையும் உடையவராதலால், அந்த வர்த்தகசாலையின் வியாபாரங்களை வெகு திறமையாகநடத்துவதற்கு ஒத்துக்கொண்டு நடத்திவந்தார். அரேபிதேசத்தில் அவரவர்கள் தங்கள் தங்கள் தெய்வங்களை விக்கிரகங்களாகவைத்து பூசித்துவந்தார்கள். மகம்மது அதைப் பார்க்கப்பொறாமல் இவ்வகை விக்கிரக ஆராதனை செய்யும் வழக்கத்தை மாற்றி புதியமதமொன்று ஸ்தாபிக்கவேண்டுமென்று அதற்காகவே எந்தகாலத்திலும் முக்கியமாய் பாடுபட்டுவந்தார். மகம்மதுவை அந்த கைம்பெண்ணான சிறுமி விவாஹம்செய்துகொண்டாள். விவாஹம் செய்துகொண்ட பதினைந்து வருஷம்வரையில் மகம்மது குறிப்பான காரியம் ஒன்றும் செய்யாமலே ஏகாந்தமான இடங்களுக்குச்சென்று செபம் செய்துகொண்டிருந்து காலத்தைக்கழித்து அறுபத்துமூன்றாவது வயதில் இறந்துபோனார்.

மகம்மது மரணமடைந்தது மேதினாநகரத்தில். இந்த அறுபத்துமூன்று வருஷத்தில் என்னென்னவோ அற்புதங்களெல்லாம் நடத்தினாராம். அவைகளை எழுதப்புகுந்தால்ஏட்டிலடங்காது;எழுதஇடங்கொள்ளாது. ஆதலால் மகம்மதுவின் சரித்திரத்தை இதுவரையில் நிறுத்தலாயிற்று.

ஆகும் ஆகாதென்று பரிக்ஷைபார்த்தல்.

சிலகாலைக்குமுன்னே நான் ஒரு சமாசார பத்திரிகை படித்துக்கொண்டிருக்கும்போது அதில் நியாயசபையிலே நடந்த ஒருவிசாரணையைப்பற்றிய விஷயம் பதிப்பித்திருக்கப் பார்த்தேன். அந்த விவகாரத்தில் சாக்ஷியாக வந்தவர்களுக்குள் ஒருவன் மிகவும் எளியவனான குப்பக்காட்டான்; ஆயினும் அப்போது அவன் சொல்லிய ஒருவிஷயத்தை யோசித்துப்பார்த்தால் அவன்மிகுந்த புத்திசாலியாயிருக்கவேண்டுமெனத் தெரியவருகிறது. அதென்னவென்கிறீர்களோ சொல்லுகிறேன் கேளுங்கள்.

நியாயசபையில் சாக்ஷிகளை விசாரணை செய்வதற்காக ஏற்படுத்தியவிடத்தில் அந்தப் பட்டிக்காட்டானை அழைத்து நிற்கவைத்தார்கள். அங்கேவந்து நின்று அவன் கிரமப்படி பிரமாணஞ் செய்தானவுடனே எதிர்ப்பக்கத்து வக்கீல் அவனைக் கேள்விகள்கேட்க ஆரம்பித்தான். அந்த வக்கீல் அந்தசாக்ஷியின் முகத்தைப்பார்த்து இவன் ஒன்றும் தெரியாதவனென்றும், இவனை அதட்டியும் வெருட்டியும் தாறுமாறாய்க் கேள்விகள் கேட்டு மயங்கச்செய்துவிடலாமென்றும் நினைத்து அவனை தெலுங்குபடிக்க உன்னாலாகுமாவென்று கேட்டான்.

அதற்கு அந்தமனிதன் அதைக்கேட்டுத் தகுந்த மறுமொழி என்னசொல்லுகிறதென்று சற்றுயோசித்து நின்றான். அதைக்கண்ட அச்சபையிலுள்ளோர் அனைவரும் நகைக்க ஆரம்பித்தார்கள். ஆயினும் நிமிஷநேரத்தில் அவன் பதில்சொன்னதைக்கேட்டு வக்கீலைப்பார்த்து எல்லோரும் நகைக்கும்படியாயிற்று.

படிக்கமுடியுமோ முடியாதோ, நான் எப்படி சொல்லுகிறது; அதை ஒருபோதும் அப்பியாசம் பண்ணிப்பார்க்கவில்லையே என்று சொன்னான்.

இது எவ்வளவு சாதுரியமான சமாதானம் பாருங்கள். தெலுங்குபடிக்க உன்னாலாகுமா என்றுகேட்டால் ஆகும், ஆகாதென்று அவன் எப்படிசொல்லுகிறது, படிக்க முயன்றுபார்த்திருந்தாலல்லவோ அது அவனுக்குத்தெரியும்; அதனாலேதான் அவன் ஆகும், ஆகாதென்று பரிக்ஷைபாராமல் எப்படி சொல்லுகிறதென்றான். எந்தக்காரியமாயினும் நாம் செய்துபார்த்தாலொழிய அதைச்செய்ய நம்மாலாகும், ஆகாதென்று நாம் எப்படிசொல்லக்கூடும்? ஒருபோதும் சொல்லமுடியாது.

ஆனால் எல்லாக்காரியங்களும் நாம் அப்பியாசம் பண்ணிப் பார்க்கத் தக்கவையென்று கொள்ளலாகாது. ஒருசிறுவன்தான் தலைகீழாக நடக்கக் கற்றுக்கொள்ளவேண்டுமென்று ஆசைகொண்டு எப்போதும் அதேவேலையாய்ப் பழகிக்கொண்டிருந்தான். அப்படித் தலைகீழாக நடப்பது கெட்டிக்காரத்தனந்தான்; ஆனாலும் அது சிறுபிராயத்தில் அவசியம் கற்றுக்கொள்ளத்தக்கதான அத்தனை சிறந்தகாரியமன்று. இப்படியே மற்றொருசிறுவன் தன்மூக்கின் நுனியில் ஒருமுட்டையைக் கீழேவிழாமல் சரியாக வைத்துக்கொள்ளப் பழகவேண்டுமென்று அதற்காக எந்நேரமும் விடாமுயற்சியாய்ப் பாடுபட்டுவந்தான். படிப்புக்காக அவன்செலவழித்தகாலமோ, மிகவும் சொற்பம். கடைசியில் அவன் எழுதப்படிக்கக்கூட நன்றாய்க் கற்றுக்கொள்ளவில்லை; பெரியவனான பிறகும் அவனுக்குச் செவ்வையாகக் கையெழுத்துக்கூடப் போடத்தெரியாது; ஊரிலிருந்து ஏதாவது ஒருகடிதம்வந்தால் அதில் இன்னது எழுதியிருக்கிறதென்று தெரிந்துகொள்ள வேறொருவரிடத்திலேதான் கொண்டுபோய்க் காட்டவேண்டும். கனை

க்கு என்கிறதே தெரியாது; ஒருருபாயைக் கையில்கொடுத்தால் சரியாகச்சில்லரைவாங்கிவரமாட்டான்.

ஆகையால் மற்றவைகளைப் பார்க்கிலும் சிலவிஷயங்கள் நாம் அதிகமாய்ப் பாடுபட்டுப் பழகத்தக்கவையாயிருக்கின்றன. அப்படி நாம் பழகுவதற்கு யோக்கியமானவை இவையென்பதும் யோக்கியமாகாதவை இவையென்பதும் நாமேபார்த்துத் தெரிந்து கொள்ளக்கூடும். பழகுவதற்கு யோக்கியமானவையென்று தோன்றினால் அப்படிப்பட்ட விஷயங்களில் அந்தப்பட்டிக்காட்டான் சொன்ன மறுமொழியை நாம் மறவாமல் ஞாபகம்வைத்துக்கொள்ளவேண்டும். இதுநம்மால் செய்யமுடியுமோ முடியாதோவென்று சந்தேகம்தோன்றினால் அப்போது, அதென்னவோ எனக்குத்தெரியாது, நான் பழக்கம்செய்ததில்லை என்று சொல்லிவிடவேண்டும்.

இப்பொழுது நாம் ஏதோ ஒருதொழில் கற்றுக்கொள்ளவேண்டுமென்று தீர்மானித்து அப்படியே அதைக்கற்க ஆரம்பித்ததாக வைத்துக்கொள்ளுவோம். சிலவியாபாரங்கள் ஆரம்பிக்கையில் சுலபமாகவேயிருக்கின்றன; சிலவருத்தமாயிருக்கின்றன. ஆரம்பத்தில் சுலபமாயிருந்தாலும் வருத்தமாயிருந்தாலும், நாள்சென்றால் அதில் ஒருவிதமானவருத்தம் தோன்றி, இதைக் கற்றுக்கொள்ளுவதனால்என்னபயனென்கிற எண்ணமுண்டாகிறது; அத்தருணத்தில் அநேகர் அந்தவியாபாரத்தை விட்டுவிடத்துணிகின்றார்கள்.

சிலநாளைக்கு முன் ஒருசிறுவன் இப்படியே எண்ணங்கொண்டான். அப்போது அவன் எடுத்துக்கொண்டவிஷயம் கணிதம். பின்னால் அவன் கணிதசாஸ்திரத்தில் பெரியபுலவனானான். ஆயினும் சிறுவனாயிருக்கும்போது ஒருபெரிய கணக்குப்போடும்படி நேரிட்டு அதைப்போடமாட்டாமல் சோர்ந்துபோனான். ஒரு பலகைமுழுதும் கணக்குப்போட்டுப்பார்த்தான், விடைசரியாய்வரவில்லை, அதனால் இனி இதில்முயல்வது வீணென்று நிராசைகொண்டு அப்படியே புத்தகத்தையும் பலகையையும் போட்டுவிட்டுப் படுத்துக் கொண்டான்.

அப்போது நடந்தது என்னவென்கிறீர்களோ கேளுங்கள். அவன் பார்த்துக் கொண்டிருந்த கணக்குப்புத்தகம் மிகவும் பழையபுத்தகம். வெகுநாளைக்கு முன்னே ஒருபெரியபண்டிதர் படித்தபுத்தகம். அந்தப்பண்டிதரே பலதடவை சரியாகவிடைவராமல் நிராசைகொள்ளும்படி நேர்ந்ததுண்டு. அப்படிச் சோர்வுண்டாகும் காலங்களில் கொண்டதொழிலைக் கைவிடாமல் மறுபடி மேற்கொள்ள உற்சாகமுண்டாகும்பொருட்டு, அவர் அப்புத்தகத்தின் முதல்பக்கத்தில் ஒரு சிறுவாக்கியம் எழுதி வைத்துப்போட்டிருந்தார். முன் நாம்சொன்ன சிறுவன் இதுவரையில் அவர் எழுதியிருந்ததைப் பார்க்கவேயில்லை. அன்றையதினம் அவன் சோம்பலாய்ப் படித்துப் புத்தகத்திலுள்ள காகிதங்களைத் தள்ளிக்கொண்டே யிருக்கையில், முதல் பக்கத்தில் அவர் எழுதியிருந்தது திடீரென்று கண்ணில் அகப்பட்டது. அதைக் கண்டவுடனே அவன்மனதில் ஒரு உற்சாகமுண்டாயிற்று. அதில் எழுதியிருந்ததாவது, "ஊக்கமதுகைவிடேல்" என்னும் சிறுவாக்கியமாம்.

அதைப்பார்த்தவுடனே அவன் ஊக்கங்கொண்டவனாகிப் பலகையைக் கையிலெடுத்துக்கொண்டு விடாமல் பாடுபட்டு எடுத்தகாரியத்தை முடித்தான்.

ஒருகாரியம் செய்யத்தொடங்கினால் இடையே வருத்தங்கள் நேரிடுவது இயற்கையே. முன்னோர்கள் அவற்றிற்குச் சலியாமல் எதிர்த்து முயன்று எடுத்தகாரியத்தை நிறைவேற்றினார்களல்லவா? அப்படியே எல்லாரும் வருத்தங்களைக்கண்டபோது ஊக்கமது கைவிடாமல் கஷ்டப்பட்டுக் காரியசித்தி பெறக்கடவீர்கள். "முயற்சி திருவினையுண்டாக்கும்."

ஆசைநோவுக்கு அவிழ்தம் ஏது.

புதியமாதிரித்தையல்.

வர்ணம்தீர்த்த இந்தச்சித்திரதையல் மேல்வரிச்சட்டத்தைப் பார்த்து மூலைக்குமூலை அளவு சரியாக பூத்தையல்தைக்கும் வகையை முழுதும் விவரித்து எழுதிக்காட்டக் கூடாமையால் இரண்டு மூன்று குறிப்புகளைமாத்திரம் இதனடியில் காட்டுகிறோம்.

1. இந்த எள்ளுப்பூத்தையல் வேலைக்கென்றே பலகண்வைத்து நெய்திருக்கும் ஜாலர்துணியின்மீதே கெட்டிச்சாயம் ஏற்றிய பலவர்ணமான பட்டுநூல்களாலாவது பருத்திநூல்களிலாவது இந்த மேல்வரிச்சட்டத்தில் காட்டிய புள்ளிகளின் கணக்கின்படி மூலைமூலை தவறாமல் தையல் ஒட்டி எள்ளுத் தையல்போடவும். மேல்வரிச்சட்டத்தில் கண்ட சாயங்களேற்றிய நூல்களையே உபயோகிக்க வேண்டுமென்கிற அவசியமில்லை. அவரவருடைய புத்திக்கு அழகாய்த்தோன்றுகிற வர்ணநூல்களை உபயோகித்துக்கொள்ளலாம்.



பட்டுநூல்களல்லாமல் பருத்திநூல்களால் தையல்வேலைசெய்தால் அது கெட்டிச்சாயம் தீர்ந்த நூல்களாகவே யிருக்கவேண்டும். சாதாரணமான சாயச் சூரணத்தில் தோய்த்த நூல்களால் வேலைசெய்ததுணியைத் தண்ணீரில் நனைத்த உடனே சாயங்கள் ஒன்றோடொன்று கலந்து துணி பார்க்க வழங்காமல் கெட்டுப்போகும்.

ஜாலர்துணியில் பூப்போட்ட இடம்தவிர மற்ற இடங்களில் வர்ணநூல்களை ஒட்டி நிறைத்து விட வேண்டியதில்லை.

2. மேல்வரிச்சட்டப்பிரகாரம் சாதாரணமான ரெட்டுத்துணியிலும் எள்ளுத்தையல்வேலை பலவர்ணமான பெர்லின் சீமைக்கம்பளநூலால் செய்யலாம். அப்படிச்செய்தால் பூவைச் சுற்றியிருக்கிற இடங்களைக் கறுப்பு அல்லது ஊதா அல்லது சிவப்புச்சாயம் கனமாய் ஏற்றிய கம்பளிநூலால் தைத்து நிறைத்துவிடவேண்டியது அவசியம்.



Library's copy lacks p. 219-220.

கொக்கும் நரியும்.

ஒருநாள் காட்டில் கொக்கும் நரியும் சந்தித்தது. நரி கொக்கைப்பார்த்து நீ இன் றைக்கு என்வீட்டுக்கு விருந்துக்கு வர வேணுமென்று மெத்த மரியாதையுடன் அழைத்தது. அதற்கு கொக்கு ஒத்துக் கொ
டு வந்தது. உடனே நரியானது
ஒரு ம்பாளத்தில் மதுரமான பாயசத்தை
ப் லவிட்டுக் கொண்டுவந்து கொக்கின்
ட ாகவைத்து நரி முன்னுதாக விருந்
த யை சாப்பிடுவென்று சொல்லாமல்
ச ாவினுல் நக்கிநக்கி ருசிபார்த்துவிட்
ாக்கைப்பார்த்து, நீ நல்லவிருந்தாளி
தால் இதோ நான் கொண்டுவந்து
திருக்கும் ருசியுள்ள இந்த பாயசத்
உன் மனப்பூர்வமாகப் புசியென்று
சொன்ன அவமானத்தைப் பொறுத்துக் கொண்டு தானும் சாப்பிட்டதுபோல் "ஆம், ஆம் நன்றாயிருக்கிறது நான் செலவுபெற்றுக் கொள்ளுகிறேன் நீ தயவுசெய்து என்வீட்டுக்கு விருந்துக்கு வரவேண்டும்" என்று அதிக மரியாதையுடன் கூப்பிட்டது. அதற்கு துறைநரி எனக்கு அநேக வேலைகளிருக்கிறது எப்படி வருவேன். ஆயினும் வருகிறேன் என்றுபின் தொடர்ந்து போனவுடனே இராப்போஜனத்துக்கு என்னென்ன வேண்டுமோ அவைகளைத் தன் கழுத்துமாத்திரம் கொள்ளும் படியான அவ்வளவு நெருக்கமான வாயுள்ள பிங்கான் ஜாடியில் கொண்டுவந்து வைத்து வந்த விருந்தாளியைச் சாப்பிடுவென்று சொல்லாமலே அதிலிருந்த பதார்த்தங்களைச் சாப்பிட்டு அரைவயிறு நிறைந்தவுடனே தன் சிநேகிதனைப்பார்த்து நான் உன்னைக் கேட்டுக்கொள்வது ஒன்று அதாவது உன்வீட்டில் நீ அச்சமில்லாமலும் நாணமில்லாமலும் வயிறுநிறைய வஞ்சனையில்லாமல் எப்படி புசிப்பாயோ அப்படியே இப்போது நீ புசிக்கும்படியாய் நான் மெத்தவும் கேட்டுக்கொள்ளுகிறேன் என்றது. துறைநரி சரிசரி நாம் இன்றைக்கு இந்தக் கொக்கினிடத்தில் முழுமோசம் போனோமென்று தனக்குள்ளே எண்ணிக்கொண்டு சரிக்குச்சரி செய்ததல்லவா ஆகட்டும் என்று செலவுபெற்றுக் கொண்டு துரிதமாய் ஓடிப்போய்விட்டது.

நீதி. பழிக்குப்பழி தீர்த்துக்கொள்ளுவதே சிலருடைய சுபாவம்.

கதாசாரம். எப்பொழுதும் இழிவான பரியாசம் செய்யலாகாது அப்படி செய்வது, யுக்தியோசனை, புத்திகூர்மை, மட்டுமரியாதை, விவேகம் முதலானவை இல்லாமைக்கே அடையாளமாகும். மேலும் பரியாசம் பண்ணப்பட்டவனுக்கு கோபம் வரச்செய்து அவன் பின்னும் கொடுமையாய் பழிதீர்த்துக் கொள்ளும் படி தூண்டிவிடும்.

ஜூன்மீ புதிர் முதலானவைகளை விடுவிக்கும் வகைகள்.

1. தாக்கம்.
2. அவ்விரண்டும் பாராட்டப் பாராட்ட வளரும்.
3. சிலபூரணமாகவும் சிலகுறைவாகவும் இருப்பதால்.
4. அண்ணன் ஒன்றும் தம்பி இரண்டுமாக பங்கிட்டுக்கொள்ளவேண்டியது.
5. பத்துபடி பானையில் இருக்கும் எண்ணெயை இரண்டுதரம் மூன்றுபடி பானையால் அளந்து ஏழுபடி பானையில்விட்டு, மூன்றுந்தரமும் மூன்றுபடி பானையால் அளந்து ஏழுபடி பானையில் நிறைப்பி விட்டால் - ஏழில் ஏழுபடியும் மூன்றில் இரண்டுபடியும் பத்தில் ஒருபடியுமாக இருக்கின்றது. ஏழுபடிபானையில் இருக்கும் எண்ணெயை பத்துபடி பானையில் விட்டால், பத்தில் எட்டுபடியும் மூன்றில் இரண்டுபடியுமாக இருக்கின்றது. மூன்றுபடி பானையில் இருக்கும் எண்ணெயை ஏழுபடிபானையில் விட்டு பத்துபடிபானையில் இருக்கும் எண்ணெயை மூன்றுபடி பானையால் அளந்து ஏழுபடி பானையில் விட்டால் ஏழுபடி பானையில் ஐந்துபடியும் பத்துபடிபானையில் ஐந்துபடியும் - பங்குசரி.
6. பிரிந்துபோகாமல் பொருத்தப்பட்டிருக்கிறது. விலகின்ருலும்நடுவில் அகப்பட்டதை கண்டித்துப்போடும்.
7. பாலற்றுப்போவதால். 8. அச்சாணியிட்டு.
9. வெந்தது இரண்டு - பாக்கும், சுண்ணும்பும்; வேகாதது ஒன்று - வெற்றிலை; வெந்தத்தின்மேல்நின்று விளையாடுகிறது - புழுக்கி உலருகிற நெல்லின்மேல்நின்று தழாவுதல்; மானத்துக்கு [illegible] டுதல் - புடவை வாங்கப்போனது; ஒன்றை இரண்டாக்குதல் - மருத்துவம் பார்க்க[illegible]து; நேற்று செத்தவனை இன்றைக்கு உயிராக்கப்போனது - நேற்றுபிடுங்கிவைத்த நாற்[illegible]ன்றைக்கு நடப்போனது.

ஆகஸ்ட்டு மீ'த்து விடுகதைகள்.

1. என்கையிலிருக்கும் கடிதங்களில் ஒன்றைவாங்கிக்கொண்டாலும், இரண்டை வாங்கிக்கொண்டாலும், மூன்றை வாங்கிக்கொண்டாலும், முழுமையும் வாங்கிக்கொண்டாலும், என்பெயர் மாருமல் முன்போலவே இருப்பேன். நான்யார்?
2. இல்லாத இடத்தில் இருக்கிறதென்று காட்டுவது எது?
3. உன்னிடத்தில் வருவதற்குமுன்னமே உன்னைக்கொண்டே யெடுப்பது எந்தவஸ்து?
4. பனிபெய்து மூடியபுல்லுக்கு நிறமென்ன?
5. எப்பொழுது வஸ்திரங்கள் விலைபோகாது?
6. கடிகாரம் எப்பொழுது குற்றவாளியாகும்?
7. கப்பல் எப்பொழுது காற்றையடிக்கும்?
8. காலுதலையுண்டு, பிரமனுமல்ல; காலுமில்லை கையுமில்லை, கரணம்போடுவான், தொம்பரவனுமல்ல; வாலுமுண்டு கொம்புமுண்டு, மிருகமுமல்ல; ஆகாசத்தை யெட்டுவான், பக்ஷியுமல்ல; குழந்தைமுதல் கு[illegible] கொண்டாடுவார்கள். அது என்[illegible]
9. தேகமுண்டு, தலையில்லை; கையுண்டு, [illegible]ல்லை; வாரியடித்தால் பல்லைக்காட்டு மனிதனைவிழுங்குவான்; வீதியில்நி[illegible]ட்டுவான்; நாணயமாக மினுக்குவ[illegible] என்ன?
10. ஒரே இருப்புப் பாதையின்பேரில் கிழக்கே இருந்து 50 வண்டியும் மேற்கேயிருந்து 50 வண்டியும் வந்து சந்திக்கும்படி நேரிட்டது. இதற்கடுத்த கிளைவழியில் 25 வண்டியும் ஒரு புகையந்திரமும்தான் நிற்க இடம் உண்டு எப்படி கிழக்குவண்டி மேற்கே போகக்கூடும்? மேற்குவண்டி கிழக்கேவரக்கூடும்.

Printed and published for the Proprietor at
the V. N. Jubilee Press,
No. 1, Umpherson Street, MADRAS,

All Rights Reserved.

ஸ்விடன்.

" Let us live for our Children."—(FROEBEL).
அமிழ்தினுமாற்றவினிதே தம்மக்கள்
சிறுகையளாவிய கூழ். (நால்) - குறள்.

THE MAHARANI.

A PICTORIAL MAGAZINE FOR GIRLS' SCHOOLS AND HOME READING.

COMMENCED ON THE ROYAL JUBILEE DAY-JUNE 1887.

ம ஹா ரா ணி.

புத்தகம். 2.] அக்டோபர்மீ 1888ளு. [இலக்கம். 3.

CONTENTS. | அட்டவணை.

CONTENTS.	Page.	அட்டவணை.	பக்கம்.
GOVINDASAMI —A STORY OF PEASANT LIFE—CHAPTER 8.	225	கோவிந்தசாமி என்னும் குடியானவன்கதை (தொடர்ச்சி.)	225
THE PRECEPTOR AND HIS DISCIPLE ...	231	உபாத்தியாயரும் மாணாக்கனும்	231
A TRIP TO SWEDEN	232	ஸ்விடன் தேசம்	232
AGAINST IMMODERATE EATING... ...	233	மீதூண் விரும்பேல்	233
A WOMAN TO BE PRAISED	234	புகழத்தக்க ஓர்பெண்	234
SHORT STORIES FROM THE HISTORY OF ENGLAND—HENRY I	235	இங்கிலாந்துதேச சரித்திரத்தில் தெரிந்தெடுத்த சிறுகதைகள்—முதலாம் ஹென்றி	235
A DROP OF RAIN	236	ஓர் மழைத்துளி	236
ON BEING HARD	237	நெஞ்சுறுதி	237
A GOOD WIFE	239	நல்ல மனையாள்	239
HOMELY TALKS ABOUT ANIMALS—THE MONKEY	241	குரங்கு	241
THE MOTHER AT HOME	242	வீட்டில் தாய்செய்யும் நன்றி	242
THE MORALITY OF CLEANLINESS ...	243	அழுக்குப்போக அலம்பிச் சுத்தஞ்செய்தல்	243
THE MOTE OR BEAM	243	துரும்பு தூண்	243
THE LION, THE BEAR AND THE FOX ...	244	சிங்கமும் கரடியும் நரியும்...	244
A TRICKY FOX	244	நரியின்தந்திரம்	244
SILK WORK PATTERN	245	பட்டுநூல் தையல்	245
FLOOR DECORATIONS	247	கோலம்	247
PUZZLES AND RIDDLES...	249	விடுகதை புதிர்முதலியன...	249
MISCELLANEOUS	250	நானாவிஷயம்	250

கோவிந்தசாமிகதை.

வரதனுக்கும் அவன் தாய்க்கும் நடந்த சம்பாஷணை.

கோவிந்தசாமிக்கு ஐந்து வயதாகுமளவும் ஒரு விசேஷமுமில்லை; ஆனால் ஒருநாள் அவன் ஒருவரும் துணையில்லாமல் அந்தவீட்டு முற்றத்தில் தவழ்ந்து தனியே விளையாடிக்கொண்டிருக்கையில், அருகிலுள்ள குளக்கரையண்டை சென்று அந்தக் குளத்தில்தவறி விழுந்துவிட்டான். நல்லவேளையாய் அப்பொழுது மீனாட்சி அந்தவீட்டின் பித்தளைப் பாத்திரங்களையும், கற்சட்டிகளையும் அந்தக்குளத்தின் படித்துறையிலிருந்து பற்றுத்தேய்த்துக்கொண்டிருந்தாள். குழந்தை குளத்தில் விழுந்ததைக்கண்டதும் அவள் ஓவென்றலறினாள். ஆனால் அந்தக்குளத்தில் அவ்விடத்தில் ஆழமில்லாததினால் அவள் உடனே அதிலிறங்கி அவனை எளிதில் எடுத்துவந்தாள். குழ

ஆசை வெட்கமறியாது.

ந்தை குளத்தில் விழுந்ததினால் அவனுக்கு ஊறுபாடொன்று மில்லை யென்பதைக் காணவே, அவளுக்குச் சந்தோஷமுண்டாயிற்று. இவ்வாறு கோவிந்தசாமி ஐந்து வயதாகுமளவும் அந்த முற்றத்தின் புழுதி முழுவதும் அவன்மேலெல்லாம் படியும்படி வஸ்திரமில்லாமலே அதில் வளைய வந்துகொண்டிருந்தான். மாலதி அவனை விட்டுப் போய்விடாமல் அவனண்டையிலிருந்து, சற்றே நிற்கும்படியாயும், சற்றே நடக்கும்படியாயும் பாட்டுப்பாடிக்கொண்டே கற்பித்துக் கொடுப்பாள். கோவிந்தசாமிக்கு ஐந்துவயதானதும், அவனைப்பற்றி வரதனுக்கும் அவன்தாய்க்கும் முக்கியமான சம்பாஷணை யொன்றுண்டாயிற்று. வங்கதேசத்தில் தனிகர்கள் தங்கள்வீட்டிலுள்ள ஆண் குழந்தைகளை ஆறுவது வயதில் பள்ளிக்கு வைப்பது வழக்கம். குழந்தைக்கு அக்ஷராப்பியாஸஞ் செய்விக்கும்போது அந்தக் குழந்தைக்குக் கல்வியறிவை நன்றாய்ப்புகட்டும்படி கலைமகளாகிய ஸரஸ்வதிதேவியை விதிமுறையாய் வணங்குவதுண்டு. அத்தேசத்தில் குழந்தையைப் படிக்கவைக்கும்போது எழுதுவதற்காக அதன் கையில் சுண்ணாம்புக்கட்டியைக் கொடுப்பார்கள்; அந்தக் கட்டியினால் குழந்தைகள் வங்கபாஷையில் நெடுங்கணக்கைத் தரையிலெழுதுவது வழக்கம். வரதனுக்குத் தன்மகன் கோவிந்தசாமியைப் படிக்கவைத்து அவனைச்சற்றே எழுதப்படிக்கக் கற்றுக் கொள்ளும்படி செய்யவேண்டுமென்றாசை. வரதன் அக்ஷராப்பியாஸஞ் செய்திராதவனாதலால், தன்பெயரை எழுதத்தெரியாமல் கிறல்போடுவது வழக்கம். தனக்கு எழுதப்படிக்கத் தெரியாதிருந்தாலும், தன் மகனையாவது படிக்கவைத்தால் அவன் தன்னைப்போலத் தந்திரமுள்ள குமாஸ்தாக்களினிடத்திலும், கொடுமையுள்ள ஜமீன்தார்களிடத்திலும் அகப்பட்டுக்கொண்டு திண்டாடாமல் சுகமாயிருப்பானென்று நினைத்தான். ஆயினும், அவன் தன் தாயாருடைய அநுமதியைப்பெறாமல் இதுவிஷயத்தில் ஒன்றுஞ் செய்யக்கூடாதாகையாலும், "தாயிற்சிறந்ததொரு கோயிலுமில்லை" யாதலாலும், "மூத்தோர்சொல் வார்த்தையமிருதம்" என்றபடி அவள் சொல்லுவதெல்லாம் எப்பொழுதும் அநுகூலமாகவே நடந்துவருகிறதினாலும் இதுசங்கதியைப் பற்றி அவளோடு நல்ல சமயம்பார்த்துத் தன்கருத்தை அவளண்டை வெளியிட வேண்டுமென்று கருதியிருந்தான்.

அவ்வாறே ஒருநாள் மத்தியானத்துக்குமேல் அவனுக்குத் தன்வயலில் வேலையில்லாதிருந்ததைக் கண்டு, கயாராமனோடு மாட்டைப் பத்திரமாய்ப்பார்த்து வீட்டுக்கு ஓட்டிக்கொண்டு வரும்படியாகவும், கறுப்பண்ணசாமியோடு வயலில் களைபறிக்கும்படியாகவுஞ் சொல்லிவிட்டுத் தான்மட்டும் சற்றுமுந்தியே வீட்டுக்குவந்தான். அப்பொழுது அவன் தாய் சமயலறையின் தாழ்வாரத்திலுட்கார்ந்து சிறிதும் சோர்வின்றிக் கொட்டை நூற்றுக்கொண்டிருந்தாள். வரதன் குளத்துக்குப்போய்க் கையையுங் காலையும் முகத்தையும் கழுவிவிட்டு உக்காக் குடிப்பதற்காக உக்காவை யெடுத்து மூட்டி அதைக்கையிலே பிடித்துக்கொண்டு தன் தாயார் கொட்டை நூற்றுக்கொண்டிருந்த இராட்டினத்தண்டை வந்து உட்கார்ந்துகொண்டான்.

வரதன். அம்மா! நான் வெகுநாளாகத் தங்களோடு ஒருவிஷயத்தைப்பற்றி வார்த்தை சொல்லவேண்டுமென்றிருக்கிறேன்.

அலங்காரி. வரதப்பா! அது எதைப்பற்றியது? ஏதேனும் விசேஷ முண்டோ? உன்மனதுக்கு வருத்தமேதாவது நேர்ந்ததா? அதென்ன சங்கதி, சொல்லு.

வரதன். அம்மா! அப்படிக் கெல்லாம் எனக்குத் தீங்கொன்று முண்டாகவில்லை

கோவிந்தசாமியைப் பற்றிச் சிறிது தங்களோடு பேச நினைத்திருந்தேன்.

அலங்காரி. மகனே! கோவிந்தசாமியைப்பற்றி யென்ன? குழந்தை நோய்கொண்டானா என்னசொல்லு. அவனுக்குடம்பென்ன?

வரதன். தாயே! குழந்தை கோவிந்தசாமியைப் பள்ளியில் படிக்கவைத்தால் நல்லதல்லவா? "எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்" என்பது பொய்யோ? எனக்கு எழுதப்படிக்கத் தெரியாத தோஷம் பெரிதே. எனக்குநமது பட்டாவைப்படிக்கவுந் தெரியாது; முச்சலிக்காவை எழுதவுந்தெரியாது; எனக்கு என்பெயரைக்கூட எழுதத் தெரியாது; ஆனதினாலேதான் கையெழுத்துப் போடமாட்டாமல் கிற்றிடவேண்டி யிருக்கிறது. எனக்குக் கண்ணிருந்தும் பார்க்கவழியில்லை. தந்திரமுள்ள குமாஸ்தாக்களிடத்திலும், கொடியவர்களான ஜமீன்தார்களிடத்திலும் நான் அகப்பட்டுக் கொண்டு படுகிற சங்கடம் கொஞ்சமோ? ஆதலினால் கோவிந்தசாமிக்கு அக்ஷராப்பியாசஞ் செய்வித்தல் உத்தமமானதென்று தங்களுக்குத் தோற்றவில்லையா?

அலங்காரி. அப்பா, வரதப்பா! குழந்தைக்கு அக்ஷராப்பியாஸஞ் செய்விக்கலாமென்கிறதைப்பற்றி நீ பேசவேண்டாம். நான்வேண்டாம், வேண்டாமென்றுபலமுறை சொல்லியும் உன்தந்தைகேளாமலே உன்தமயனைப்பாடசாலைக்கு அனுப்பினார். அப்படிச் செய்ததினால் எப்படி முடிந்தது தெரியுமா? அவன் பள்ளிக்கூடத்துக்குப்படிக்கப்போய் ஒருவருஷமானதும்அவனை எங்களிடமிருந்து தேவதைகள்தங்களிடத்துக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டார்கள். நம்மைப் போன்ற எளியவர்களுக்கும், எழுதப்படிக்கத் தெரிந்துகொள்ளுவதற்கும்பொருத்தமில்லை. வரதப்பா! நீ குழந்தையைப்பள்ளிக்கு வைத்தால் குழந்தையைத்தேவதைகள்தங்களிடம் அழைத்துக் கொண்டுபோய்விடுவார்கள். எப்படியாவது என்குழந்தை பிழைத்திருக்கவேண்டும்.

வரதன். தாயே! தங்களுக்கு இதென்ன பிரமை! படிப்பதும், எழுதுவதும் குழந்தையைக் கொன்றுவிடுமென்று எவராயினுஞ் சொல்லக் கேட்டதுண்டோ? பிராமணர்வீட்டுப் பிள்ளைகளும், கணக்கர்வீட்டுப் பிள்ளைகளும் எழுதப்படிக்கக் கற்று வருகிறார்களே; அதனால் அவர்கள் ஏன் இறந்துபோகவில்லை?

அலங்காரி. பிராமணப் பிள்ளைகளும், கணக்கர்களின் பிள்ளைகளும் படிப்பதனாலே தேவதைகள் அவர்கள்மேற் கோபங்கொள்ளுகிறதில்லை; அவர்கள் அப்படியிருப்பதேனெனில், அது அவர்களுடைய தொழிலேயாம். நாம் செய்வதோ உழவுதொழில். இப்படியிருக்க, நாம் நமது ஜாதித்தொழிலைவிட்டு, அவர்கள் ஜாதித்தொழிலைச் செய்யத்தொடங்கினால் கடவுளுக்கு நம்மிடத்துத் தப்பாது கோபமுண்டாகும்.

வரதன். அம்மா! நம்முடைய ஜாதியாருக்குள்ளே எத்தனைபேர் எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ளவில்லை? நடராஜன் படிக்கவில்லையா? குமாஸ்தா குருவாமிசெட்டியார் மகன் மதுசூதனன் படிக்கவில்லையா? அவர்களை யெல்லாம் தெய்வங்கள் ஏன் கொல்லாமல் விட்டிருக்கின்றன?

அலங்காரி. அப்பா மகனே! யாருக்கு எப்படியிருந்தாலென்ன? நம்முடைய குடும்பத்தாருக்கும் எழுதப் படிப்பதற்கும் பொருத்தமே இல்லை யென்று காண்கிறது. இது மெய்யாக இல்லாவிடில், உன்தமயன் படிக்க ஆரம்பித்து ஒருவருஷமானவுடன் ஏன் இறந்துபோகவேண்டும்? நாம் நிலத்தை உழும்படியாகப் பிறந்திருக்கிறோமாதலினால்நாமுள்ளநாளுமட்டும் உழவர்களாகவே யிருக்கவேண்டும். இன்

ஞென்று உனக்குச் சொல்லுகிறேன்கே
ள்; உன்னுடைய தகப்பனர், பாட்டனர்
எவரேனும் எப்பொழுதாவது எழுதப்ப
டிக்கக் கற்றுக்கொண்டார்களா? உன்வம்
சத்திலிருந்தவர்களில் ஒருவருஞ் செய்யா
தகாரியத்தை உன்மகன்மட்டுஞ் செய்வி
க்க நீ விரும்பலாமோ?

வரதன். நம்முடைய தகப்பன், பாட்
டன் இருந்த காலத்தில் எப்பொழுதும்
தெய்வபக்தியும், நல்லொழுக்கமும் குடி
கொண்டிருந்தன. அது சத்தியயுகம். அக்
காலத்தில் மோசமே கிடையாது. கொடு
மை தலையைத் தூக்கினதுமில்லை. ஆனதி
ஞலேதான் எழுதுவதும், படிப்பதும் அப்
பொழுது அநாவசியம். ஆனல் இக்கா
லத்திலோவென்ருல், ஜனங்கள் மிகவும்
மோசஞ்செய்யத் தலைப்பட்டிருக்கிருர்கள்;
அவர்களுக்குத் தெய்வங்களிடத்திலும்பய
மில்லை; மனிதர்களிடத்திலும் பயமில்லை.
ஆதலினல் இக்காலத்தில் நாம் மோசத்தி
ற்கும், கொடுமைக்கும் உட்படா திருத்
தற்பொருட்டு எழுதப்படிக்கக்கற்றுக்கொ
ள்ளுதல் அவசியமேயாம்.

அலங்காரி. மகனே! நீ ஆண்பிள்ளையா
தலால் இவ்வளவுதூரம் பலங்கட்டிக் கக்ஷி
பேசுகிருய். ஆண்பிள்ளையோடு பெண்பிள்
ளை பேசியபேச்சு ஜயிக்குமா? அப்பா, வர
தப்பா! உன்புத்தியில் எது நலமென்றுபடு
கிறதோ அப்படியேசெய்; உன்தமயனைப்
போல ஒருகால் எங்கே குழந்தைக்கு அ
பாயம் வரப்போகிறதோ வென்ற அச்
சமே ஒழிய எனக்கு வேறொன்றுமில்லை.
என்னைக் கேட்பாயாயின், நமது கோவிந்
தசாமி எழுதப்படிக்கக் கற்றுக்கொண்ட
தன்பின்பு இறந்துபோவதைவிட, பசுக்
களை மேய்த்துக்கொண்டு பசியாமல் வயி
ருரச் சோற்றைத் தின்றுகொண்டு சுகமா
யிருப்பதே நலமெனத் தோனுகிறது.

வரதன். அம்மா! சாவதும், வாழ்வது
ம் நமது தரமன்று; கடவுளின் சித்தப்படி
நடக்குமென்று முன்பே சொல்லியாயி
ற்று. குழந்தை கோவிந்தசாமியை இராம
பத்திராசாரியர் பாடசாலைக்கு அனுப்ப
அநுமதி கொடுக்கவேண்டும். ஜமீனைச்சே
ர்ந்த கணக்கு வழக்குகளெல்லாம் அவர்
நன்ருய் அறிந்த உபாத்தியாயராதலால், இ
ந்த ஊரிலுள்ள மற்றொரு பாடசாலையை
விட அவருடைய பாடசாலைதான் சிறந்த
தென்று தோன்றுகிறது. தாயே! தாங்கள்
எனது வேண்டுகோளுக்கு இரங்கவேண்
டும்.

அலங்காரி. அப்பா, வரதப்பா! உனக்கு
அப்படிச்செய்ய மனமிருக்கிறபக்ஷத்தில்
அவனை அப்படியே அனுப்பு. கோபிநா
தன் குழந்தையைக் காப்பாற்றுவாராக!
கோவிந்தசாமியைப் பள்ளிக்கூடத்துக்கு
அனுப்பவேண்டுமானல், நீ இரண்டொரு
வாரங் காத்திருக்கவேண்டும்; அதற்குள்
ளே நான் இன்னுங் கொஞ்சம் நூல்நூற்
றுக் குழந்தைக்கு அரையிலுடுத்த வஸ்திர
மொன்று நெய்துகொடுக்கச் சொல்லலாம்.

அவள் இவ்வாறு சொல்லவே வரதன்
அதைக்கேட்டுப் பேரானந்தங் கொண்டு
அப்படியே ஆகட்டுமென்ருன்.

பஞ்சானனன்.

கோவிந்தசாமிபிறந்து ஐந்தாம்பிராயம்
நிறையுமளவும் அவனுக்கு எவ்வகைப்
பட்ட பெருவிபத்தும் உண்டானதில்லை
யென்று முந்திய அதிகாரத்திலே சொன்
னேம். ஆயினும் ஐந்தாவதுவயதில் அவ
னுக் கோர் தத்துண்டாயிற்றென்று பின்
னிட்டுக் கேள்வி; அவ்வாறுண்டான ஆப
த்து ஐந்தாவதுவயது நிறையும்போதோ,
அல்லது ஆருவதுவயதின் ஆரம்பத்திலே
தானே வென்பதைமட்டுந்தான் நிச்சயமா
கச் சொல்லக்கூடவில்லை யென்ருலும், அவ
னுயிர்க்கு அந்தவயதிலே கண்டமுண்டா

னதென்பது மெய்யே. அலங்காரிக்கு அது
இன்னமாதம் இன்னதேதியிலென்று அந்
தனைகுறிப்பாய்த் தெரியாவிட்டாலும், சனி
க்கிழமையிற் கண்டமென்ப தொன்றுமட்
டும் மறக்கவில்லை. புகழ்பெற்ற கோவிந்த
சாமியின் கதையிலுள்ள எல்லாவற்றையும்
நடந்ததுநடந்தபடி எழுதுவதில் காலக்
கிரமத்தில்மட்டும் சிற்சில சிறுவழுக்களிரு
ப்பினும் அவற்றைப்பொறுப்பது இக்கதை
யைப் படிப்பவர்கடனேயாம்.

ஐந்தாம்பிராயத்திலோ அல்லது ஆருவ
திலேதானே ஒருநாள் சனிக்கிழமை கோ
விந்தசாமிக்கு ஓர் பெரிய அபாயமுண்டா
யிற்று. அவன் தாயண்டை தன் வீட்டு
முற்றத்தில் நின்றுகொண்டிருக்கையில் திடீ
ரென்று தரையில் விழுந்துவிட்டான்; அவ
ன் கையுங்காலும் கோணக்கோண இழுத்
துக்கொண்டிருந்தன; வாயில் நுரைபெரு
கியது; தலைமயிரைப் பிய்த்துக்கொண்டு
முற்றிலும் பைத்தியம் பிடித்தவன்போலா
ஞன். பெற்றவயிருதலால் சுந்தரிமனம்
பதைபதைத்துக் குரல்பாய்ச்சிக் கோவெ
ன்று கதறியழுதாள்; அவளது அழுகுர
லைக்கேட்கவே, அலங்காரியும் ஆதுரியும்
அங்கு ஓடிவந்தார்கள். கோவிந்தசாமிக்கு
வலிநோயெடுத்து உடம்பெல்லாம் கணுக்
கணுவாய் வில்லைப்போல வளைவுண்டாய்த்
திருகியெடுத்ததை அலங்காரிகண்டவுடன்,
அது இன்னகாரணத்தினு லுண்டாயிற்றெ
ன்று கண்டுகொண்டு, அம்மா! என்கண்
ணனகுழந்தையைப் பஞ்சுபிடித்துக்கொ
ண்டான் என்ருள்.

பஞ்சானனன் (பஞ்ச=ஐந்து, ஆனனன்=
முகத்தையுடையவன்) என்பதற்கு ஐந்து
முகக்கடவுளென்று பொருள். படைத்தல்,
காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்க
ளுள் அழித்தற்ருெழிலையுடைய உருத்திர
னுக்கு இப்பெயர் வழங்குகின்றது. இந்த
விக்கிரகமானது முகத்துக்கு மூன்றுகண்க
ளுள்ள ஐந்துமுகங்களையும், ஒருடலையுமு

டையது. 'பஞ்சு' என்பது பஞ்சானனன்
என்பதின் மரூ. இந்த உருவம் பேய்க்கோ
லங்கொண்டு, பார்ப்பவர்கண்ணுக்கு அச்ச
ந்தரத்தக்கதாயிருக்கின்றதனல், ஒருவரும்
இதை அவ்வளவு அதிகமாகச்செய்துவை
க்கிற வழக்கமில்லை. ஆதலினல் சாதா
ரணமாய் இந்தத்தேவதையை ஒருகல்லில்
ஆவாகனஞ்செய்து அதன் நுனியில் சிவ
ப்புவர்ணம் பூசி, எண்ணெய்தடவி, ஆல்
அல்லது அரசடியில் சாய்த்துவைத்துப் பூ
சிப்பார்கள். வங்கதேசத்தில் ஊருக்கு வெ
ளிப்புறத்தில் பஞ்சானனனைவைத்துப் பூ
சைசெய்யாத கிராமமிராது. இந்துக்களுள்
வழங்கிவருகிற முப்பத்துமுக்கோடி தேவ
தைகளுள், ஐந்துமுகங்களையும், பதினைந்து
கண்களையுமுடைய இந்தப் பஞ்சானனனை
ப்போல யாருங்கண்டஞ்சத்தக்க குரூபமு
டையது வேறொன்றுமில்லை. சிறிதுசம
யங்களில் மலடிகளுக்கும் பிள்ளைவரமளிக்
கின்றதனல் நற்குணமுடையதென்ருலும்,
எளிதிலே கோபித்துக்கொள்ளுங்குணமு
டையது. அதை ஆவாகனஞ்செய்யப்பட்
டிருக்குங் கல்லை அம்மரத்தடியில் விளையா
டும் குழந்தைகள் யாராவது தெரியாமல்
தப்பித்தவறித் தொட்டுவிட்டால் அது
கோபாவேசங்கொண்டு அந்தக் குழந்தை
யைப் படாத பாடுகளெல்லாம் படுத்தாம
லிராது. அன்றையதினம் பகலில் கோவி
ந்தசாமி பஞ்சானனனிருக்கும் ஆலமரத்து
நிழலில் விளையாடிக் கொண்டிருக்கையில்,
எதோ அறியாமையால் அவன்மேல்
இவன் கைபட்டதோ அல்லது கால் பட்
டதோ, இவன் வேறு யாது பிழைசெய்தா
னே என்னமோ ஆனதினலேதான் குழ
ந்தை கோவிந்தசாமியைப் பஞ்சானனன்
பிடித்துக்கொண்டு படுத்தாத பாடுகளெ
ல்லாம் படுத்தி வைக்கிருனென்று அலங்
காரி நிச்சயித்துக் கொண்டு அந்தக்குழ
ந்தையை நோக்கி, அப்பா நீயார்? என்
கோவிந்தனை ஏன் பிடித்துக்கொண்டிருக்கி

றாய்? நீ தேவதையோ அல்லது பேயோ என்று கேட்டாள். அதற்கு அக்குழந்தைமேல் ஆவேசமாயிருந்த அத்தேவதையானது, "நான் பஞ்சானனன்; உன்னுடைய குழந்தையின் கால் என்மேல்பட்டது; நான் இவன் செய்தகுற்றத்தை மன்னிக்கமாட்டேன்" என்றான். இந்தவார்த்தையைக் கேட்டதும் அலங்காரியும், சுந்தரியும், ஆதுரியும் ஓவென்று கதறியழுந் தலைப்பட்டார்கள். இந்த அழுகுரலைக்கேட்கவே அண்டை அயலிலுள்ள பெண்டிர்களும் குழந்தைகளும் அந்தவீட்டிற்குள்ளே என்ன என்னவென்று வந்துகூடிவிட்டார்கள். அவர்களுள் அலங்காரி சற்றே தீரமுடையவளாதலால், அவள் அஞ்சாமல் அக்கடவுளை நோக்கி, அப்பா பஞ்சானனா! நீ இந்தக்குழந்தைசெய்த பிழையனைத்தையும் பொறுத்தருளவேண்டும். இவன் மாற்றறியாப்பாலனன்றோ? இதுநன்று, இதுதீதென்று இவனுக்கு இன்னமுந் தெரியாதாகையால், இவனை மன்னித்து நீ இப்போதே இவனைவிட்டு விலகவேண்டும்; ஆதலினால் என்னுண்டவனே! நீ எங்கள் கோவிந்தனை விட்டு விலகு. நாங்கள் உனக்குவேண்டும் பூஜை போடுகிறோம் என்றாள். இப்படிச் சொன்னவளவில் முன்னிலும் அதிகமான வலிநோய் உண்டாகவே அந்தப்பெண்கள் அதிகமாக அலறி அழுதலைப்பட்டார்கள். புலத்தில் வேலைசெய்துகொண்டிருந்த அவன் தந்தை வரதனுக்கும் சிற்றப்பன் மார்களுக்கும் இதுசெய்தி உடனே தெரிவிக்கப் பட்டது. அவர்கள் இதைக் கேட்டதும் மனம் பதைபதைத்து அங்கிருந்து விடுவந்துசேருமளவும் இளைக்க இளைக்க ஓடிவந்தார்கள். சிறுவன்வாயில் நுரைதள்ளித் தலைமயிரைப் பிய்த்துக்கொண் டிருந்தானாகையால், இன்னவண்ணஞ் செய்ய வேண்டுமென்று ஒருவருக்கும் புலப்படவில்லை. அங்கேவந்திருந்த பிராமணஸ்திரிகள் சிலர் அதைக்கண்டு, கோபாவேசங்கொண்டிருக்கும் பஞ்சானனனது சீற்றத்தை மாற்றுவதற்குப் பஞ்சானன பூஜையிற் சிறந்தபரிகாரம் வேறொன்றுமில்லையென்று சொன்னார்கள். உடனே அவர்கள் தங்கள் விட்டுப் புரோகிதராகிய ராமதீக்ஷதரை வரவழைத்தார்கள். அவர் அவர்களுடையவீடுவந்து சேர்ந்ததும், அப்பா என்றால் உச்சிகுளிருமா! அந்தப் பிராமணஸ்திரீகள் சொன்னபடியே பஞ்சானனனுக்கு அந்தக்ஷணமே பூஜைபோட வேண்டியதுதான், என்றார் உடனே பூஜைக்கு வேண்டியனவற்றையெல்லாம் கொண்டுவந்து நோய்கொண்டிருந்த கோவிந்தசாமியையும் இடுப்பில் எடுத்துக்கொண்டு அந்த ஊருக்கு வெளியேயிருந்த ஆலமரத்தடிக்குச் சென்றார்கள். அந்தமரத்தடியில், தலையில் சிவப்புப்பூசி எங்கும் எண்ணெய்தடவியிருந்த பஞ்சானனன் சிலையொன்றிருந்தது. அங்கே எல்லோரும் போனவுடனே கோவிந்தசாமிக்கு முன்கண்டதைப்பார்க்கிலும் இருமடங்கு அதிகமாக வலிநோய் அங்கேயுங்கண்டது. அவர்கள்கூடச்சென்ற புரோகிதர் பஞ்சானனனுக்குப் பூசை செய்யத்தொடங்கி அதை மந்திரபூர்வகமாகச் செய்துகொண்டிருந்தார்; புஷ்பம், பழம், அப்பம், சிற்றுண்டை முதலியனவற்றை நிவேதனஞ் செய்தற்பொருட்டுக் கொண்டுபோயிருந்தார்கள். அந்தப்பெண்களெல்லாரும் பஞ்சானனனை நோக்கி, அதற்குக் காதுகேளாததுபோல, அப்பா, பஞ்சானனா! எங்கள் குழந்தையை விட்டு விலகிப் போகவேண்டும் என்று உரத்துச்சொன்னார்கள். அவர்கள் இப்படிச்செய்ததுமல்லாமல் கோவிந்தசாமியைக் கீழேவிட்டுப் பஞ்சானனனைப் பன்முறை சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்யும்படியுஞ் செய்தார்கள். அவர்கள் இவ்வாறு பஞ்சானனனைப்பலவாறு வேண்டிக்கொண்டதுமல்லாமல் இன்னும் எவ்வளவோ பூஜைபோடு

வதாகவும் சொல்லிக்கொண்டார்கள். அவர்கள் இப்படியாகப் பிரார்த்தனைசெலுத்திவிடவே கோவிந்தசாமிக்கு வந்தநோய் நீங்கிவிட்டதனால், அவர்கள்செய்த பூஜாபலன் கைமேற்கிடைத்ததுபோலாயிற்று. அங்கேபோயிருந்த பெண்களனைவரும் பஞ்சானனுக்குப் பன்முறை வழிபாடுசெய்துவிட்டு கோவிந்தசாமியை அழைத்துக்கொண்டு தங்கள் வீடுவந்து சேர்ந்தார்கள். பின்பு கோவிந்தசாமிக்கு இவ்வலிநோய் எந்நாளும்வந்ததில்லையென்று அலங்காரி சொன்னாள்.

உபாத்தியாயரும் மாணாக்கனும்.

ஒருஊரில் பிள்ளைகளுக்குப் படிப்பித்துவரும் உபாத்தியாயர் ஒருநாள் சாயங்காலம் தனக்கு வணக்கமுள்ள மாணாக்கர்களில் ஒருவனை அழைத்துக்கொண்டு ஊருக்கு வெளிப்புறத்தில் கழனிகட்டுக்கள் ஓரமாயிருக்கும் சாலையில் உலாத்திவரப் போனார்கள். அங்கே ஒரு குடியானவன் தான் போட்டுக்கொண்டுவந்த பாதரக்ஷையை கழனிவரப்பின்மீது சாலையின் ஓரமாய் விட்டுப்போட்டு மண்வெட்டியையெடுத்து நிலத்தைக்கொத்திக்கொண்டிருந்தான். உலாவிக்கொண்டு சென்ற உபாத்தியாயருடன் கூடப்போன மாணாக்கன்குடியானவன் விட்டுவிட்டுப்போன பாதரக்ஷையைக்கண்டு, இதை எடுத்து ஒளித்துவைத்தால் அந்தக் குடியானவன், என்னசெய்வானோ பார்ப்போமென்றான் அதற்கு அந்த உபாத்தியாயர் அப்படி செய்யலாகாது. உன்னிடத்தில் காசப்பை இருக்கிறதல்லவா அதில் இரண்டு அரை ரூபாய் இருந்தால், அந்தச் செருப்பின்மீது ஒன்றில அரை ரூபாயும் மற்றொன்றில் அரை ரூபாயும் வைத்துவிட்டு, நாம் செடிமறைவில் மறைந்திருப்போம்; அப்போது அந்த குடியானவன் என்ன செய்கிறானோ அதை நாம் பார்ப்போம் என்றார். அதற்கு அந்தப்பிள்ளை சம்மதித்து அவர் சொன்னபடியே இரண்டு அரைரூபாயையும் வைத்துச் செடிமறைவிலே போய்ப்பதுங்கியிருந்தார்கள். குடியானவன் கொத்தவேண்டிய வேலையைச்செய்துவிட்டு வீட்டுக்குப்போகச் சாலையோரத்துக்குவந்து தன் செருப்பை ஒன்றைக்காலில் மாட்டினான் அதிலிருந்த ரூபா காலில் தட்டுபட்டது. அதை அவன் குனிந்து கையினால் எடுத்துப் பார்த்து இதென்ன ஆச்சரியமென்று நாற்புறமும் சுற்றிமுற்றிலும் பார்த்தான் அங்கு ஒருவரும் இல்லாமையைக் கண்டு மற்றொரு செருப்பைக் காலில்மாட்டினான். அதிலும் அரைரூபா யிருக்கக்கண்டு கையால் யெடுத்துக்கொண்டு இங்கே யார்கொண்டுவந்து போட்டார்களோவென்று சந்தேகித்து மறுபடியும் முன்னும் பின்னும் பார்த்தான். ஆருமில்லை நமக்கு கடவுள்தான் அளித்தார் என்று ஆகாயத்தைநோக்கி ஓ ஆண்டவரே என்வீட்டில் என்மனையாளும் என்பெண்ணும் நோயாயிருக்கிறார்களே அவர்களுக்குப் பத்தியம் பரிகாரம் செய்ய எனக்கு செலவுக்கு இல்லை என நினைத்துத்தானோ நீர் தயவுசெய்தீர் என்று இரண்டுகையும் தூக்கித் தோத்திரம் செய்தான். இவற்றையெல்லாம் மறைவாயிருந்து பார்த்துக்கொண்டிருந்த உபாத்தியாயர், மாணாக்கனை நோக்கி, அப்பா பார்த்தாயா நீ முன்னே செருப்பை எடுத்து ஒளித்துவிடவேண்டுமென்று நினைத்தையே அது நல்லவிளையாட்டா இப்போது அந்தக்குடியானவனுக்குக் கிடைத்த ரூபாயைக்கண்டு சந்தோஷகோஷத்தோடு கடவுளைப் பிரார்த்தித்து, செய்த நன்றியை நினைத்துக்கொண்டு வீட்டுக்குச்செல்லுகிறானே இதுநல்லவிளையாட்டா இவ்விரண்டையும் சீர் தூக்கிப்பார்த்து நீயே சிறந்தவிளையாட்டு பரியாசம் ஈதென்று அறிந்துகொள்வாயாக! என்று சொல்லிக்கொண்டே நடந்துபோய்விட்டார்கள்.

ஸ்வீடன்தேசம்.

(சஞ்சிகை முதல்பக்கத்தில் இத்தேசத்தின் வர்ணப்படத்தைக் காண்க.)

கண்ணிகள், இ - ம் இயால், தாளம் ஆதி.

[மிட்டாய்பாட்டுச்சந்தம்.]

சமாசாரமனுப்பும் வரிசையென தாகையா லிப்பொழுது
தனியாயொருகடித மெழுதுகிறேன்பார் தயைசெய் தென்மீது.

நாங்களிப்போதுதான் டென்மார்க்குதேசத்து வழியா யாத்திரைபோனோம்
நாலுபுரத்திலும் மரம்நிறைந்தகாட்டை நாங்கள் பார்க்கலானோம்.

அதுதானமதுஇள வரசர்பத்தினியார் தந்தையர சாளும்நாடு
அதன்கடற்கரையினில் கோப்பெனேகனெனும்ராஜ தானியேஅவர்வீடு.

மணல்மேடுகளுள்ள சிலதீவுகள்சேர்ந்த நாடென் றதைவிட்டோம் [டோம்.
மற்றொருதீவிலிருந்து கப்பலேறிஸௌண்டென்னும் கடற்காலை தாண்டிப்போட்

ஸ்வீடன்தேசத்தில் வந்திறங்கியே இரவெல்லாம் புகைவண்டி தனிற்சென்று
ஸ்டாக்ஹோம்நகரம் வந்துசேர்ந்துஅங் கிளைப்பாறினோம் அன்று.

இந்தப்பட்டணத்துக்கு பெர்லின்ஆம்ஸ்த்தர்டாமும் இரண்டுமே இணையாகா
என்சொல்வேன்பெரிய தடாகத்தின்ஓரத்தில் இருக்குதோர் பட்டணமகா.

அழகுள்ளமாடங்கள் கூடங்கள் உப்பரிகை அநந்த மிருக்கக்கண்டோம்
அத்தடாகத்தில்சிறு புகைப்படகினிலேறி யாவும் பார்த்துக்கொண்டோம்.

சுற்றிவரும்போதங்கே சிறிய ஓர்திட்டைக்கண்டு சொகுசாயங் கிறங்கினோம்[னோம்.
சுகமாகப்பகலெல்லாம் அங்கிருந்தோர்வீட்டில்வந்து துரைமக்கள்போ லுறங்கி

இங்குவோரதிசயம்! அர்த்தராத்திரியிற்கூட எங்கும் வெளிச்சமாக
இருப்பதல்லால்இரு ளென்பதைக்கண்டதில்லை; இருக்கட்டும் அதுபோக.

கோடைகாலந்தன்னில் சூரியன் உதித்தபின்னுங் குலையாது அந்தவிருள்
கொண்டிருப்பதால் கண்ணுக்குத்தெரியாது முன்னே இருக்கும்பொருள்.

இதற்குவடக்கிலுள்ள லாப்லாந்துதேசத்தில் இரவிற்சூ ரியனைக்காணலாம்
இந்தஸ்வீடன்தேசத்தில் பனிக்கட்டியும்குளிரும் எங்குமுண்டு தெருவெல்லாம்.

அதன்மேல்சக்கரமுள்ள பாதக்குரடுமாட்டி அவர்நடப் பதேவிந்தை
அடுத்தநோர்வேதேசக் குளிர்மிகுந்தபனியை அளவிடா தென்சிந்தை.

பனிமுடியபெரிய மலைகளடர்ந்தநாடு பார்த்தால் ஸ்வீடன்தேசம்
பார்த்திபன்தனக்கே சொந்தமென்றுஊரார் பகர்வதே உல்லாசம்.

பெரியவிருக்ஷங்கள் நெருங்கியகாடுண்டு பேர்பெற்ற தேவதாரம்
பிழைப்பில்லாதவர்களும் அந்தமரத்தைவெட்டிப் பிழைக்கிறார் விஸ்தாரம்.

பனிமிகுந்தநாட்டில் வெண்காடி ஸீல்என்னும் பருத்தமிரு கங்கள்வாசம்
பலரும்அம்மிருகங்களை வேட்டையாடி துன்பப்படுத்தாதிருப்பதே பிரயாசம்.

இந்தநாட்டுக்கடுத்த பூமிதான் லாப்லாந்து என்னும் பெயருடையது
இங்கும்பனிகுளிரும் மிகுந்துபச்சைப்புல்லொன்றும் இல்லையென்று பேர்பெற்றது.

அங்கே சூரியன் ஆறு மாதமட்டும்கண்ணுக்கே அகப்படு கிறதில்லை
அந்தநாட்டில்ஜலம் பனிக்கட்டியாகித்தரை வழுக்கிச் சறுக்குந்தொல்லை.

பளிங்குபோல்பனிக்கட்டித் தரைமேல்கலைமான்களை பண்டியில் கட்டிச்சவாரி
பலரும்செய்கிறார்என் மச்சானுக்கிதுகிடைத்தால் பகுசந்தோஷம் பாரீர்.

அத்தையாரும்தங்கையும் அன்பாயுனக்குக்காகிதம் அடிக்கடி போடென்கிறார்;
அதனுடன் உனக்கும் மற்றெவருக்கும்அடியேன் வந்தனம் வருகின்றதுபார்.

"மீதூண் விரும்பேல்."

எவருக்கும் உயிரைப்பாதுகாத்துக்கொள்வதற்கு உணவு இன்றியமையாததாயினும், அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகுமாதலால், உண்ணவேண்டிய அளவுப்படி உண்பதே உசிதமானது. போஜனப்பிரியரென்று சிலரைச்சொல்லுகிறார்களே, அப்படிச்சொல்வது பெருந்திண்டிக்காரர்களையன்று; ஒருவன் போஜனத்தில் பிரியங்கொள்வது சவுக்கியத்திற்கேயாதலால், வேண்டிய வளவுக்குக் குறைவில்லாமல் நல்ல வுணவுகளை உண்ணவிரும்புகிறவர்களையே போஜனப்பிரியரென்று சொல்வது. சுகமே விரும்பத்தக்கதென்றும், துக்கம் விரும்பத்தகாததென்றும் அறிந்தவர்கள் ஒருபோதும் உணவை அதிகமாய் ஏற்றுக்கொள்ள விரும்பார்கள்.

மிகினும் குறையினும் நோய்செய்யும் ஆதலால் மிகுதியாக உணவை உட்கொள்வதனால் உண்டாகும் தீமையென்னவெனின், பலவிதமான நோய்கள் உண்டாகத்தலைப்படும். தேகத்திற்கும் சீக்கிரத்திலே தளர்ச்சியுண்டாகும். அதனால் அவர்கள் வருத்தப்படுவது மாத்திரமேயன்றி, அவர்களுடைய பின்சந்ததியாரும் அதுகாரணமாகப் பலநோய்களால் வருந்தித் துன்பமடைவார்கள். ஆதலால் ஒருவன் தனக்குரியவேலைகளைச் செய்வதற்கு வேண்டிய வலிமை குறையாமலிருக்கும்படி உயிரைப்பாதுகாக்க எவ்வளவு உணவுவேண்டுமோ அவ்வளவுதான் புசிக்கவேண்டும்; அதற்கு அதிகமாகப் புசிப்பானாகில் பலவிதமாகத் துன்பமுறுவான்.

ஒருவன் உணவுகளை உண்பது உடம்புக்கு வலிவு உண்டாவதற்கேயாதலின், எவ்விதமாக உண்டால் வலிவு உண்டாகுமென்பதை யோசித்துப்பார்க்கவேண்டும். உண்ணும் உணவு நன்றாகஜீரணமாகி அதன் சாரம் உடம்பில் ஊறினால்தான் நல்ல அறிவு உண்டாகும். அப்படி உணவின்சாரம் உடம்பில் ஊறுவதற்கு அது நன்றாக ஜீரணமாகவேண்டும். அளவுக்குமிஞ்சிப் புசித்தால் அதுஒருபோதும் ஜீரணமாகாது. ஏனெனில், ஆகாரம் ஜீரணமாவதற்கு அதில்பிராணவாயு நுழைந்து செல்லப்போதுமான இடைவெளியிருக்கவேண்டும். சிறிதும் காற்று உட்செல்ல இடமில்லாமல் வயிறு நிரம்பப் புசித்துவிட்டால் அது ஜீரணமாவதெப்படி? அப்படி ஜீரணமாகாமல் போவதனால் உடம்புக்குப் போஷணையுண்டாகாமற் போவதுமன்றி, அந்த அஜீ

ரணமான வுடம்பில் தங்கி அங்குள்ள வாத பித்த சிலேஷ்மங்கள் தத்தம் நிலைமாறுபட்டு, அதுகாரணமாகப் பலவிதமான நோய்களுண்டாகின்றன. ஆதலால் நமது வயிற்றிலிடமிருக்கிறதே யென்று எவரும் அதிகமாகப் புசித்துவிடலாகாது. அன்னம் காய்கறிமுதலிய கட்டியானவுணவு அரைவயிறும், பால், மோர் நீர் முதலிய திரவமான உணவு கால்வயிறும், ஆகமுக்கால்வயிறே உணவுகளை உண்டு, அவ்வுணவு ஜீரணமாவதற்குக் கால்வயிறு காற்று உட்செல்லும்படி விட்டு வைக்கவேண்டுமென்று வைத்தியசாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். ஆனதுபற்றியே "மீதூண்விரும்பேல்" என்று ஔவையும் கூறியிருக்கிறாள். மிகுதியாகவுண்பது எப்படி உடம்புக்குத் துன்பம்விளைவிப்பதேயாம். தக்கஉண்டியில்லாமல் குறைத்து உண்போமாயின் வயிற்றிற்குள் இருக்கிற ஜாடராக்கினி தனக்கு இரை உடலையே உணவாகக்கொண்டு எரிக்க ஆரம்பிக்கும் அதனால் உடல்மெலிந்து பலநோய்கள் உண்டாகும். மேலும் ஒருவன் உண்ணும்போது முன்புசித்த வுணவு நன்றாக ஜீரணமாயினதாவென்று பார்த்துப் பசியெடுத்தபின்பு உண்ணவேண்டும். இந்த அளவுதெரியாமல் தாறுமாறாக உண்பதனாலேதான் பலர் பலவிதமான நோய்களினால் வருத்தப்படுகிறார்கள்.

"தீயளவின்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயளவின்றிப்படும்" என்றும்,

"அற்றாளவறிந்துண்க அஃதுடம்பு
பெற்றானெடிதுய்க்குமாறு" என்றும்,

இதையே நாயனாரும் சொல்லியிருக்கிறார்.

புகழத்தக்க ஓர்பெண்.

ஓர் நல்லபெண்ணுடன் அடுத்தவீட்டிலிருந்த கொடும்பாவியொருத்தி நாள்தப்பாமல் வலுவிற் சண்டையிடுவதற்கென்றே அவள் வீட்டிற்குள்ளே நுழைந்து வாதாடி. வாயிலே வந்தபடிக்கெல்லாம் பேய்ப்பாட்டாக வைதுகொண்டிருப்பது வழக்கம். அந்த உத்தமி "ஒருவர்பொறை இருவர்நட்பு" என்ற அருமைப்பழமொழியின் பொருளின்னதென்று நன்றாயறிந்தவளாதலினால், அந்தச் சனியை மெள்ளத்தொலைத்துவிடுவதற்கென்று ஓர் விந்தையான உபாயத்தைநாடினாள். அந்தப்பிடாரி தன் வீட்டுக்குவந்து தன்னை ஏகதேசமாகவையத்தொடங்கினவுடன் அவள் தன்வீட்டின் கும்மட்டியண்டை சென்று, குரட்டினால் ஒரு துண்டு கரியையெடுத்து நெரித்து, அதை அந்நெருப்பிலே போட்டுவிட்டு பேசாதிருந்தால் பிழை ஒன்றும் இல்லை என்று வாய்திறவாதிருப்பாள். அதைக்கண்டுமீண்டுந் தாண்டிக்குதித்து வையத்தொடங்குவாளாதலினால், அவள் அந்த வில்லங்கத்திற்கு எதிர்பேசாமலிருந்து முன்போலவே குரடுகொண்டு கரியை யெடுத்து நெரித்துக் கனலிற்போடுவாள். இவ்வாறே அந்தப்பேய் அவளை வையுந்தோறும் தானும் எதிர்நின்று அவளோடு எதிர்பேசாதிருந்து கரியை நெரித்து நெருப்பில்போட்டுக்கொண்ட வண்ணமாயிருப்பாள். அத்தக்கொண்டி இதற்குங் கேளாமல் மல்லுக்கழைத்து, ஏனடி உன்வாய் இப்படி அடைத்துப்போயிற்று? நீ பேசாமடந்தையோ? நீ இப்பொழுது என்னுடன் பேசாவிடில் உன்னை விட்டேனுபார்" என்றாள், அவள் அதற்கும் சிறிதும் வாயைத் திறவாமலேயிருந்து, சண்டையிட வேண்டுமானால் இரண்டுபேர் வேண்டுமென்பதைத் திண்ணமாகக் கொண்டு பின்னும் வாய்திறவாமலே யிருந்து அந்தத் தீயவளை வையாததுபோல வைது அவள் கொடுமையினின்றும் விலகினாள். கையோடு கைதட்டினால் மட்டுமே ஓசையுண்டாவதன்றி ஒருகையினால் ஓசையுண்டாகாது.

1-ம் ஹென்றி.

பிறந்தவருஷம் 1068.
இறந்தவருஷம் 1135.

இவ்வரசன்
அரசாட்சிசெய்தது
35-வருஷ காலம்.

நடுக்கடலில் கப்பலுடைந்த கதை.

இங்கிலாந்தில் அரசு செலுத்திய ராஜாக்களில் ஹென்றியெனப் பெயர் பெற்றவர்கள் எட்டுப் பெயர்களுண்டு. இவர்களில் முதலாவது ஹென்றி என்பவனுக்கு உல்லியம் என்று ஒரு பிள்ளையிருந்தான். அவன் தகப்பனுக்கு ஓரேபிள்ளையாதலால் அரசனுக்குப் பிராணன் எல்லாம் அந்தப் பிள்ளையின் மேலேயே யிருந்ததென்பதை நாம் எடுத்துச்சொல்லவேண்டுமா? அப்படியே ஹென்றியின் காலத்திற்குப்பிறகு உல்லியமே இராஜாவாக வருவான் என்று எல்லாரும் ஆசைகொண்டிருந்தார்கள். ஆயினும் தெய்வச்செயலைப் பாருங்கள்! தந்தையிறப்பதற்குமுன்னமே பதினெட்டாம்வயதில் அச்சிறுவன் அநியாயமாயிறந்துபோனான். அதெப்படியென்பீர்களோ கேளுங்கள் அவன் தந்தையுடன் பிராஞ்சுதேசத்திற்குப்போய் இங்கிலாந்துக்கு வரத்திரும்பினான். அவன் தகப்பன் ஏறிவந்த கப்பலிலேயே ஏறிக்கொண்டிருப்பானானால் தந்தையுடன் அவனும் க்ஷேமமாகப்போய்ச் சேர்ந்திருப்பான் அவ்வாறன்றி அவன் என்னமோ தாமதம் பண்ணிகொண்டிருந்து தகப்பன் புறப்பட்டான். மற்றொரு கப்பலிலேறிப் பிள்ளையும் புறப்பட்டான். அந்தக் கப்பலின் தலைவனும் கப்பலோட்டிகளும் எல்லாரும் வெறிக்கக்குடித்து மயங்கினவர்களாய் கப்பல் வழிதப்பிப்போவதைக் கவனிக்காமலேயிருந்தார்கள். கடைசியில் அது வழிதப்பிப்போய் ஒரு பெரும்பாறையில் தாக்கி உடைபட்டுத் தண்ணீர் நிறைந்துபோயிற்று. அதைப்பார்த்து அந்தக் கப்பலிலிருந்தவர்கள் எல்லாரும் அவரவர்கள் பிராணனைக் காப்பாற்றிக்கொள்ள வழி தேடினார்கள். அப்பொழுது ராஜகுமாரனும் வேறு சிலரும் அந்தக் கப்பலைச்சேர்ந்த ஒரு சிறுபடவில் ஏறிக்கொண்டு கரைக்குவரப் புறப்பட்டார்கள்.

Shipwreck of the children of Henry I.

புரப்பட்டுவருகையில், உல்லியத்தின் சகோதரி தான் கடலில் முழ்கிப்போவதாகக் கப்பலிலிருந்து புலம்பிக் கூவுகிறகூச்சல் அவனுக்குக்கேட்டது.

உல்லியம் ராஜகுமாரன் உயிர்களிடத்தில் இரக்கமுள்ளவனும் தன் சகோதரியினிடத்தில் பிரீதியுள்ளவனுமாதலால், அவள் கடலிலே முழ்கிப்போகத் தான்மாத்திரம் தப்பிப் பிழைக்க விருப்பமில்லாதவனாகி, அவளைக் காப்பாற்றும்பொருட்டுப் படகைத்திருப்பி மறுபடி கப்பலண்டை கொண்டுபோகும்படி திட்டஞ்செய்தான். ஆயினும் கப்பலண்டை போனவுடனே சகோதரியைக் காப்பாற்றப்போகிற தருணத்தில், அங்கிருந்த மற்றவர்களும் மாண்டு போனார்கள்.

அதெப்படி யென்பீர்களோ? அந்தச் சிறுபடகு கப்பலண்டை போனவுடனே அதில் உயிரைவிடமாட்டாமல் விசனப்பட்டுக்கொண்டிருந்தவர்க ளெல்லாரும் தம்தம் உயிரைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டுமென்று கும்பல் கும்பலாய் அந்தப்படகிலே குதிததார்கள். உடனே அது அந்தச் சுமை தாங்கமாட்டாமல் முழுகிப்போயிற்று ஒருவன் தவிர மற்றவர்கள் எல்லாரும் இறந்துபோனார்கள். அந்த ஒருவன் படகிலே குதிக்கமுடியாமல் கப்பலின் பாய்மரத்தின்மேல் ஏறிக்கொண்டான். மறுநாள் காலையில் அவ்வழியாக மீன்பிடிக்கவந்த செம்படவர்கள் சிலர் இந்த உடைந்த கப்பலிலிருந்த இம்மனிதனைப்பார்த்து அவனைத் தமது படகிலேற்றிக்கொண்டு கரை சேர்த்தார்கள்.

இந்தக்கப்பலின் தலைவன் இப்படிப்பட்டகொடிய அபாயத்தை விளைவித்த குற்றவாளியேயானாலும், நாம் எல்லோரும் கேட்டுப்பரிதாபப்படத்தக்க தொருவிசேஷம் அவனிடத்திலுண்டு அதாவது! முன் ஒருவன் தப்பிப்பிழைத்தானென்று சொன்னேமே, அவனைப்போலவே இவனும் கப்பலின் பாய்மரத்தின்மே லேறிக்கொண்டிருந்தான். ஆயினும் உல்லியம் முழ்கிப்போனானென்பதை பார்த்தவுடனே திடுக்கிட்டு, ராஜகுமாரனை முழுகிப்போகச் செய்து நான்மாத்திரம் பிராணனை வைத்திருக்கிறதாவென்று பாய்மரத்திற் பிடித்திருந்த கையைவிட்டுக் கடலில் வீழ்ந்து ராஜகுமாரனோடு முழ்கிப் போனான். நமதுநாட்டில் "கப்பற்காரன் வாழ்வு காற்றடித்தால்போச்சு" என்று ஒரு பழமொழியுண்டல்லவா; ஆயினும் இந்தக்கதையால் புசல்காற்றைவிட மெய்மறந்துபோகக்குடிப்பதே கப்பலோட்டிகளுக்குப் பிராணாபாயமாகுமென்று விளங்குகின்றது.

பிள்ளையைப் பிராணனாக எண்ணிக்கொண்டிருந்த கிழ அரசன் பிள்ளை உப்புநீர்க் கடலில் முழ்கிப்போனானென்ற செய்தி கேட்டபோது தான் துக்கக்கடலில் முழ்கிப்போயினான். பின்பு ஆயுளுள்ளளவும் அந்தத்துக்கம் அவனைவிட்டு நீங்கவேயில்லை, அப்புறம் அவன் பதினைந்துவருஷகாலமாய்ப் பிழைத்திருந்தானாலும் அக்காலத்தில் அவன் முகத்தில் சிரிப்புண்டானதேயில்லை, புத்திரசோகத்தினாலேயே அவன் பிராணனைப் போக்கிவிட்டான்.

ஓர் மழைத்துளி.

ஓர் பனித்துளியானது ஆகாயத்தினின்றும் பெருங்கடலின் அலைமுகட்டில் விழுகையில் "அந்தோ நான் அநியாயமாய் இப்படுகுழியில் வீழ்ந்தாழ்ந்து மாண்டு போகிறேனே" என்று அலறிற்று. ஆயினும் "தானொன்று நினைக்கத் தெய்வமொன்றுநினைத்தது" என்றவண்ணமாய் அது அங்குள்ள ஓர் சிப்பியில்வீழ்ந்து அழகிற் சிறந்த தெள்ளியமுத்தாயிற்று. அதுதான் இவ்வாறு மாறியதைக்கண்டுகளிப்புற்றது

பின்பு சிறிதுகாலத்திற்கெல்லாம் முத்துக்குளிப்பவர்களால் பிள்ளான் அடித்தவாயினின்று வலைபோட்டுப் பிடித்திழுக்கப்படுகையில் அது "ஐயோ! கொடுமை; நான் செத்தேனே" என்று முன்போலவே மீண்டுங் கதறியழுதது. ஆயினும் அது ஆணிமுத்தாலினால் அதை வணிகர்கண்டு கொண்டாடி அரசனண்டை கொண்டுபோய்க்கொடுக்க அவ்வரசன் அதற்கிணையானதெங்கேனு மில்லையென்று கண்டுவந்து அதைத்தன் முடியாபரணத்திற் கணியாக அதன் உச்சியிலே வைத்துக்கொண்டான். இவ்வாறு அம்மழைத்துளியானது மன்னர் குழாம்வந்து அடிபணியும் வேந்தர்முடிமேலேறும் பெரும்பேறு தனக்குண்டானதைக்கண்டு, இது எனக்கு எங்கும் நிறைந்த பரம்பொருளின் பேருளா லுண்டாயிற்று என்று கடவுளை வணக்கஞ்செய்தது.

நெஞ்சுறுதி.

நாம் நெஞ்சுறுதி யுடையவரா யிருந்தால் எவ்வகையான அசாத்தியமான காரியத்தையும் அஞ்சாமல் எளிதில் முடித்துவிடலாம். வைத்தியர்கள் மருந்துகொடுக்கையில் அவர்கள் சொல்லும் இனிய மொழிகளால் அநேகருக்கு நெஞ்சுறுதி யுண்டாவதியற்கை. ஒருகாலத்தில் ஒரு சிறுவனுக்கு நேத்திரரோக முண்டாகிக் கண்கெட்டே போய்விடும் போலிருந்தது. ஆயினும் அன்பே வடிவமாகவுடைய ஓர் நயனவைத்தியரின் தூங்காமுயற்சியினால் "மலைபோல வந்து, பனிபோல விலகிவிட்டது" என்ற வண்ணம் அது எளிதில் நீங்கிவிட்டது மன்றி அவர் அவனுக்கு வைத்தியஞ் செய்தது காரணமாக அந்தச் சிறுவனுக்கு எதையும் பொறுக்கத்தக்க நெஞ்சுறுதியு முண்டாயிற்று. பொழுது வெடிந்தவுடன் அந்த வைத்தியர் அவன் கண்ணுக்கு மருந்துபோட வருவார், வெண்மையான பொடியொன்றை ஒரு சிறு குழலிலிட்டு அதை அவன் கண்ணுக்கு நேரில்வைத்து வாயினால் அதைக் குழலின் அடிப்புறத்தினின்று அதிலுள்ள பொடியெல்லாம் அச்சிறுவன் கண்ணிலே போய்ப்படியும். கண்ணுக்கு மருந்தாதலால் அவன் இந்த உபத்திரவத்தை ஆற்றக்கூடவில்லை. ஆயினும் வைத்தியர் அவனைத் தைரியப்படுத்தி மருந்து போடும் போதெல்லாம் அவனைநோக்கி "குழந்தாய்! நீ அஞ்சாதே நெஞ்சுறுதிகொண்டிரு" என்று சொல்லுவார். அவன் எவ்வளவு தான் தைரியமாயிருந்தாலும் வருத்தத்தைப்பொறுக்க மாட்டாமல் அசைத்துவிடுவானாகையால் அம்மருந்து அவன் முகத்திலும், தலையிலும், நெற்றியிலும் படியும். இவ்வாறு அவன் பலமுறை அசைத்துவிட்டதுண்டு. அதுமுதல் அச்சிறுவன் அவர் சொன்னதை மறவாதிருந்து தனக்கு என்னென்ன சங்கடங்கள் நேர்ந்தாலும் அவற்றிற்காகச் சற்றும் அஞ்சாது ஆண்மையுடன் அவற்றையெல்லாம் எளிதில் பொறுத்துக்கொள்ளத் தலைப்பட்டான்.

சிறுவர்கள் விளையாடும்போது கீழேவிழுந்து காயமுண்டானாலும், மாடுமுட்டினாலும், குதிரை உதைத்தாலும், தங்கள் விளையாட்டுப் பண்டங்களை மற்றவர்கள் பிடுங்கிக்கொண்டு போனாலும் அதற்காக அழுவது நன்றன்று. சிலர் பாடம்படிக்கப் பயந்து வேணு மென்றுவது பொய்யழுகை அழுது ஜாலஞ்செய்வதுமுண்டு. "நெருச்சண்டை கண்ணுக்குக் குளுமை" என்றவண்ணம் சிலர் மற்றவர்களை அழும்படி ஏவிவிட்டு வேடிக்கைப்பார்ப்பது முண்டு. மாற்றாந்தாய் முதலியபகைவர்கள் இவ்வாறு குழந்தைகளை வேணுமென்று அழச் செய்வார்களேயல்லாமல் பெற்றதாய்கள் ஒருபொழுதும் இப்படிச் செய்யத் துணியார்கள்.

"யானைக்கும் அடிசறுக்கும்" என்றபடி
சிற்சில சமயங்களில் நல்லோருக்கும் பொ
ல்லாங்கு விளைவதுமுண்டு. அவர்களுள்
வன்னெஞ்சுடையவர்கள் அதனால் உயிர்க்
கழிவுவருகிறதா யிருப்பினும் முகத்தில்
சற்றேனும் வாட்டமே யில்லாமல் மலர்ந்
தமுகத்துடன் உயிர் துறக்கத் துணிந்திரு
ப்பார்கள். அசத்தியஞ் செய்வதற் கஞ்சி
மனவுறுதிகொண்டு அரிச்சந்திரன் தனது
கற்புடைய மனைவியாகிய சந்திரமதியை
வாளால்விசிக் கொல்லப் புகுந்ததை நா
ம் கேட்டதில்லையோ? போர்வீரர்கள் உயிர்
போவதை யெண்ணாது ஆண்மைகொண்டு
யுத்தகளத்தில் அஞ்சாது போர்புரிந்து பி
ராணனை விடுவது மனவுறுதியினாலேயாம்.
சிலர் தங்கள் மக்கள் முதலானோரிடத்தி
லுள்ள அதிக பிரீதியினால் அவர்களுக்காக
த்தங்கள் பிராணனை விட்டுவிடுவது முண்டு
பாபர் சக்கரவர்த்தி தன் மகனாகிய உமாயூ
னின் உயிரைக் காப்பாற்றுவதற்காகத் த
ன்பிராணனை விட்டானென்று சரித்திரத்தி
ற்சொல்லப்பட் டிருக்கிறது.

ஜயபுரம், ஜோதிபுரம் உதயபுரம் முத
லான விடங்களிலுள்ள அகடித்திரியர் மகா
ரூார் அவர்கள் தங்களுக்கு சத்துருக்களா
ல் அபஜெய முண்டாகுமென்று கண்டால்
தங்கள் பிராணனைப் பெரிதென்று பாராட்
டாமல் தங்களுடைய மனைவி மக்களை வா
ள்கொண்டு விசிவிட்டு ஆண்சிங்கங்கள்
போல போரிற்புகுந்து கடும்போர் புரிந்து
போர்க்களத்திலே மாண்டுபோவது வழக்
கம். நெஞ்சுறுதி இன்னதென்று நன்று
ய்க்காட்டுமாறு. ரோமர் சரித்திரத்தில் பிர
சித்தமான கதையொன்றுண்டு:—ஒருகா
லத்தில் ரோம் நகரத்தை ஆண்மைகொண்
டபகைவர் பலமாய் முற்றுகை யிட்டார்க
ள். அப்பகைவர்கள், இரவும் பகலும் அந்
நகரத்தின் மதில்களின் சுற்றுப்புறத்தை
விட்டுவிலகாமலும், அதிலிருந்து ஒருவ
ரையும் வெளியேவர வொட்டாமலும் வெ
குஜாக்கிறதையா யிருந்தமையால் ஆற்றி
ன் வழியாய் அந்நகரத்தி லுள்ளவர்களுக்
குவேண்டும் ஆகார முதலியவற்றைக் கொ
ண்டுபோவதற்கும் வாய்க்கவில்லை. அந்த
க்கதவுகளையெல்லாம் பலமாய்ச் சாத்தித்
தாழ்ப்பாளிட்டு அதனுள்ளிருந்த அனைவ
ரும் பசியினால் வருந்தி மாண்டுபோவதை
த்தவிர்க்க வேறாகதியில்லை. ஆதிகாலமு
தற்கொண்டு ரோமர் பேர்பெற்ற சுத்தவீ
ரர்களாதலால் வெளியே திரளான சேனை
களை வைத்துக்கொண்டு அதை முற்றுகை
போட்டுக் கொண்டிருந்த வேற்றரசனாகிய
லார்ன்போர் ஸீனா என்பவன் தன்னாலான
மட்டும் அதன் உள்ளே நுழையப் பார்த்
தானென்றாலும் அவர்கள் அவனையும் அவ
னதுசேனையையும் அடித்துத் துரத்திவிட்
டார்கள். அதன்பேரில் அவன் உள்ளே
யிருந்தவர்க ளத்தனைபேரும் பட்டினியா
ல் சாகுமட்டும்தான் முற்றுகையை விட்டு
வருகிறதில்லையென்று நிர்மானித்திருப்பா
ன். அதினுள்ளிருந்த கேயஸ். மியூஷியஸ்
என்பவன் தன்பிராணனை விட்டாவது அ
ந்நகரத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று
தன்னுள்ளே நிச்சயித்துக்கொண்டு, தான்
ஏதோ ஒரு விதமாக அந்தந்த நகரத்தை
ரக்ஷிக்கும்படி நினைத்திருப்பதாயும் அது
ரகசியமான தென்றும், அப்படிச்செய்வத
ற்காகத் தன்னைமட்டும் வெளிபோகும்படி
தனக்கு விடைதரவேண்டுமென்றும் அங்கி
ருந்த அதிகாரிகளைக்கேட்டுக் கொள்ள அ
வர்கள் நல்லதென்று அவன் வேண்டுகோ
ளுக்கிணங்கி விடைகொடுத்தார்கள்.

அவன் இந்தவண்ணம் வெளியேபோனா
னென்று ஒருவருக்குந் தெரியாது. அவ
ன் மறுநாள் லார்போர் ஸீனா அரசனு
டைய போர்வீரர்களோடு தானுமொரு
போர்ச்சேவகனைப் போலிருந்து அவர்கள்
சம்பளம் வாங்கும்போது தானுங்கூடவே

ஆடு எடுத்த கள்ளனைப்போல் விழிக்கிறான்.

சம்பளம் வாங்கப் போவதைப்போலச்செ
ன்றான். அங்கே திவ்வியமான வஸ்திரந்
தரித்து உட்கார்ந்திருந்தார்கள். அவர்களி
லொருத்தன் சிறந்த ஆடை யுடுத்திருப்ப
தைக்கண்டு, அவன்தான் அரசனாயிருத்தல்
வேண்டுமென்றெண்ணித் தன்னிடுப்பிலே
கட்டியிருந்த உடைவாளையெடுத்து ஒரேவீ
ச்சில் கொன்றுவிட்டான். உடனே அரு
கேயிருந்தவர்கள் அவனைக்கட்டிச் சிறை
செய்தார்கள். எவ்வகையாவது தனது நக
ரத்திலுள்ளவர்கள் பிழைத்தார் போதுமெ
ன்பதையே அவன் பெரிதென்று பாராட்
டி இப்படிச் செய்தானாகையால் அவன் ஒ
ன்றிற்கு மஞ்சவேயில்லை. அவனைப்பார்க்
கவே எவருக்குந் திகிலுண்டாயிற்று அப்
பொழுது அரசனுக்கு அருகே ஓர் பக்கத்
தில் திமண்டி யெரியக்கண்டு அவன் தன
து வலதுகையை அதில் நீட்டினான். அ
வன்கை கட்டையைப்போல் எரிந்து கொ
ண்டிருக்கையிலும் நீட்டினகையை சிறிது
ம் மடக்காமலே நின்றான். இந்த அற்பு
தத்தைக் கண்டு அரசன் வியப்புற்றான் அ
வ்வளவு பற்றி யெரிகையிலும் தனக்கு அ
தனால் கொஞ்சமாவது வலியுண்டானதாக
ப்பாவிக்கவில்லை. இந்த அதிசயத்தைக்
காணவே அவ்வரசன்தான் வீற்றிருந்த
ஆசனத்தை விட்டெழுந்து அவனண்டை
தாவிப்பாய்ந்து உளமகிழ்ந்து அந்தச்சிறு
வனைக் கொல்லாது விட்டு விடும்படி அரு
ள்புரிந்தது மன்றி அந்நகரத்தை முற்று
கைபோட்டிருந்ததையும் வேண்டாமென்
று சொல்லிப்போய்விட்டான். இவ்வாறு
க நெஞ்சுறுதியினால் அவன் நகரத்திலுள்
ள அத்தனை பேரையுங் காப்பாற்றினான்.
அவன் வெந்தகையுடன்மீண்டும் ரோமந
கரத்திற்குச் சென்று அவ்வரசன் சபை
முன்னே நின்ற பொழுது அவர்கள் அத்
தனை பேருங்கண்டு பூரித்து ஆனந்தக்கண்
ணீர் வொழுக எழுந்துநின்றார்கள். இவ்
வாறு கேயஸ் மியூஷியஸின் வலதுகையா
னது எரிக்கப்பட்டதனால் அவனுக்கு அ
ன்று தொட்டு இடதுகையனென்று பொ
ருள் படுகின்ற "ஸ்கேவோலன்" என்ற
காரணப் பெயரிடப் பட்டது.

நல்லமனையாள்.

நல்ல மனையாளுக்குச் சற்றே இளைப்பா
றவும் பொழுதிருப்பதரிது. அவளுக்கு
விடிந்தெழுந்தால் தன் வீட்டிலுள்ள வே
லைகளை யெல்லாம் நன்றாய்ச் செய்வதிலே
தானே பொழுதெல்லாம் கழிந்துவிடும்.
சிறிது காலங்களில் இரவில் இரண்டொரு
ஜாமம் படுத்துறங்கவும் அவளுக்குச் சரிப்
படுகிறதில்லை. கோழிகூவிப் பொழுதுவி
டிகையில், அவள் பள்ளியை விட்டெழுந்
திருந்து, வீட்டிலுள்ள குப்பைகளெல்லா
ம் போகப்பெருக்கி, வீட்டைச் சுத்திசெய்
து, பண்டங்களைச் சீர்படுத்திவைத்து, அந்
தந்தக் குழைந்தைகளுக்கு வேண்டியபடி
வஸ்திரங்களை உடுத்தி, பள்ளிக் கூடத்திற்
குப் போகவேண்டிய குழந்தைகளுக்கு
உணவிட்டுச் சிங்காரித்தனுப்பி, விளை
யாட்டுக் குழந்தைகளை உண்பித்து விளை
யாடச்செய்து, கைக்குழந்தைக்குப் பால்
கொடுத்து மார்போடணைத்து உச்சிமோ
ந்துவிட்டுத் தொட்டிலிலே வளர்த்திவிட்டுத்
தாலாட்டித் தூங்குவித்து, வீட்டிலுள்ளார்
யாவருக்கும் முறையே உண்டியளித்து, ஆ
த்துமவஞ்சனை செய்யாமல் மிஞ்சியதைத்
தானுமுண்டு, நின்றவிடத்திலே நில்லாமல்
பம்பரம்போல வீட்டுக்காரியங்களையெல்லா
ம் சோம்பலின்றிச்செய்து,கணவனைக் கண்
குளிரப்பார்த்து அவனுக்குக் காதல்மனைவி
யாகி அவன் எள்ளென்றால் எண்ணெயென்
றிருப்பவள் புண்ணியவதியாம். பொழுது
போனபின்பு அவள்கணவன் வீட்டுக்குவரு
ம்போது அந்தவீடு இந்திரபுவனம்போல அ
ழகாய் வைக்கப்பட்டிருப்பதைக்கண்டு அ
வன் மகிழ்ச்சியடைவான். அவன்வரும்
போது அவன்மக்கள் அவனை எதிர்கொண்

ஆடுகெடிக்கிறதென்று இடையன் உறியேறினனும்.

டு அகமலர்ச்சி முகமலர்ச்சியோடு அவன் மேல்விழுந்து கொஞ்சிக்குலாவிக்கட்டியணைத்துக்கொண்டு முத்தமிட்டு அவன் மனங்களிக்கச் செய்வார்கள். அப்பொழுது அவன்மனையாள் அவனை முகங்குளிரப்பார்த்து, "ஸ்வாமி! தங்கள்வேலை இன்றுசரியாய் நடந்தேறியதா? நாங்கள் வீட்டில் ஒரு கணப்பொழுதும் வீண்போகாமல் வேலைசெய்துகொண்டிருந்தோம்; தாங்கள் இப்பொழுது அமுதுசெய்ய எழுந்தருளலாம்; பாகசாலையில் எல்லாம்முன்பே சமயலாயிற்று என்பாள். அவள் கணவன் பிள்ளைகளோடு சாப்பிட்டானபின்பு கடவுளைத் தோத்திரஞ்செய்துவிட்டுப் படுத்துக் கொள்ளுவான். அவள் தன் மக்களையெல்லாம் ஒவ்வொருத்தராய்ப் படுக்கையில் எடுத்துவிட்டு அவர்களுக்குவேண்டியபோர்வைகளால் அவர்கள்மேல் குருகுபறவாமலும், ஈ யெறும்புகள் மொய்க்காமலு மிருக்கும்படிநன்றாய்ப்போர்த்தி, அவர்களுடையபாதரக்ஷைகளை யெல்லாமெடுத்துவரிசையாய் வைப்பாள். இவ்வாறு அவள்காலமெல்லாம் இவ்வாழ்க்கையை இனியதாக்குவதிலேயே சென்றது.

அவள்கணவன் படுக்கையிலிருந்து கடவுளைத்தோத்திரஞ்செய்துகொண்டபடியே உறங்கினவுடன், அவள் தன்கணவனுடைய தூக்கம் தன்னால் எங்கேகெடுபட்டு அவன் விழித்துக்கொள்ளுவானோ வென்று அச்சமுற்று வாய்திறவாமலிருந்ததுவு மன்றி, அதுகாரணமாகவே தன்மக்களையும் அழாதிருக்கும்படி கருத்தாய்ப்பார்த்து வருவாள். அப்பொழுது அவளை ஆற்றித்தேற்றி அன்புடன் ஏனென்று கேட்பார் யாருமில்லையென்றாலும், அவள் மனந்தளராமலிருந்து, துணிமணியைச் சேர்ந்த காரியங்களை நன்றாய்ச் செய்து கொண்டிருந்து, நடுராத்திரிக்குமேலே சற்றே அயர்ந்து நித்திரைசெய்வாள். இவ்வாறு ஓயாமல் விட்டுவேலைகளைச்செய்வதிலேயே அவள்பொழுதெல்லாம்போனதினால் அவளுக்கு இளைப்பாறவும் நேரமிராது. இத்தனை சங்கடத்தில் அவளுக்குப் பாடம் படிக்கவும், ஒழிந்திருக்கவும் நேரங்கிடைப்பதெப்படி? இவ்வாறு அவள் அளவைக்கடந்து பாடுபட்டதனால், அந்தச்சுந்தரியின் வடிவழகு குன்றிப் பிணியும் மூப்பும் மெள்ளமெள்ள உண்டாகத்தலைப்பட்டது. ஆதலினால் அவளுக்கு முன்னிருந்த சுருசுருப்பும் தேகவலிமையும் மட்டுப்பட்டது. இப்படியிருந்தும், "கடுகுசிறுத்தாலும் காரம்போகாது" என்றவண்ணம் அவள் ஓயாமல் விட்டுவேலைகளைச் சோம்பலில்லாமல் செய்வதற்கு அஞ்சவில்லை.

விடிந்தெழுந்தால் அவள்இவ்வாறு அரும்பாடு பெரும்பாடுபட்டதினால் இறுதியில் அவள்நோய்க்கொண்டு தள்ளாதவளானாள். அப்பொழுது அவள் மக்களைப்பார்த்துக் கருத்தாய்ப்போற்றி ஆதரிப்பாரின்மையால், அவள்கணவன் மனங்கலங்கியது. அவள் மக்கள் வேறுவிதியின்றி ஆறினஉண்டியை உண்ணவேண்டிய தாயிற்று. அந்த விசாரத்தினால் அவள்கணவன் வெந்து அயர்ந்துச்சிந்தைதடுமாறினான். அவள் ஒருத்திதலைசாய்த்துப் படுத்துக்கொண்டதினால் அவ்வீடு ஆளுவாரற்றதாயிற்று. அந்த, உத்தமியானவள் ஆறுபேர் வேலைக்காரிகள் செய்யத்தக்க வேலைகளையெல்லாம் தான் ஒருத்திமட்டுமே தனியே அத்தனைகாலமாய்ச் செய்துவந்ததனால், அவள் கணவனுக்குத் தன்காதல் மனையாள் நோய்கொண்டு படுத்துக்கொண்டது பெருந்துக்கந் தரத்தக்கதாயிற்று. ஆயினும் நல்லார்க்கு எப்படிப்பட்ட பெருந்திங்குநேரிடினும், "மலைபோல வந்தவினை பனிபோல நீங்கிவிடும்" என்றபடி கருணைநிதியாகிய கடவுளின் பேரருளால் அவளுக்குவந்த நோய்நீங்கிப் பழயபடியே தேகத்தில் நல்ல வலிமையையுண்டாகி முன்போலவே தன் குடும்பத்தைப் பாதுகாத்துவந்தாள். "இல்லாளகத்திருக்க இல்லாததொன்றில்லை" என்று ஔவைசொல்லியிருப்பது இவளைப்போன்ற உத்தமியைப்பற்றியே யாம்.

ஆடி கார்ப்பணம் வால் முக்கார்ப்பணம்.



குரங்கு.

பாட்டன். இதுவரையில் நான்குகால்களுள்ள மிருகங்களுடைய சரித்திரங்களைக்கேட்டாயே, இப்பொழுது நான்கு கைகளுள்ள மிருகங்களைப் பற்றிச் சிறிது சொல்லுகிறேன் கேட்கிறாயா?

பேரன். இதென்ன? நான்குகைகளுள்ள பிராணிகளை நான் இதுவரையில் கண்டதுமில்லை, கேட்டது மில்லையே, அது எப்படியிருக்குமையா?

பாட்டன். இதோ இந்தப் பக்கத்துப் படத்தைப் பார்த்தாயா? இந்தப் படத்திலுள்ளதுதான் நான்குகையுள்ள மிருகம்.

பேரன். இது குரங்கல்லவா? குரங்குகளை நான்பலவிடங்களில் பார்த்திருக்கிறேன். இதை நீர் நான்கு கையுள்ள மிருகமென்றுசொல்லுகிறீரே, அதெப்படிஐயா?

பாட்டன். பிள்ளாய், நமது கைகளைப் போலவே குரங்குகளுக்குள்ளநான்கு கால்களும் பொருள்களை யெடுக்கவும் பிடிக்கவும் உபயோகப் படுகின்றன வாதலால், அவைநான்கு கைகளென்றும் சொல்லப்படுகின்றன; அதனாலேதான் குரங்குகளுக்கு அந்தப்பெயர் உண்டாயிற்று.

பேரன். ஐயா, இப்பூமியில் எந்தெந்தத் தேசத்தில் குரங்குக ளிருக்கின்றன?

பாட்டன். குழந்தாய், இப்பூமியில் உஷ்ணதேசங்கள் எல்லாவற்றிலும் வானரங்கள் விசேஷமாக வாசஞ் செய்கின்றன; ஆனால் எல்லாத் தேசத்துக் குரங்குகளும் ஒரு தன்மையாயிருப்பதில்லை; ஒவ்வொருதேசத்துக் குரங்கு ஒவ்வொரு விதமாயிருக்கின்றது.

பேரன். அப்படியானால் குரங்குகளில் எத்தனைவகை யிருக்கின்றனவாம்?

பாட்டன். குழந்தாய், இத்தனை வகையென்றுக் கணக்கிட்டுச்சொல்லமுடியாது. இப்பொழுது நமது தேசத்தில் காணப்படுகிறவைகளெல்லாம் மிகச்சிறியவைகளாயிருக்கின்றன. ஒருபெரிய ஆளளவு உயரம்வளர்ந்த குரங்குகள் அநேகம் ஆப்பிரிக்கா முதலிய தேசங்களி லிருக்கின்றன. அவைகளில் சிலவற்றிற்கு உடம்பில் மயிரடர்ந்திருக்கும், சிலவற்றிற்கு மயிரிருப்பதில்லை. சிலவற்றிற்கு நீண்ட வாலுண்டு, சிலவற்றிற்கு வாலே கிடையாது.

பேரன். ஐயா, வாலில்லாக்குரங்கு என்கிறார்களே, அந்தக் குரங்குகளைத் தானோ அப்படிச் சொல்வது? அதைப் பார்க்க வேண்டுமென்று எனக்கு ஆசை யுண்டாகிறது.

பாட்டன். வாலில்லாக் குரங்கை இந்தேசத்திற்குக்கூட இரண்டொரு தடவை பிடித்துக்கொண்டு வந்திருக்கிறார்கள். அவைபின்னங்காலை ஊன்றி நிமிர்ந்து நிற்கும்போது பார்த்தால், ஒருவகைவிகாரமான மனிதன்போலவே தோன்றும்; சிலகுரங்குகள் பின்னங்கா லிரண்டினாலே நடந்து போகும்; அவைகளுக்கு கொரில்லாவென்றும், வாலில்லாக்குரங்குகளுக்கு உராங் உத்தானென்றும் அத்தேசத்தார் பெயர் வழங்குகிறார்கள். மனிதர்க ளெல்லாரும் முதலில் இந்தக்குரங்குகள் மாதிரியாகவேயிருந்தவர்களென்றும், வரவரநாகரிகம் அதிகமாகித் தேர்ச்சி யடைந்தார்க ளென்றும் சொல்லுகின்றனர்; அவைகளெல்லாம் காட்டுமனிதர்களென்றும், ராஜாங்கத்தாருக்கு வரிப்பணம் கட்டப்பயந்து காட்டிற்கு ஓடிப்போய்த் திரிகின்றமனிதர்களென்றும் சிலர் சொல்லுகின்றனர். காட்டுமனிதர்கள் போன்ற இப்பெருங்குரங்குகள் சாதாரணமானவைக ளல்ல; மிகுந்தவலிவுள்ளவைகள், பிடித்துப் பழக்கினால் மனிதர்களுக்குப் பலவிதமான வேலைகளையும் செய்யும். குரங்குகளைப்பற்றிய கதைகள் பலவுண்டு. அவைகளையெல்லாம் எழுதப் புகுந்தால் மிகவும் பெருகும். குரங்குகள் அமெரிக்கா தேசத்திலுள்ள

ஆடுகிடந்த இடத்தில் பழுப்புத்தானும் கிடையாது.

பெருங்காடுகளில் விசேஷமாக வசிக்கின்றன. அவை எங்கேயாவது ஓரிடத்திற்குக் கொள்ளையிடப் போனால் சண்டைக்குச் சேனைகள் அணி வகுத்துச் செல்வது போல் அவை ஒழுங்காகச் செல்லும்; தலைமையாக ஒரு பெருங் குரங்கு அவைகளை நடத்திக்கொண்டு போகும். குரங்கு ஜாதிகளில் சில மிகவும் புத்திசாலிகள். அமெரிக்காவில் ஒரு பெரிய ஆற்றங்கரையில் வாசம் செய்து கொண்டிருந்த குரங்குகள் ஒருசமயத்தில் இக்கரையிலிருந்து அக்கரையிலுள்ள காட்டுக்குப்போக வேண்டியதாயிற்று. ஆற்றிலோ வெள்ளம் நிறையவருகின்றது. அப்பொழுது அவ்வாற்றைத் தாண்டுவதற்கு அவைகளுக்கு உண்டான யுக்தி மிகவும்அதிசயமானது. அவற்றுள்ஒருபெரியகுரங்கு அந்தக்கரையிலுள்ள ஒருஉயர்ந்த மரத்தின் உச்சிக்கிளையைப் பிடித்துக் கொண்டு தலைகீழாகத் தொங்கியது; பின் மற்றொரு குரங்கு அதன் கழுத்தைக்கட்டிக்கொண்டு தொங்கியது, இப்படியே ஒன்றின்கீழ் ஒன்றாய் அநேகம் குரங்குகள் சங்கிலிபோலப் பிணைந்துகொண்டு தரைவரையில் தொங்கின. பின் அந்தக் குரங்குச் சங்கிலி மெல்ல ஆட ஆரம்பித்தது. அப்படியே மெல்லமெல்ல ஆடிக் கடைசியில் ஆட்டம் அதிகவேக முடையதாகி அடியிலிருந்த குரங்கு எதிர்க்கரையை எட்டும்படியாகியது. பிறகு பின்னும் கொஞ்சம் அதிகமாக வீசி அடியிலிருந்த குரங்கு எதிர்க்கரையில் ஒரு உயர்ந்த மரத்தின் உச்சிக்கிளையைப் பிடித்துக் கொண்டது. முன்னிருந்த குரங்குச் சங்கிலி இப்பொழுது குரங்குப்பால மாயிற்று. பிறகு மற்றக் குரங்குகளெல்லாம் அந்தக் குரங்குப்பாலத்தின்மேல் நடந்து எதிர்க்கரைபோய்ச் சேர்ந்தன. எல்லாக்குரங்குகளும் போனபிறகு இந்தக்கரையில் மரத்தைப்பிடித்துக் கொண்டிருந்த பாலத்தின் கடைசிக்குரங்கு தான் பிடித்திருந்த கிளையை விட்டுவிட்டது. இப்பொழுது அந்தச் சங்கிலி எதிர்க்கரை மரத்தில்தொங்கலாயிற்று. அப்பால் அந்தச் சங்கிலியில் கட்டிக் கொண்டிருந்த குரங்குகள் ஒவ்வொன்றாய்க் குதித்து ஓடிப்போனவாம்.

பேரன். தாதா! இக்குரங்குகளின் செய்கை வெகுவிசித்திரமா யிருக்கிறதே; வானரசைனியங்கள் இலங்கையை அழித்ததென்று இராமாயணத்தில் கதைசொல்லுகிறார்களே, அவைகளெல்லாம் இப்படிப்பட்டகுரங்குகள் தாமோ?

பாட்டன். இக்காலத்துக் குரங்குகளே இப்படி யிருக்கின்றபோது தேவதைகளுடைய அம்சமான ஹனுமான் முதலிய அக்காலத்து வானர வீரர்களுடைய பராக்கிரமம் இப்படிப்பட்டதென்று நம்மால் சொல்ல முடியுமா! வெகு நேரமாகிவிட்டது; வானரவீரர்களுடைய கதையை இவ்வளவோடு நிறுத்துவோம்.

வீட்டில் தாய்செய்யும் நன்றி.

"தாயிற் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்றபடி எந்தவீட்டிலுந் தாயே போற்றுதற்குரியவள். அவளுக்குத் தெரியாத விஷயம் வீட்டில் ஒன்று மிராது. "தாயைப்போலப் பிள்ளை, நூலைப்போலச்சேலை" என்றவண்ணம் அவள் மக்களும் அவளைப்போலவே யிருப்பார்கள். நல்ல தாய்மார்கள் எந்நேரமுந் தங்கள் மக்களை நன்னெறி முறையினின்று சிறிதும் பிறழாதிருக்கும்படி கருத்தாய்ப் பார்த்து வருவார்கள். இவ்வுலகில் எந்த விஷயமும் பார்த்துப்பார்த்துப் பழகினால் மட்டுமே நன்றாய்ப்பயன் படுகிறதன்றி, வாயினாலே சொல்லுவதைக் கேட்பதினால் அவ்வளவாகிறதில்லை. இது யாருக்கும் நன்றாய்த் தெரிந்ததேயாம். எப்படிப்பட்ட விஷயமாக விருந்தும் பதறிச் செய்யாமையும், முறுமுறுக்காமையும், குற்றம் பாராமையுமன்றி

ஆடுகொழுக்கிறதெல்லாம் இடையனுக்குலாபம்.

பொறுமை, அன்புடைமை, நன்மை இவற்றையே அணியாகப்பூண்டு தன்மக்களைத் தன்னைப் போலாகும்படி செய்வதிலேயே நாட்டமுடையவளா யிருத்தல் வேண்டும். தாயினிடத்தில் இழிகுணம் நிறைந்து நற்குணஞ் சிறிது மில்லாவிடில் அவள் தன்மக்களை நன்னெறியில் நடத்துவது எப்படி?

அழுக்குப்போக அலம்பிச் சுத்தஞ்செய்தல்.

சுத்தமே சிறப்புடையது. சுத்தமில்லாவிடில் எதுவும் நன்றாயிராது. சிறுகுழந்தைகள் உடம்பில் புழுதி படியும்படி விளையாடுவது நன்றென்று சிலர் சொல்வதுமுண்டு. இது சரியன்று. தேகம் எவ்வளவுக்கெவ்வளவு சுத்தமாக இருக்குமோ அத்தனைக்கத்தனை நல்லறிவுண்டாகும். இதனாலே தான் கடவுளை வணங்குவதற்கு முன்பே யாரும் நன்றாக ஸ்நானஞ்செய்து சுத்தமான வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுகிறார்கள். நமது சரீரமானது நமது ஆத்துமா குடியிருக்கும் வீடாதலால் அவ்வீடு எப்பொழுதும் சுத்தமாக வைக்கப்பட்டிருந்தால் மட்டுமே அதில் வாழ்ந்திருக்கும் ஆத்துமாவுக்குப் பரிசுத்த முண்டாயிருக்கும். அன்றியும் தேகத்தைச் சுத்தமாக வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு அதனால் எப்பொழுதும் ஏற்றமுண்டு. குழந்தைகளை நல்காற்று உலாவுகின்ற சுத்தமான இடங்களுக்கு நாள்தோறும் அழைத்துக்கொண்டுபோக வேண்டும். நமது தேகமேயன்றி நாமிருக்கும் வீடும் அதற்கருகேயுள்ள இடமும் நிர்மலமா யிருக்கவேண்டும். விடிந்து நெடுநேர மளவும் அழுக்குத்துணியை யவிழ்த்துவிட்டு நல்லவஸ்திரத்தை உடுத்திக்கொள்ளாமலும் பல்லை விளக்காமலு மிருந்தால் எவ்வளவு தெளிவான புத்தியும் மந்தமாகும்.

துரும்பு தூண்.

எல்லாவற்றுள்ளும் கண்மிகவும் நுட்பமானது. கண்ணில் யாதேனும் தூசுபட்டாலும் அதற்கு அதனாலுண்டாகும் நோய்பெரிதாகும். இருப்புப் பாதையின் வழியே பிரயாணஞ் செய்பவர்கள் கண்ணில் பொறிகள் பறந்து வந்துபடிவது முண்டு. சாதாரணமாய்ப் பொறிவிழுந்த கண்ணைப் பல்லைக்கடித்துக்கொண்டு ஒருகையினாலே நன்றாகக் கசக்கி மற்றக்கையினால் அந்தக் கண்ணில் விழுந்திருக்கும் பொறியையெடுக்கும்படி முயல்வதே யாவருக்கும் வழக்கம். அவர்கள் அதை நன்றாகக்கசக்கி விடுவதினால் சிறிது வேளைகளில் அக்கண் செக்கச்செவேரென்று கொவ்வைப்பழம்போலச் சிவந்துபோவது முண்டு. பொறிவிழுந்தகண்ணை ஒன்றுஞ்செய்யாமலிருந்து மற்றதை மட்டும் நன்றாய்க் கசக்கினால்போதும்.

இந்தவைத்தியத்தைக் கேட்டால் யாருக்கும் இது முதலில் பொய்யென்றே படும். கண்ணில் தூசிவந்து விழுவது எப்பொழுதும் யாருக்குமுண்டாகையால், இதுமெய்பொய் யென்பதை யாரும் எளிதில் தங்கள் அனுபவத்தினாலேயே நன்றாய் அறிந்து கொள்ளலாம். இவ்வாறு செய்யும் வைத்தியமானது, கண்ணில் மிகவும் அற்பமான தூசு, துரும்பு, பொறி முதலியன விழுந்தால் மட்டும் பயன்படுமேயல்லாது, கண்ணில் புண்ணையுண்டாக்கத்தக்க பெரியதும், கூர்மையுமான பொருள்பட்டு வருந்தும்போது செய்யத் தக்கதன்று. தூசுவந்து விழுந்தவுடன் அந்தக்கண்ணைத் தொடாமலிருந்து, மற்றொருகண்ணைக் கசக்கிக் கொண்டிருந்தால், இரண்டு மூன்று நிமிஷத்திற்கெல்லாம் அத்தூசு எளிதில் வெளியே வந்துவிடும்.

ஆடுகொடாத இடையன் ஆவைக்கொடுப்பானா?

சிங்கமும் கரடியும் நரியும்.

காட்டில் ஒரு சிங்கமும் கரடியும் சிநேகமாய்த் திரிந்துகொண்டு வருகையில், ஒருநாள் நல்ல மான் ஒன்று அகப்பட்டது. அதை இரண்டும்சேர்ந்து கடித்துப்போட்டு உனக்கெனக்கென்று பங்குபிரியாமல் வாதிட்டு இரத்த வெள்ளாருகும்படி ஒன்றையொன்று நகங்களால் கிழித்துக் கோரயுத்தம் செய்கையில், ஒன்றுக்கொன்று கோபம் அதிகரித்து கர்ஜித்தும் உறுமியும் வாலைத்தட்டி வெகுநேரம் சண்டைசெய்து அண்டையில்போய் சற்றே இளைப்பாறும்வேளையில் அந்த வழியாய்வந்தநரி இவ்விரண்டும் அசந்திருப்பதைக்கண்டு சட்டைபண்ணாமல் கிட்டப்போய் அங்கிருந்த மானை இழுத்துக்கொண்டுபோய்விட்டது. களைத்திருந்த இரண்டு மிருகங்களும் அதைத்தடுக்க எழுந்துபோகச்சக்தியில்லாமலும் மானைக்காணாமலும் மனந்திடுக்கிட்டு இடித்தவர் புடைத்தவர் இங்கிருக்க எட்டிப்பார்த்தவன் கொட்டிக்கொண்டு போனதுபோல் நமக்கில்லாமல் இழுத்துக்கொண்டு போகிறதே, அதைநாமோ பிடுங்கிக்கொள்ள சக்தியற்றவர்களாய் இருக்கிறோமே, நமது போராட்டம்வீணாட்டமாய்ப் போயிற்றே, என்றுசொல்லி விசாரப்பட்டன.

நீதி.—அதிக ஆசை அதிக நஷ்டம்.

கதாசாரம்.—பொருள் சேகரிக்கவோ அல்லது பெருமையடையவோ சிலர் அமிதமான முயற்சிசெய்கிறார்கள். ஆகிலும் முடிவில் தாங்கள் சுகப்படாமலும் காரியசித்தி பெறாமலும் உள்ளதையும் போக்கடித்துக் கொள்ளுகிறார்கள்.

நரியின் தந்திரம்.

காட்டில் வாசஞ்செய்யும் நரிகளுக்குப் பேன்பிடித்து உடம்பெல்லாம் பாவிகடிக்க ஆரம்பித்தால் அப்போது ஒரு உபாயஞ்செய்து அந்தப்பேன்களையெல்லாம் போக்கடித்துக்கொள்ளும். அதெப்படியென்றால் காட்டுவரட்டித் துண்டை தன் வாயாற்கவ்விக்கொண்டு ஜலத்தண்டையிற்போய் நாலுகாலையும் ஜலத்தில் நனைத்தால் காலில் இருந்தபேனெல்லாம் முதுகில் ஏறும் முதுகையும்நனைத்தால் தலையிலேறும் தலையையும் நனைத்தால் வாயில் கவ்விக்கொண்டிருக்கும்காட்டுவரட்டியில்வந்துசேரும் அந்த வரட்டித்துண்டை ஜலத்தில் போட்டுவிட்டு ஓடிப்போய்விடுமாம். இதற்குத்தான் தந்திரசாலியை நரிகுளுப்பாட்டியென்று பேரிட்டுக் கூப்பிடுகிறதுவழக்கம். அதுபழமொழியாகவும் வழங்கிவருகிறது.

ஆடு கோனனின்றி தானாய்ப்போகுமா?

பட்டுநூல் மாதிரித்தையல்.

வர்ணம்தீர்த்த இந்தச்சித்திரத்தையல் மேல்வரிச்சட்டத்தைப் பார்த்து மூலைக்குமூலை அளவு சரியாக பூத்தையல்தைக்கும் வகையை முழுதும் விவரித்து எழுதிக்காட்டக் கூடாமையால் இரண்டு மூன்று குறிப்புகளைமாத்திரம் இதனடியில் காட்டுகிறோம்.

1. இந்த எள்ளுப்பூத்தையல் வேலைக்கென்றே பலகண்வைத்து நெய்திருக்கும் ஜாலர்துணியின்மீதே கெட்டிச்சாயம் ஏற்றிய பலவர்ணமான பட்டுநூல்களாலாவது பருத்திநூல்களிலாவது இந்த மேல்வரிச்சட்டத்தில் காட்டிய புள்ளிகளின் கணக்கின்படி மூலைமூலை தவறாமல் தையல் ஓட்டி எள்ளுத் தையல்போடவும். மேல்வரிச்சட்டத்தில் கண்ட சாயங்களேற்றிய நூல்களையே உபயோகிக்க வேண்டுமென்கிற அவசியமில்லை. அவரவருடைய புத்திக்கு அழகாய்த்தோன்றுகிற வர்ண நூல்களை உபயோகித்துக்கொள்ளலாம்.



பட்டுநூல்களல்லாமல் பருத்திநூல்களால் தையல்வேலைசெய்தால் அது கெட்டிச்சாயம் தீர்ந்த நூல்களாகவே யிருக்கவேண்டும். சாதாரணமான சாயச் சூரணத்தில் தோய்ந்த நூல்களால் வேலைசெய்ததுணியைத் தண்ணீரில் நனைத்த உடனே சாயங்கள் ஒன்றோடொன்று கலந்து அணி பார்க்க வழங்காமல் கெட்டுப்போகும்.

ஜாலர்துணியில் பூப்போட்ட இடம்தவிர மற்ற இடங்களில் வர்ணநூல்களை ஓட்டி நிறைத்துவிட வேண்டியதில்லை.

2. மேல்வரிச்சட்டப்பிரகாரம் சாதாரணமான ரெட்டுத்துணியிலும் எள்ளுத்தையல்வேலை பலவர்ணமான பெர்லின் சீமைக்கம்பளநூலால் செய்யலாம். அப்படிச்செய்தால் பூவைச் சுற்றியிருக்கிற இடங்களைக் கறுப்பு அல்லது ஊதா அல்லது சிவப்புச்சாயம் கனமாய் ஏற்றிய கம்பளி நூலால் தைத்து நிறைத்துவிடவேண்டியது அவசியம்.

சூரியகிராணம்.



ஆகஸ்ட்டுமீ புதிர் முதலானவைகளை விடுவிக்கும் வகைகள்.

1. தபால் கடிதக்காரன்.
2. குற்றம்.
3. உருவப்படம்.
4. காணப்பச்சை.
5. உடுத்திக்கொண்டால்.
6. அடித்தால்
7. காற்றிற்கு எதிர்சென்று.
8. காற்றுடி.
9. அங்கி.



10. A - என்பது மேற்கேயிருந்துபோகிற வண்டித்தொடர்.
B - என்பது கிழக்கேயிருந்துபோகிற வண்டித்தொடர்.

A என்னும் மேற்குப் புகைவண்டித்தொடரின் 25-வண்டிகளும் புகையந்திரவண்டியுடன் C என்கிற ஸ்தானத்திற்கு அப்பால்போய் கிளைவழியில் செல்லவேண்டும்.

B வண்டிகள் C என்கிற ஸ்தானத்தைக்கடந்து A வண்டித்தொடர்ச்சியில் மிருந்திருந்த 25 - வண்டிகளோடுபோய் ஒட்டவேண்டும். பிறகு A 25 - வண்டிகளும் கிளைவழியை விட்டுச் செல்லும்வழியில் சற்று தூரம்போய் நிற்கவேண்டும்.

B 50 - வண்டிகளும் A 25 - வண்டிகளோடு இடத்தைவிட்டுப் பெயர்ந்து A 25 - வண்டிகளைமாத்திரம் பின்தள்ளி கிளைவழியில் ஒதுக்கிவிட்டு, தான் போகவேண்டியமார்க்கமாய் செல்லலாம்.

A 25 - வண்டிகளும் புகையந்திர வண்டியும் கிளைவழிக்குச் சமீபத்தில் வந்து அங்கே விடப்பட்டிருந்த 25 - வண்டிகளையும் சேர்த்துக்கொண்டு போய்விடவேண்டும்.

அக்டோபர்மீத்து விடுகதைகள்.

1. நல்லபாட்டு நல்ல இருப்புப்பாதைக்குச் சமானம். அது எப்படி ?

2. கடன் சீட்டும் துபாக்கியும் சரி எப்படி ?

3. வண்டி ஓடும்போது கூடவே ஓடும், வண்டிநின்றால் தானும் நின்றுவிடும், வண்டிக்கு உபயோகப்பட்டதுமல்ல; அது இல்லாமலும் வண்டிசெல்லுகிறதில்லை. இது என்ன?

4. மேலும் சஞ்சரிக்கும் கீழும் சஞ்சரிக்கும் பாதரக்ஷையையும் தேய்த்துவிடும்.

5. மூன்று பக்ஷிகள் ஒரு மரத்தில் இருக்கப் பார்த்து ஒன்றைச்சுட்டேன். ஒன்று விழுந்து செத்தால் அங்கே எத்தனை யிருந்தது ?

6. நட்டாற்றிலிருந்து நீந்தமாட்டாதவன் எப்படியிருப்பான்.

7. ஓயாமலுழைக்கு பெரியஉழைப்பாளியார்?

8. பார்த்தவருமில்லை, தொட்டவருமில்லை, கேட்டவருமில்லை, அதற்குப் பெயர்மாத்திரம் உண்டு.

9. உயிருண்டு நடவாது, இறக்கையுண்டு பறவாது, கண்ணுண்டு இமையாது.

ஆடு நனைகிறதென்று கோனாய் அழுகிறதாம்?

விடாமுயற்சிக்குச்சிறந்த ஒரு திருஷ்டாந்தம்.

விடாமுயற்சியைப்பற்றிச் சீனதேசத்தில் விசித்திரமான கதையொன்று சொல்லப்படுகின்றது. "காரிகைகற்றுக் கவிபாடுவதினும் பேரிகைகொட்டிப் பிழைப்பது நன்று" என்றபடி கல்வியிலே நன்றாய்த்தேர்ச்சிபெறல் யார்க்கும் எளிதன்றென்றாலும், அத்தேசத்தில் ஒருவன் நல்லபுலவனாகவேண்டுமென்றெண்ணி நெடுங்காலமளவுங் கல்வியைக் கற்றானெனினும், அது சாத்தியப்படாமையால் மனஞ்சோர்ந்து கல்விபயிலுவதை அடியோடு விட்டுவிட்டு, எல்லோரையும்போலத்தொழிற்சாலைக்குச்சென்று வேலை செய்துகொண்டிருந்தான். அங்கே ஒரு கிழவி ஒருகடப்பாறையைக்கல்லில் தேய்த்துக்கொண்டிருந்ததை அவன்கண்டு, அம்மா! நீ இந்தப்பாடுபடுகிறது என்னத்திற்கென்று கேட்க, அவள், அப்பா! எனக்கு ஊசியொன்றுவேண்டும்; இந்தக்கடப்பாறையை ஊசியாக்குவதற்காகத்தான் இப்படித் தேய்த்துக்கொண்டிருக்கிறேனென்று சொன்னாள். அவன், அவள் இப்படிச்சொன்னதைக்கேட்டதும் வெட்கி, இந்தக்கிழவி இத்தனை பெரியபாறையைத் தேய்த்து ஊசியாக்குவதற்குள்ளே நான் கல்வியிலே வல்லவனாவது ஓர் வருத்தமாமோவென்று, அன்றுமுதல் விடாமல் கல்விபயில ஆரம்பித்து, சீனதேசத்து வித்துவான்களுக்குள்ளே தானுமொருவனானான்.

"ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழாது ஞற்று பவர்."

நாலுபேர் வைத்தியர்.

ஒருவர் வயதில் மிகவும் மூத்திருந்தும், நரைதிரைமுதலியவற்றால் அவர் தேகந்தளர்ந்துபோகாமல் சிறுபிள்ளையைப்போலிருந்ததனால், ஒருவன் அவரைநோக்கி, ஐயா! உமக்கித்தனை வயதாயிற்றென்றாலும், இன்னமும் உமதுதேகக் கட்டுதளர்வடையாமலிருக்கிறதே; இதெப்படி எனக்குச் சொல்லவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். அதற்கு அவர், அப்பா! எனக்கு வைத்தியர் ஒருவரல்ல; காற்று, மிதமான உணவு, குதிரைசவாரி, அமைதி என நாலுபேர். சுத்தமானவாயுவைஉட்கொள்ளுதலும், தேகத்துக்கு அநுகூலமான உணவை உண்ணுதலும், உலாவுதலும் சரீராரோக்கியத்துக்கு இனியனவாம். வெறிக்கக்குடித்தலும், "பாலோடாயினுங் காலமறிந்துண்" என்பதை மறந்து கண்டபொழுதெல்லாம் உண்ணுதலும், நல்ல காற்றில்லாத சிறு அறைகளிலே குடியிருத்தலும், இரவில் வெகுநேரஞ்சென்றதன்பின்பு நித்திரைசெய்தலும் நமது தேகசௌக்கியத்தைக்கெடுத்து வீணே வாழ்நாளைக்குறைத்துவிடும். நாம் நமதுதேகத்தை நன்றாய்ப் போற்றுகிருத்தல் நமது குற்றமேயாம். சுவற்றை வைத்திருந்தாலன்றிச் சித்திரமெழுதுவது கூடாததுபோல நமதுதேகத்தை நாம் நோயின்றிப் பாதுகாத்துவந்தாலல்லது நாம் நன்னெறிமுறைவழாது கடவுளைவழிபட்டு நற்கதியைப்பெறுவது கூடாமையாகும்.

அறிவே வலிது.

மனிதன் அறிந்துகொள்ளும் விஷயங்கள் மூன்றுவிதம்:—

முதலாவது. சிறு கூழாங்கல்லைப்போன்றது. அதைப் பூமியில் நட்டுத் தண்ணீர் வார்த்து வளர்த்தால் எப்படி வளராதோ, அதுபோல், மலைகளின் உயரம், ஊர்களின் பெயர்கள் முதலானவை ஒருதருணத்தில் மாத்திரம் அறிந்துகொள்ளப்பட்டுஞாபகமாகிற சுமைதாங்கியின் மீது சுமைவைத்ததுபோல் வைத்த விடத்திலேயே இருக்கும்.

இரண்டாவது. பவழம்போல் ஒருகால் உயிருள்ளதா யிருந்தாலும் இப்பொழுது கண்ணுக்குப்பகட்டுப் பொருளாக எப்படி காணுமோ அப்படி அறியும் விஷயங்கள் எழுதியிருப்பது ஒன்றாயிருந்தாலும் சொல்வது பத்தாகவிரியும்.

மூன்றாவது. நன்னிலத்தில் விதைத்தவிதை வளர்ந்து செந்நெற்கதிர்களைத் தருவதுபோல, அறிவால் அறிந்த விஷயங்கள் மேன்மேலும் விருத்தியாகும். பெரும்பாலும் அறியும் விஷயங்களோ கூழாங்கல், பவழம் இவைபோன்றவையல்லாமல், விதையைப்போல் நாளுக்குநாள் வளர்ச்சியடைந்து பயனளித்துக் கொண்டே இருப்பதுபோலவாம்.

Printed and published for the Proprietor at
the V. N. Jubilee Press,
No. 1, Umpherson Street, MADRAS,

All Rights Reserved.



ருஷியா.

"Let us live for our Children."—(FROEBEL.)

அமிழ்தினுமாற்றவினிதே தம்மக்கள்
சிறுகையளாவிய கூழ். (நால்) - குறள்.

THE MAHARANI.

A PICTORIAL MAGAZINE FOR GIRLS' SCHOOLS AND HOME READING.

COMMENCED ON THE ROYAL JUBILEE DAY-JUNE 1887.

மஹாராணி.

புத்தகம். 2.] பிபர்வரி-எப்பிரல்மீ 1889ஆு. [இலக்கம். 5, 6.

CONTENTS.	Page.	அட்டவணை.	பக்கம்.
GOVINDASAMI—THE VILLAGE SCHOOL MASTER	281	கோவிந்தசாமிகதை—கிராமபாடசாலை உபாத்தியாயர்	281
AN ENGLISH WOMAN'S DAY IN INDIA BY A LADY—PART-I ...	286	இந்துதேசத்தில்வசிக்கும் இங்கிலீஷ் துரைசானிகள் தினசரி ...	286
LEARNING TO WALK	294	நடக்கப் பழகுதல்	294
HABIT	296	பழக்கம்	296
THE COLD SEASON	297	பனிபெய்காலம்	297
PHILANTHROPY	304	பரோபகாரம்	304
FLORENCE NIGHTINGALE—THE SOLDIER'S FRIEND. BY A LADY	305	ப்ளாரென்ஸ் நைத்திங்கேல் என்னும் பரோபகாரி	305
OVERCROWDING AND IMPURE AIR ...	313	ஜனநெருக்கமும் அசுத்தமானகாற்றும் ...	313
FEMALE EDUCATION	314	பெண்கள் கல்விப்பயிற்சி...	314
CROSS STITCH EMBROIDERY-A HUNGARIAN PATTERN	315	ஹங்கரிதேசத்து மாதிரித் தையல்... ...	315
SHORT STORIES FROM THE HISTORY OF ENGLAND—FAIR ROSAMOND ...	317	இங்கிலாந்து தேசசரித்திரம்—ரோஜமாண்டு என்னும் அழகி...	317
A TRIP TO RUSSIA—A LETTER... ...	319	ருஷியாதேசம்—ஒருகடிதம்	319
THE WANTON CALF	320	கர்வித்த கன்றுக்குட்டி	320
ABOUT SPRING	321	வசந்தருதுவைப்பற்றி	321
AN ENGLISH WOMAN'S DAY IN INDIA BY A LADY—PART-II	326	இந்துதேசத்தில்வசிக்கும் இங்கிலீஷ் துரைசானிகள் தினசரி—(உ-ம்பிரிவு.)...	326
ANSWERS TO RIDDLES (SEE DEC. NO) ...	333	புதிர்கள் விடுவிக்கும் வகைகள்	333

கோவிந்தசாமிகதை.

கிராம பாடசாலை உபாத்தியாயர்.

காஞ்சனபுரத்தின் நடுவில் ஒன்றுக்கொன்று எதிரிலிருக்கிற சிவாலயங்கள் இரண்டுண்டென்றும், அவற்றுள் ஒன்று தூண்கள் வரிசையாகவைத்துக் கட்டப்பட்டதென்றும் முன்பே சொன்னோம். இந்த விடத்திலேதான் கிராமபாடசாலை வைக்கப்பட்டிருந்தது. இந்தப் பாடசாலையில் பிராமணர், கணக்கர், செட்டிமார் இவர்கள் வீட்டுப்பிள்ளைகள் படிப்பார்கள். இந்தப் பள்ளிக்கூடத்தில் பாடஞ்சொல்லிக் கொடுப்பவர் பிராமணர்; வர்த்தமானதேசத்தில் பாடஞ் சொல்லுகிறவர்கள் பரம்பரையான உபாத்தியாயர்கள் அவனுடையதகப்பன், பாட்டன், முப்பாட்டன் முதலான எல்லோரும் அந்தப் பள்ளிக்

கூடத்தில் பரம்பரையாய் உபாத்தியாயர்களா யிருந்தவர்களேயாம். பதினென்காம் நூற்றாண்டுமுதற்கொண்டே அந்தக் கிராம பாடசாலை உபாத்தியாயர் வேலையிலிருந்தவர்கள். ஆயினும் அந்த ஊரில் இன்னொரு உபாத்தியாயருமுண்டு. அவருக்கு அத்தனை பிரசித்தியில்லை; அவர் பிராமணஜாதியிற் பிறந்ததன்று; கணக்கர்மரபிலே பிறந்தவர்; ஆனதினால் அவருடைய பள்ளிக்கூடத்திலே படித்த பிள்ளைகளின்தொகை மற்றப் பள்ளிக்கூடத்திலே படித்தவர்களின்தொகையில் மூன்றிலொருபங்குதானுண்டு. எந்தநாளிலும் பிராமண உபாத்தியாயர் பாடசாலையில் அறுபது எழுபது பிள்ளைகளுக்குக் குறைந்திராது; மற்றப் பள்ளிக்கூடத்தில் இருபதுபிள்ளைகளிருந்தாலதிகம். இவ்வளவுக்கும் அந்தப் பிராமண உபாத்தியாயர் மற்றவரைவிடச் சிறந்த உபாத்தியாயருமல்லர்? வர்த்தமான தேசத்தில்வழங்குகின்ற வடமொழி இலக்கணச்சுருக்கத்தின் ஓர் பிரிவுமட்டும் அவருக்குத்தெரியும்; அன்றியும் ஸம்ஸ்கிருத சுலோகங்கள் அநேகம் அவருக்கு மனப்பாடமாய்வரும். அவர்கள் வார்த்தைசொல்லும்பொழுதே அந்தச் சுலோகங்களிற் பலவற்றை இடையிடையே எடுத்து ஆளுவார்; இவ்வளவுக்கிருந்தும் அவர் வங்காளபாஷையை நன்றாய் எழுதவுந்தெரியாமல் பிறர்கண்டு நகைக்கும்படி பெரும்பிழைசெய்வார், இன்னொரு உபாத்தியாயர் அவரைப்போலத் தமக்கு வடமொழியிலே திறமை அதிகமென்று பாசாங்கு செய்துகொள்ளுகிறதில்லையெனினும் அவர் கணிதத்திலே சிறந்த பாண்டித்தியமுடையவரென்பது எல்லோர்க்குந்தெரியும்; அன்றியும்; அவருக்கு ஜமீன்தார்களுக்கு அவசியம் வேண்டிய கணக்கு வழக்குகளும் நன்றாய்த்தெரியும்; பிராமண உபாத்தியாயருக்கு இந்விஷயத்தைப்பற்றி ஒன்றுந் தெரியாது. கணக்க உபாத்தியாயரின் பள்ளிக்கூடத்தில் படிப்பவர்களெல்லாரும் தாழ்ந்தஜாதியிற் பிறந்தவர்களும், ஏழை வீட்டுப்பிள்ளைகளென்றாலும், கணக்கை நன்றாய்க் கற்றுக்கொள்ள வேண்டுமென்றும், ஜமீன்தார்கணக்குகளையெல்லாம் விவரமாகக் கண்டறிந்துகொள்ளவேண்டுமென்ற ஆசையினால் பிராமணர்களுஞ் சிலர் தங்கள் பிள்ளைகளை அந்தப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதுமுண்டு. இந்த இரண்டு காரணத்தால் வரதன்மகனைக் கணக்கு உபாத்தியாயரிடம் அனுப்புவது நலமென்று நினைத்தான்:—முதலாவது பிராமண உபாத்தியாயர் பள்ளிக்கூடத்தில் படிப்பவருள் பெரும்பான்மையோரும் பிரபுக்கள்வீட்டுப் பிள்ளைகளே; வரதனுக்கு அந்தப்பிள்ளைகளோடு தன்மகன் சேர்ந்து படியாமல், தனக்குச் சமான அந்தஸ்துள்ளவர்களா யில்லாவிட்டாலும் கூடியமட்டில் சரியொத்திருந்தாலும் போதுமென்பது. இரண்டாவது தன்மகனுக்கு ஜமீனைச்சேர்ந்த கணக்குவழக்குகளெல்லாம் தெரியவேண்டுமென்பது. ஆதலினால் வரதனும், கோவிந்தசாமியும் நேரே ராமபத்திர உபாத்தியாயருடைய பள்ளிக்கூடத்திற்குச் சென்றார்கள். அவர் அந்தப் பள்ளிக்கூடத்தைத் தமது வீட்டு முற்றத்திலுள்ள பலாமரத்து நிழலில் வைத்திருந்தார். மழைக்காலத்தில்மட்டும் பள்ளிக்கூடத்தைத் தமது வீட்டுத் தாழ்வாரத்திலே வைத்திருப்பார்.

உபாத்தியாயர் தமது பள்ளிக்கூடத்தில் சிலர் கடுதாசியிலும், வேறுசிலர் வாழையிலையிலும், மற்றுஞ்சிலர் பனையோலையிலும் ஆகப் பத்துப் பன்னிரண்டுபேர் பலவாறாக எழுதிக்கொண்டிருப்பதை ஒரு பலகையி லுட்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்த ராமபத்திர உபாத்தியாயர் தம்மண்டை வரதன் வருவதைக்கண்டு வரதப்பா! என்னசெய்தி? சவுக்கியமா வந்தகாரியமென்னவென்றார்.

ஆண்மெறுத்தால் தோட்டியும் கும்பிடான்.

வரதன். ஐயா! என் மகனைப் பார்த்திரா? இவனை உம்மிடத்தில் வைத்திருக்க விரும்புகிறேன்; நீர் இவனை ஒரு ஆளாக்கி விடவேண்டும்.

ராமபத்திர உபாத்தியாயர். ஐயா! நல்லகாரியஞ்செய்தீர்; எழுதப் படிக்கத் தெரியாத நீர் உமது மகனைப் படிக்கவைக்க விரும்புவது நன்றே; "வித்யாரத்னம் மஹாரத்னம்" என்று நீதிசாஸ்திரத்திலிருக்கிறது.

வரதன். ஆம் ஐயா; அது முற்றுஞ்சரியே. எழுதப்படிக்கத்தெரியாதவன் பேதையிற்பேதையேயாம். "எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்" என்று ஔவை சொல்லியிருக்கிறாள். எனக்கு நீட்டோலைவாசிக்கத் தெரியாதாதலால், கண்ணிருந்துங் குருடன்போலிருக்கிறேன்.

ராமபத்திர உபாத்தியாயர். வரதப்பா! சற்றே உட்காரும்; கொஞ்சம் உக்காக் குடித்துவிட்டுப்போகலாம். அடா மதுசூதனா! உக்காக்குடுக்கையில் புகையிலையைப் போட்டுக்கொண்டுவா.

வரதன் வெறுந்தரையில் உட்கார்ந்தான்; கோவிந்தசாமி அவனுக்கருகே நின்றுகொண்டிருந்தான். அங்குள்ள மாணாக்கர்களில் சற்றே கல்வியில் தேர்ந்தவனாகிய மதுசூதனன் தனது ஆசானுக்கு அவர் சொன்னபடி உக்காவும் நெருப்பும் கொண்டுவருவதற்காக வெளியேபோனான். வங்கதேசத்தில் மாத்திரமல்ல ; இந்த இந்துதேச மெங்குமுள்ள மாணாக்கர்கள் உபாத்தியாயரிட்ட வேலையைத் தட்டாமற்செய்வார்கள்; அதிலுங் கிராமங்களிலுள்ளவர்கள் இழிதொழில்களையுஞ் செய்வார்கள்; இவ்வாறு உபாத்தியாயருக்குச் செய்யுந் தொழிலை அவர்கள் நங்கமென்று கருதாமல் தங்களுக்கு உயர்வென்றே எண்ணிச் செய்வது இயல்பு. அந்த உபாத்தியாயர் அங்கிருந்த கோவிந்தசாமியைப்பார்த்து அப்பா குழந்தாய்! நீ பண்டிதனாகவேண்டுமல்லவோ விரும்புகிறாய்; என்னருகே வா என்றார். அவர் இவ்வாறு சொன்னதைக் கேட்டதும் பேதைக் கோவிந்தசாமிக்கு உச்சந்தலைமுதல் உள்ளங்காலளவும் நடுக்கமெடுத்தது. கோவிந்தசாமிக்கு அவனுக்குச் சரிவயதுள்ள சிறுவர்களால் பள்ளிக்கூடத்து உபாத்தியாயர்களெல்லாம் எமனுக்குச் சமானமென்றும், ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் பிள்ளைகளை இரக்கமின்றிப் பிரம்புகொண்டடிப்பார்களென்று கேள்வி. ஆதலினால் அவன் ராமபத்திர உபாத்தியாயரண்டை செல்ல அஞ்சினான்; அவன் தகப்பன் தன்மகனைப்பிடித்து அவரிடந்தள்ள அவர் கோவிந்தசாமி தலையைத் தொட்டுத் தட்டிக்கொடுத்து உற்சாகப்படுத்தி, அப்பா குழந்தாய் நீ நல்லபிள்ளை; உன் உபாத்தியாயரைக்கண்டு ஏனிப்படிப் பயப்படுகிறாயென்றார். அங்கிருந்த மாணாக்கர்களில் சற்றே தேர்ந்தவனொருவனைக் கொண்டு வங்காளபாஷையான நெடுங்கணக்கிலுள்ள முதல் அஞ்செழுத்தைத் தரையிலே யெழுதும்படி சொன்னார். வரதன் தன்கோவிந்தசாமியினுடைய உத்தரீயத்தில் முடிந்திருந்த மாக்கல்லையெடுத்து அவன் கையிற்கொடுக்க, அந்த உபாத்தியாயர் அவன் கையைப்பிடித்துக்கொண்டே தரையில் எழுதிவைத்திருந்த ஐந்தெழுத்துகளின்மேலே எழுதுவித்தார். இதற்குள்ளே மதுசூதனன் குப்குப்பென்று புகைகிளம்பிப் புகையிலையின் மணம் வீசிக்கொண்டிருந்த உக்காவை யெடுத்துக்கொண்டுவந்து உபாத்தியாயர்கையில் கொடுத்தான். வரதனும், ராமபத்திர உபாத்தியாயரும் வேறுவேறு சாதிகள். ஆதலால் இருவரும் ஒரே உக்காக்குடுக்கையில்குடிப்பதுகூடாது. ஆதலினால்ராமபத்திர உபாத்

ஆண்டைமேற்கோபம் கடாவின்மேல் ஆற்றினன்.

தியாயர் புகையிலைபோட்டுப் பற்றவைத்தி
ருந்த ஒரு மண் சுங்கானையெடுத்து வரதன்
கையிலே கொடுக்க, அவன் அதன் அடி
யை இரண்டுகையாலும் பிடித்து வாங்கிக்
கொண்டு தன் வலதுகையின் பெருவிரலா
லும் சுட்டுவிரலாலும் குழித்துப் புகைக்
குடித்துக்கொண்டிருந்து மூன்றுநிமிஷமா
னதும் அந்தச்சுங்கானை உபாத்தியாயர்
கையிற்கொடுக்க அவர் அதிலிருந்த மிச்ச
த்தை உரிசையோடு ஆனந்தமாய்க் குடித்து
க்கொண்டிருந்தார்.

காஞ்சனபுரத்தில் கொடியவராகிய அந்த
உபாத்தியாயர் இவ்வாறு உக்காக்குடித்
துக்கொண்டிருக்கையில் ஒருவாறு தூக்கக்
கலக்கமாயிருந்தார்; புகையிலைக்குத் தூக்
கத்தை உண்டாக்குங் குணமுண்டென்று
சொல்லுகிறார்கள், ராமபத்திர உபாத்தி
யாயரின் தன்மையை இப்படிப்பட்டதெ
ன்று சொல்லுவது எளிதன்று; அதிலும்
அவருக்கு உக்கிரகோபம் வந்துவிட்டால்
இன்னும் அதிகவருத்தம். கோபம்வந்து
விட்டால் உடம்பெல்லாம் நடுக்கமெடுக்கும்
அந்தவேளையில் அவர் தமது கையிலுள்ள
பிரம்பினால் பளிச்சுப்பளிச்சென்று அந்தப்
பேதைமாணாக்கர்களின் முதுகுகளில் மின்
சாரஞ்செல்லுவதுபோல ஓங்கினகைசோ
ராமல் அடித்துக்கொண்டேயிருப்பார். அவ
ருக்கு ஒற்றைக்கால் சற்றே ஊனமாயிருந்
ததினாலும், கால் நோயில்லாமையினா
லும் அவர் நொண்டியென்று நீங்கள் அறி
ந்துகொள்ளலாம்; அவர்பக்கத்தில் அக்குட்
கோலொன்று வைக்கப்பட்டிருந்ததனால்
அவர் நொண்டியென்று காட்ட அதுவே
போதும். உண்மையில் அவர் கொஞ்ச
மான நொண்டியல்ல; அவர் தமது வீட்டிற்
குள்ளிருந்துகொண்டு ஒரு அறையிலிரு
ந்து மற்றொரு அறைக்குப் போகவேண்டு
மானால் அக்குளில் கவைத்தண்டத்தை
வைத்துக்கொண்டு போவதுகூட வருத்த
மாயிருக்கும், இதற்கே இத்தனை வருத்
தப்படவேண்டியிருந்ததனால், ஆறுமாதத்
துக்கொருமுறைகூட வீதியிலேபோவது
அரிதாகும். இவ்வாறு அவருக்குக் கால்
ஊனமாயிருந்ததனால் அவரை எப்பொழு
தும் நொண்டி உபாத்தியாயரென்று சொ
ல்லுவார்கள். இப்படிச் சொன்னால்தான்
அந்த ஊரிலுள்ள பிராமண உபாத்தியாய
ருக்கும் இவருக்கும் பேதந்தெரியும். நொ
ண்டி உபாத்தியாயர் ஒரு அறையினின்று
இன்னொரு அறைக்குப்போக வேண்டுமெ
ன்றால் அவர்மாணாக்கர் அவருக்குத் துணை
நின்று உதவுவார்கள். அவர் எந்நேரமும்
அவர்களைப் பிரம்புகொண்டு அடித்துக்
கொண்டிருப்பாராதலால் ஒவ்வோர்சமயங்
களில் அவர்கள் அதற்குப் பழிக்குப்பழி
யாக அவரைக் கீழேவிழும்படி செய்வது
முண்டு. அவருக்கு வயது நாற்பது; கொ
ஞ்சங் கறுத்திருப்பார்; தேகம் மெலிந்திருக்
கும்; கருடமூக்கு; நெற்றி சற்றே உயர்ந்
திருக்கும்; எந்நேரமும் உட்கார்ந்தவண்ண
மாயிருப்பார். இவ்வாறு அவர் அங்கவீ
னராயிருந்ததுமன்றி, பேசும்போதெல்லாம்
நொணநொணவென்று மூக்கையன்போ
லே பேசுவாராதலால் அது அவருக்கு அடி
க்கடி மனக்குறைவை அதிகமாக உண்டா
க்கிற்று. அவர் வரதனோடு பேசும்போது
எல்லாம் நொணநொண சப்தமாயிரு
ந்தது. சிறுவர்கள் அவர் பேசும்பேச்சை
இராவில்கேட்டால் பேயென்றே அஞ்சுவ
ர்கள். ஏனெனில் வங்கநாட்டுப்பேய்க
மூக்காலேதான்பேசும்.

இவ்வாறு ராமபத்திர உபாத்தியாய
ருக்குப் பழுதாய் முடமாயிருந்ததுமன்
றிப் பேய்போல மூக்காலே பேசினாரென்
றாலும் அவரிடத்தில் இயல்பாகவே சிற
ந்த யோக்கியதையுண்டு. அந்த ஊரில்
அவர்தாம் கணிதசாஸ்திரத்தில் தேர்ந்த
வர். அவர் கணிதத்தில் புலி; பீஜகணித

ஆண்மக்கள் ஆயிரம் ஒத்திருப்பார்கள், அக்காளும் தங்கையும் ஒத்திரார்கள்.

மும் ஒருவாறுதெரியும்., அவரினும் கணி
தத்தில் சிறந்தவனென்று அவரை நிந்தித்
துப்பேசினவன் அந்த ஊர் ஜோஸ்யராகிய
தூமகேது ஒருவனே. அவ்விருவருக்குமு
ள்ள வித்தியாச மென்னவெனில், தூமகே
து ஆகாயத்திலுள்ள கிரகங்களின் கதியை
ப்பற்றிப்பேசுவார்; ராமபத்திர உபாத்தியா
யர் பூமியிலுள்ளவைகளைப்பற்றிப் பேசு
வார். அந்த உபாத்தியாயருக்கு கணிதந்
தெரிவதோடு தர்க்கமும்வரும். கௌதம
சூத்திரத்தைப் பாடம்பண்ணித் தர்க்கசா
ஸ்திரத்தை நன்றாய்க் கல்லாதிருப்பினும்
முன்னுக்குப்பின் விரோதமில்லாமல் நன்
றாய் வாதிப்பார். வர்த்தமானநாட்டிலுள்ள
கிறிஸ்துவபாதிரியார் காஞ்சனபுரத்திற்கு
வரும்போதெல்லாம் அந்த நொண்டிவாத்
தியாரிடம்வந்து பேசாமற்போகார். அந்த
நொண்டிவாத்தியார் பலமாக வாதிப்பதனா
ல் அந்த ஊராரெல்லாரும் எப்பொழுதும்
அந்தப்பாதிரியார் தங்கள் உபாத்தியாயரா
ல் வெற்றிகொள்ளப்பட்டாரென்றே நினை
ப்பார்கள். "ஆலையில்லா ஊருக்கு இலுப்
பைப்பூச்சர்க்கரை" என்றவண்ணம் அந்த
ஊரிலே அவர்தாம் பெரியபண்டிதர். அவர்
தர்க்கசாஸ்திரத்தில் மகா நிபுணராதலால்
அதில் அவருக்குத் தெரியாதவிஷய மொ
ன்றுமில்லையென்றும், எந்தவிஷயத்தையும்
வெகு நுட்பமாய் ஆராய்ந்துபார்ப்பாரெ
ன்றும், பூர்வபக்ஷம் சித்தாந்தம் இரண்டி
லும் வாதிப்பாரென்றும், தாமெடுத்தகக்ஷி
யை உண்மையென்று வாதித்துச் சாதிப்
பாரென்றும், மீண்டும் அதேகக்ஷியைப்
பொய்யென்று மெய்ப்பிப்பாரென்றும் அவ்
வூரார் சொல்லுவார்கள். அவருக்கு நல்ல
போதனாசக்தியுண்டு; வெகு கண்டிப்பான
வர். அந்த உபாத்தியாயர்பக்கத்தில் எந்
நேரமும் அக்குட் கோலிருப்பதுமன்றி,
மெல்லியதும், நீண்டதுமான மூங்கிற் கோ
லொன்றுமிருக்கும். அதனால் அவர் ஓயா
மல் அந்தப் பிள்ளைகளின் கையிலேயன்றி,
தலை, முதுகு எங்கேகண்டாலும் அடித்த
வண்ணமாயிருப்பார். சிறிதுசமயங்களில்
அவர் வெறிகொண்டு விரல்நடுமுட்டி, முழங்
கால்சிப்பி, கணுக்கால்முதலிய விடங்களில்
நன்றாய் நோவும்படி தந்திரமாய்ப் பார்த்
துப் புடைப்பார். ஆதலினால் நீங்கள் பள்
ளிக்கூடமிருக்கையில் அந்த வழியாய்ப்
போனால் அதற்குள்ளே பிள்ளைகளை மடக்
குமடக்கென்று மூங்கிற்கோலால் அடித்
துக்கொண்டிருக்கும் ஓசைகேட்டவண்ண
மாயிருக்கும். அவர் இன்னும் எத்தனையோ
விதமாகவுந்தண்டிப்பார். அவற்றுள் நவ
நீதகோபாலனென்பது ஒன்று; கிருஷ்ணன்
வெண்ணையை வைத்துக்கொண்டிருப்பது
போலச்செய்வதனால் இதற்கு இவ்வாறு
பெயர்வழங்குகின்றது; ஒரு சிறுவனை ஒற்
றைக்காலால் முழந்தாளிட்டுக்கொண்டு இர
ண்டுகைகளையும் நீட்டிக்கொண்டு கருடவா
கனம்போல் உட்காரவைத்து அவன் கைக
ளிரண்டிலும் கைக்கொரு பெருஞ்செங்க
ல்லைவைத்துத் தூக்கும்படி செய்வார். அந்
தப்பையன் அந்தக் கல்லுகளைக் கீழே நழு
வவிடாமல் வெகுநேரமளவும் அப்படியே
யிருக்கவேண்டும். அந்தக்கல்லுகளில் ஏதே
னுமொன்றைக் கீழே நழுவவிட்டால் அந்த
மூங்கிற்கோலால் அவன் தலையிலடிப்பார்.
அவர்செய்யுந் தண்டனையில் இங்கொன்
றைமட்டுஞ் சொல்லுகிறோம். குற்றஞ்செ
ய்த சிறுவனுடைய கைகளிரண்டையுஞ்
சேர்த்து விலங்கிட்டு, அந்தப் பள்ளிக்கூ
டத்தில் வைக்கப்பட்டிருந்த பலாமரத்தடி
யில் அந்த மரத்தோடு அவன் கால்களையுங்
கயிற்றால் பிணைத்துக்கட்டிவிட்டு, காஞ்சொ
றியைக்கொண்டுவந்து அவனுடைய உடம்
பெல்லாம் தேற்றுவார். காஞ்சொறியிலை
உடம்பிலேபட்டால் இன்னவாறு எரியு
மென்பது குளவி கருவண்டு இவைக
ளால் கொட்டப்பட்டவர்களுக்குத்தான்
கொஞ்சந்தெரியும். இவ்வாறு காஞ்சொறி
யிலைபட்டு உடம்பெல்லாம் தேள் கொட்டி

ஆதாயமில்லாதசெட்டி ஆற்றைக்கட்டி இறைப்பானோ?

னுற்போலச்சங்கடப்பட்டுக்கொண்டு, அ
தைவிட்டு ஓடிப்போகமாட்டாமல் கயிற்றி
னால் கையுங்காலுங் கட்டுண்டு, எரிக்தவிட
த்தைச் சற்றே துடைத்துக்கொள்ளவும்
வழியில்லாமல் ஓவென்றுகதறுவான். இவ்
விதந்தண்டிப்பதெல்லாம் அந்த கொண்டி
உபாத்தியாயர் புதிதாகச்செய்த தொன்று
மில்லை; இவ்வாறு தண்டிப்பது வங்க
நாட்டு உபாத்தியாயர்களுக்குள்ளே வெ
குகாலந்தொட்டுப் பரம்பரையாய் நடந்து
வருவதேயாம்.

அந்த உபாத்தியாயரின் வரும்படியை
மட்டுஞ் சற்றேசொல்லிவிட்டு இந்த அத்
தியாயத்தை இவ்வளவோடு முடித்துவிடு
கிறோம். ஒவ்வொரு சிறுவனும் தலைக்கு
மாதமொன்றுக்கு ஒரு அணா உபாத்தியா
யருக்குச் சம்பளங்கொடுப்பான். அந்தப்
பள்ளிக்கூடத்திலே படிப்பவர்கள் முப்ப
து முப்பத்திரண்டுபேர்களுக் கதிகமில்லை
யாதலால் சம்பளவரும்படியெல்லாம் மாத
மொன்றுக்கு இரண்டுருபாய்க்கு மேலிரா
து. மாதச்சம்பளமேயன்றி, பிள்ளை ஒவ்
வொருநாளும் வீட்டுக்குப்போய்ச் சாப்
பிட்டுவிட்டு மத்தியானம் பள்ளிக்கூடத்
துக்குத் திரும்பிவரும்போது தலைத்தலை
க்கொரு வெற்றிலை, ஒருபாக்கு, ஒரு
சிறு புகையிலைத்துண்டு இவற்றுள் ஏதேனு
மொன்றைக் கொண்டுவந்து கொடுப்பது
வழக்கம். இதனோடு ஒவ்வொரு மாணாக்
கனும் மாதமொருமுறை சிட்டாத அரிசி,
பருப்பு, அதற்குவேண்டிய காய்கறிபதார்
த்தங்கள், விறகு, கடுகெண்ணெய், உப்பு,
வெண்ணெய் முதலியவற்றையெல்லாம்
ஒருவேளைச் சாப்பாட்டுக்குக் காணும்படி
கொண்டுவந்து கொடுப்பார்கள். பள்ளிக்
கூடத்துப்பிள்ளைகளெல்லாம் காலையில்வ
ந்துபடித்துவிட்டு, பதினொருமணிக்குவீட்
டுக்குச் சாப்பிடப்போய், மறுபடியும் மூன்
றுமணிக்குவந்து விளக்குவைக்குமளவுமி
ருந்து வாசித்துவிட்டுப்போவது வழக்கம்.
அந்தப் பிள்ளைகளாலே கிடைக்கும் மாதச்
சம்பளம் இரண்டுருபாயும் அவர்கள்கொ
டுக்கும் மேல்வரும்படியுஞ்சேர்ந்து ராமப
த்திர உபாத்தியாயர் அவர் மனைவி இரண்
டுகுழந்தைகள் ஆகிய இத்தனைபேருக்கும்
சாப்பாட்டுக்குக்கூடப் போதாமலிருந்தது.
காஞ்சனபுரத்தில் ராமபத்திர உபாத்தியா
யருக்கு மூன்று ஏக்கர நிலம் சொந்தத்தி
லுண்டு; அவரால் அந்த நிலத்தை உழுது
சாகுபடிசெய்யக் கூடாமையால் பக்கத்து
க்குடியானவன் ஒருவனைத் தம்மோடு கூட்
டாகவைத்துக்கொண்டு அந்தப்பூமியில் த
மக்குக் கிடைப்பதையுங்கொண்டு கால
க்ஷேபஞ்செய்துவந்தார்.

இந்த மகோபாத்தியாயரிடம் கோவிந்
தசாமி படித்துக்கொண்டிருந்தான். கோ
விந்தசாமி கல்வியில் எவ்வாறு தேர்ந்தா
னென்பதையும், பள்ளியில் எவ்வளவுகால
மிருந்தானென்பதையும்பற்றிப் பின்னிட்டு
ஒரு அத்தியாயத்திலே சொல்லுவோம்,
இதற்கிடையில் வேறு சிலவிஷயங்களைப்
பற்றி அறிந்துகொள்ளவேண்டியது அவ
சியம்.

———o———

இந்துதேசத்தில்வசிக்கும்

இங்கிலீஷ்துரைசானிகள் தினசரி.

(துரைசானி ஒருவர் எழுதியது.)

இத்தேசத்திலிருக்கும் இங்கிலீஷ்துரை
சானிமார் எப்படிப் பொழுதுபோக்குகிறா
ர்கள் என்பதைப்பற்றிச் சுருக்கி எழுதிக்
கொடுப்பதாய்ச் சொல்லியிருந்தேன். அ
வர்கள் வீட்டுக்கே ஒருவர்போய் அவ்விட
த்து நடவடிக்கைகளைக் கண்ணாரக்கண்டா
ற்போலப் பரிஷ்காரமாய்த்தெரியும்படி வர்
ணிக்கவேண்டுமென்று எனக்கு ஆசையு
ண்டு. ஆனால் என்வர்ணனை அழகாயில்லாவி
ட்டால் அந்தக்குற்றம் சாதுரியமாய் எழு

ஆனைக்காரனுக்குச் சாதனம்வேண்டுமோ?

தி வழக்கப்படாத என்னைச்சேர்ந்ததென்
று நிச்சயிக்கவேண்டுமேயல்லாமல், இங்கி
லீஷ்காரருடைய வீடுகளில் ஏதாவது கு
றையுண்டென்று எண்ணலாகாது. ஏனெ
ன்றால் ஒருவர்பேரில் ஒருவர் அன்பாயிரு
க்கிறவிடத்தில் சுகமில்லாம லிருக்குமா?
அதிலும் குழந்தைகளென்னும் பெரும்பா
க்கியமும் கூடியிருக்குமிடத்தில் சந்தோ
ஷமில்லாமற் போகுமா? தானிருக்கும் வீ
டே வெகு இன்பமானவிடம் என்று ஒரு
பழமொழி இங்கிலீஷ்ஜாதியாருக்குள் வழ
ங்கிவருகிறது. இங்கிலீஷ்ஜனங்கள் அமெ
ரிக்காகண்டத்துக்குக் குடிபோய் வெகு
உஷ்ணப்பிரதேசங்களில் ஆற்றோரமாய்க்
கட்டிய தனிக் கூரைவீடுகளில் வசிக்கவே
ண்டியிருந்தால்தானென்ன, ஆஸ்திரேலியா
தேசத்திற்குப்போய்ப் புதர்களின்நடுவே
வீடு கட்டிக்கொண்டிருந்தால்தானென்ன,
எங்கிருந்தாலும் அந்தப் பழமொழியின்
படியே இங்கிலாந்து தேசத்தி லிருந்தாற்
போலவே அவர்கள் குடும்பத்தில் சந்தோ
ஷமும் நாகரீகமு மில்லாமற்போவதில்லை.
வீடென்றால் சமஸ்தவிதமான சந்தோஷங்க
ளுக்கும் பிறப்பிடமாயும், தாய்தந்தைகளை
யுமிழந்த குழந்தைகள் எல்லாரும் பெரிய
வர்களாகி வெவ்வேறிடத்துக்குப் போன
பிறகும் தங்கள் சிறுவயதை நினைத்துக்
கொண்டால் ஆனந்தத்தை யுண்டாக்குவ
தாயுமிருக்கும்.

என் பிரியமுள்ள இந்துதேசத்துச் சகோ
தரிகளே இங்கிலீஷ் ஸ்திரீகளாகிய நாங்க
ளும் அநேகவிஷயங்களில் உங்களைப்போ
ன்றவர்கள்தான். பெண்ஜன்மமென்றெடு
த்த எவருக்கும் குழந்தைகளைப் பிரியமாய்ப்
போஷிக்கவேண்டுமென்ற ஆசையும் அப்
படிச் செய்வதிலேயே ஒரு சந்தோஷமும்
இல்லாமற் போவதில்லை. குழந்தைகள்
பேரில் அன்பாயிருப்பதுபோலவே தங்க
ளைச்சேர்ந்த எல்லாருக்கும் கஷ்டத்தை
நீக்கிச் சுகத்தையுண்டாக்குவதே தங்கள்
வேலையென்றெண்ணி உழைப்பது பெண்
களுக்குக் கொண்டாட்டம். இப்படிப்
பிராணிகள்பேரில் வாஞ்சையில்லாத பெ
ண்பிறப்பு அரிது. இங்கிலீஷ் ஸ்திரீகளாகிய
நாங்கள் தேக அப்பியாசத்திற்காகவும் வி
நோதத்திற்காகவும் வீட்டைவிட்டு வெளி
யேபோய் உலாத்துவதிலும், சவாரிசெய்
வதிலும், விளையாடுவதிலும், ஒருவரோ
டொருவர் பேசிக்கொண்டிருப்பதிலும் உ
ங்களைவிட அதிகமாய்க் காலத்தைப்போக்
குகிறோமென்று நினைப்பீர்களல்லவா ?
இது உண்மைதான். ஆனால் தேகப்பயி
ற்சியும் விநோதமும் வீண்விஷயங்களென்
றுசொல்லலாகாது. சரீரம் கஷ்டப்படாம
லிருந்தால் தேகசௌக்கியமிராது. காலத்
தையெல்லாம் வேடிக்கையிலேயே கழிப்
பது குற்றமென்றாலும் மிதமான விநோத
மிருந்தால்மாத்திரம் மனது உச்சாகமாயி
ருக்கும். இப்படி நாங்கள் காலத்தைப்
போக்கினாலும் எங்களுக்கு வீட்டில் ஒரு
வேலையு மில்லையென்று நினைக்கவேண்டாம்.
உங்களைப்போலவே எங்களுக்கும் சமுசார
வேலைகள் உண்டு. இதுவெல்லாம் நான்
சொல்லப்போவதால் தெரியவரும். இந்
தேசத்தில் எங்கள்வீட்டு நடவடிக்கைகளை
விவரிக்கிறேனென்று சொன்னேனல்லவா?
எங்கள்வீட்டில் இளங்குழந்தைக ளிருப்
பார்களேயல்லாமல் பெரியவர்களிருப்பதி
ல்லை. ஏனென்பீர்களோ? இத்தேசத்தி
லிருக்கும் இங்கிலீஷ் ஜாதிக்கெல்லாம்
ஒரு கொடுமையுண்டு. குழந்தைகள் சற்
றுப் பெரியவர்களானவுடன் அவர்கள் இ
ந்த உஷ்ணதேசத்திலிருப்பது சரியல்ல.
ஆகையால் அவர்களை இங்கிலாந்துக்கு அ
னுப்பவேண்டியிருக்கிறது. தாயானவள்
ஒண்டியாய் புருஷனைவிட்டுக் குழந்தைக
ளோடு சீர்மைக்குப்போகவேண்டும். இல்
லாவிட்டால் குழந்தைகளைவிட்டுப் பிரி
திருக்கவேண்டும். புருஷனைவிட்டுப்பிரிய

ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு.

முன்பின் பார்ப்பாளாகில் வளர்ப்பதற்குத் தாயில்லாததால் குழந்தைகளை இங்கிலாந்தில் பந்துக்களிடத்தில் அனுப்பவேண்டும். அல்லது யாரிடத்திலாவது விட்டுப் பார்த்துக்கொள்ளுவதற்குச் சம்பளம்கொடுக்க வேண்டும். இவர்கள் குழந்தைகளிடத்தில் பிரியமாயிருக்கலாம். ஆனால் தாய்தந்தைகளுக்கிருக்கும் அன்பு இவர்களுக்கிருக்குமா? குழந்தைகளைவிட்டுப் பிரிந்திருக்கும் துக்கம் இந்ததேசத்து ஸ்திரீகளாகிய உங்களுக்கில்லை. குழந்தைகள் உங்களைவிட்டுப் பிரியாமலிருப்பதால் நீங்கள் எப்படி அவர்களை வளர்க்கிறீர்களோ அந்தவழியாகவே வருவார்கள். உங்களுக்குச் சங்கதிகள் தெரியத்தெரிய அவர்களுக்குக் கற்பிக்கலாம். வரவர உங்களுக்கு அறிவும் விவேகமும் முதிரும்போது பெரியவர்களாகிற குழந்தைகளுக்கும் உங்களிடத்தில் கௌரவம் அதிகமாகும். இத்தேசத்திலிருக்கும் இங்கிலிஷ்காரருக்கிருக்கும் குற்றங்கள் அநேகமாய்க் குழந்தைகள் தாய்தந்தைகளை விட்டிருப்பதனால் உண்டானவைகளேயாம். குழந்தைகளைக் கிரமமான வழியில் வளர்க்கவேண்டிய எண்ணமிருந்தால் தாய்தந்தைகளுடைய வழக்கங்களும் ஒழுங்குபடும். அப்படியில்லாதிருப்பதால் சிலர் விநோதத்தையும் வீண்பொழுதுபோக்கவிரும்புகிறார்கள். இங்கிலாந்தில் இப்படியில்லை. வீட்டில் குழந்தைகளைப்பார்க்க வேண்டி நேரிடுவதால் சிறுவயதாயிருக்கும்போதே வீண்விநோதங்களைவிட்டுப் பிரயோஜனமான சமுசாரவிஷயங்களைக் கவனிக்கும் வழக்கம் வந்துவிடுகின்றது. இது நிற்கட்டும். பிரதிதினம் இங்கிலிஷ்துரைசானிகள் எப்படிப் பொழுதுபோக்குகிறார்கள் என்பதைச் சொல்லுகிறேனென்றேனல்லவா? அதை யாரம்பித்துச்சொல்லுகிறேன்.

இது உஷ்ணதேசமாகையால் சூரியோதயத்தில் குளிரில்லை. சூரியோதயத்துக்கெல்லாம் ஒரு வேலைக்காரன் மணியடிப்பான். அப்போது எல்லாரும் சித்தமாயிருப்பார்கள். உடனே ஒவ்வொரு படுக்கையறைக்கும் காபி அல்லது தேத்தண்ணீர் வரும். அதைச் சாப்பிட்டதும் தாமதமில்லாமல் உடுப்புத் தரித்துக்கொள்ளுவோம்.

குழந்தைகள் தாயார் அறைக்கு ஓடிவந்து காலை வந்தனம்செய்து காலைஜெபம் செய்வார்கள். அதன்பின் சுத்தமான காற்றை உட்கொள்ள எல்லாரும் வீட்டைவிட்டு வெளியேபோவோம். தகப்பனும்தாயும் குதிரையேறிப்போவதுமுண்டு. அப்போது ஆயாள் என்னும் துரைசானி வேலைக்காரியாவது, பால்கொடுக்கும் தாதியாவது; குழந்தைகளைப் பாராட்டிப் படிப்பித்துப் பார்த்துக்கொள்ள வைத்திருக்கும் ஸ்திரீயாவது குழந்தைகளோடு வெளியே போவாள். சிலசமயங்களில் குழந்தைகளும் குதிரையேறிப்போவதுண்டு. இங்கிலீஷ்காரருக்குள் ஆண்பெண் குழந்தைகள் எல்லாரும் சிறுவயதிலேயே குதிரையேறப் பழகுவார்கள். இல்லாவிட்டால் சவாரிசெய்யத் தைரியமும், குதிரையின் பேரில் செவ்வையாய் உட்காரும் விதமும், லகானைச் சரியாய்ப் பிடிக்கிறவகையும் பெரியவர்களானபிறகு வரமாட்டாது.

காலைநேரத்தில் வெளியேபோகாமல் வீட்டைச்சேர்ந்த தோட்டத்தில் லான் தெனிஸ் (Lawn tennis) பேட்மிந்தன் (Badminton) என்னும் பந்தாட்டம் ஆடுவதுமுண்டு. ஆடத்தகுந்த வயதுள்ளவர்களெல்லாம் ஆடுவார்கள். சிநேகிதர்களும் வருவார்கள். வந்து ஆட்டத்தில் சேருவதுண்டு; இல்லாவிட்டால் ஆட்டத்தைப்பார்த்துக்கொண்டும் பேசிக்கொண்டுமிருந்து விட்டு தேத்தண்ணீர் சாப்பிட்டுப்போவார்கள். சிலவேளைகளில் தங்கள்வீட்டுத்தோட்டத்திலேயே பந்தாடாமல் அண்டைவீட்டுக்கு எல்லாரும்போய் ஆடுவார்கள். இப்படிக் காலைநேரத்தில் மித்திரர்கள் ஓரிடத்தில் கூடுவதனால் அன்னியோன்னியமும் மனதுக்குச் சந்தோஷமும் உண்டாகும். இவ்விதமாய் இத்தேசத்திலிருக்கும் இங்கிலீஷ்காரர்கள் ஒரு பெரியவிருக்ஷத்தின்கீழ் தேமேஜைபோட்டுக்கொண்டு சுற்றி யுட்கார்ந்து மகிழ்ந்திருப்பது பார்க்க வெகு அழகாயிருக்கும். இங்கிலீஷ்காரர்கள் சீர்மைக்குப்போகும்போது இனிமேல் இப்படியிருக்க முடியாதேயென்று துக்கப்படுவார்கள். ஏனென்றால் இங்கிலாந்தில் குளிர் அதிகமாகையால் காலையில் ஜனங்கள் வெளியேவருவது அரிது. ஒன்பது பத்துமணிக்குச் சாப்பிடும்வேளையில் காண்பதேயல்லாமல் அதற்குமுன் ஒருவரையொருவர்போய்ப் பார்ப்பதில்லை.

நான் வர்ணிக்கிற துரைசானி பள்ளிக்கூடங்களிலும் தர்மவிஷயங்களிலும் அபிமானமுடையவளாயிருந்தாள். விசாரணைச் சபைகளிற் சேர்ந்திருப்பாளாகையால் சபைகூடுமிடத்திற்குப் போகவேண்டியிருக்கும். அல்லது பள்ளிக்கூடம்முதலிய இடங்களுக்குப்போய்ச் சரியாய்க் கல்விபயிற்றுவதையும் சுத்தி ஒழுங்கும் தவறுதிருப்பதையும் பார்த்துவந்து சபையாருக்குத் தெரிவிக்கவேணடியிருக்கும். இந்த வேலையெல்லாம் காலை ஏழுமணிமுதல் ஒன்பதுமணிக்குள்ளாகவாவது சாயங்காலமாவது செய்யத்தக்கவை.

வீட்டுவிஷயமாயல்லாமல் வேறு எந்தெந்தவிதமாய்ப் பெண்கள் வேலைசெய்வது தகுதியானதென்பதைப்பற்றி இன்னம் இங்கிலிஷ்காரர்கள் பற்பலவிதமாய் அபிப்பிராயப்படுகிறார்கள். இது எப்படியிருந்தபோதிலும் ஆண்மக்கள் பெண்சாதிபிள்ளைகளுடைய சாப்பாட்டுக்கு வேண்டியவழி தேடவாவது துரைத்தன விஷயங்களில் வேலைசெய்யவாவது வீட்டைவிட்டு வெளியே போகவேண்டியதென்பதும் வீட்டுக்காரியங்களைப் பார்த்துக்கொள்ளவேண்டியது பெண்களுடைய கடமையென்பதும் நிச்சயமான சங்கதிகள். இதைப்பற்றி யார் மனதிலும் சந்தேகமிராது. பலபேர் குழந்தைகளிருந்தாலாவது, குழந்தைகள் துர்ப்பலமானவர்களாயிருந்தாலாவது வீட்டையும் குழந்தைகளையும் பார்த்துக்கொள்ளுவதற்கே சரியாயிருக்குமாதலால் தாய்க்கு வெளியேபோக ஒழிவது பிரயாசை. ஆனால் தாயானவளுக்கு திடமுள்ள சரீரமும் பரோபகாரமுள்ள மனதுமிருந்தால் வீட்டுவேலைகளே போதுமென் றிருப்பாளா? பிறர்கஷ்டத்தைத்தீர்க்க முயலுவதே பெண்ணின் சுவபாவம். அதிலும் படித்தவளுக்கு அடையாளம் இந்த தர்மகுணம் அதிகப்பட்டிருப்பதேயாம். அப்படியில்லாமல் இயற்கையாயுள்ள தயாளம் குறைக்கும் கல்வியைக் கல்வியென்று சொல்லத்தகுமா? ஆகையால் கற்றறிந்த பெண்ணானவள் ஒழிந்தபோது சிறுவர்கள், கல்லாதவர்கள், ஏழைகள், ரோகிகள் முதலானவர்களுக்குத் தன்னாலியன்ற சகாயம்செய்துவருவாள்.

இங்கிலிஷ்ஜாதியிலே ஆண்மக்களைவிடப் பெண்களின்தொகை அதிகம். ஆகவே சிலபெண்கள் கலியாணமில்லாம லிருக்க வேண்டி நேரிடுகிறது. சிலருக்குக் கலியாணம்செய்துகொள்ள இஷ்டமில்லை. இப்படிக் கலியாணமில்லாத துரைசானிகள் பிறருக்காகப் பாடுபடுவதிலேயே தங்கள் காலத்தையெல்லாம் கழிப்பார்கள். இதனால் அவர்களுக்கு எங்கும் வெகு கௌரவமுண்டு. பிளாரென்ஸ் நைதிங்கேல் (Florence Nightingale) மிஸ்கார்பென்டர் (Miss Carpenter) என்னும் துரைசானிகளைப்பற்றியாவது, சிலநாளுக்குமுன் இந்த

தேசத்துக்குவந்து நம்மையெல்லாம் சந்தோஷப்படுத்திவிட்டுப் போன மிஸ்மேனிங் (Miss Manning) என்னும் அநாசாரியைப்பற்றியாவது உங்களுக்குச் சொல்லவேண்டுமா? இவர்களைப்போலவே இன்னம் சிலகாலில் இந்துவிதந்துக்களும் குழந்தைகள் ஏழைகள் ரோகிகள் முதலியவர்களுக்கு உபசாரம்செய்யும் தெய்வங்களாவார்களென்று நம்புகிறேன்.

இந்தவிஷயமிருக்கட்டும். நமது அரசானிக்குக் காலைநேரத்தில் வெளியேபோகவேண்டிய வேலையாதும் இல்லையென்று வைத்துக்கொள்ளுவோம். வீட்டைச்சேர்ந்த தோட்டத்தில் தோட்டக்காரர்கள் வேலைசெய்வதைப்பார்த்துக்கொள்ளுவாள். ஒருவேளை லாயத்துக்கும்போய் குதிரைகளையும் பார்ப்பாள். ஆனால் குதிரைகளின்மேல் கவனம்வைக்கவேண்டியது ஆண்பிள்ளையுடைய கடமையேயல்லாமல் பெண்ணின்வேலையல்ல. இங்கிலீஷ்காரர்களில் அநேகர் குதிரைகளின்பேரில் வெகு பிரியமாயிருப்பார்கள். குதிரைகளைச்சிராட்டுவதில் அரபியர்கள் பேர்போனவர்கள். இங்கிலீஷ்காரராகிய நாங்கள் அரபியர்களுக்கு இரண்டாவதாயிருப்போம். சமையல்வீட்டையும் அடிக்கடிப்போய்ப் பார்த்துக்கொள்ளவேண்டியது அவசியம். காலைநேரமாகையால் உஷ்ணமாயில்லாமல் வெளியில் கட்டியிருக்கிற சமையல்வீட்டுக்குப் பலதரம்போய்ப்பார்த்துக்கொள்ள அனுகூலமாயிருக்கும். எல்லாரும் வெளியேபோயிருப்பதால் வேலைக்காரர்கள் வீட்டையெல்லாம் பெருக்கி சுத்திசெய்து படுக்கையறைகள்முதலிய எல்லாவிடங்களையும் ஒழுங்காக்குவார்கள். எல்லாரும் திரும்பிவந்து ஸ்நானம்செய்து உடுத்திக்கொள்ளுவார்களாகையால் அவர்கள் வருவதற்குள் ஸ்நானத்துக்கு வேண்டியதெல்லாம் சித்தமாயிருக்கும்.

வீட்டுக்குத்திரும்பிவரும்போது கடிதங்கள் வந்திருக்கும். விருந்துமுதலியவற்றிற்கு வரவேண்டுமென்றெழுதிய சீட்டுகளுக்குப்பதில் உடனே எழுதவேண்டும். தருமவிஷயமாகவும் வேறுகாரியத்தைப்பற்றியாவது சபைகூடும் விளம்பரங்களிருந்தால் மேஜையின்மேல் அதற்கென்றிருக்கும் தட்டில் ஞாபகத்துக்காக வைக்கவேண்டும். கடிதங்களை வாசித்துப்பார்த்துவிட்டு பதிலெழுதச் சாவகாசப்படுகிறவரைக்கும் பத்திரமாயிருக்கும்படி ஓரிடத்தில் வைக்கவேண்டியது. இத்தனைகடிதங்கள் ஏனென்றால் இத்தேசத்திலிருக்கும் இங்கிலீஷ்காரர்கள் தாய்தந்தை சகோதரர் முதலிய நெருங்கிய பந்துக்களையெல்லாம் விட்டுப்பிரிந்து வெகுதூரத்திலிருக்கிறார்களல்லவா? ஆகையால் பழைய அன்புகுறையாமலிருக்கும்படி அடிக்கடிக் கடிதம் எழுதிக்கொண்டிருக்கவேண்டியது. புருஷனும் பெண்சாதியும் ஏகோபித்துக் கடிதங்களை வாசிப்பதற்கும் பொதுவிஷயங்களைப்பற்றியும் பெண்சாதிதானே செய்யக்கூடாத காரியங்களைப்பற்றியும் புருஷனோடு பேசுவதற்கும் இதுதான் தருந்தசமயம்.

ஆனால் வெகுநேரம் இப்படிக் காலம்போக்கச் சாவகாசமில்லை. ஏனென்றால் ஒன்பது பத்து மணிக்கெல்லாம் காலைபோஜனம் சித்தமாய்விடும் அது பலமானபோஜனம்தான். சாப்பிட்டானதும் தாமதமின்றி வீட்டெஜமான் தன் வேலையின்மேல் வெளியே புறப்பட்டுப் போய்விடுவான். அப்போது மற்றவர்கள் ஸ்நானம்செய்து உடுத்திக்கொள்ளத் தங்கள்தங்கள் அறைகளுக்குப் போய்விடுவார்கள். கைக்குழந்தையை வேலைக்காரி குளிப்பாட்டுவதைத் தாயானவள்போய்ப் பார்ப்பதுண்டு. பிறகு பெரியகுழந்தைகளோடு ஆடிக்கொண்டிருப்பாள். இராணியின் மூத்தகுமாரனுகிய

இளவரசனுடைய அழகியபத்தினியார் இங்கிலாந்துதேசத்துக்கு இராஜாவாகப்போகிற தன் கைக்குழந்தையை முதுகின்மேல்வைத்துக்கொண்டிருக்கிற படத்தைப்பார்த்திருக்கிறீர்களா? இப்படி அந்த அம்மாள் வைத்துக்கொண்டிருந்து அநேகநாள் ஆயிற்றுதலால் அந்தப்படம் இப்போது பழையதாயிருக்கும். வெளியில் வரும்போது இராஜவம்சத்துக்குரிய மரியாதைகளெல்லாமிருந்தாலும் தன்வீட்டுக்குள் அவைகளையெல்லாம் விட்டுச் சாதாரண ஸ்திரீகளைப்போலவே தன்குழந்தைக்கு இவ்விதமாய் முதுகின்பேரில் சவாரிசெய்யும்படி ஏற்றிக்கொள்வது வழக்கமென்று அந்தப்படத்தால் தெரியவருகிறது.

சாதாரணமாய் எல்லாவீடுகளிலும் இரண்டு அறைகள் குழந்தைகளுக்கென்றே விட்டிருக்கும். இவற்றிற்குக் குழந்தைகளுடைய பகலறை இரவறையென்று பெயர்வழங்கும். குழந்தைகள் தூங்கும் இரவறையில் சாமான் விசேஷமாயிராது. குழந்தைகளுக்கெல்லாம் ஒவ்வொரு கட்டிலிருக்கும். பால்கொடுக்கும் ஆயாள்களல்லாமல் சற்றுப் பெரியகுழந்தைகளைப்பார்த்துக்கொள்ளும் நர்ஸ் (Nurse) என்னும் வேலைக்காரியிருந்தால் அவளுடைய படுக்கையுமிருக்கும். அல்லாமலும் துணி முதலியவற்றை வைத்திருப்பதற்காக அல்மைரா (Almirah) என்னும் சுவரில் கதவிட்ட அறைகளும், ஒன்றின்மேலொன்றாய் இழுக்கும் அறைகள் அமைந்த செஸ்ட் ஆப் ட்ராயர்ஸ் (Chest of drawers) என்னும் அடுக்குப் பெட்டியும், தாழ்வான நாற்காலிகள் இரண்டொன்றுமிருக்கும். இந்த இரவறைக்குச்சேர்ந்ததாகவே குழந்தைகளைக்குளிப்பாட்டும் அறை ஒன்றுண்டு இந்த ஸ்நான அறையை வெகு சுசியாய் வைத்திருப்பதுவழக்கம். அப்படிச் சுத்தியாய் வைத்திராமற்போனால் தேக சௌக்கியத்திற்குப் பங்கமுண்டாகும். இதைப்பற்றிக் கவனமாயிருக்கவேண்டியது தாயின்கடன். எல்லாஜனங்களுக்கும் அசுசியால் அசௌக்கியம் சம்பவிக்குமென்பதும், அதிலும் குழந்தைகள்விஷயத்தில் வெகு ஜாக்கிரதையா யிருக்கவேண்டுமென்பதும் இக்காலத்தில் யாவருக்கும் தெரிந்தவிஷயமன்றோ? குழந்தைகள் இளஞ்செடிகளுக்குச் சமானமானவர்களாகையால் அவர்கள் செவ்வையாய் வளருவதற்குச் சுத்தமானகாற்றும் தண்ணீரும் தாராளமாய் வேண்டியிருக்கிறதாகத் தோன்றுகிறது. சுத்தமாய் வைத்திருக்கவேண்டிய வஸ்துக்களுக்குள் குழந்தைக்கு ஸ்நானம் செய்விக்கும்போது உடம்பைத் தேய்ப்பதற்காகவிருக்கும் ஸ்பஞ்ச் (Songe) என்னும் கடற்பஞ்சும், பற்களையும், நகங்களையும், மயிரையும் சுத்திசெய்யும் ப்ரஷ் (Brush) என்னும் கருவிகளும், உட்புறம் அணிந்துகொள்ளும் துணிகளும் முக்கியமானவைகளாகையால் அவற்றைப் பரிசுத்தமாய் வைத்திருப்பது வழக்கம்.

காலையில் இரவறையைவிட்டுப் பகலறையில் போயிருக்கவேண்டுமாதலால் பகல்நேரமெல்லாம் போட்டுக்கொண்டிருப்பதற்காகக் குளிர்ச்சியான வெள்ளையங்கிகளைக் குழந்தைகளெல்லாரும் அணிந்துகொண்டதாக வைத்துக்கொள்வோம். ஸ்நானம் செய்து வந்திருப்பார்களாகையால் அவர்கள்முகம் ரோஜாப்பூவர்ணமாயும், டெய்ஸி (Daisy) என்னும் புஷ்பத்தைப்போலக் காந்தியாயுமிருக்கும். அல்லாமலும் வையொலெட் (Violet) என்னும் வாசனைப்பொடியைக் குழந்தைகள்முகத்திற் பூசுவதற்காக வாங்கிவைப்பது வழக்கமாகையால் அவர்கள்முகம் வையொலெட் புஷ்பத்தின் பரிமளமானவாசனையோடு கூடியுமிருக்கும். குழந்தைகளை இப்போதுபார்த்தால் வெகு லட்சணமாயிருப்பார்கள்; ஆனால் இன்னம்

கொஞ்சநேரத்திலோ கிழேவிழுந்து புரண்டு கண்டதையெல்லாம் தொட்டு அழுக்காக்கிக்கொள்ளுவார்கள்.

உடுத்தியானதும் பகலறைக்குவருவார்கள்; வந்து கொஞ்சநேரம் துடுக்கில்லாமல் அமைதியாயிருப்பார்கள். ஆனால் இந்நேரத்துக்கெல்லாம் அவர்களுக்கு அதிக பசியாயிருக்குமல்லவா? ஆகையால் சாப்பிட ஆவலாயிருப்பார்கள். இந்தப் பகலறையைச் சற்றுக் கவனித்துப்பார்த்தால் இதிலிருக்கும் சாமானெல்லாம் கொஞ்சமாகவும் ஆடம்பரமற்றதாயுமிருக்கும். குழந்தைகளுக்குப் பிரியமான மிருகங்களுடைய அழகான படங்களும், க்ராபிக் (Graphic) என்னும் வர்த்தமானபத்திரிகையில் மில்லர் (Millar) என்பவர் சித்திரித்திருக்கும் குழந்தைப்படங்களும், தெய்வவிஷயமான படங்களும் சுவரில் மாட்டியிருக்கும்; விளையாட்டுக்கருவிகள் அதிகமாயிருக்கும்; சிலநாற்காலிகளும் ஒரு மேஜையுமிருக்கும்; கடைசி குழந்தையாகிய கைக்குழந்தை சற்றுப் பெரியதாயிருந்தால், கிழேவைத்தால் ஓரிடத்திலிராமல் அங்குமிங்கும் தவழ்ந்துபோய் இடித்துக்கொள்ளுமாகையால் அதற்கு ஒரு நாற்காலியிருக்கும். இந்த நாற்காலி உயர்ந்திருக்குமாதலால் மற்று தாழ்ந்தநாற்காலிகளினடுவே சிறப்பாய்க் காணப்படும்; குழந்தை விழாமலிருக்கும்படி நாற்காலியில் குறுக்கே ஒரு குச்சிபோட்டிருக்கும்; குழந்தைக்கு விளையாட்டுக் கருவிகளையும் சாப்பாட்டையும்வைக்க ஒரு தட்டு அந்த நாற்காலிமேலிருக்கும்; குழந்தையை இந்த நாற்காலிமேல் வைக்கும்போது கையில் ஒரு கிலுகிலுப்பையாவது சிறுகரண்டியாவது கொடுப்பார்கள்; அதைக்கொண்டு நாற்காலிமேல் சிறுபறைபோல் அடித்துக்கொண்டிருப்பதை மற்றப் பெரியகுழந்தைகளெல்லாம் வியந்து பார்த்துக் கொண்டிருக்கும்.

உங்களுக்குள் தமிழில் கடைசிகுழந்தைக்கு ஏதாவது பெயருண்டா? நாங்கள் இங்கிலீஷில் பேபி (Baby) என்று சொல்லுவோம். இக்கடைசிகுழந்தை, பையனாலும்சரி, பெண்ணானாலும்சரி, வீட்டிற்குச் செல்வப்பிள்ளையாயிருந்து, தனக்குப் பின் வேறொருகுழந்தை தோன்றுகிறவரைக்கும், ஒரு ராஜா அல்லது ராணியைப் போல் ஏகாதிபத்தியம் செலுத்திவரும்.

எங்கள் குழந்தைகளுக்குக் கொடுக்கும் சாப்பாடு சாதாரணமானதாயிருக்கும். காலையில் கஞ்சியும் ரொட்டியும் பாலும் கொடுப்போம். இதோடு வெண்ணெயாவது பழங்களால்செய்த ஜாம் (Jam) என்னும் இனிப்புக்குழம்பாவது சேரும். ஒருவேளை கொஞ்சம் மீனிருந்தாலுமிருக்கும், இதைவிட விசேஷமான போஜனமிராது, சாப்பாட்டை ஒரு வேலைக்காரன் ஒரு தட்டில்கொண்டுவந்து, மேஜையின்பேரில் வெள்ளைத் துணியொன்றைப்போட்டு அதின் மேல்வைப்பான். குழந்தைகள் மேஜையைச்சுற்றி உட்கார்ந்துகொண்டு கரண்டியால் சிராய்ச் சாப்பிடும்விதத்தைச் சிறுவயதிலேயே கற்றுக்கொள்ளுவார்கள்.

குழந்தைகளைச் சம்ரக்ஷணை செய்வதில் ஆயாட்களைவிட அதிகமாய்ப் பாடுபடுபவர்களில்லை. தங்கள் வசத்தில்விட்ட குழந்தைகளின்பேரில் அவர்களுக்குள்ள அன்பைப்பார்த்தால் யாருக்கும் மனதுருகும். ஆனால் ஆயாட்கள் கைக்குழந்தைகளையேயல்லாமல் பெரியகுழந்தைகளைப் பார்த்துக்கொள்ளத் தக்கவர்களல்ல; ஏனென்றால் குழந்தைகள் லக்ஷணமாயிருக்கிறவழியையும் சிராய்ச் சாப்பிடும்விதத்தையும் சொல்லிக்கொடுக்க ஆயாட்களுக்குத்தெரியாது; இதற்காகப் பெரியகுழந்தைகளைப் பார்த்துக்கொள்ளும் நர்ஸ் (Nurse) என்னும் வேலைக்காரியை வைக்கவேண்டிநேரிடுகிறது.

அப்படி வேறொருவேலைக்காரியை வைக்கச் சக்தியில்லாதவர்கள் காலையில் தாங்கள் சாப்பிடும்போது குழந்தைகளையும் தங்களோடு உட்காரவைத்துக்கொள்ளுவதுண்டு. இந்தவழக்கம் நல்லதென்றே சொல்லலாம். ஆனால் தாய்தந்தைகள் பேசுவதைக்கேட்டு அதனால் பயன் அடையக்கூடிய வயதுவந்த குழந்தைகளாயிருந்தால்தான் இப்படிக் கூட உட்கார்ந்து சாப்பிடுவதில் விசேஷ பிரயோஜனம் உண்டு. எங்களுக்குள் முக்கியமாய்ச் சாப்பிடும் நேரம்தான் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருக்கும்காலம். சிலவீடுகளில் காலைப்போஜனத்துக்கு முந்தியாவது பிந்தியாவது வீட்டிலுள்ள எல்லாரும் ஓரிடத்தில்கூடி தெய்வஸ்துதிசெய்து வேதபுத்தகத்தை வாசிப்பதுண்டு. இங்கிலாந்துதேசத்தில் பெரியவீடுகளில் சாப்பாட்டு அறையில் வேலைக்காரர்கள் எல்லாரும் இப்படிவந்து சேருவதுமுண்டு.

குழந்தைகளும் பெரியவர்களும் எல்லாரும் சாப்பிட்டுமுடிந்து புருஷன் தன்வேலையின்மேல் போய்விட்டதாக வைத்துக்கொள்ளுவோம். இனிமேல்தான் துரைசானிக்கு இருக்கும் உண்மையான வீட்டு வேலைகளை ஆரம்பிப்போம்.

துரைசானி வீட்டுவேலைகளைக் கிரமமாய்ப் பார்த்துக்கொள்ளுகிறவளாயிருந்தால் உக்கிராண அறையொன்று வைத்திருப்பாள். இதில் திராக்ஷாரசபானங்களும் சமையலுக்குவேண்டிய சாமான்முதலியவைகளுமிருக்கும். முந்தியநாள் உத்திரவு செய்திருந்தப்பிரகாரம் சமையற்காரன் கடைக்குப்போய் மீன்மாம்ஸம், காய்கறிமுதலியவற்றை ஒரு கூடையில் இந்த உக்கிராண அறைக்குக்கொண்டுவருவான். துரைசானியானவள் வாங்கிவந்த பதார்த்தங்களெல்லாம் நல்லவைகளாவென்று பார்த்தபிறகு, அவற்றிற்குக்கொடுத்த விலைகளைப்பற்றி பட்ளரோடும் (butler) சமையற்காரனோடும் பேசுவாள். அநியாயவிலைசொல்லி வேலைக்காரர்கள் மோசம்செய்வது சாதாரணமாகையால் துரைசானிக்குக் கோபமவராமலிருக்குமா? இந்தவிஷயமாய் எப்போதும் கோபங்கொள்ளாத துரைசானியிருந்தால் அவளைத் தெய்வமென்றல்லவா சொல்லவேண்டும்? விலைகளை விசாரித்தபிற்பாடு மத்தியானத்தில் சாப்பிடும் சாதாரணமான சாப்பாட்டுக்கும் விசேஷமான சாயங்கால போஜனத்துக்கும் இன்னின்ன பதார்த்தங்கள் சமைக்கவேண்டுமென்று உத்திரவுசெய்து அதற்குவேண்டிய சாமான்களைக்கொடுப்பாள். சமைக்கவேண்டிய பதார்த்தங்களுக்குப் பட்டியெழுதிக்கொடுப்பதுமுண்டு. பிறகு செலவெல்லாம்கூட்டி மொத்தம் பார்ப்பதற்காகக் கணக்குப் புத்தகங்களைப் பட்ளர் கொண்டுவருவான். இதுவெல்லாம் முடிந்தபின்பு சில்லறை வேலைகளில் சற்றுநேரம்போகும். தாகத்துக்கும் சமையலுக்கும் தண்ணீரைக்காய்ச்சி வடிகட்டவேண்டுமாதலால், வேலைக்காரர்கள் கொதிக்கக் காய்ச்சியிருக்கிறார்களாவென்று பார்க்கவேண்டும். பால்கலப்பில்லாதிருக்கிறதாவென்றும் பரிக்ஷை செய்யவேண்டியது. வேலைக்காரர்கள் எண்ணெயைத் தாறுமாறாய்ச் செலவழிக்காமலும், ரொட்டி சருக்கரைமுதலியவற்றைத் திருடாமலும் பார்த்துக்கொள்ளவேண்டும், அல்லாமலும் வீட்டிலுள்ள வெள்ளைத்துணிகளைப்பற்றிய தொந்தரை சதாகாலமுமுண்டு. சமையற்காரனுடைய துண்டுகளும், மேஜையின்மேல்விரிக்கும் துணிகளும், சாப்பாட்டுச்சவுக்கங்களும் கிழிந்துபோவதும் காணாமற்போவதும் சாதாரணம். இவற்றையெல்லாம் கணக்காய்க் கொடுத்து அழுக்கானவைகளையெண்ணி வாங்கி வண்ணானுக்குப் போடவேண்டியது; கொஞ்சம் கிழிந்துபோனவற்றைப் பழுதுபார்க்கவும் வேண்டும். இந்தத் துணிவேலையெல்லாம் குடும்பத்தில் ஒருவர்வசம் விட்டிருப்பதுவழக்கம்.

கிரமப்படி வேலைபார்க்கும் துரைசானிக்குச் சாதாரணமாய் மத்தியானத்துக்கெல்லாம் வீட்டுவிஷயங்கள் முடிந்துபோகும். அதின்பின்பு பார்க்க வருகிறவர்களோடு பேசுவதற்கென்றிருக்கும் பெரிய அறையில் சித்தமாய் உட்காந்திருப்பாள். இவ்வறையிலிருக்கையில் எழுதிக்கொண்டாவது, சித்திரம் வரைந்துகொண்டாவது பியானு (piano) என்னும் வாத்தியத்தை வாசித்துக்கொண்டாவது, தன்குழந்தைகளுக்குப் படிக்கவும் வாத்தியம்வாசிக்கவும் கற்றுக்கொடுத்துக்கொண்டாவது இருப்பாள், இடையிடையே யாராவது தன்னைப் பார்க்கவரும்போது அதை விட்டுவிட்டு மறுபடியும்செய்யத்தக்கவைகளாக மேற்சொன்னவைகளைப்போன்ற ஏதாவது வேலையைச் செய்துகொண்டிருப்பாள். இல்லாவிட்டால் யாரையும் பார்க்கிறதற்கு ஒழியாதென்று வேலைக்காரருக்கு உத்திரவு செய்துவிட்டுக் காரியமாகவேயிருப்பாள்.

தாய் இப்படியிருக்க இளங்குழந்தைகளெல்லாரும் மத்தியானமானதால் வழக்கப்படி தூங்கிக்கொண்டிருப்பார்கள். கதையை இம்மட்டில் இப்போது நிறுத்துகிறேன். மிகுதியையும்கேட்க உங்களுக்குப் பிரியமிருந்தால் வேறொருசஞ்சிகையில் சொல்லிமுடிக்கிறேன். ஆனால் ஒன்று சொல்லவேண்டியிருக்கிறது. துரைசானிகள் வீட்டுவேலைகளை இன்னவிதமாய்ச் செய்துவருகிறார்கள் என்று நான் மேலேசொன்னதாலே எல்லாதுரைசானிகளும் கிரமமாய் இப்படி நடந்துவருகிறார்களென்றும் யாரும் தவறுகிறதில்லையென்றும் சொன்னதாக எண்ணக்கூடாது. நான் அப்படிச்சொல்லவேமாட்டேன். ஏனென்றால் விநோதமான புத்தகங்களை வாசித்துக்கொண்டிருப்பதிலும் வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருப்பதிலும் தெரியாமலே காலம் அநியாயமாய்ப் போய்விடுவதால் தங்கள் வேலைகளைச் செய்யாதொழிகிறவர்களுமுண்டென்று எனக்கு நன்றாய்த்தெரியும். அல்லாமலும் பிரதிதினமும் சற்றும் வித்தியாசமில்லாமல் ஒரேவிதமாய்ப் பொழுதுபோகுமென்றும் எண்ணவேண்டாம். இதுவுமன்றி ஒரு துரைசானியைப்போலவே எல்லாருக்கும் வேலைகள் நான் மேலே விவரித்தபடியேயிருக்குமென்று சொல்வதற்குமில்லை. சிலர் சங்கீதத்தின்பேரிலே பிராணனாயிருப்பார்கள். சிலருக்குச் சித்திரவேலையிலேயே ஆசையாயிருக்கும். சிறுவயதாயிருக்கிறவர்கள் பலரோடுபேசிக்கொண்டிருக்க விரும்புவார்கள். வயதுசென்றவர்களுக்குப் பலமும் சுருசுருப்பும் குறைவாதலால் அவர்களால் அதிகவேலை செய்யமுடியாது. இதுவெல்லாம் உலகத்திலெங்கும் உள்ளதுதானே!

நடக்கப்பழகுதல்.

ஒருவருக்கு நிமிர்ந்து நன்றாய்நடக்கத் திறமையுண்டாவது எளிதன்று, இவ்வுலகில் பெரும்பான்மையோர் சிறுகுழந்தையாயிருக்கும்பொழுதே நடக்கும்படி பலவந்தஞ் செய்யப்படுகிறார்களென்றாலும் அநேகம் ஒழுங்காய்நடப்பது ஆச்சரியமேயாம். மனிதரின் சரீரக்கூறின்படிபார்த்தால் ஒருகாலத்தில் நான்குகால்களால் நடந்து இப்பொழுது அதுமாறி நேராய் நடக்கும்படியிருக்கிறதென்றுகாண்கிறது.

குழந்தை முதலில் தலையைத்தூக்கும், பின்பு உட்காரவும், அதன்பின்பு நகரவும், கடைசியாய் நடக்கவுங் கற்றுக்கொள்ளுகிறது. குழந்தைபிறந்து சிலமாதமளவும் அதன்கழுத்தில் நரம்புபலம் அதிகமில்லையாதலால் தலையைப் பத்திரமாய்த் தொய்ந்துபோகாதபடி பார்த்துவரவேண்டும். குழந்தைபிறந்த மூன்றாவது அல்லது நான்காவதுமாதத்தில் அதற்குத் தானே தலையைத்தூக்க வலிமையுண்டாகும். ஐந்தாவதுமாதத்தில் எந்தக்குழந்தையுந் தானே தலையைத்தூக்கும். குழந்தைகளேயன்றிப்

பெரியவர்களும் உட்காந்தபடியே தூங்குகையில் தலைசாய்வதுமுண்டு.

சிலகுழந்தைகள் மூன்றாவதுமாதத்திலே உட்காருவதுமுண்டு; ஆனால் இத்தனை சீக்கிரத்தில் உட்காருவது அரிது. குழந்தைகளை வஸ்திரமின்றிப் படுக்கையில்விட்டிருந்தால் அதன் அவயவங்களெல்லாம் உடம்புநோக்கிச் செல்லுவதையும், குதிகால்கள் ஒன்றோடொன்று சேருவதையும் பார்க்கலாம். குழந்தைகளைச் சீக்கிரத்தில் உட்காரும்படி பழக்குவது தீது. அதற்கு உட்காரத் தெரிந்தபின்புதான் அதைச் சரியாய் உட்காரும்படி செய்யவேண்டும்.

உட்காரத்தெரிந்தபின்பு நகரும், நகரத் தெரிந்தவுடன் குழந்தை தனக்கு இஷ்டமானதைக்கண்டு அதன்மேல் ஆசைகொண்டு அதைப் பிடிக்கும்படிபோகும். தாய் தந்தையர் இவ்வாறு தங்கள்குழந்தை நடப்பதைக்கண்டு அதை இன்னும் அதிகமாக நகரும்படி வேடிக்கையாகப் பூக்கள்முதலியவற்றைக்காட்டி அழைப்பது குற்றமேயாம். குழந்தைத் தூக்கிவிடாமல் அது தானாகவே நாற்காலியைப் பிடித்துக்கொண்டு எழுந்திருக்கும்படிவிடுதல்தான் நலமாகும். குழந்தைக்கு நடக்கத்தெரிந்த பின்பு அது நடக்கையில் இரண்டுகைகளை மட்டும் பிடித்துநடப்பதைச் சற்றே அதிகப்படுத்தலாம். குழந்தையின் ஒற்றைக் கையைப்பிடித்துப் பரபரவென்றிழுத்துக்கொண்டுபோவது தீங்கைவிளைக்கு மாதலால் அப்படிச்செய்வது கொடுமை.

குழந்தைகளை எதையாவது பிடித்துக்கொண்டு நடக்கும்படிசெய்தால் இளையதான எலும்புகள் வளைந்து அங்கப்பழுதுண்டாகும். நாற்காலியைப் பிடித்துக்கொண்டு நடக்கிற குழந்தைகளுக்கு இயல்பாகவே நடக்கத் திடனுண்டாதலால் அதனால் குற்றமில்லை; அது தானாகவும் நடக்கும்; அதனோடு யாராவது துணைக்குமட்டும் கைகளைவிரித்துக்கொண்டு கூடவே ஜாக்கிரதையாக இருந்தால்போதும். குழந்தைகள் நடக்குங்காலம் அதிகமாக வேறுபடும் சிலகுழந்தைகள் ஏழாவதுமாதத்திலே நடக்க ஆரம்பிக்கும்; சிலகுழந்தைகள் நடக்க ஒருவருஷஞ் செல்லுவதுமுண்டு. நடப்பதற்குப் பழக்கம் முக்கியமானது. வீட்டில் முதல் குழந்தையாயிருந்தால் அது மெள்ள ஏற்றகாலத்திலே தான் நடக்கும்; அநேக குழந்தைகளிருந்தால் அவற்றைப்பார்க்கச் சிறுகுழந்தை நடக்கப்பழகும். குழந்தைகளை ஒருவருமில்லாதவிடத்திலே தனியேவைத்திருந்து வளர்த்தாலும் அது தானாகவே எழுந்து நேரேநின்றுநடக்கும். மனிதருக்குக் கண்ணும் காதும் இருக்கிறநேரைப் பார்ப்பதினாலேயே அவர்கள் நேராய்நின்று நடக்கவேண்டியது எளிதில் விளங்கும்.

எளியவர்கள்வீட்டுக்குழந்தைகள் விரைவில் நடக்கப்பழகுகின்றன; அவர்கள்தான் பெரியநகரங்களில் நடப்பது அதிகம். இதனாலேதான் அநேகருக்கு அவயவங்கள் கூம்பிக் கப்புக்காலும், கோணக்கழுத்தும், கூன்முதுகுமுடையவர்களாகிறார்கள். சிறுவயதுமுதற்கொண்டே குழந்தைகளுக்கு ஏற்றவிதமான பாதரக்ஷைகளைப்போட்டு வைத்திருக்கவேண்டும். கால்வளரும்படி பாதரக்ஷை சற்றே தளர்ந்திருக்கவேண்டும். தாய்மார் தங்கள் குழந்தைகள் நடக்கையிலே சரியாய் நடக்கிறார்களாவென்று பார்த்துவந்து, ஏதேனுங் குற்றமிருந்தால் சிறுவயதுமுதற்கொண்டே திருத்தவேண்டும்.

பிள்ளைகளைப் பள்ளிக்குவைத்தானபின்பு அவர்கள் உட்காந்து எழுதுகையிலும் படிக்கையிலும் சரியாயிருந்துசெய்கிறார்களாவென்று கருத்தாய்ப் பார்த்துவரவேண்டும். ஐந்தில்வளையாதது ஐம்பதில்வளையாதாதலால் சிறுகுழந்தையாயிருக்கும்போதே ஒழுங்காய் நடக்கும்படிசெய்வது தாய்மார்களைப் பொறுத்தகடனேயாம்.

பழக்கம்.

யாருக்கும் பழக்கமேபிரதானம். பழகிவிட்டால் பின்பு அதுவே எப்பொழுதும் வாடிக்கையாய் நாம் அதற்கு இயற்கையாய் அடிமையாவோம். பொழுதுவிடிந்தால் அந்திபட்டால் நாம் செய்வதனைத்தும் பழக்கமேயாம். ஊன்றிப்பார்த்தால் பழக்கமே எதற்குங்காரணம்.

படித்தல், வீணைவாசித்தல், வர்த்தகஞ்செய்தல், நடத்தல் இவையனைத்தும் பழக்கமேயாம்; இவையெல்லாம் பரம்பரையாய்வந்தால். எல்லாம் அப்படியேயிருக்கும். முதலில் பழகுகையில்மட்டுஞ் சற்றே பிரயாசமாயிருந்து "தொடங்குங்காற்றுன்பமாயின் பயக்கும்" என்றபடி பின்பு சுகந்தரும். நல்லது பழக வெகுகாலஞ்செல்லும்; தீது எளிதிலே பழகிவிடும். சிறுவர்களுக்கு முதலிலே எழுதப்படிக்கக் கற்றுக்கொள்ளுதல் அதிக வருத்தமாயிருக்கும். அதன்பின்பு அவ்விரண்டும் அதிவேகமாயோடும். அச்செழுத்தை அடுக்குகிறவர்களுக்கு முதலில் ஒவ்வொருமொழியிலுமுள்ள எழுத்துகளை ஒவ்வொன்றாய்ப்பார்த்துப் பொறுக்குவது அதிகவருத்தமாயிருக்கும்; அந்தவேலையில் சிறிதுகாலம்பழகிவிட்டால் அது மிகவும் எளிதாய்விடும்.

"அவசியம் பிதுராசாரம்" என்றபடி பிதாவைப்போலவே குழந்தைகள்செய்வார்கள்; பெரும்பான்மையாய் நடை, தலையாட்டம், தோற்றமுதலியனவெல்லாம் தந்தைக்கிருப்பதுபோலவேயிருக்கும். அதிபழக்கத்தினால் நமது நினைவின்றியே பார்ப்பவர்கு நாம் நன்றாய் நினைத்துச்செய்வதுபோல் எந்தக்காரியமும் நடந்துகொண்டிருக்கும். நமது தேகக்கட்டுப்பாடு ஒவ்வோர்சமயங்களில்தானே இயங்கும். நாம் வாடிக்கையாய்ப்போகிற வீட்டிற்குள்ளே நம்மையறியாமலேநுழைவோம். ஒருவன் சிறுகுழந்தையாயிருந்தாலும், அல்லது பெரியவனாயிருந்தாலும் அவன் தகப்பன் செய்வதைப்போலவே செய்வதை நாம் காணலாம். ஒருவன் படுத்துறங்குகையில் தன்கையை உயரத்தூக்கி விரல்களைமூடிக்கொண்டு மூக்குக்கு நடுவே சற்றுவேகமாய்க் கொண்டுவந்து நிறுத்தினபடியே அவனுக்குப் பிறந்த குழந்தைச்செய்ததை டார்வின் பண்டிதர் கண்டார். சிறிதுசமயங்கள் சற்றேமாறுபடுவதுமுண்டு. இவ்வாறே கண்ணை இமைத்தல், காலை ஆட்டல், விரலை ஆட்டல், பார்த்தல், வார்த்தைசொல்லுதல்முதலிய எல்லாம் பெரும்பான்மையாய்த் தந்தைக்கிருப்பதுபோலவே அவன்பிள்ளைகளுக்குமிருக்கும். "பெருமையுஞ் சிறுமையும் தான்றரவருமே" என்கிறபடி நாம் செய்யும் வாடிக்கையினாலேதான் நாம் மேன்மையைப் பெறுவதும், தாழ்மையை அடைவதுமாகும். இவ்வாறே ஒருவன் வாழ்வதற்கும், இறப்பதற்கும் வழக்கங்காரணமாகும். இக்காலத்தில் அநேகர் மயக்கத்தைத் தரத்தக்கவிஷமுள்ள மத்தியங்களைப் பானம்பண்ணவழக்கப்படுகிறபடியால் இந்தத் துர்வழக்கம் நாளுக்குநாள் அதிகப்பட்டு கடைசியில் அதனால் உயிர்க்கிறுதி உண்டாகிறது. எப்பொழுதுங் குடிக்கிறவன் அது தீதென்று அதை நாளடைவில்விட்டுவிட்டால் அவன் அதனால் சாகான்.

நாம் உண்ணும் உணவை ஏற்றகாலத்திலே உண்ணும்படியும். விடிந்தெழுந்தால் இன்னின்னபடி செய்யவேண்டுமென்று நன்றாய்த் தெரிந்துகொண்டு பழகினால் நமக்கு மிகுந்தநன்மையுண்டாகும். வழக்கங்கெட்டதானால் வந்து ஒட்டிக்கொள்ள காத்திருக்கும். ஆகாரநியமந் தப்பாமலிருந்து, வேண்டியனவற்றைமட்டுமுண்டு, வேண்டாதவைகளை விலக்கிக் கிரமமாய்ச்செய்யவேண்டிய காரியங்களைச்செய்து தேகத்தைப்போற்றிவந்தால் எந்தநோயும் நமக்குண்டாகாமல் நாம் சுகமாயிருக்கலாம்.

வண்ணாத்திக்குருவி. THE DIAL

பனிபெய்காலம்.

ஜனவரி பிப்பிரவரி மாதங்கள்.

கடவுள்படைத்த சிருஷ்டியே பெரிய காட்சி. அது பிரதிவருஷமும் ருதுக்கள்தோறும் வருகின்ற அந்தந்த மாதங்களில் பூமியில் உண்டாகும் கொடிசெடிகளும் அவைகளில் உற்பத்தியாகும் கோட்டுப்பூ கொடிப்பூ நிலப்பூ நீர்ப்பூ முதலானதும் தளிர் பிஞ்சு காய்கனிகள் இன்னும் எண்ணிறந்த விளைபொருள்களும்; நாட்டிலும் காட்டிலும் அந்தந்தப் பருவத்தில் கண்ணுக்குப் புலப்படும் கூவும்பக்ஷி பேசும்பக்ஷி ஆடும்பக்ஷிகளும், பார்க்கும் பற்பல வர்ணப் பூச்சிகளும், வானத்தில் உதயாஸ்தமன காலங்களிலும் இராக்காலங்களிலும் சித்துவிலாஸங்களைக் காட்டும் நக்ஷத்திரங்கள் நவக்கிரஹம் முதலானவைகளும் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதைச் சற்றே புத்தியினால் அறிந்து பார்ப்பது யாவருக்கும் அவசியம். அதுவே சகலஞானத்தையும் அறிவிக்கும் சிறந்த நூலாகையால் நாம் மாதந்தோறும் எழுதத்துணியும் சிற்சில விவரணங்கள் இதைப்படிக்கும் சிறுவர்களுக்கு அவைகளைப் பார்த்துக் களிக்கச்செய்யும் ஒரு தூண்டுகோலாகுமல்லவா.

தை, மாசி இந்த இரண்டுமாதங்களிலும் பகலைவிட இரவதிகம். கோடைகாலத்தி

விருப்பதுபோலல்லாமல், இந்தப் பனிகாலத்தில் சூரியன் சற்றே நேராய்சென்று உதயமாகி முந்தியே அஸ்தமிப்பான் பகலும் இரவும் எவ்வளவுக்கெவ்வளவு வித்தியாசப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு நாம் பூமிமத்தியத்துக்கு வடக்கேயிருக்கிறோமென்பது நிச்சயம். இங்கிலாண்டில் ஜனவரிமாதத்தில் பகல் எட்டுமணியும், இரவு பதினாறு மணியுமாயிருக்கும். வடதுருவத்துக்குச்சமீபத்தில் இந்தவித்தியாசம் இன்னும் அதிகப்படும். அங்கெல்லாம் சூரியன் அஸ்தமிக்காமலே பலநாளளவும் ஆகாயத்தில் வட்டமிட்டுக் கொண்டிருப்பான். அந்தகாலத்தில் தூங்குவதற்கு இரவில்லாததினால் ஜனங்கள் தங்களுக்குக் களையுண்டாகும்போது படுத்துத் தூங்குவார்கள்.

வெயிலில் வைத்திருந்த ஒருபண்டத்தை நிழலில் எடுத்துவைத்தால் அதில் ஏறியிருந்த சூடு வரவரத் தணிந்துவிடும். இவ்வண்ணமே பகலில் சூரியனுக்கெதிரிலிருக்கிற பூமியின் உஷ்ணமானது இரவில் வரவரத்தணிந்துவிடும். தை மாசி மாதங்களில் பூமியும் ஆகாயமும் சூரியனுக்கு எதிரிலிருப்பதைவிட இரவிலே அதிகமாயிருக்கிறது. இவ்வாறு ஒருநாளில் பகல் குறைந்தும் இரவு அதிகமாயுமிருப்பதனால் ஆகாயங் குளிர்ந்திருக்கும். இந்தப் பனிகாலத்தில் காற்று வடகிழக்கிலிருந்து வீசும்.

இவ்வுலகமெங்கும் ஒரேகாலத்தில் சீதளகாலமாயிருப்பதில்லை; பூமியின் வடபாகியிலிருப்பவர்களுக்குப் பனிகாலமாயிருக்கையில் அதன் தென்பாகியிலுள்ளவர்களுக்குக் கோடைகாலமாயிருக்கும்; இப்படியே தென்பாகியிலிருப்பவர்களுக்குக் குளிர்காலமா யிருக்கையில் வடபாகியிலுள்ளவர்களுக்குக் கோடைகாலமாயிருக்கும்.

இரவிலாவது அல்லது பின்மாலையிலாவது நீங்கள் புல்லுள்ள நிலத்தில் நடக்கையில் உங்கள் காலெல்லாம் நனைந்துபோம். ஆகாயம் நிர்மலமாயிருந்தும் புல்லில் ஜலமுண்டாகிறது. எங்கிருந்து இச்சலம் புலலிலுண்டாயிற்று ?

அந்தச்சலம் ஆகாயத்திலிருந்து வந்தது. தண்ணீரானது உஷ்ணத்தினாலே ஆவியாய்ப் பரிணமிக்கும்; இவ்வாறே ஆவியின்மேல் குளிர்ந்தகாற்றுப் பட்டால் அது மீண்டும் நீராய்விடும். பகலில் சூரியனுடைய உஷ்ணத்தினால் ஜலமானது ஆவியாகமாறும்; அந்த ஆவியெல்லாம் ஆகாயத்தில் பரந்திருக்கும். சூரியன் அஸ்தமித்தபின் பூமியிலுள்ள பொருள்களெல்லாம் உஷ்ணம்நீங்கிக் குளிர்ந்துவிடும். சிலவற்றின் உஷ்ணம் உடனே நீங்கும்; மற்றையவற்றிலுள்ள சூடுநீங்கச் சற்றேதாமதிக்கும். ஆகாயத்திலுள்ள ஆவியானது ஒன்றாய்ச் சேர்ந்து, விரைவில் குளிர்ந்துபோகின்ற பொருள்களின்மேலே படியும். புல்லின் ஒவ்வொருதாளும், பசுமரத்தின் ஒவ்வொரு இலையும் உடனே குளிர்ந்துபோவதனால் அவற்றின்மேல் படியும் ஆவியெல்லாம் பனித்துளியாக மாறிவிடும்; பாறைமுதலியவற்றிலுள்ள உஷ்ணம் எளிதில் தணிகிறதில்லை யாதலால் அவற்றின்மேல் உஷ்ணம் அவ்வளவாகப் படிகிறதில்லை இதுதான் பனித்துளி. இந்தத் தை மாசி மாதங்களிலே இரவுகுளிர்ந்து ஆகாயம் நிர்மலமாயும் அமைதியாயு மிருப்பதனால் பனி அதிகமாகின்றது. இரவில் ஆகாயம் மந்தாரமாயும், காற்று வீசிக்கொண்டுமிருந்தால் பனி அதிகமாக உண்டாகாது. பனியென்பது ஓர்விதத்தில் அநுகூலமேயாம். பகலில் வெயிலால் ஜலம் சுண்டிச் செடிகளெல்லாம் வாடிப்போவதனால் இவ்வாறு இரவில் அவற்றின்மேல் பனிஜலம் படியாவிட்டால் அவையெல்லாம் தீய்ந்துவிடும். சூரிய வெப்பத்தினால் ஜலமெல்லாம் ஆவியாய்மாறிக் கந்தமூலங்களையெல்லாஞ் சுட்டெரிக்கின்ற உஷ்ணமான தேசங்களிலேதான் பனி அதிகம். இவ்வண்ணம் பனிபெய்யாவிட்டால், பகலெல்லாம் நெருப்பாய்க் கொளுத்திப் பல மாதமளவும் மழையில்லாத அதிக உஷ்ணமான தேசங்களில் மரத்தையாவது செடியையாவது காண்பது அரிதாகும்.

காலையிலும், சிறிதுவேளையில் அஸ்தமித்துச் சற்றுநேரமானபின்பும் நீங்கள் ஆகாயத்தில் காண்கிறதும் பனியே; ஆவியானது ஆகாயங்குளிர்ந்தபின்பு அப்படிப் பனியாகத்தோற்றுகிறது.

இவ்வாறாகத் தை மாசி மாதங்களில் பூமியின் வடபாகியில் பகலைவிட இரவில் பொழுது அதிகமென்றும், ஆகாயம் குளிர்ந்து அமர்ந்திருக்குமென்றும், மழை அதிகமாய்ப் பெய்கிறதில்லையென்றும், அதிகமாகப் பனிபெய்கிறதென்றும், வடகிழக்கே நின்று குளிர்ந்தகாற்று வீசுகிறதென்றும் நாம் அறிந்து கொள்ளுகிறோம். இந்தமாதங்களில் பனிக்காற்றடித்து இரவில் குளிர் மிகுதியாயிருப்பதால் "தையும் மாசியும் வையகத்துறங்கு" என்று ஔவையார் நித்திரைக்கு விரோதமில்லாமல் 'பனிக்காற்று நுழையாத இடங்களில் படுக்க வேண்டுமென்று சொன்னாள். இந்தக்காலத்தில் கிச்சிலி, எலுமிச்சை, மாதளை, கொய்யா, வாழை, இலந்தை, திராக்ஷை, பம்பல்மாஸ் முதலிய பழங்கள் அகப்படும்.

கீரைமுதலிய காய்கறி பதார்த்தங்களும் மிகுதி. அன்றியும் யூரோப் கண்டத்தில் உண்டாகிற பலசாதி சீமைக் கீரைவகைகள், சில கிழங்குகள் முள்ளங்கி முதலியவையும் விளைவதற்கு இதுவே ஏற்றகாலம்.

இந்தக்காலத்தில் காட்டுமலர்கள் தாமாகவே எங்கே பார்த்தாலும் மலர்ந்திருக்கும். அவற்றுள் சில எப்படிப்பட்ட குளிர்ந்த காற்றடித்தாலும் கெட்டுப்போகாமல் பார்த்தவிடமெல்லாம் காட்டின் காட்சி அழகாய் அமைந்திருக்கும்.

இது இவ்வாறிருக்க சிற்சில செடிகள் பனிக்காற்றுக்கும் வெயிலுக்கும் பயந்து, மனிதர் வேண்டும்போது தேடிவரட்டும், நாம் ஏன் வெட்டவெளியில் இருந்து வருத்தப்படவேண்டும் என்று புதர்கள் முதலான வெளிச்சமில்லாத இடங்களில் ஒளித்திருப்பதுபோல வளர்ந்துகொண்டிருக்கும். அவைகளில் சிவப்பாகவும் வெண்மையாகவும் கொத்துகொத்தாய்ப் பூத்திருக்கும். பெருசின்னி, ஓரிலைத்தாமரை முதலியவை வழியோரங்களில் தனித்தனியே மூலைமுடுக்குகளில் முளைத்திருக்கும். சந்திரகாந்தியும், நெய்ச்சிட்டிக் கீரையும் காக்கணம்பூவும் செருக்குடன் அழகாய்ப் பூத்திருக்கும். காட்டுச் செவ்வந்திமலர் ஓர் பக்கத்தில் மஞ்சள்நிறமாக மலர்ந்திருக்கும். மெத்தைக்கீரை வகைகள் நீலமும் வெளுப்பும் கலந்ததுபோலப் பரந்திருக்கும். வேளை, நல்வேளை நாய்வேளை நாய்க்கடுகுமுதலியவை ஏராளமாய் வெள்ளைப்பூக்களும், ஊதாப்பூக்களுமாக எங்கும் முளைத்துப் புஷ்பித்திருக்கும். தும்பைப்பூ வெள்ளைவெளேரென்று ரவைசல்லா விரித்தாற்போலப் பூத்திருக்கும். சாயச்செருக்கு நமக்கு எங்கிருந்து கிடைக்கும் என்று நினைப்பதுபோல கரிசலாங்கண்ணி கொஞ்சம் வெண்ணிறமாய்ப் பொடிபொடியாகப் பூத்திருக்கும். நெருஞ்சில்முட்செடி மஞ்சள் நிறமாய் நிறையப்பூத்திருக்கும். விஷ்ணுக்கிராந்தியும், நிலச் சென்னயுருவியும், நீல புஷ்பங்களுடன் முளைத்திருக்கும். நரிப்பயறு சிறிதுசிறிதாகக் கும்பலாய் நிறையப் பூத்திருக்கும். செருப்புநெருஞ்சியும், சிவந்த பூங்கொத்துகளுடைய மூக்கரட்டைக்கீரையும், மஞ்சட்பூக்கள் நிறைந்த

கொடித்துத்தி, மந்தஷ்டி, கழுதைத்தும்பை, தேள்கொடுக்கு, நந்தியாவர்த்தம் செவந்தி அந்திக்கீரை முதலியன அமோகமாய் வெளுத்துப் பூத்திருக்கும். பற்பல வர்ணசாமந்தியையும் காணலாம்.

காட்டு ஜிமிக்கி என்னும் நீலச்சாயம்கலந்த பூவும், தாளிக்கீரைமேலே வெண்ணிறமாகவும் அடியில் ஊதாவுமாகவும் பார்ப்பவர்கள்கண்களைப் பறிப்பதுபோலப் பூத்திருக்கும். புஷ்பவகைகளைவிட்டுப் பயிர்களை நோக்குங்கால் பூமிக்கு அலங்காரமான இந்தக்காலத்தில், நெல், கரும்பு, சோளம், வரகு, அவுரி, கேழ்வரகு, கம்பு, உளுந்து, முதலிய தானியங்கள் விளைந்திருக்கும். புலங்களில் குடியானவர்கள் செய்யும்தொழிலைப் பார்ப்போம். பற்பலவகையான சம்பாநெல், சோளம், கேழ்வரகுமுதலிய தானியங்களை அறுப்பதற்கு இதுதான்காலம். கரும்பை ஆலையிலாட்டிச் சாறுபிழிந்து வெல்லஞ் சர்க்கரையாக்குவதுமன்றிக் கட்டுக்கட்டாக ஒடித்துக் கடைக்குக்கொண்டுவந்து விலைக்கில் விற்பதுமுண்டு.

கூலிக்காரர்கள் நெல்லறுப்பதற்குக் கையிலே கருக்கருவாளை யெடுத்துக்கொண்டு வயல்களிலிறங்குவதை நீங்கள் பார்க்கலாம். அவர்கள் நெல்லைத்தாளோடு அறுத்து வெயிலிலே காயவைத்திருந்து பின்பு கட்டுக்கட்டிக் களத்துமேட்டுக்குக் கொண்டுபோய் அரி அரியாய் எடுத்து நிலத்திலடித்து நெல்வேறு வைக்கோல்வேறாகச் செய்வார்கள். இவ்வாறு அடித்துப்போட்ட வைக்கோலில் இன்னும் நன்றாய் விடுபடாமல் நெல் ஒட்டிக்கொண்டிருக்குமாதலால் போரைப்பிரித்து வைக்கோலை உதறி அதன்மேல் மாடுகளைவிட்டோட்டிப் போரடித்து அந்த நெல்லையும் எடுப்பார்கள். இவ்வாறு போரடித்தபின் அந்த வைக்கோலை மாட்டுக்கு வருஷமுழுவதும் உணவாகும்படி போர் போடுவார்கள்.

இரண்டாவதுபோகம் நெல் விளைவதற்குப் போதுமான தண்ணீரிருந்தால் அந்த வயலில் மீண்டும் தண்ணீர்விட்டு, உழுது, பலவகையான தழைகளைக் கொண்டுபோய் அதற்கு எருவிட்டு நாற்றைநட்டுப் பயிராக்குவார்கள். இரண்டாவது போகம் நெல் விளைவதற்குப் போதுமான தண்ணீரில்லாவிட்டால் வயலையுழுது பலவகையான வெள்ளரிக்காய் பீர்க்கங்காய் முதலான காய்கறி பதார்த்தங்களை விளைவிப்பார்கள். இப்படி இந்தப்பனிகாலத்திலே குடியானவர்கள் நெல், சோளம், வரகு, இவற்றை அறுத்துக் களஞ்சியத்திலே கொண்டுபோய்ச் சேர்ப்பது மல்லாமல், நீர்பாய்ச்சலுக்கு ஜலாதார மிருக்கின்ற கழனிகளை யுழுது பண்படுத்தி, எருவிட்டுப் புதிதாய்ப் பயிர் விளைவிப்பதற் கேற்ற கிருஷிகளை யெல்லாஞ்செய்துகொண்டிருப்பார்கள்.

இந்தப்பருவத்தில் நிலத்தில் உற்பத்தியாகிற புல் பூண்டு செடி கொடி தளிர் பூ முதலியவைகளைப்பற்றி இதுவரையில் விசாரித்தோமே. அந்தச் செடி கொடிகள் வளர்கின்ற தோட்டங்களிலும் வயல்முதலிய விடங்களிலும் விநோதமாகச் சஞ்சரிக்கின்ற பக்ஷிகளைப்பற்றி இனிச் சற்றுவிசாரிப்போம். காக்கை பருந்து முதலிய பக்ஷிகள் எங்கும் சாதாரணமாகச் சஞ்சரிப்பதைத் தினந்தோறும் நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கிறீர்களல்லவா? ஆகையால் அவைகளைப்பற்றி விசேஷமாக வர்ணித்துச் சொல்லவேண்டியதில்லை. ஆனாலும் பருந்துகளில் அதிசயமான சிலஜாதிகளுண்டு கருடன் பருந்துஜாதியில் சேர்ந்ததுதான். அது தாமிரவர்ணமான பளபளப்புள்ள சிறகும் வெண்மைநிறமான கண்டமுமுடையதென்பதும், சகுனப்பக்ஷிகளுள் ஒன்றென்பதும், விஷ்ணுவின் வாகனமான பக்ஷிராஜனுடைய இனமென்று இந்துக்கள் யாவராலும் மிகச்சிறந்ததாகக் கொண்டாடப்படுகின்றதென்பதும் உங்களுக்குத் தெரிந்தவைகளே.

54 16438

கருடப்பக்ஷி முட்டையிடுவது உத்தராயணத்தின் துவக்கமாகிய தைமாசி மாதங்களில் அது சாதாரணமாய் ஒருதடவையில் இரண்டுமுட்டைகளிடுவது வழக்கம். அந்தமுட்டை வெண்மை நிறமுடையதாய்ப் பழுப்புநிறமான சில புள்ளிகளோடுகூடியிருக்கும்.

பறையப்பருந்து என்று பருந்துகளில் மற்றொரு ஜாதியுண்டு அவை தக்ஷிணாயனத்தின் கடைசியில்கூடி. தைமாதம்முதல் பங்குனி சித்திரைவரையில் முட்டையிடுகின்றன. அவற்றின் முட்டைகள் மங்கலாய்ப் பசுமைகலந்த வெள்ளை நிறமாயிருக்கும். அவை ஒருதடவையில் இரண்டு அல்லது மூன்றுமுட்டைகளிடும். பருந்துகளில் இத்தேசத்தில் இன்னும் பலவகைகளுண்டு உங்களுக்குச் சாதாரணமாகத் தெரிந்தவைகளாதலால் இவ்விரண்டுவகைப்பருந்துகளைமாத்திரமே இங்கே எடுத்துக்காட்டினோம்.

சற்றே நிதானித்துக்கேள்! அதோகூவுகிறதே, அதென்னபக்ஷிபார். அந்தத்தொனி அந்தமரத்தினின்றும் வருவதாகத்தோன்றுகிறது. அந்தமரத்தினருகே போய்ப் பார்ப்போம். அதோ மரத்துநுனியில் ஒரு பக்ஷி உட்காந்திருக்கிறது பார்த்தாயா! அதுதான் அப்படிகூவுகிறது. அதற்குப் பச்சைப்புறா வென்றுபெயர். பசுமைகலந்த மஞ்சள்நிறமான சிறகும் ...மாய் அதுவெகு அழகாயிருக்கிறது. அந்த ஜாதியில் இதுமிகவும் சுருசுருப்புள்ளபக்ஷி. இது தனக்கு இரையான பூச்சிபுழுக்களைத் தேடிக்கொண்டு உரப்பாகவும் மெதுவாகவும் இனிமையாய்க் கூவிக்கொண்டே இந்தமரத்தின் கிளைகளில் எவ்வளவு சாதுரியமாய் ஏறுகின்றதுபார்.

இதோ அது மற்றொரு மரத்திற்குப் பறந்துபோய்விட்டது; இப்பொழுது அதன் தொனியைக்கேள். மணியோசைபோலிருக்கின்றது; அது தன் துணைப்புறாவைக் கூவுகின்றது, இந்தப்பக்ஷி வருஷருதுவின் ஆரம்பத்தின் முட்டையிடும்.

காலையிலும் மாலையிலும் மதுரமாகப்பாடுகிற மற்றொரு பறவையுண்டு. அது அப்படிப்பாடுவதை உங்களில் அநேகர் கேட்டுமிருக்கலாம். அதன்பெயர் வண்ணாத்திக்குருவியாம்; இதன் உருவத்தை மேலே படத்தில் (297-ம்பக்கத்தில்) காண்க. இது பளபளப்பான கறுப்புநிறமுள்ள சிறகுடன் சிறகின் கீழ்ப்புறமெல்லாம் வெளுத்து வெகு அழகாயிருக்கும். அதோ அந்தப் பெரிய மரத்து நுனிக்கிளையில் ஒரு பறவை உட்காந்திருக்கிறது. அங்கிருந்து இரைதேடுவதற்குக் கீழே இறங்கிவந்திருக்கிறது பார். அது அந்தவண்டை வெகுதந்திரமாய்ப்பிடித்துக்கொண்டு தன்னிடத்திலேபோய் உட்காந்து தனக்கு இரை கிடைத்த சந்தோஷத்தினாலே வாலையாட்டிக்கொண்டு தன் பசிதீர்க்கும் கடவுளுக்கு வந்தனம்சொல்வதுபோலப் பாடுகின்றது. இந்தப்பறவைகள் நெருக்கமான வேலிகளிலும் புதர்களிலும் மரப்பொந்துகளிலும் கூடுகட்டி முட்டையிடும். அவற்றின் மதுரமான பாட்டுக்காகவும், வேறுபக்ஷிகளுடன் சண்டைபோடச்செய்வதற்காகவும் இந்தப்பக்ஷிகளைப் பிடித்துக் கூண்டிலடைத்து வளர்க்கிறார்கள்.

SL 915 MAH M83 M83·2

இப்படியே காடுகளிலும் மலைகளிலும் சஞ்சரித்து அங்குள்ள தளிர் காய்கனிகளைத்தின்றுகொண்டு விநோதமாயிருக்கின்றபறவைகளன்றியும் வெகுவாக நீர்வாழ் ஜந்துக்களைத் தின்றுகொண்டு ஆறுகளிலும் ஏரிகளிலும் நீந்துவிளையாடுகின்ற பறவைகள்பலவுண்டு. இப்பறவைகளெல்லாம் ஒரேபருவத்தில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கின்றவையல்ல; பல பருவங்களில் பலவிதமாக முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். ஆகையால் அந்தப்பருவத்தில் தோன்றும் பறவைகளின் வரலாறுகளை அந்தந்தப்பருவத்துச் சஞ்சிகைகளில் விளங்கச்சொல்லுவோம்.



சூரியன் அஸ்தமித்தவுடனே ஆகாயத்தை அண்ணாந்து பார்ப்போமானால், நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்றாகக் கண்ணுக்குப் புலப்படுவது யாவருக்குந்தெரியுமே. அந்த நக்ஷத்திரங்கள் சூரியன் அஸ்தமனமான பிறகுதான் வானத்தில்முளைக்கின்றனவோ? இல்லை; இரவும்பகலும் ஒருதன்மையாகவே அவை ஆகாயத்தில் செல்லுகின்றன. சூரியன் மற்றெல்லா ஒளிகளையும் மழுங்கச்செய்வதான மிகுந்த காந்தியுடன் காய்ந்துகொண்டிருப்பதால் அந்தப் பிரகாசத்தில் மறைந்து பகற்பொழுதில் அந்த நக்ஷத்திரங்கள் நமது கண்ணுக்குப் புலப்படுவதில்லை. வெள்ளி அல்லது சுக்கிரன் மற்ற நக்ஷத்திரங்களைவிட மிகுந்த ஒளியுள்ளவனாயிருப்பதால், அவன் இருக்குமிடந்தெரிந்து உற்றுப்பார்த்தால் அவன் பகற்பொழுதிலும் நமதுகண்ணுக்குப்புலப்படுவான். தூரதிருஷ்டிக் கண்ணாடியின்மூலமாய்ப் பார்ப்போமானால் ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்களை பகற்பொழுதிலேயும் நாம் காணலாம். அந்த நக்ஷத்திரங்கள் மாலைப்பொழுதாகி சூரியனொளிமறையமறைய, ஒவ்வொன்றாக நமது வெறுங்கண்ணுக்குப் புலப்படுகின்றன.

எல்லாக்கிரகங்களிலும் வெள்ளி மிகுந்த ஒளியுடன் வானத்தில் விளங்குவதை யாவரும் கண்டிருப்பீர்களே - அது சூரியனுக்கு முன்னும்பின்னுமாயிருந்து சிலகாலத்தில் காலையிலே கிழக்குத்திசையிலும், சிலகாலத்தில் மாலையிலே மேற்றிசையிலும் தோன்றுவதால், ஐரோப்பியர் அதைக் காலைமாலை நக்ஷத்திரமென்பர். அந்தச் சுக்கிரன் சாதாரணமாக மற்றக்காலங்களில் தோன்றுவதைப்பார்க்கிலும் இந்தமாதத்தில் மாலைப்பொழுதில் மேற்குத்திக்கிலே அதிக காந்தியுடன் சோபித்துககொண்டிருக்கிறதுபாருங்கள். அது சூரியனைவிட்டு வெகுதூரம் விலகி நவ்வானத்துக்குப் பாதிதூரத்தில் வந்திருப்பதால் அத்தனை ஒளியுள்ளதாகத்தோன்றுகிறது மாலையில் முதல்முதல் நமது கண்ணுக்குப் புலப்படுகின்ற நக்ஷத்திரம் அதுதான். அதற்குப்பின் உச்சிகாலத்தில் கொஞ்சம் தென்புறமாய்ச் சோதியான ஒருநக்ஷத்திரம் தோன்றுகிறது அதை அக்கினிநக்ஷத்திரம் என்று சொல்லுகிறார்கள். இன்னும் தெற்கே அடிவாரத்திற்குக் கொஞ்சம்மேலே மற்றொரு

பளபளப்பான மீன் அதன்பின் தோன்றுகிறது. சுக்கிரனிருக்குமிடத்திற்கு வடகிழக்காய் தளதளவென்று நக்ஷத்திரங்களின் கூட்டமொன்று இருக்கிறது. அதற்குக்கொஞ்சம் வடபுறமாய்ச் சிவந்தநிறமுள்ள பிரகாசமான ஒருநக்ஷத்திரம் பல சிறுநக்ஷத்திரங்களுடன் ஒருகூட்டமாய்விளங்குகின்றது.

சுக்கிரனுக்குக்கொஞ்சம்மேலே நேர்வடிவமாய் ஆறுநக்ஷத்திரம் நெருக்கமாயிருக்கின்றன; அந்தநக்ஷத்திரத்தைப் பலரும் பார்த்திருப்பார்கள்' அதுதான் கிருத்திகைநக்ஷத்திரம். அந்தக் கூட்டத்தில் பெரியவையாகத் தோன்றுகின்றவை ஆறுமீன்; சிறியவைகளாகப் பலமீன்கள் சேர்ந்திருக்கின்றன; நுட்பமாகப் பார்த்தாலன்றி அவைகள் கண்ணுக்குப் புலப்படுவதில்லை. அதற்குக் கொஞ்சம்மேலே ரோகிணிநக்ஷத்திரக்கூட்டமும், அதறகுமேலே மிருகசிருடம், திருவாதிரை நக்ஷத்திரங்களும் அவற்றிற்குத் தெற்கே பளபளப்பான பலநக்ஷத்திரங்களு மிருக்கின்றன. ரோகிணியென்பது பளபளப்பான ஒருநக்ஷத்திரமும் மங்கலான பலநக்ஷத்திரங்களும் கூடி மீன்பிடிக்கும் ஊத்தால்போலிருக்கும்; மிருகசிரிடம் மங்கலான மூன்றுமீன் தேங்காய்க்கண்போலிருக்கும்; திருவாதிரை பளபளப்பான ஒருநக்ஷத்திரம்; அதற்கு அப்பால் கிழக்கே புனர்வசுநக்ஷத்திரக் கூட்டமிருக்கிறது. அதுதெற்குவடக்காகத் தோணிபோலப் பரந்துள்ளது. அதில் தென்கோடியில் ஒருமீனும வடகோடியில் இரண்டு மீன்களும் பளபளப்பாயுள்ளவை, மற்றவை மங்கலானவை. அது மிதுனராசியில் சேர்ந்தது. அதற்கப்பால் கடகராசிக்கும் சிம்மராசிக்கும் மத்தியில் சனிக்கிரகம் பிரகாசிக்கின்றது. இந்தச் சனிக்கிரகத்தைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியைக்கொண்டு பார்ப்போமானால் அது வெகு அற்புதமாய்த் தோன்றும். சனிக்கிரகமென்பது



ஒரு பெரியகோளம். அதற்கு எட்டுச்சந்திரன் உபககிரகங்களாயிருக்கின்றன. இந்த உருவத்தில் காட்டியபடி அதைச்சுற்றிப் பளபளவென்று ஒருபட்டையும் தோன்றும். ஆகையால் சுவர்கிருஷ்டியில் இவ்விதமான கிரகம் வேறொன்றில்லை யென்கிறார்கள். ஆயினும் சனி மற்றெல்லாக் கிரகங்களுக்குமப்பால் வெகுதூரத்திலிருப்பதால் வெறுங்கண்ணுக்குப் பசுமைநிறமுள்ள ஒரு சிறியநக்ஷத்திரம்போலத் தோன்றுகிறது.

அசுவினிமுதலிய ராசி நக்ஷத்திரங்களும், சந்திரன் அங்காரகன் முதலிய கிரகங்களுந்தவிர வானத்தில்தோன்றுகிற மற்றமீன்களெல்லாம் நிலையான நக்ஷத்திரங்கள். அதாவது ஒவ்வொரு நக்ஷத்திரமும் ஒவ்வொரு பெரியகோளம் என்கிறார்கள். அவை மாதந்தோறும் இரண்டு மணிநேரம் முன்னதாகக் கிழக்கேதோன்றி மேற்கே மறைந்துகொண்டு வருவதால், வருஷந்தோறும் இடம்மாறாமல் இந்தவருஷம் எந்தமாதத்தில் எந்தநாளில் எந்நேரத்தில் எந்தவிடத்தில் காணப்படுகின்றனவோ, வருஷந்தோறும் அந்தமாதத்தில் அந்தநாளில் அந்நேரத்தில் அதேவிடத்திலேயே காணப்படும். மற்றகிரகம்முதலியவை இப்படியல்லாமல் அவைகளுக்குரிய நிலைக்குத்தக்கபடி வெவ்வேறுவிதமானகதியுள்ளவைகளாய்ச் சஞ்சரித்துக்கொண்டிருக்கின்றன. தென்கிழக்கு வடமேற்காக வானத்தில் வெளேலென்று பாவியிருக்கிற நக்ஷத்திரவீதியென்பது இப்பொழுது மிருகசிரிட நக்ஷத்திரத்திற்குச் சரியாகத் தோன்றுவதை யாவரும் காணலாம். இதற்கு நேராக ஆகாயத்தின் மற்றொருபுறத்தில் ஆனி ஆடிமாதங்களில் இதேமாதிரி இதன் மற்றொருபாகந் தோன்றும்.

பரோபகாரம்.

மனிதரிடத்தில் அன்பு பாராட்டலே பரோபகாரமாகும். மனிதரிடத்தன்புடைமையே மனிதராய்ப்பிறந்திருப்பதற்கழகு.

'என்பி லதனை வெயில்போலக் காயுமே
யன்பி லதனை யறம்.''

ஏழைகளுக்குப் பொருள்வழங்குதல், நோய்கொண்டவர்களுக்கு உண்டிமுதலியவற்றைக்கொடுத்து அந்நோயைத்தீர்த்தல், ஒன்றுந் தெரியாதவர்களுக்குக் கல்விபயிற்றுதல் முதலியவை பரோபகாரசிந்தைக்கு அடையாளமென்று பொதுவாகச்சொல்லுகிறார்கள். நாம் பிறருடைய நன்மைக்கென்றுசெய்கிற ஒவ்வொன்றும் அன்புடைமையேயாம். இதை லோகோபகாரமென்றும் சொல்லலாம். பிறரிடத்தில் அன்பாயிருத்தலே லோகோபகாரமாம். தாய், தந்தை, மனைவி, மக்கள், சுற்றத்தார் இவர்களிடத்து அன்புபாராட்டுதல் எல்லோர்க்கும் இயல்பாதலால் அதை பரோபகாரமென்று சொல்லுவதில் பெருமையொன்றுமில்லை. நாம் என்றும் பார்த்திராதவர்களிடத்திலும், பிரதியுபகாரத்தை எதிர்பாராமல் மனமொழிமெய்களால் அன்புபாராட்டி, தமமால் இயன்றமட்டும் சிறிதும் வஞ்சனையில்லாமல் உபகாரஞ்செய்வதற்குத் தான் பரோபகாரமென்று பெயர். இந்த உபகாரசிந்தையுள்ளவர்கள் நாகரிகம்பெற்ற நாட்டாரிலேதா னிருக்கிறார்களென்று நினைப்பது கூடாது. நாகரிகம் இப்படிப்பட்டதென்று தெரியாத காட்டுமனிதர்களிடத்திலும் பரோபகாரம் பூரணமாயுண்டு. ஜாதி, மதம், பாஷை, வேஷமுதலிய பேதமொன்றையும் பாராட்டாமல், மன்னுயிரைத் தம்முயிர்போ லெண்ணி யாரிடத்திலும் அன்பாயிருப்பவரே பரோபகாரிகளாம். பிறரிடத்திலுள்ள ஜீவகாருண்ணியத்தினால் பிரசித்திபெற்ற சில உத்தமர்களின் பிரபாவத்தைப்பற்றிமட்டுமே நாம் இந்தப் பத்திரிகையில் சிறிது எழுதுவோம். "தன்னை மிஞ்சியல்லவோ தருமம்'' என்று சொல்லுகிறபடியே, யாராயிருந்தாலும் தங்களுக்கு நெருங்கிய உறவினர், சினேகிதர்முதலானோர்க்கு வேண்டிய உபகாரத்தைச்செய்த பின்னே மற்றவர்க்கு உபகாரஞ்செய்ய முயலவேண்டும். மனைவி தனது கொழுநனுக்குச் செய்யவேண்டிய வழிபாடுகளைச்செய்து, மக்களைப் பாதுகாத்து, மற்றுமுள்ள உறவின்முறையார்க்குத் தன்னாலாகும் உபகாரத்தைச்செய்தபின்பே மற்றவர்களுக்கு உதவிசெய்யவேண்டும். இவ்வாறே பிள்ளைகள்பெற்றோர்க்குத் துணைநின்று அவர் வேண்டுமவற்றைச் செய்ய வேண்டும். கணவன் தன் வீட்டிலுள்ளாரைப் பாதுகாத்தபின்பே பிறருக்குத் துணைசெய்யவேண்டும். சிலர் தங்கள் வீட்டிலுள்ள வேலைகளையெல்லாமறந்து, குழந்தைகளைப்பார்த்து உண்டிமுதலியவற்றைக்கொடாமல் விட்டுவிட்டு, ஊரார்வீடுகளுக்குச்சென்று, தம்மைத்தாமேமறந்து உழைப்பது அறியாமையேயன்றி அது ஒருபொழுதும் பரோபகார மாகமாட்டாது. ஆதலினால் இவ்வாறான பெண்களைப்பற்றி நாம் பேசாமல், உலகவழக்கை மீறாமல் பரோபகார மின்னதென்று நன்றாயறிந்துசெய்த சில உத்தமிகளைப்பற்றிமட்டுந்தான் எழுதுவோம்.

"செல்லுக் குமிழுண்டு நீர்க்கு நுரையுண்டு
பல்விதழ் பூவிற்கு முண்டு;''

என்றவண்ணம் இவ்வுலகத்தில் குற்றஞ்சிறிது மில்லாததொன்று மகப்படா ததலால், அவரவர்களிடத்திலுள்ள குற்றத்தைமறந்து, எல்லோர்க்கு மினியகுணங்களைமட்டுஞ் சுருக்கமாக எழுதுவோம்.

பரோபகாரஞ்செய்வதினா லென்னபயன்? எத்தனைபேர் பரோபகாரஞ்செய்து எல்லாம் காட்டிலெறித்த நிலவைப்போலவும், களரிற்பெய்த மழையைப்போலவும் வீணாய்விடுகின்றது என்று அதைச் சிலர் வெறுப்பதுண்டென்றாலும், இதனால் நன்மைவிளைவதே அதிகமாதலால் நாமிவ்வாறு நினைப்பது கூடாது.

ப்ளாரென்ஸ் நைத்திங்கேல் என்னும் பரோபகாரி.

இந்த இந்துதேசத்தில் ராஜப்பிரதிநிதியாக இருந்து ராஜ்யபரிபாலனஞ் செய்த டப்பெரின்பிரபு அவர்களின் மனையாட்டியாகிய டப்பெரின் பெருமாட்டியைப்பற்றி நீங்கள் கேள்வியுற்றிருக்கலாம். தங்கள் வீடுகளுக்குக் கைதேர்ந்த வைத்தியர்களை வரவழைத்து வைத்தியம் பார்த்துக்கொள்ளச் சக்தியில்லாத உயர்ந்த ஜாதி ஸ்திரீகளுக்கு, நோய்கள்வந்தால், அக்காலங்களில் அவர்களுக்குத் தங்கியிருக்க நல்ல இடமும், தகுந்தபடி வைத்தியோபசாரம்செய்ய நல்ல வைத்தியர்களும், சுலபமாய்க்கிடைக்கும்படியாக அவர் வைத்திய சாலைகள் ஸ்தாபித்தவிவரமும் பலருக்குந் தெரிந்திருக்கலாம்.

லேடி டப்பெரின்.

ஸ்திரீ வைத்தியர்களையும் வைத்தியோபசாரம்செய்யும் தாதிமார்களையும் உங்களில் பலர் பார்த்திருக்கலாம். அவர்களுடைய புத்திநுட்பமும், பொறுமையாய்ப் பரிகாரஞ்செய்யுங் குணமும், நோயாளியின் வருத்தத்தை மெதுவாய்ப் போக்கிச் சவுக்கியமுண்டாக்குகிற விதமும், உங்களுக்கு நேரில் நன்றாய்த் தெரிந்திருக்கலாம். இந்துதேசத்தில் உயர்ந்த ஜாதி ஸ்திரீகளுக்கு வைத்தியசாலை யென்பது இப்பொழுது தான் புதிதாக ஏற்படுத்தப்பட்டது. உயர்ந்தஜாதி ஸ்திரீகளுக்காகவே அவை முக்கியமாய்க் கட்டப்பட்டன. ஏனெனில், மற்ற ஸ்திரீகள் எல்லாத் தேசங்களிலும் வைத்தியசாலைகளினாலாகும் நன்மைகளையும் சவுக்கியத்தையும் அடைந்திருக்கிறார்கள்; அப்படியிருக்க இத்தேசத்து ஸ்திரீகள்மாத்திரம் நாகரிகம் பெற்றநாட்டில் இந்தப் பெரிய நன்மையைப் பெறாமலிருப்பது உசிதமல்லவே.

இத்தேசத்திலும், மேரி கார்பெண்டர், பிளாரென்ஸ் நைத்திங்கேல், லேடி டப்பெரின் இவர்கள்போன்றபெருமாட்டிகள் உண்டாவார்களென்று எழுதி யிருக்கிறார்கள். டபெரின் பெருமாட்டியைப்பற்றியும் அவர்செய்த காரியங்களைப் பற்றியும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாமாயினும், நைத்திங்கேல் என்பவளைப்பற்றி உங்களுக்கு அவ்வளவாகத் தெரிந்திராது. டப்பெரின் பெருமாட்டி இந்துதேசத்து ஸ்திரீகளுக்குச் செய்ததுபோலச் செய்வதற்கு, மிக்க செல்வமும் செல்வாக்கு முள்ளவராயிருப்பவர் வேண்டுமென்று நீங்கள் சொல்லுவீர்கள்.

அவளைப்போலாவதற்கு நாம் எதிர்பார்க்கவேணுங்கூடுமா? கூடாதுதான். நீங்கள் நைத்திங்கேல் என்னும் பெண்மணியைப் பற்றிக் கேள்வியுற்றிருப்பீர்களானால், அம்மாதிரி நடக்கத்தக்கவர்கள் சிலரேயன்று, பலரிருக்கின்றனரென்று நீங்களே சொல்லுவீர்கள். அந்தப்பெருமாட்டி இப்போது ஜீவித்திருக்கிறார்; ஆனால் தள்ளாதவயது; தேகசவுக்கியமும் தப்பியிருக்கிறது. அப்பெருமாட்டி இளமையில் கஷ்டப்பட்டுப் பலகாரியங்கள் செய்திராமற்போனால், இப்பொழுது இந்துதேசத்தில் உயர்ந்தஜாதி ஸ்திரீகளுக்கு வைத்தியசாலைகளுண்டாக இடமேயிராது. வைத்திய சாலைகளில் நோயாளிகளுக்கு உபசாரஞ்செய்யும் தாதித்தொழில், உயர்ந்த ஜாதியில் பிறந்தவர்களும் படிப்புள்ளவர்களுமான பெண்கள் கையாளக்கூடிய தென்பதை, முதல்முதல் இப்பெருமாட்டி தாமே அனுஷ்டித்துக் காட்டினார். அத்தொழில் செய்ததனால் இகழப்படுவதுபோய், அவர் ஐரோப்பியர் அனைவராலும் கொண்டாடப்பட்டுக் கனப்படுத்தப்பட்டார். சக்கரவர்த்தினியாரும் அவருடைய உதாரகுணத்திற்கு வியந்து மேலாகக் கொண்டாடினார்.

இப்படிப்பட்ட பெருமைபெற்றவரான ப்ளாரெஸ் நைத்திங்கேல் 1820ஞு பிறந்தவர். அவர் இங்கிலாந்தில் மிக்க செல்வவானான ஒருபிரபுவினுடைய இரண்டாவது மகள். அம்மகளுக்குத் தந்தை தாமே வெகு கருத்தாய்க் கல்வி கற்பித்துவந்தார். அம்மகள் சுதேசபாஷையொன்றே படிப்பது போதாதென்று இத்தேசத்துப்பெண்களுக்கு ஸம்ஸ்கிருதம், இந்துஸ்தானி, தெலுங்கு கன்னடம்முதலிய பாஷைகளைக் கற்பிப்பதுபோல, தந்தை அவளுக்கு ப்ரென்சு, ஜெர்மன், இத்தாலியன், லத்தீன், க்ரீக் முதலிய பாஷைகளைக் கற்பித்தார். கணிதசாஸ்திரமும் சங்கீதமும்கூடக் கற்பித்தார். அன்றியும் அச்சிறுமி புத்தகங்களைப் பார்த்துப்படித்த சங்கதிகள் சரிதானென்று பிரத்தியக்ஷமாய்க் காணும்பொருட்டு அவள் புத்தகங்களில் படிக்கிற நாடுகளுக்கும் நகரங்களுக்கும் தந்தை அவளை நேராகவே அழைத்துக்கொண்டு போனார்.

ஆமுடையான்செத்தவளுக்கு மருத்துவச்சி தயவென்ன.

அவள் தந்தையுடனே எகிப்து தேசத்துக்கும் போயிருந்தாள். அவ்விடத்திலும் கேவலம் தன் விநோதத்தையே பாராட்டாமல் தான்கண்ட நோயாளிகள் பலருக்கு உபசாரம்செய்து அவர்களுக்கு ஏற்ற நல்வார்த்தை சொல்லிவந்தாரென்கிறார்கள்.

ப்ளாரென்ஸ் நைத்திங்கேல் தமது இளமைப்பருவத்தை வெகு அழகாகப் போக்கினாள். அப்பொழுது அவள் வசித்தமாளிகை ஒரு மேட்டுத்தாக்கான விடத்திலிருந்தது. அம்மாளிகையைச் சுற்றி மலைகளும் குன்றுகளும் காடுகளும் அடர்ந்திருந்தன. அங்கே அழகாக நதியொன்று பெருகுகின்றது. இங்கிலாந்தில் இந்த இந்துதேசத்தி லிருப்பதுபோல நதிகள் அத்தனை விசாலமின்றிக் குறுகியவைகளாயிருந்தாலும், எப்போதும் வெள்ளம் பெருகிக்கொண்டிருப்பதால் அவற்றின்காட்சி வெகு அழகாயிருக்கும். அம்மாளிகை இருநூறு முந்நூறு வருஷங்களுக்குமுன்னே கட்டப்பட்டது. இச்சென்னையிலுள்ள கலசமகல் அவ்வளவு பெரியதாயிருக்கும். அதைச்சுற்றியுள்ள நிலமெல்லாம் வெகு அழகாகச் சீர்ப்படுத்தப்பட்டிருந்தது. அந்நிலத்தில் நடுவே பசும்புற்களும் ஓரங்களில் பூஞ்செடிகளும் நன்றாகக்களைவெட்டிப் பயிராக்கப்பட்டிருந்தன. பக்கங்களில் பெரிய நிழல்கொடுக்கு மரங்கள் வளர்ந்திருந்தன. இங்கிலாந்தில் எளிய நாட்டுக்குடிகள்கூடத் தம்குடிசையையும் அதையடுத்த தோட்டத்தையும் சுத்தமாயும் அழகாயும் வைத்துக்கொள்ள வெகு விருப்பங்கொண்டவர்கள். அப்படியானபோது நைத்திங்கேல் பெருமாட்டியின் மாளிகையில் குப்பையும், கிழித்தெறிந்த கடிதத்துண்டுகளும் சிறிதளவும் காணப்படாமல் நிர்மலமாயிருந்ததென்பதை நாம் சொல்லவேண்டுமா? அம்மாளிகையில் வர்ணம்போன சன்னல்களும் கீல்போன கதவுகளும் ஒருக்காலுங் கிடையா. இப்படிப்பட்ட வீட்டில் ஏவினவேலையைச் செய்வதற்குப் பலவேலைக்காரர்கள் கைகட்டிக் காத்திருக்கிறார்கள். நிர்விசாரமாய்ப் புத்தகங்களிலும் பாட்டிலும் பொழுது போக்கலாம். விலையுயர்ந்த ஆடையாபரணங்கள் வேண்டுமளவு வாங்கித் தரித்துக்கொள்ளவும், இஷ்டமானபோது சிறந்த கணவனைத்தேடிக் கலியாணஞ் செய்துகொள்ளவும் பொருள் யதேஷ்டமாயுண்டு; ஆனதுபற்றி விசாரமற்று வீட்டிலேயே சுகமாய்ப் பொழுது போக்கிக்கொண் டிருக்கலாமல்லவா?

ஆனால், உண்மையில் அவர் எப்படிப் பொழுதுபோக்கினாரென்று பார்ப்போம். அவர் சிறுபிராயம் முதற்கொண்டே, தம் வீட்டிற்குச் சமீபத்தில் எளிய ஜனங்கள் யாவராயினும் வருத்தப்பட்டால், அந்தவருத்தத்தைப் பார்க்கப்பொறாமல் தாமும் வருந்தித் தன்னாலான உதவி செய்தாரென்றும், எளியவர்களுடைய வீட்டிற்குதினந்தோறும்போய் அவர்களுடைய க்ஷேமங்களை விசாரித்து வந்தாரென்றும், அடுத்த கிராமங்களிலுள்ள பள்ளிக்கூடங்களுக்கு வேண்டுமென்று தாமேபோய் பலவருஷகாலம் எளியவர்களுக்குப் படிப்புச் சொல்லிவந்தாரென்றும், சொல்லியிருக்கிறது.

இங்கிலாந்து தேசத்துப்பெண்கள் வெகுவாய் 18-வயதானால் பாடசாலையைவிட்டு உலக வியாபாரத்தில் புகுவது வழக்கம். இப்பெருமாட்டிக்குப் பதினெட்டுவயதானபோது தந்தை அவளை லந்தன் நகரத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் மகாராணியாருக்கு ஒரு பரிசாக அளித்தார். அந்தச்சமயத்தில் லந்தர் நகரத்துப் பெருமாட்டிகள் பலர் அந்தச் சிறப்பைக்கண்டு கொண்டாடினார்கள்.

ஆமுடையான் பலம்இருந்தால் குப்பையேறி சண்டைபோடலாம்.

லந்தன் நகரத்திலிருந்தபோது நைத்திங்கேல் பெருமாட்டி அந்தநகரத்தில் நடக்கும் விருந்து திருவிழாமுதலிய விநோதங்களுக்குச் சென்று பொழுதுபோக்குவதை விட்டு, அவ்விடத்திலுள்ள வைத்தியசாலை வித்தியாசாலைகளுக்கும், சீர்திருத்தம் செய்வதற்காக ஏற்படும் சங்கங்களுக்கும்போய் வருவதிலேயே பொழுதுபோக்கிவந்தார். லந்தன் நகரத்திலிருந்து எடிம்பரோ நகரத்திற்கும், அங்கிருந்து ஐரோப்பாகண்டத்திலுள்ள மற்றத் தேசங்களுக்கும்போய், தற்காலத்திற்கும் பிற்காலத்திற்கும் உபயோகமான பலவிஷயங்களைத் தெரிந்துகொண்டார். பெண்களுடைய மனதில் சிறந்தவிஷயங்கள் தோன்றினால் அது ஒருக்காலும் வீண்போவதில்லை; அவை வெகு சிறப்பாக வெளித்தோன்றிப் பலநன்மைகளை விளைவிக்கின்றனவென்று உலகத்தில் சொல்வதுண்டு; இந்த நீதிமொழியின் உண்மையை வெளிப்படுத்த நைத்திங்கேலுடைய சரித்திரமே ஒரு சிறந்த நிதர்சனமாயிருக்கின்றது.

1851௵ சிறந்த பலபொருட்காட்சிசாலை ஒன்று ஸ்தாபித்த நிமித்தம் ஐரோப்பாகண்டம் முழுதும் யாவரும் திருவிழாக் கொண்டாடி விடுமுறையா யிருக்கையில், படிப்பினாலும் பிறப்பினாலும் எங்கும் ஒரு சிறந்த நக்ஷத்திரம்போல விளங்குகின்ற நைத்திங்கேல் பெருமாட்டி ரைன் நதிக்கரையில் கைஸர்வார்த்திலுள்ள ஒரு வைத்தியசாலையில் சென்று அங்கே மூன்றுமாதகாலம் இராப்பகல் ஓயாமல் நோயாளிக்கு உபசாரம் செய்வதும், ஒரு வைத்தியசாலையை நடத்துவதற்கு வேண்டியமுறைகளைக் கற்பதுமாகக் காலங்கழித்தார். மிகுந்த செல்வமுடையவரான இச்சிறுமியைப் போல வைத்தியசாலைவிஷயங்களில் அவ்வளவு திறமையாகப் பரீக்ஷைகொடுத்துத் தேறினவர் ஒருவருமில்லையென்றும், தாம் கற்கவேண்டியவிஷயங்கள் எல்லாவற்றையும் அவர் வெகுநன்றாகக் கற்றறிந்தாரென்றும், அவரைப்பற்றி அந்த வைத்தியசாலைத்தலைவர் சொல்லியிருக்கிறார்.

இப்படியாக ஜர்மானியாவில் பலகாரியங்கள் செய்துவிட்டு, அத்தேசம் தேகத்துக்கு ஒத்துக்கொள்ளாமல் உடம்பு கொஞ்சம் அசவுக்கியமானதனால், தேகசவுக்கியத்தின்பொருட்டு தாய்தந்தையரும் சகோதரரும் வசிக்கும் சுதேசத்திற்குத் திரும்பிவந்தார். ஆயினும் அவர் அங்கே நெடுநாள் நிலைத்திருக்கவில்லை. லந்தன்நகரத்தில் பெரிய பிரபுக்களின் பெருமாட்டிகளுக்காக ஏற்பட்ட வைத்தியசாலையில் இவரது உதவி வேண்டியிருந்தமையால் அவ்விடம் சென்றார். இப்படிப்பட்ட வைத்தியசாலை விஷயத்தில் சீமாட்டிகள்பலர் தங்களாலானவரையில் பொருள்கொடுத்துத்தான் உதவிசெய்வார்கள்; இந்த நைத்திங்கேல் பெருமாட்டியோ தன் உடலையேகொடுத்து உதவிசெய்தார்.

அந்த வைத்தியசாலை விசாரணைமுழுமையும் தாமே மேற்கொண்டு பரிபாலித்துவந்தார். அவருடைய இஷ்டர்கள் அங்கே போய்ப்பார்த்தபோது, ஒருபுறத்தில் தாதிமார்களுடன்கூடி உபசாரஞ்செய்வதும், ஒருபுறத்தில் வந்த கடிதங்களைப்பார்த்துப் பிரதியுத்தரங்கள் எழுதுவதும், ஒருபுறத்தில் சிகிச்சைக்குவேண்டிய மருந்து சீட்டுகள் எழுதுவதும், ஒருபுறத்தில் கணக்குகள்பார்ப்பதும், இன்னும் பலதொல்லைகளுக்கு எதிர்நிற்பதுமா யிருந்தாரென்று சொல்லுகிறார்கள்.

நைத்திங்கேல் தம் சொந்தமாளிகையில் வாழும் சுகவாழ்க்கைக்கும், லந்தன்நகரத்தில்வாழும் வாழ்க்கைக்குமுள்ள வேற்றுமை இப்படிப்பட்டதென்று இத்தேசத்த

ஆயக்காரனுக்கு பிரமகத்திக்காரன்சாக்ஷி.

வர்களுக்கு அத்தனைதெளிவாக விளங்காது. இந்த இந்துதேசத்தில் ஆகாயம் எப்பொழுதும் நிர்மலமாய் நல்லகாற்று வீசிக்கொண்டிருக்கிறதே. லந்தன்நகரத்திலோ புகையும் பனியும் கலந்த காற்றுதான் எங்கும் நிறைந்திருக்கும்; அதைத்தான் எல்லாரும் மூச்சின்வழியாகப் பிராணாதாரமாய் உட்கொள்ளவேண்டும். நைத்திங்கேலுடைய சொந்தகிராமத்தில் மிகவும் சவுக்கியமான இரண்டு பெரிய அரைகள் அவருக்கு உண்டு. அவ்வரைகளில் அவசியமான கட்டில்களும் நாற்காலிகளும் போடப்பட்டு ஏறியிறங்குவதற்கு ஏற்றபடிகளும் அமைந்திருக்கும். லந்தன்நகரத்திலோ கட்டில் நாற்காலி போடவேண்டியவிடங்களில் நோயாளிகளுடைய படுக்கைகளே மிகுதியாயிருக்கும். அவ்விடத்து மாளிகைகள் மிகவும் உயரமானவையாகையால் மேல்மாடிக்கும் கீழ்மாடிக்கும் ஏறியிறங்குவதற்கே தாதிமார்களுக்கு மிகுந்த பிரயாசையாகும்.

இப்படியிருக்கையில் இங்கிலாந்துக்கும் ருஷியாவுக்கும் சண்டை யுண்டாயிற்று. பிராஞ்சுக்காரர் அங்கிலேயருடன் சேர்ந்து ருஷியாதேசத்தார்க்கு எதிரியானார்கள். நாள்தோறும் அந்த சண்டையைப்பற்றிய சமாசாரமும், அந்தச் சண்டையில் போர்வீரர்கள் பலர் அடிபட்டதும், அவர்கள் ஆதரிப்பவரின்றி தங்குவதற்கு சவுக்கியமான இடமுமில்லாமல் அவஸ்தைப்பட்டதுமாகிய மற்ற சமாசாரங்களும் இங்கிலாந்துக்கு வந்துகொண்டேயிருந்தன. ஆபத்துவேளையில் உதவி செய்பவ ரில்லையென்று அவர்கள் புலம்பியது. பிளாரென்ஸ் நைத்திங்கேலுடைய மனதை மிகவும் வருத்தியதனால், அவர் முப்பத்தேழு தாதிமார்களைக் கூடவே அழைத்துக்கொண்டு தாம் அவர்களிடம் போகிறதென்று தீர்மானித்தார். அந்த முப்பத்தேழுபேர்களில் பலர் யோக்கியதையில் அவருக்குச் சமானமானவர்கள். அவர்களெல்லாரும் சுதேசத்திலுண்டான சவுக்கியத்தை விரும்பாமல் வெகு சந்தோஷமாகவே தூரதேசம் போகத் துணிந்தார்கள். தாம் போகுமிடம் பலநோய்களுக்கும் மற்றும் பல அபாயங்களுக்கும் இடமானதென்பதையும் அவர்கள் கருத்தில் கொள்ளவில்லை. 1854௵ அக்டோபர்௴ 24௳யான செவ்வாய்க்கிழமை ஸ்குட்டேரி நகரத்தில் அவர்கள் இறங்கினார்கள்.

ஸ்குட்டேரி என்பது கான்ஸ்தாந்திநோபிலுக்கு நேரெதிரிலிருக்கிறது. அந்நகரத்தினது கோபுர மண்டபப்பிரகாரங்களும், மாளிகைகளும், பல விருக்ஷங்கள் அடர்ந்த தோப்புகளும் நடுக்கடலிலிருந்து பார்க்கும்பொழுது வெகு அழகாய்ப் பிரகாசிக்கும் அந்நகரத்தில் முக்கியமான வைத்தியசாலைகள் இரண்டுண்டு; அவை பொதுவைத்தியசாலை, பட்டாளவைத்தியசாலை என்பவையாம். அவை நோயாளிகளும் காயம்பட்டவர்களுமான தங்கள் மனிதர்களை வைத்துக்கொள்வதற்காக அங்கிலேயருக்குக் கொடுக்கப்பட்டன. அந்த வைத்தியசாலைகளின் ஸ்திதியைப் பார்த்தால் எப்படிப்பட்டவரும் அஞ்சத்தக்கதாயிருந்தது. அங்கே விஷச்சுரமும் விஷபேதியும் அதிகரித்திருந்தன. வைத்திய சகாயமும் கிடையாது, நல்ல உணவும் கிடையாது. அவ்விடத்தில் துன்பங்களும் வருத்தங்களும் நிமிஷத்துக்குநிமிஷம் விருத்தியடைந்தன. அந்தத் துன்பங்களைக் காதினால் கேட்கும்போதே உடம்புநடுங்குமென்றால் கண்ணாலே பார்த்தால் சொல்லவேண்டுமா. நைத்திங்கேல் பெருமாட்டியும் அவருடன் சென்ற மற்றத் தாதிமார்களும் ஸ்குட்டேரியிலுள்ள பட்டாள வைத்தியசாலைபோய்ச் சேர்ந்தார்கள். அது மிகப் பெரிதான ஒரு கட்டடம். அந்தப்பாசறை எவ்வளவுதூ

ஆயத்திலும் நியாயம் வேண்டும்.

ரம் பரவியதோ அவ்வளவுதூரம் அந்த வைத்தியசாலையும் பரவியிருந்தது. அதாவது நாலுமைல்தூரமென்கிறார்கள்.

அந்த வைத்தியசாலையிலிருந்த காயம்பட்ட போர்வீரர்கள் இந்தத் தாதிமார்களைக் கண்டவுடனே அவர்களை நல்வரவுகொண்டாடி அவர்களிடத்தில் மிகவும் நன்றி பாராட்டினார்கள். அவர்களுள் மிகவும எளியவனான ஒருவன் அவர்களைக் கண்டவுடனே கண்ணீர் பெருக்கி ஒரு வார்த்தை சொன்னான். அதாவது, இவர்களைக் கண்டபோது தனக்குத்தானே கண்ணீர்பெருகலாயிற்று. இங்கிலாந்துதேசத்துப் பெருமாட்டிகள் நம்மிடத்தில் பரிதாபப்பட்டு நமக்குச் சிகிச்சா உபசாரம்செய்ய 2000-மைல் தூரமான இவ்விடத்திற்குவந்தார்களே; இந்த ஒரு விஷயத்தை நினைத்தாலே நமக்கு நோயெல்லாம் நீங்கித் தேகம் அனுகூலப்பட்டதுபோலாகின்றது என்றான்.

அந்தத் தாதிமார்கள் அவ்விடம்போய்ச் சேர்ந்த சிறிதுநேரத்துக்கெல்லாம் அவர்களுடைய கவலைகளும் காரியங்களும் மிகவும் அதிகமாயின. போர்க்களத்திலிருந்து காயம்பட்ட போர்வீரர் 600-பேர்வந்துசேர்ந்தார்கள். நைத்திங்கேல் பெருமாட்டி தன் விசாரணையிலுள்ள அத்தனை நோயாளிகளுக்கும் வேண்டிய பரிசுத்தமான உடைகளுக்கும் உணவுக்கும் தக்க ஏற்பாடுகள் செய்தார். அந்த வைத்தியசாலைக்குச் சமீபத்தில் ஜலசவுக்கியமுள்ள வீடு ஒன்று வாங்கிக்கொண்டு அதில் அத்தனைபேருக்கும் வேண்டிய உடைகளை வெளுத்து உலர்த்திக்கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார். அவர் அவ்விடம் சேர்ந்த பத்துதினத்திற்குள் சமையல்வீடு ஒன்று சித்தம் செய்து அதில் நாள்தோறும் எண்ணூறுபேருக்கு நல்ல உணவு ஆக்கி யளிக்கும்படி திட்டம் செய்தார். வைத்தியசாலையில் நோயாளிகளுக்கு இந்தத் தாதிமார்களேபோய்ப் பாய் தலையணைகள் தைத்துக்கொடுத்து உபசரித்தார்கள். தாதிமார்களுடைய உதவி அவர்களுக்கு இன்னும் மிகுதியாகவேண்டியிருந்ததனால், நைத்திங்கேலுடன் கூடி உபசாரம் செய்வதற்காக ஸ்தான்லி என்பவர் 50-தாதிமார்களுடன் அவ்விடம்வந்து சேர்ந்தார். அவர்களுடைய வைத்தியோபசாரம் மிகவும் அதிகமாகத் தேவையாயிருந்தது. ஏனெனில் பாஸ்பரெஸ்டார்டனெல்ஸ் என்னுமிடங்களில் ஏழெட்டு வைத்தியசாலைகளிருந்தன. அந்த வைத்தியசாலைகளில் நோயாளிகளும் காயம்பட்டவர்களும் 500-பேர் வந்துசேர்ந்தார்கள். இதனோடு கிரிமியாவிலிருந்து 1000-பேர்வந்து சேர்ந்தார்கள். நைத்திங்கேலுடைய வைத்தியசாலையில்மாத்திரம் 3000 நோயாளிகளிருந்தனர். உங்களுடைய வீட்டில் இரண்டு மூன்றுபிள்ளைகளுக்கு ஒருகால் நோய்வந்துவிடுமானால் அப்போது உண்டாகும் அலைச்சல் எத்தன்மையதாயிருக்கின்றது. அதைக்கொண்டே அத்தனை நோயாளிகளுடன் இந்தப் பெருமாட்டிகள் பட்டபாடு இப்படிப்பட்டதென்பதை நீங்கள் ஒருவாறு தெரிந்துகொள்ளலாம். நைத்திங்கேல்பெருமாட்டி சற்றுநேரங்கூட ஓரிடத்தில் உட்காராமலே ஒருநாள் முழுதும்நின்றுகொண்டே வைத்தியோபசாரம் முதலிய காரியங்கள் செய்துவருவார். இதற்கிடையே விஷபேதியும்விஷசுரமும் அதிகமாயின. ஒரு மாதகாலத்திற்குள் ஏழெட்டு வைத்தியர்கள் இறந்துபோனார்கள்; மிகுந்திருந்தவர்கள் எட்டேபேர். தாதிமார்களில் மூன்றுபேர் மிகவும் தேக சவுக்கியம் தப்பி அபாயமான ஸ்திதியிலிருந்தார்கள். "மிகவும் கொடியதான நோய் எவ்விடத்திலிருக்கிறதோ அவ்விடத்தில் ஒப்பில்லாத உத்தமியான நைத்திங்கேல் பெருமாட்டி காணப்படுவது நிச்சயம்" என மெக்டானல்டு என்பவர் எழுதியிருக்கிறார்; பிராணன்

ஆயத்துக்குகிளை யேத்துக்குக்குட்டி.

THE

Soldiers' Friend.

FLORENCE NIGHTINGALE ON HER NOCTURNAL ROUNDS

"On England's annals, through the long
Hereafter of her speech and song,
That light its rays shall cast
From Portals of the past.

A lady with a lamp shall stand
In the great history of the land,
A noble type of good
Heroic womanhood."—*Longfellow.*

ப்ளாரென்ஸ் நைத்திங்கேல் இரவில் கையும் விளக்குமாய் நோயாளிகளை விசாரித்துவருதல்.

போகிறதருணமானாலுங்கூட அவர்களுக்கு எதிரே இப்பெருமாட்டி வந்து நிற்பாளானால் உடனே அவர்களுக்கு ஒருவிதமான உற்சாகமுண்டாகின்றது. நாம் சொல்லுவது அதிவாதமென்று எண்ணவேண்டாம்; அந்த வைத்தியசாலை வியாபாரங்களை நடத்தியவிஷயத்தில் அவர் ஒரு அற்புத சக்தியுள்ளதேவதையென்று சொல்லத்தக்கவராயிருந்தாரேயன்றி வேறல்ல. அந்த வைத்தியசாலையில் அவர் நோயாளிகளைப் பார்த்துக்கொண்டு போகும்போது அந்தந்தப் பந்தியில் படுத்திருப்பவர் ஒவ்வொருவரும் அவரைப்பார்த்துப் பேரானந்தமடைந்து முகமலர்ச்சிகொள்வார்கள். இராப்பொழுதாகி மற்ற வைத்திய உத்தியோகஸ்தர்கள் எல்லாரும் தங்கள் இருப்பிடங்களுக்குச் சென்று வைத்தியசாலைமுழுதும் நிச்சப்தமாயிருக்கும் இருண்டுபோனதருணத்தில் இப்பெருமாட்டி தனியே ஒரு சிறு விளக்கும் கையுமாய் அவ்விடத்தில் சுற்றிப் பார்த்துக்கொண்டிருக்கக் காணப்படுவார். இப்படி பார்த்துவந்த கோலத்தை இச்சஞ்சிகையின் முதற்படத்தில் காண்க. அவருடைய மெலிந்த தேகத்தைப் பார்த்தவர்கள் அவரது சுக சரீரத்திற்கு என்ன அபாயம் வருகிறதோவென்று திகில்படாதவர்களில்லை. ஆயினும் அப்பெருமாட்டி உத்தம ஸ்திரீகளுக்குரிய உதாரபுத்தியோடும், சாந்தகுணத்தோடும், நிதானமும் ஊக்கமும் மனவுறுதியும் உடையவராய்ப் ஸ்திரீகள் செய்தற்கு அருமையான காரியங்களைச்செய்துவந்தார்.

ஏழுமாதகாலம்ஓயாமல் உழைத்ததனால் கிரிமியாதேசத்துச் சுரம்கண்டு ப்ளாரென்ஸ் நைத்திங்கேல் இரண்டுவாரம் மிகவும் வருந்தினார். பிறகு வரவர தேகம்மெலியத்தொடங்கியது. ஆயினும் அவர் நோய்கொண்டு படுக்கையாயிருக்கையிலேயே, என்னுடம்பில் அபாயகரமான நோய் ஒன்றுமில்லையென்றே சொல்லிக்கொண்டிருந்தார். தேகசவுக்கியத்தைப் பார்த்துக்கொள்ளும்படி அவரைப் பலவாறு வேண்டிக்கொண்டார்கள். யார் என்னசொல்லியும் தான் மேற்போட்டுக்கொண்ட அவ்வேலையைவிட்டுப் போகவேண்டுமென்கிற கருத்து அவருக்கு உண்டாகவேயில்லை. அதுகண்டு ஒரு பெரியவர் தமது சிறு கப்பலைக் கொடுத்து அதிலேறிக்கொண்டு கடலில் உலாவி சற்று நல்ல காற்றுப்பட்டால் ஆரோக்கியமாயிருக்குமென்றார். அப்பொழுது நைத்திங்கேலுடைய தேகஸ்திதி கப்பலில் அயலார் தூக்கிக்கொண்டு போய்விடும்படியான தசையிலிருந்தது. சீக்கிரம் அவருக்குத் தேகம் சவுக்கியமாகவேண்டுமென்று மனப்பூர்வமாக சுவாமியைப்பிரார்த்தித்துக்கொண்டு பலர்நிற்க, சிலர் மெதுவாக அவரைக் கையிலெடுத்துக்கொண்டு கப்பலில்கொண்டுவிட்டார்கள்.

நைத்திங்கேல் போர்ச் சேவகர்களுக்கு உபசாரம் செய்துகொண்டிருக்கும்பொழுது அவருக்கு நமது சக்கரவர்த்தினியார் ஒரு திருமுகம் எழுதியிருக்கிறார். அதாவது, இந்தப் போர்வீரர்களிடத்தில் அபிமானமும், அவர்கள்படும் வருத்தத்தில் பரிதாபமும், அவர்களுடைய தைரிய சௌரிய பராக்கிரமங்களுக்காக சந்தோஷமும் நான் கொண்டிருக்குமளவிற்கு அதிகமாக மற்றெவர்க்குமிராது என்பதாம். நைத்திங்கேல் பெருமாட்டி செய்துவரும் உபகாரத்தை நன்கு மதித்து அதற்கு அறிகுறியாக அவருக்கு மகாராணியார் ரத்தினங்களிழைத்த ஒரு பதக்கத்தைப்பரிசாக அளித்தார்; அதன்மத்தியில் கருணையுடையவர்களைக் கடவுள் கடாக்ஷிப்பாராக என்னும் கருத்துள்ள வாக்கியமும், மிகப் பளபளப்புள்ளமூன்று வைரக்கற்களால் சூழப்பட்ட கிரிமியா என்னும் சொல்லும் எழுதப்பட்டிருந்தன. அன்றியும் சுல்தான் ரத்தினங்களிழைத்த ஆரமொன்று வெகுமதியளித்தார். 1885௵ கடைசியில் உலகத்தார்

க்குச்செய்த உதவிக்குப் பதிலாக அவர் விஷயத்தில் நன்றிபாராட்டி ஏதேனும் ஒரு சம்மானஞ் செய்யவேண்டுமென்று தீர்மானித்து உடனே "நைத்திங்கேல்நிதி" என்று பெயரிட்டு மிகுந்ததனம் சேர்க்கப்பட்டது. ஆயினும் அப்பெருமாட்டி தன் சொந்த நன்மைக்காகத்தான் ஒன்றும் பெற்றுக்கொள்வதில்லையென்று மறுத்ததனால், அப்படிச் சேர்க்கப்பட்ட நிதியை, தாதித்தொழிலும், வைத்தியோபசாரம் செய்யுந் தெர்ழிலும் பயிற்றுவதற்கு ஒருசாலை ஸ்தாபித்து அதுவிஷயத்தில் அதை உபயோகிக்கும்படியாகத் தீர்மானிக்கப்பட்டது.

அவ்விடத்தில் செய்யவேண்டியகாரியம் முடிவானபிறகு நைத்திங்கேல் பெருமாட்டிசுதேசத்திற்குத் திரும்பினார். திரும்பி வரும்போது வழியில் வீணாடம்பரங்கள் ஒன்றையும் வேண்டாதபடி அடக்கமாகவேசென்று 1886௵ ஆகஸ்டு௴ 15௳ இங்கிலாந்துபோய்ச் சேர்ந்தார். சேனாவீரர் வைத்தியசாலையில் அவரிருந்த அறைகள் அவர்விட்டுவந்தபோது எந்தஸ்திதியிலிருந்தனவோ அதே ஸ்திதியிலேயே நாளைக்குமிருக்கின்றன.

நைத்திங்கேல் பெருமாட்டி தமக்கு வெகுமதி ஒன்றும்வேண்டுவதில்லையென மறுத்தபோது அவரைப்பற்றி அவரது நேசர் ஒருவர் எழுதியிருக்கிறார். அதாவது, "நைத்திங்கேல் தாம் உழைத்து உபசாரம் செய்யத் தகுந்த ஸ்தானமேதாவது ஒன்று கிடைத்தால் அதுவே தமக்கு ஏற்ற வெகுமதியாகக்கொண்டிருக்கிறார். தாம் செய்யத்தொடங்கிய நன்மை மிகுதியாய் எங்கும் பரவும்படி செய்யவேண்டுமென்பது அவரது கோரிக்கை. ஏதாவது தக்கதொழிலொன்று செய்யும்படி கொடுப்பதைப் பார்க்கிலும் பெரிய உபகாரம் அவருக்கு வேறில்லை" என்பதாம். அந்த உபகாரம் அவர் கோரிக்கையின்படியே கிடைத்திருக்கின்றது. இந்துதேசத்து ஸ்திரீகளுக்கு வைத்தியசகாயம் செய்வதற்காக லேடி டப்பெரின் நிதி ஏற்பட்டதே அவருக்குப் பெரிய காரியமாயிற்று. அது இங்கிலாந்தில் முப்பதுவருஷங்களுக்குமுன் ஏற்பட்டது. நைத்திங்கேல் பெருமாட்டியைப்போல அந்தவழியில் பழகுகின்ற சுதேசஸ்திரீகள் இன்னும் அருமையாகவேயிருக்கின்றனரென்பது உண்மையே. ஆயினும் உங்களுக்குத் தெரிந்திருப்பதைவிட அதிகமான ஸ்திரீகள் அதுவிஷயத்தில் முயன்றிருக்கிறார்கள். "இண்டியன்மாகஜீன்" என்னும் பத்திரிகை சென்ற அக்டோபர் சஞ்சிகையில், சுதேசஸ்திரீ ஒருத்தி கல்கத்தா டப்பெரின் அந்தப்புர ஸ்திரீ வைத்தியசாலையில் வைத்தியத்தலைவராயிருந்த போகோ என்பவருக்குப் பிரதியாக நியமிக்கப்பட்டாரென்றும் பதினைந்து பெண்கள் வைத்தியத்தொழில் கற்பதற்காக கல்கத்தா வைத்திய வித்தியாசாலையில் பிரவேசித்தார்களென்றும் சொல்லியிருக்கிறது. இந்தப் பதினைந்து பெண்களில் பலர் பிராமண ஸ்திரீகள்; அவர்களுள் மூன்றுபேர் தமிழில் பரீக்ஷைகொடுத்துத் தேறி அதிற் சேர்ந்தார்கள், மற்றவர்கள் அதற்கு வேண்டிய அவசியமான பரீக்ஷை கொடுத்துச் சேர்ந்தார்கள். அவர்கள் பத்துபேர் மாதம் 8-பவுன் வித்தியார்த்தி சம்பளம் பெறுகின்றனர், மற்றவர்கள் சம்பளம் பெறாமலே படிக்கின்றனர்.

திருப்பதி மஹந்து என்னும் ஔதாரி வைத்தியத்தொழில் கற்கும் பெண்களுக்கு வித்தியார்த்திவேதனம் மூன்று ஏற்படுத்தியதன்றியும், தாதித்தொழில் கற்பவருக்கு இரண்டு வேதனமும் கொடுப்பதாக ஏற்படுத்தினார்; இரண்டு பொன்பதக்கம் பரிசளித்தார். அன்றியும் திருப்பதியில் ஒரு வைத்தியசாலை ஸ்தாபிக்க இடங் கட்டிக்கொடுத்து அதற்குவேண்டிய சம்

ஆயிரக்கலம் நெல்லுக்கு ஒரு அந்துப்பூச்சிபோதும்.

பளத்தில் பாதிகொடுத்து வருவதாகவும் ஒப்புக்கொண்டிருக்கிறார். மஹந்துவைப் போன்ற ஒரு பெரிய சுதேசப்பிரபு லேடி டப்பெரின் பிரயத்தனம் செய்தகாரியத்திற்கு அனுகூலமாக இவ்வளவு வியாபாரம்செய்தது அவரது உதாரகுணத்தை வெளியிடுவதாகி மிகவும் திருப்திகரமாயிருப்பதன்றியும் மற்றவர்களுக்கு மேன்மேலும் உற்சாகமுண்டாக்குவதாயிருக்கிறது என்று மதிராஸ் மெயில் பத்திரிகையில் கண்டிருக்கின்றது. அமெரிக்காவிலே வைத்தியத்தொழில் கற்றறிந்த பண்டிதராமாபாய் என்பவள் இப்பொழுது பூனாவில் இந்து விதவை ஸ்திரீகளுக்கு ஒரு வைத்தியவித்தியாசாலை ஸ்தாபிக்கும்பொருட்டுத் திரும்பிவந்திருக்கிறாளாம். இன்னும் சில வருஷங்களில் சுதேசவைத்தியர்களென்பது இப்பொழுது இருப்பதுபோல் அருமையாயிராமல் எங்கும் சாதாரணமாகிவிடும். ஆயினும் வேலை செய்வதற்குப் போதுமான அத்தனைபேர் கற்றுத்தேறுவது கடினமாகும். இப்பொழுது நாம் முதலில் அறியாமையென்னும் துர்க்குணத்தைப் போக்கவேண்டும். படிப்பில்லாமலே நைத்திங்கேலும் அவருக்குச்சகாயமாயிருந்த நூறுபேர்களும் அவர் மேற்கொண்ட காரியத்தை நிறைவேற்றவல்லவர்களானார்களா? படிப்பினாலேயே பெண்கள் உலகத்தில் உயர்ந்தஸ்திதிக்கு வருவார்கள். உங்கள் பெண்களை எவ்வளவுகாலம்கூடுமோ அவ்வளவுகாலம் பாடசாலையில்படிக்கவிடுங்கள். பின்பு அவர்கள் படிப்பை விடாமல் வீட்டிலிருந்தே வேண்டுமளவு படித்துவரவேண்டும். நீங்களும் ஒழிவுவேளைகளில் வகுப்புவைத்துக் கொண்டு உங்கள் மனதில் தோன்றியிருக்கும் அருமையானவிஷயங்களை அவர்களுக்குப் பலவிதமாக விளங்கும்படி எடுத்துச் சொல்லி அவற்றாலாகிய நன்மைகள் பலவும் விளையும்படி செய்துவருவீர்களாக.

ஜனநெருக்கமும் அசுத்தமான காற்றும்.

மனிதருக்கு உணவில்லாவிட்டாலும் இரண்டொருநாள் உயிரோடிருக்கலாம். தண்ணீரில்லாமலிருப்பது அதனிலும் சற்றே வருத்தமாகும். ஆனால் நல்ல காற்றில்லாவிடில் உயிர்போயேவிடும். கல்கத்தா நகரதில் "இருட்டறை" என்று ஓர் அறையுண்டு. பங்காளதேசம் மகமதியருடைய ஆளுகையிலிருந்தகாலத்தில், கல்கத்தாவில் யாரேனுங் குற்றஞ்செய்தால் அவர்களைப்பிடித்து அந்த அறையிலே அடைத்துவைப்பது வழக்கம். அது பதினெட்டு அடி சதுரமானது. சுவரில்மட்டுந்தான் இரண்டு கவாக்ஷிகளுண்டு. அவற்றிற்குப் பலமான இருப்புக்கம்பிகளைவைத்து அடைத்திருக்கிறார்களாதலால் உள்ளே அடைபட்டவர்கள் வெளியேபோவது அசாத்தியம். 1756-ம் ௵ ஜூன்௴ 20௳-யில் அந்த நாட்டுக்கு அதிபதியாயிருந்த ஸுராஜடௌலா என்னும் நவாபு இங்கிலீஷ்காரர்மேல் கடுங்கோபங்கொண்டு அங்கிருந்தவீரர்களில் 146-பேரைப் பிடித்து இரவில் எட்டுமணிக்கு அதற்குள்ளே அடைத்துவிட்டான். அப்பொழுது அருங்கோடைக்காலம். அவ்வாறு அடைக்கப்பட்ட பத்துமணிநேரத்திற்குள்ளாக அவர்களுள் 123-பேர் இறந்துபோனார்கள், மிகுந்திருந்த 23-பேர்களும் குற்றுயிராய்த்தானிருந்தார்கள். அதிலிருந்த 146 - பேருக்கும் ஒவ்வொருவருக்கும் மூச்சுவிட நாற்பதுகன அடி வாயுதானிருந்ததாகையால் நல்ல காற்றில்லாமல் அவ்வளவுபேருக்கும் பிராணாபாயமுண்டாயிற்று.

இவ்வாறே இங்கிலாந்தில் லண்டன்நகரத்தில் வெஸ்ட்மினிஸ்டர் நகரக்காவல் சேவகனொருவன் 28 - குற்றவாளிகளைப்பிடித்து ஆறடிசதுரம் 5-அடி 10-அங்குலம் உயரமுள்ள இடுக்கமான ஒரு அறையில்

ஆயிரம்காக்கைக்கு ஒருகல்போதும்.

அடைத்துவைத்திருந்ததில் சிறிதுநேரத்திற்குள்ளே அவர்களுள் நாலுபேருக்கு மூச்சு அடைத்துக்கொண்டு திக்குமுக்கிட்டது!

இவற்ருல், மனிதர் மூச்சுவிட்டகாற்றை மறுபடியும் நாம் உட்கொள்ளுதல் தீதென்றும், அதுவே விஷமென்றும் பிரத்தியக்ஷமாய் ஏற்படுகிறது. இதுவுமன்றி ஒரு வைத்திய சாஸ்திரி மனிதர் விட்ட மூச்சுக்காற்றின் ஸாரத்தையெடுத்து அவற்றின் துளிகளில் சிலவற்றை முயல்களின் தோலுக்குள்ளேவிட்டுப்பார்த்ததில் அவைகள் உடனே இறந்துபோயினவாதலால் இந்த விஷம் மிகவுங் கொடியதென்று கண்டறிந்தார்.

ஆகையால் நாமெல்லோரும் வீடுகளிலும் ஆலயங்களிலும் ஒருபொழுதும் மிகவும் சிறிய அறைகளில் நெருக்கத்திலிருப்பது கூடாதென்றும், எப்பொழுதும் பெரிய அறைகளிலேயே இருக்க வேண்டுமென்றும், மனிதர் மூச்சுக்காற்று படுவிஷமுள்ளதென்றும் நன்ருய் அறிந்துகொண்டு நல்ல காற்ரேட்டமுள்ள விடங்களிலே வசிப்பதுநன்று.

பெண்கள் கல்விப்பயிற்சி.

நாளதுவருஷம் மார்ச்சுமீ 19உ சென்னைச் சர்வகலாசாலைப் பரீக்ஷைகளில்தேர்ந்த மாணுக்கருக்குப் பட்டப்பெயர் கொடுத்தகாலத்தில் அந்தச்சபையில் ஒருவராகிய ஸிங்கிளேர்துரையவர்கள்செய்த உபந்நியாசத்தில், பட்டம்பெற்றவர்களைநோக்கி நமது தேசத்துப் பெண்களுக்குக் கல்வி கற்றுக்கொடுப்பதைப்பற்றிச் சிறிது விளங்கச்சொல்லியிருக்கிருராதலால் அதை இதனடியில் மொழிபெயர்த்துத் தெரிவிப்போம்.

"நீங்கள் கல்வியை நன்ருய்க் கற்றிருக்கிறீர்கள். உங்களைப்போலவே உங்கள் பெண்பிள்ளைகளுக்குங் கற்றுக்கொடுப்பது நன்று. சென்ற இருபதுவருஷகாலமாக ஸ்திரீகள் வித்தை தலையெடுக்க எவ்வளவோசெய்யப்பட்டிருக்கிறது. அதுவிஷயத்தில் ஆதியில் பாடுபட்டவர்களுக்கு மிகுந்த பிரசித்தியுண்டு. ஆனுல் அதைப்பற்றி இன்னுஞ் செய்யத்தக்கவை எவ்வளவோ உண்டு. இப்பொழுது கல்விப்பயிற்சி செய்துவரும் பெண்கள் மிகச் சிலரேயாம். இந்த நன்முயற்சியை மேன்மேலும் நீங்களே செய்துகாட்டி அபிவிருத்திசெய்வீர்களாக. இதைவிருத்திசெய்யும்விஷயத்தில் உங்களாலான மட்டும் முயன்று பார்க்கவேண்டும். பாடசாலைகளிலே பெண்களைப் படிக்கவைத்தாலும்வைக்கலாம். அவர்களை அங்கே இன்னுஞ் சிலகாலமிருந்து நன்ருய்க் கல்வியைக் கற்றுக்கொள்ளும்படி செய்யாமல், சிறுவயதிலேதானே பாடசாலைக்குப்போவது கூடாதென்று தடுத்து நிற்கச்செய்வது இத்தேசத்தில் வழக்கமாதலால், அப்படிப்பட்டவர்களுக்கு நல்லறிவையுண்டாக்கும்படி தேசபாஷைகளிலே சிறியபுத்தகங்களையெழுதிக்கொடுத்துப் படிக்கும்படிசெய்ய உங்களுக்கு இப்பொழுது ஏற்றசமயம் வாய்த்திருக்கிறது. இங்கே கூடியிருக்கின்ற இந்தச் சர்வகலாசங்கத்தைச் சேர்ந்தவர்களுள் ஒருவர் தமது முதுமைப்பருவத்தில் எல்லோராலும் புகழத்தக்க இந்த நல்ல காரியத்திற்கென்று பாடுபடுகிறதைக்காண எனக்குச் சந்தோஷமுண்டாகிறது. நீங்களும் அதை முன்னுக்குக் கொண்டுவர வேண்டியதைப்பற்றிப் பாடுபடுங்கள். இதைத் தலையெடுக்கும்படி செய்வதற்கேற்ற கல்விகேள்வியை யுடையவர்கள் நீங்களேயாம். ஆதலினுல் நீங்கள் அப்படிச்செய்யுங்கள். தேசபாஷையிலே இன்பமாய்ப் படிக்கும்படி உபயோகமான பலவற்றை எழுதவேண்டும். உங்களால் கூடுமானுல் சிறந்த நீதிகளமையப்பெற்ற பல நீதிகதைகளைஎழுதலாம். அவ்வாருன புஸ்தகங்களிருந்தால் பெண்கள் வீண்பொழுதுபோக்காமல் அவற்றைப்படித்து நல்ல புத்திசாலிகளாகி, உங்களுக்கு இனியவாழ்க்கைத் துணையாகி, நீங்கள்படுகிற வருத்தங்களையறிந்து உங்களிடத்து உள்ளன்புபாராட்டி உங்களுக்கு எப்படிப்பட்ட சங்கடங்கள் நேரிடினும் உங்கள் கூடவேயிருந்து மனமுவந்து உங்களுக்குண்டாகும் வருத்தங்களையெல்லாம்போக்க வல்லவராவார்கள்."

ஆயிரம்கட்டு அண்டத்தைத்தாங்குமா?

புதியமாதிரித்தையல்.

ஹங்கேரிதேசத்து மாதிரித் தையல்.



வர்ணம்நிரத்த இந்தச் சித்திரத்தையல் மேல்வரிச்சட்டத்தைப் பார்த்து மூலைக்குமூலை அளவு சரியாக பூத்தையல்தைக்கும் வகையை முன் சஞ்சிகைகளில் காட்டியிருக்கிறோம்.

இந்த ஒன்றைப்பூத்தையல் வேலைக்கென்றே பலகண்வைத்து நெய்திருக்கும் ஜாலர்துணியின்மீதே கெட்டிச்சாயம் ஏற்றிய பலவர்ணமான பட்டுநூல்களாலாவது பருத்திநூல்களிலாவது பெர்லின் ஊல் சம்பள நூல்களாலாவது இந்த மேல்வரிச்சட்டத்தில் காட்டிய புள்ளிகளின் கணக்கின்படி மூலைமூலை தவருமல் தையல் ஓட்டி ஒன்றைத் தையல்போடவும். மேல்வரிச்சட்டத்தில் கண்ட சாயமேற்றிய நூல்களையே உபயோகிக்க வேண்டுமென்கிற அவசியமில்லை. அவரவருடைய புத்திக்கு அழகாய்த்தோன்றுகிற வர்ணநூல்களை மைடப்பு ஒத்தின்படி இவைகளுக்குத் தக்கபடி மாற்றி உபயோகித்துக்கொள்ளலாம்.

உ-ம் ஹென்ரி.

பிறந்தது 1133. இறந்தது 1189.

அரசு செலுத்தியது 34 வது காலம்.

ரோஜமாண்டு

என்னும் அழகி.

ஒருகாலத்திலே ரோஜமாண்டு க்ளிப்பர்ட்(Rosamond Clifford) என்னும் பெயரையுடைய அழகானபெண் ஒருத்தி இருந்தாள். அவள் வெகு அழகாயிருந்தபடியால் அவளை "அழகான ரோஜமாண்டு" என்று சொல்லுவது வழக்கம். அப்போது ஹென்ரி (Henry) என்னும் அரசன் இங்கிலாந்து தேசத்தை ஆண்டுவந்தான். ஹென்ரிஎன்ற பெயருள்ள அரசர்கள் பலபேர் இருந்தபடியால் இந்த ஹென்ரி எவன் என்று கேட்பீர்களல்லவா? இவன் மெடில்டா (Matilda) இராணியின் மகன்; ஹென்ரி என்னும் பெயருள்ளவர்களில் இரண்டாவது அரசன். ஒருநாள் இந்த இராஜா ரோஜமாண்டு என்னும் பெண்ணைக்கண்டான். கண்டவுடனே அவனுக்கு அவள்மேல் ஆசையுண்டாயிற்று. அரசன் சிறுவயதும் அழகும் உள்ளவனாய் இருந்ததால் அவளுக்கும் அவன் பேரில் ஆசையுண்டாகிவிட்டது.

Fair Rosamond compelled to drink poison by Queen Eleanor.

இந்தப்பெண் இருப்பதற்காக உட்ஸ்டாக் (Woodstock) என்னும் பட்டணத்துக்குச் சமீபத்தில் ஒரு பூங்காவனத்தை அரசன் உண்டாக்கினான். இதைவிட சிங்காரமான பூங்காவனத்தை யாரும் கண்டதில்லை. அது அவ்வளவு அழகாகவும் மத்தியிலே நேர்த்தியான சிறுவீடு ஒன்று கட்டியிருக்கவும் அதைச்சுற்றிவர கொஞ்சம்கூட இடம்விடாமல் அழகான மரங்களையும் செடிகளையும் கொடிகளையும்வைத்துச் சுந்தரமானதோட்டம் உண்டாக்கியிருந்தது. இதில் எங்கே பார்த்தாலும் பக்ஷிகள் உட்கார்ந்து இனிமையாய்ப்பாடிக்கொண்டிருக்கும். எங்கேபோனாலும் புஷ்பங்களுடைய வாசனையால் மனதுக்குச் சந்தோஷம் உண்டாகும். இதுவெல்லாம் அல்லாமல் பெரிய அதிசயம் ஒன்று உண்டு, வெளியிலிருந்துபார்த்தால் இந்தப் பூங்காவனம் சுத்தமாய்த் தெரியாமல் இருக்கும். ஏனென்றால் அதற்கு நான்குபக்கத்திலும் வெகுதூரத்துக்கு மரங்கள் நெருக்கமாய் வளர்ந்து வனமாய் இருந்

ஆயிரத்தில் ஒருவனே அலங்கார புருஷன்.

தது. இந்த மரங்களின்நடுவே யாரும் வழிதப்பித் தடுமாறும்படியாய்ச் சுற்றிச் சுற்றிச் சந்துகள் கண்டபடி இருக்கும். வெளியிலிருந்து தோட்டத்தின் மத்தியில் இருக்கும் வீட்டுக்குப்போகிறவழி அநேக சந்துகளின் வழியாய்த் திரும்பித்திரும்பி ஓடிவரும்படியிருந்தது. வழிதெரிவதற்காக ஒரு நூல்கட்டியிருந்தது, நூலைப் பார்த்துக்கொண்டு போகாவிட்டால் உள்ளேநுழைவதற்கு யாராலும் ஆகாது. இந்த நூலோ வெகுமெல்லியதானபட்டு; ஆகையால் இது இருக்கிறசங்கதி சொல்லியிருந்தாலொழிய எவர்கள்கண்ணுக்கும் தெரியமாட்டாது.

இப்படியிருக்கவே இராஜாவானவன் அரண்மனையை விட்டுப்போவதற்குத்தகுந்த சமயம்பார்த்துத் தனியாய்ப் போய், பட்டு நூலைக்கொண்டு உள்ளேசென்று அழகிய ரோஜமாண்டைப்பார்த்து வருவான். அரசன் அல்லாமல் வேறொரு பிராணியும் உள்ளே போவதில்லை. ஆனால் ஒரு வேலைக்காரன்மாத்திரம் ரோஜமாண்டுக்கு ரொட்டியும் கறியும் திராக்ஷாரசபானமும் வாங்கிவர இராத்திரிவேளையில் வெளியேபோய் வருவதுண்டு.

இவ்வளவு வேடிக்கையாகப் பூங்காவனத்தையும் சுற்றுவழியையும் இராஜா என்னகாரணத்தால் உண்டாக்கினான் என்பதைச் சொல்லுகிறோம்.

அரசனுடைய இராணியாகிய எலீனர் (Eleanor) என்பவள் புருஷன்பேரில் வெகு சந்தேகம் உள்ளவள். அல்லாமலும் யாரிடத்திலும் இரக்கமில்லாத கல்மனதுடையவள். ஆகையால், ரோஜமாண்டென்னும் பெண்ணைப்பற்றிக் கேள்விப்பட்டால், இராணி அவளைக் கொலைசெய்துவிடுவாள் என்று இராஜா பயந்து, உட்ஸ்டாக் பூங்காவனத்தில் இவ்வளவு பத்திரமாக அவளை ஒளித்து வைத்திருந்தான்.

இந்தவிதமாக இராஜாவானவன் இராணியை மோசம் செய்யத் துணிந்தது மஹாதுஷ்டநடத்தை. இதற்கு உதவியாக ரோஜமாண்டு அவனோடுசேர்ந்ததும் வெகு அக்கிரமம். ஆகையால் இவர்கள் செய்கைக்குத் தக்கபடி ஒருபெரிய ஆபத்து சமபவித்தது.

அரசன் அடிக்கடி அரண்மனையைவிட்டுப்போய்விடுகிறது இராணிக்குத் தெரியாமற் போய்விடுமோ? தெரிந்தது; ஆனால் இன்னவிடத்துக்குப் போகிறான் என்கிற சங்கதி யாருக்கும் தெரியாமல் எல்லாரும் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஆகையால் அரசன் எங்கேபோகிறான் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று இராணியானவள் அதே வேலையாக அவன் போகிறவழியைக் கவனமாய்ப் பார்த்துவந்தாள். அநேகநாள் பார்த்ததில் எப்போதும் உட்ஸ்டாக் பக்கமாய்ப் போவதைக் கண்டாள். ஆனால் உட்ஸ்டாக்குக்குப் போனபிறகு அவன் போகும்வழியைக் கண்டுபிடிக்கக் கூடவில்லை. ஏனென்றால் வெளியேநின்று பார்த்தால் யார்கண்ணுக்கும் பூங்காவனம் தெரியவில்லை; உள்ளே செல்லலாம் என்றால் சுற்றுவழியில்போக யாராலும் ஆகவில்லை.

இராஜா போகும் இடம் யாருக்குந்தெரியாமல் இப்படியே என்றைக்கும் இருந்திருக்கலாம். ஆனால் ரோஜமாண்டுக்காகக் கடையிலே பதார்த்தங்கள் வாங்கவரும் வேலைக்காரனை இராணி ஒருநாள் கண்டு, பூங்காவனத்துக்குப்போகச் சுற்றுவழி இருப்பதையும் பட்டுநூல் கட்டியிருக்கும் இரகசியத்தையும் தெரிந்துகொண்டாள்.

சங்கதி தெரிந்ததும் இராணி சமயம் தேடிக் கொண்டிருந்து இராஜா அரண்மனையில் இருக்கும் வேளைபார்த்து, பூங்காவனத்தில் ரோஜமாண்டு தனித்திருப்பாள் என்று தெரிந்து, ஒரு கட்டாரியையும், கிண்ணத்தில் விஷத்தையும் எடுத்துக் கொண்டு, பட்டுநூலின் உதவியால் சுற்றுவழியில் சென்று, பூங்காவனத்துக்குள்ளே நுழைந்து, மத்தியில் கட்டியிருந்த வீட்டுக்குச் சமீபத்தில் போய்ச் சேர்ந்தாள். அப்போது ரோஜமாண்டென்னும் பெண் வெளியே உட்கார்ந்திருந்தாள்.

இந்தவிதமாக இராணியானவள் கோபமான முகத்தோடு ஒருகையில் கட்டாரியையும் மற்றொருகையில் கிண்ணத்தையும் பிடித்துக்கொண்டு வருகிறதைப் பார்த்தபோது ரோஜமாண்டு எவ்வளவு திடுக்கிட்டிருப்பாள் என்பதை நீங்களே தெரிந்துகொள்ளுவீர்கள். ஆனால் அந்த இரக்கமில்லாத இராணி அவளைப்பார்த்து "உன்னைக் கொல்லவந்திருக்கிறேன். உனக்கு எந்த விதமாய்ச் சாக இஷ்டமிருக்கிறதோ அப்படியே கொல்லுகிறேன். இந்த கட்டாரியால் குத்திவிடச்சொன்னால் குத்திவிடுகிறேன், அல்லவென்று விஷத்தைக் குடித்துச் சாகப்பிரியமானால் இந்தா குடி" என்று சொன்னபோது அவள் எவ்வளவு திகில் அடைந்தாள் என்பதை விவரித்துச் சொல்ல என்னால் ஆகுமா?

ஐயோ பாவம்! ரோஜமாண்டானவள் முழங்கால்விட்டுக்கொண்டு தன்னைக் காப்பாற்றவேண்டுமென்று அழுதழுதுக் கதறினாள். எவ்வளவு கெஞ்சியும் இராணியினுடைய கல்நெஞ்சோ கரையவில்லை. அந்த பாவிப்பெண் என்னசெய்வாள்? விஷத்தைக் குடித்துவிட்டுக் கொஞ்சநேரத்தில் வெகு கஷ்டப்பட்டுக்கொண்டு இறந்து போனாள்.

அவள் சாகும் முன்னமே இராணி பூங்காவனத்தைவிட்டு வந்துவிட்டாள். அவள் போய்வந்த சங்கதி யாருக்கும் தெரியாது. வழக்கப்படி அரசன் ரோஜமாண்டைப் பார்க்கப்போனபோது அவள்செத்துக்கிடந்ததைக்கண்டு திடுக்கிட்டுத் துக்கப்பட்டான். ஆகிலும் அவள் இந்தவிதமாய்ச் செத்தாள் என்பது அவனுக்குத் தெரியவில்லை. அவளை அந்தப்பூங்காவனத்தில் ஒளித்துவைத்திருந்தது அக்கிரமமும் அறிவில்லாததுமான செய்கையென்றும், அதினாலேதான் அவளுக்குச் சாவு வந்ததென்றும் அவன்மனதிற் படாதிருக்குமா? அதுமுதல் என்றைக்கும் ரோஜமாண்டு அநியாயமாய்ப் போனாளே என்று விசனப்பட்டுக்கொண்டிருந்தான்.

ருஷியாதேசம்.

அத்தையாருக்கு மருமகன் எழுதியது.

நான் ஊருக்குக் கடிதமெழுதவில்லையென்றும், அப்படி யெழுதாதிருப்பதற்குக் காரணம் அன்பில்லாமையே யென்றும் நமது அத்தையார் சொல்லுகிறாள். அப்படி ஒருக்காலும் அன்பில்லாதவனாயிருக்கவில்லை. அடிக்கடி எனக்கு உங்கள் நினைவுதான். நீங்களெல்லாரும் இங்குவந்து கூடயிருந்தால் எவ்வளவோ சந்தோஷமாயிருக்குமே யென்று நான் நாள்தோறும் நினைக்கிறேனே. ஆகிலும், உங்களைப்போல எனக்குப் பாட்டாகக் கடிதமெழுதத் தெரியாது. என்றால் கூடியவரையில் முயன்று பார்க்கிறேன்; மோனை எதுகைகள் சரிப்பட்டுவருகிறதில்லை; நான் இதுவரையில் கடிதமெழுதாததற்குக் காரணம் இந்தக்குறைவுதான். அப்படிப்பாட்டாக இல்லாமற் போனாலும் வசனமாகவாவது என்னிடமிருந்து ஒருகடிதம் வரப்பெற்றுக்கொள்வது உனக்குமிகவும் பிரியமென்று இங்கேயிருப்பவர்கள்சொல்ல இப்பொழுதுதான் எனக்குத் தெரியவந்தது.

துருக்கிதேசத்துப் பிரதான நகரமாகிய கான்ஸ்தாந்திநோபிலிலிருந்து அத்தைகடிதமெழுதியதற்குப்பிறகு நடந்தசெய்திகளைக்கேட்க நீ விரும்புவாயல்லவா ஏதோ வேலையைப்பற்றி அவ்விடம்வந்திருந்த சிற்றப்பாவையும் சின்ன அத்தையாரையும் பார்ப்பதற்காக அப்படியே நாங்கள் அவ்விடம் போனோம்; சிலநாள் அவ்விடத்திலிருந்தபின்பு துருக்கிதேசத்து மற்றவிடங்களைச் சுற்றிப்பார்த்தோம். பிறகு அங்கே புகைக்கப்பலேறிக் கருங்கடலைக்கடந்து ஒடெஸ்ஸா என்னுமிடத்துக்குப்போனோம். ஆனால் அந்தக் கப்பல்பிரயாணம் அத்தனையாகச் சுகமாயிருக்கவில்லை. அதனால் அந்தப்பிரயாணம் முடிந்து கரையேறினது எங்களுக்கு வெகு சந்தோஷமாயிற்று. அங்கிருந்து இருப்புப்பாதைவழியாய் ஸெந்த் பீதர்ஸ்பர்க்கு நகரத்திற்குப் போனோம். அங்கே சிறிய அத்தையும் சிற்றப்பாவு மிருக்கிறார்கள். அந்தப்பிரயாணம் போகப் பலநாள் சென்றது ஸெந்த் பீதர்ஸ்பர்க்கு என்பது வெகுசிற

ப்பான நகரம். அங்கே அழகான பெரிய கட்டடங்கள் சிலவுண்டு. அதுமிகவும் குளிர்ச்சியான விடமாதலால் அந்நகரத்து எல்லாவீதிகளிலும்வீடுகளிலும் இப்பொழுதிருப்பதுபோல நன்றாக வெயில்காயும்பொழுது அவ்விடத்தின் காட்சி வெகு நேர்த்தியாயிருக்கும். வீட்டிற்குள் சாளரங்களைத் திறவாமலே ஒரு அறையை எப்பொழுதும் அவர்கள் உஷ்ணமாக வைத்துக்கொண்டிருப்பார்கள். என் சின்னத்தங்கையின் பிறந்தநாளுக்குப் பரிசாக அனுப்புவதற்கு நான் வைத்துக்கொண்டிருக்கிற கம்பளிப்பட்டை ருஷியா படத்தில் சிறுபையன் போர்த்துக் கொண்டிருக்கிறனே அதுபோலவே மயிர்க்கம்பளம் அணிந்துகொள்ளாமல் சீதகாலத்தில் இங்கே ஒருவரும் வெளிப்படமாட்டார்கள். சிலகாலங்களில் ருஷியாவிலே மிருதியாகப் பனிபெய்து வீட்டு இறப்புவரையில் மூடிக்கொள்ளுமென்கிறார்கள். அங்கே இதைப்பார்க்கிலும் மிகப்பயங்கரமான செய்கையொன்றுண்டு, அதாவது; சிலசமயங்களில் ஓநாய்கள்வந்து அந்தப்பனிமூடிய வழியில் செல்லும் பிரயாணிகளையும் அவர்கள் ஏறிச்செல்லும் குதிரைகளையும் கொன்று தின்று விடுகின்றன. ருஷியாதேசத்துச் சத்திரங்கள் தங்குவதற்கு அத்தனை சவுக்கியமான விடமல்லவாம். நெருக்கமாய் சவப்பெட்டி மாதிரியா யிருக்கும். ஆயினும், ருஷியாவில் கோடைக்காலத்திலே பனியின்கொடுமையில்லாமல் யாத்ரைசெய்வது வெகு சுகமாயிருக்கும்.

இந்த ருஷியா ஐரோப்பாகண்டத்துத் தேசங்களுள் மிக்கக்கீழ்ப்புறத்திலிருக்கும் தேசமாயும் நமது இந்துதேசத்திற்கு சமீபமாயுமிருக்கிறது. ஆகையால் ருஷியர் படைகள் சமயம்வாய்த்தால் நமது தேசத்தையும் சற்று எட்டிப்பார்க்கலாம் என்று வகைதேடி வருகிறார்கள். இந்தவிஷயத்தை இங்கேவிவரித்து எழுத இடங்கொடாது.

உங்களையெல்லாம் மறுபடியும் பார்க்கவேணுமென்று எனக்கு அதிக அபேக்ஷையாயிருக்கிறது. அங்குள்ளயாவரும் என்னிடத்தில் பிரீதி மாறாதிருக்கக்கடவீர்கள்.



கர்வித்த கன்றுக்குட்டி.

இளங்கன்றுக்குட்டி யொன்று கழனியில் உழுகிற எருதுகளைப் பார்த்து நீங்கள் ஏன் இப்படி ஒருவனுக்கு அடிமையாகி இந்த முழங்கால் சேற்றிலும் தண்ணீரிலும் கழுத்து நோக நுகத்தடியை வைத்துக் கயிற்றால் கட்டி பின்னாலே பளுவாகிய கலப்பையொன்றை மாட்டி தாத்துக்கோலால் குத்த இழுத்துக்கொண்டு சங்கடப்படுகிறீர்களே. நீங்கள் இப்படியெல்லாம் பாடுபட்டும் உங்களுக்கு நல்ல புல்லும் குடிக்க நல்ல ஜலமுந்தான் கிடைக்கமாட்டாதே; நீங்கள் இழுக்கமாட்டாமல் களைத்துவிழுந்துகிடந்தாலும் உங்கள் முகத்தில் கொஞ்சம் பச்சைத் தண்ணீரைக்கூட தெளிக்கமாட்டார்களே; என்னைப்பாருங்கள் என்னிஷ்டப்படிக்கெல்லாம் ஓடுகிறேன்; நல்ல புல்லையும் நல்ல ஜலத்தையும் குடிக்கிறேன் என்று இளங்கன்று பயமறியாதென்பதுபோல தான்றோன்றித் தனமாய்ச் சொல்லிப்போய்விட்டது. சற்றுநேரத்திற்கெல்லாம் இறுதுபேசின கன்றைப் பிடித்து அதன்கழுத்திற் பூமாலைபோட்டுப் பிடாரியாருக்கு பலியிட்டிருப்பதை உழுதுவிட்டுப்போகிற மாடுகள் அதன் காதினிடமாகப்போய் ஐயோ இவ்வளவு சீக்கிரத்தில் இந்தகதி அடைகிறவன் தானுதான்னி தொப்பென்று விழுந்தாயே: இப்போது நீ சுகமாவென்று சொல்லிப்போய்விட்டதாம்.

நீதி.—வாலிபத்தில் அழகு பெற நடையும் இறுது பட மொழியும் பிரியமாயிருக்கும்.

கதாசாரம்.—வாலிபர் பெரியோர்களைப் பரிகாசமாகவும் அலட்சியமாகவும்பேசுகிறதும் நினைக்கிறதும் கூடாதென்பதை இந்தக் கதை உணர்த்தவந்தது. தனக்கு மூத்தோர்களையும், பெரியோர்களையும் யார் பரிகாசம் செய்து அகங்காரப்படுகிறார்களோ அவன் அதன் பலனை அதிசீக்கிரத்தில் அநுபவிப்பான்.

வசந்தருது.

(ராரா - வீர - ராகவா—என்று
ரகுநிந்த ஸ்ரீகேசவா - ஆஆஆ - ராரா.) என்னும் சந்தம்.

ஆதிதாளம்.

பருவ காலம் சொல்லுவேன் - அப்போதும்
வருஷத்துக் கொருதரம் வந்துவந்து செல்லுகின்ற (பருவ)

வசந்தருது வந்து விட்டால் - அப்போது
வாலிபர் விருத்தரும் உலாத்தி வருவார் (பருவ)

புஷ்பங்கள் மலருங் காலம் - அந்தந்தப்
புஷ்பத்தேனை வண்டுண்டு கொறிக்குங் காலம் (பருவ)

பழவகைகள் எங்கெங்கும் உண்டு - சூரியன்
பனிமூட்ட மேயில்லாமல் தனியாய்க் காய்வான் (பருவ)

இடையர் புல்லாங் குழல்களிலும் - கனித்தனி
எங்குமேயும் பசுக்களும் அங்கு சேருமே (பருவ)

ஆட்டிடையர் மாட்டிடையர் - காலைமாலை
ஆடிக்கறப் பார்சிலர் பாடிக் கறப்பார் (பருவ)

இடைச்சியர் வீடுகள் தோறும் - நிலைமத்து
இட்டு தயிர் கடைவார்கள் திட்டமுடனே (பருவ)

மாசு மறு ஒன்றில்லாமல் - ஆகாசத்தில்
வண்ணவண்ண மாய்க்காணலாம் என்னைப் போகுமோ (பருவ)

மாலையில் மந்த மாருதம் - சில்லென்று
வந்துவிட்டால் ஜனங்கள்ஆ நந்தங் கொள்ளுவார் (பருவ)

பச்சைக் கிளிகள் மரத்தில் - அந்தந்த
பஞ்சரத்தில் நின்றுகொண்டு கொஞ்சி பேசுமே (பருவ)

ஊர்க்குருவிக் கொண்டாட்டம் - குயில்கள்
உல்லாச மாய்ப்பாடும் சல்லாபமே (பருவ)

மான்கள் களிக்குங் காலம் - அழகான
மாடப்புறா மணிப்புறா கூவுங் காலம் (பருவ)

பெண்குயில். ஆண்குயில்.

மணிப்புரு.

புறுக்களில் ஏழுவகை:—காட்டுப்புறு, தவிட்டுப்புறு, பச்சைப்புறு, பெருப்புறு, மணிப்புறு, மலைப்புறு, மாடப்புறு.

வசந்தருது;

சித்திரை வைகாசி.

இந்த வசந்தருது எல்லோருக்கும் இன்பந்தருங்காலம். இந்த வசந்தகாலம் வருவதற்குமுன்னே பனியால்வருந்தி மலடாயிருந்த மரம், செடி, கொடி முதலியன அழகாய்த் தளிர்த்துப் பூத்துக் காய்க்கத் தலைப்பட்டன. இதற்குமுன்னே பனியால் அடிபட்டுத் தீய்ந்திருந்த தாமரையும் நீலோற்பலமும் தழைத்து ஓடைகளில் கண்குளிர மலருகின்றன. முன்னிருந்த பனியின்கொடுமை இன்னும் ஒருவருஷகாலமளவும் வாராதென்று நினைக்க யார்க்குங் களிப்புண்டாகிறது.

இவ்வாறு இந்த வசந்தகாலத்தில் எங்கும் பூரணமாய்ச் சோலைகளில் குயில்கள் செவிக்கினிமையாய்க் கூவுவதையும், மயில்கள் ஆடுவதையும், நாகணவாய்ப்புட்கள் விதம்விதமாய்ப் பேசுவதையும், கிளிகள் கொஞ்சுவதையும், புறுக்கள் குருகுருப்பதையும், பலவகையான நீர்ப்பறவைகள் விந்தைவிந்தையாய் விளையாடுவதையும், விடியுமுன்னே நூற்றுக்கணக்கான பறவைகள் உல்லாசமாய் அங்குமிங்குமோடி ஆடிக்களிப்பதையும், நாம் எங்குங்காணலாம்.

சிலகாலங்களில் ஜனங்கள் சுகத்தாழ்வினால் சுகமுள்ள தேசங்களுக்கு வலசைபோகிறதுபோல சிலபக்ஷிகளும், இளவேனிலும் உணவும் சேராமலும் பிரியமில்லாத பிறதேசங்களைவிட்டு, "நிழல் அருமை வெயிலில்தெரியும்" என்றபடி இந்த வசந்தத்திலும் கோடைக்காலத்திலும் நிழலுள்ள தேசத்தில் வந்து சேருகின்றன. அவைகளில் குயில், அல்லது கோகிலம், மைனா என்கிற பாப்பாத்திப்பரிக்கை, மணிப்புறுமுதலிய பக்ஷிகள் முக்கியமானவை. இவைகள் வசந்த ருதுவில்தான் இங்கே ஜனிக்கிறதாய்ச் சில ஜனங்கள் நினைக்கிறார்கள், அது பிசகு; நிழலும் உணவும் அந்த ருதுக்களில் அந்த அந்த தேசங்களில் வரும்காலத்தில் "கரும்பு கட்டோடேயிருக்க எறும்புதானேவரும்" என்னும் பழமொழிப்படி இந்த பக்ஷிகளும் முன்னிருந்த இடம்விட்டு சுகமான தேசங்களைத் தேடி, பூவையும் அரும்பையும் காயையும் கனியையும் நாடி வலசை போய்க்கொண்டேயிருக்கும். ஆகையால்தான் இவைகளுக்கு வலசைபோகும் பக்ஷிகள் என்று பெயர்.

ஜாதி மைனா சாதாரணமாய் மைனா என்று சொல்லப்பட்ட பக்ஷியைப்பார்க்கிலும் கண்ணுக்கு அழகாயிருக்கும். இதன் தலை களிமண்நிறம், தேகம் பதனிட்ட எருமைத்தோல்போன்ற மங்கின நிறம், இறக்கைகளும் வாலும் கறுப்பு நிறம், சட்டையின் இறகுகளில் சில வெண்மையாயிருக்கும். அவைகள் ஒன்றோடொன்று இணங்கிக் கூடியோடும்பக்ஷிகள். அவைகள் பத்து அல்லது இருபதாகவாக கூட்டங்கூட்டமாய்க்கூடி வெட்டுக்கிளிமுதலிய மற்றக் கிளிப்பூச்சிகளைப் பிடித்துத் தின்கிறதுண்டு. அவைகளுக்குப் பழங்களும் பிரியம். அவை சாதாரணமாய் பழைய சுவர்களிலிருக்கும் வங்கில் கூடுகட்டுகிறவழக்கம்; அவை நான்கு அல்லது ஐந்து முட்டையிடும். அவை மங்கலான பசுமை வர்ணமாயிருக்கும். அதோ அந்தப்படத்தில் குயில் அல்லது கோகிலம் என்னும் மற்றொரு ஜாதிப் பக்ஷிகள் ஆணும் பெண்ணும் பிரியமாய் உட்காந்திருப்பதைப் பாருங்கள். அதில் ஆண்குயில் பளபளப்பான கருமையும் ஊதாவும் கலந்த நிறமுள்ளதாகையால் இதற்குக்கருங்குயில்என்றுபெயர்; பெண்ணோ வெண்புள்ளிபட்டிருக்கிறது. சட்டையிலும் வாலிலும் வெள்ளைக் கரைகட்டினாற்போல் வெண்கிற்றிட்டிருக்கும்; ஆகையால் இதைப்புள்ளிக்குயில் அல்லது வரிக்குயில் என்றும்சொல்லுவார்கள். ஆணைவிடப் பெண் சற்றே பெரிதாயிருக்கும்; இவை கூடுகளைத் தாமே

ஆயிரம்பாம்பினுள் ஒருதேரை அகப்பட்டதுபோல்.

கட்டிக்கொள்ளுகிறதில்லை. பெண்பக்ஷி காக்கையின்கூட்டில் முட்டையிடுகிறது வழக்கம். அப்போது சாதாரணமாய் காக்கையின்முட்டைகளைப் பாழாக்கிவிடும். குயில் குஞ்சுக்கு இறகு முளைத்தபிறகுதான், காக்கை தன்னைக் குயில் மோசஞ்செய்ததாகக் கண்டறிந்துகொள்ளும்.

பிறகு ஆ! ஆ!! ஒன்றவந்த குருவி ஊர்க்குருவியை ஓட்டினதேயென்று கோபித்து, தன்னைக் கெடுத்ததுபோலத் தான் கெடுக்கவேண்டுமென்று எண்ணி, குயிலைத்தங்கவிடாமல் செடிக்குச்செடி துரத்தி அடித்துப் பகை தீர்த்துக்கொள்ளும். அப்போது குயில் தொடர்ச்சியாய்க் கூக்குரலிட்டு அழும். சிலவேளைகளில் குயில் கூஇல்! கூஇல்!! என்று தனக்கேயியல்பான விதமாய்க் கூவிக்கொண்டிருக்கும். ஒவ்வொரு ஸ்வரமும் முன்தான் கூறிய ஸ்வரத்துக்கு உரத்தசத்தமாயிருக்கும். இப்படி தன்னால் கூடியவரையில் குரலெடுத்துப் பாடிக்கொண்டிருக்கும். சிறியவாலிபர்கள் குயில் இப்படி பாடத்தொடங்கினபோது தாமும் அதைப்போல அநுசரித்துப்பாட ஆவலுள்ளவர்களாயிருக்கிறது வழக்கம். அந்தபக்ஷியும் அதற்குப் பிரதியுத்தரமாய் உரத்தும் மிருதுவாயும் பாடுகிறதைக்கேட்க மிகவும் விநோதமாயிருக்கும். அவைகள் வெகுவாய் பழங்களையே சாப்பிட்டு ஜீவிக்கும்.

இங்கிலாந்துமுதலிய குளிர்ந்தநாடுகளில் நான்கே ருதுக்கள்தாமுண்டு. இந்தத்தேசத்திலுள்ளபடி கார், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்ற பருவங்களில் இந்த இளவேனிலைப்போல ஜீவவர்க்கம் மூலவர்க்கம் இவ்விரண்டிற்கும் இன்பந் தரத்தக்கது வேறில்லை. ஆறுகள் குளங்கள் அதிகமாய் நீர்வளமும் செழிப்புமுள்ள இடங்களிலே இந்த இளவேனிலின் அருமை நன்றாய் விளங்கும். ஆனதினாலேதான் எந்நாட்டாரும் இந்தக்காலத்தைப் பெரும் பண்டிகையாகக்கொண்டு ஆலயங்களில் உற்சவங்களை ஆடல்பாடல்களோடு விமர்சையாய் நடத்துவதுவழக்கம். எவ்வுயிர்க்கும் அதிக இன்பமான இந்தக்காலத்திலேதான் இவையனைத்தையும் படைத்துக்காக்கின்ற ஸர்வஜீவதயாபரனான கடவுளின்மகிமை உள்ளங்கைநெல்லிக்கனிபோல யார்க்கும் நன்றாய்விளங்கும்.

இந்த உத்தராயணத்திலே நாளுக்குநாள் பகல் அதிகமாயும், இரவு குறைவாயுமாகின்றன. பூமத்தியரேகைக்கு வடக்கேயுள்ள பூமியின் வடபாதிமுழுமையும் இப்படித்தானிருக்கும். ஒருநாட்டில் பகலில் நாழிகை எவ்வளவு அதிகமோ அவ்வளவு அந்நாடு வடக்கே யிருக்கிறதென்பது நிச்சயம். சூரியன் பகலில் பன்னிரண்டுமணிநேரத்துக்கு அதிகமாய்க்காய்கிறதினாலும், இரவு மட்டாதலாலும் உஷ்ணம் அதிகமாகிக் கோடைகாலமாகிறது. பூமத்தியரேகைக்குத் தெற்கே யுள்ள மறுபாதியாகிய பூமியின் தென்பாகத்தில் இக்காலத்திலே இதற்கு முற்றும் மாறாகப் பகல் குறைவாயும், இரவு அதிகமாயுமிருக்கும். தக்ஷிணாயனம் பிறந்தவுடன் பூமியின் வடபாதியில் பகலில் பொழுது வரவரக்குன்றித் தென்பாதியில் பகலில்நாழிகை அதிகமாயிருக்கும். ஜுன்மாதம்பிறந்து இருபத்தொருதேதியானதும் அவர்களுக்குக் கோடைபிறக்கும்.

இவ்வாறாக இப்பொழுது கோடைபிறந்திருப்பதற்குக்காரணம் நமக்கு இன்னதென்றுவிளங்குகிறது. இந்தக்கோடையில் பெரும்பான்மையாய் ஆகாயம் மப்புமந்தாரமில்லாமலிருக்கும். ஒவ்வொரு சமயங்களில் கோடைமழை பெய்வதுமுண்டு. தை மாசிமாதங்களிலிருந்ததுபோல இந்த ருதுவில் பனி பெய்கிறதில்லை; ஆனால்

ஆயிரம்நற்குணம் ஒரு லோபகுணத்தால்கெடும்.

மார்ச்சுமாதத்தின் முடிவில்மட்டும் காலையில் கொஞ்சம் பனியிருக்கும். இதற்குமுன்னெல்லாம் எங்கேபார்த்தாலும் பச்சைப்பசேலென்றிருந்தபுல்லெல்லாம் இப்பொழுது

“விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.”

என்றபடி வாடிவதங்கிக் காய்ந்துலர்ந்து போயிருப்பதுமல்லாமல், பெருஞ்செடிகளின் நுனியிலும் பனித்துளியைக் காண்பதரிது. இக்காலத்தில் காற்று கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு இந்தத் திக்குகளினின்று வீசும். தேகத்திற்கு இதமான மந்தமாருதம் வீசும்காலம் இதுவே.

ஐரோப்பாகண்டத்திலுண்டாகிற காய்கிழங்குகள் இந்தக்கோடையில் இத்தேசத்திலுண்டாகிறதில்லை; நீலகிரி, கோடைக்கானல், சேர்வராயமுதலிய குளிர்ச்சியான மலைநாடுகளிலேமட்டும் ஒருவாறு அகப்படும். இந்நாட்டிலுண்டாகிற காய் கிழங்கு கீரைமுதலிய உணவுப்பொருள்கள் இக்காலத்தில் வேண்டியது அகப்படும்.

“பலா உத்தமம், மா மத்திமம், பாதிரி அதமம்” என்று பழமொழியில் வரும் இம்மூன்றுமரமும் இந்த ருதுவில் செழித்திருக்கும். மேலும் வாழை, திராக்ஷை, சீதா, இலந்தை, ஜம்புநாவல், சர்க்கரைவெள்ளரி, வெள்ளரி, கொய்யா, பீச்சஸ், பியர், கிச்சிலி, பொம்பளிமாஸ், மாதளை, புளி, கக்கரி, விளா, ஈச்சன்முதலிய பழவகைகள் இந்தக் கோடையில் அதிகமாயுண்டாகின்றன. கரும்பும் ஒருவாறு அகப்படும். சிலவிடங்களில் இந்தக்காலத்திலே கரும்பை ஆலையில் ஆடி வெல்லஞ் சர்க்கரைசெய்வதுமுண்டு. இந்தக்காலத்தில் வீடுதோறும் புளிவாங்கிக் கொட்டையெடுத்து அடையாகத்தட்டி வருஷமுழுவதுக்கும் காணும்படி வைத்துக்கொள்ளுவதைக் காணலாம்.

பாக்கு, தெங்கு, சவுக்கு, கொய்யா, ரோஜா, விருக்ஷி, ஜிமிகிமல்லி, சங்கங்குப்பி, கொரக்காப்புளி, புங்கு, கொன்றை, அசோகம், முல்லை, மல்லிகை, வாகை, கொக்குமந்தாரை, அகத்தி, பூவரசு, முதலானவை செழித்துத் தழைத்திருக்கும். கஸ்தூரி, அலரி, செம்பகம், சுகந்தம் முதலிய பூக்கள் ஏராளமாய்ப் புஷ்பிக்கும்.

இந்தக் கோடையின் தாபத்தினால் இதற்கு முன்னேயிருந்த கொடி செடிமுதலிய படர்வகைகள் வாடிப்போயிருக்குமென்றாலும், நல்ல நிழலுள்ளவிடங்களிலேமட்டும் அழகாய்ப்பூத்திருக்கும்.

கோடையில் புலங்களிலே உழவுமுதலிய பயிர்த்தொழில்கள் அதிகமாய் நடவாது. நட்டபயிர் காய்ந்துபோகாதிருக்கும்படி கரும்பு, அவுரி, கோடைக்கார், என்னுமுதலிய சிலவற்றிற்குமட்டும் தண்ணீரிறைத்துப் பலன் கைக்குவருமளவும் பாடுபடுவார்கள். சிலவிடங்களில் உளுந்துமுதலிய பயறுவர்க்கங்களை இந்தக்காலத்தில் புலங்களிலிருந்து பிடுங்கிக்கொண்டுவந்து உலர்த்தி யடித்துத் தூற்றி எடுத்துக்கொண்டுவந்து வீடுசேர்ப்பதுமுண்டு.

இந்தவசந்தகாலத்தில் வானம் மாசுமறுவற்றிருப்பதால் நக்ஷத்திரமண்டலத்து விநோதங்களைப் பார்த்து வியப்பதற்கு இதுவே இசைந்தகாலம். இராத்திரியில் தோன்றுகிற முக்கியமான நக்ஷத்திரங்களுள் சிலவற்றை இங்கேசொல்லுகிறோம். சித்திரை மாதம் முடிவில் சூரியாஸ்தமயமானசிறிது நேரத்திற்கெல்லாம் மேற்குத் திசையில் மிருகசீரிடம், திருவாதிரை புனர்பூசம் ஆகிய நக்ஷத்திரங்களும் அவற்றைச்சார்ந்த மற்ற நக்ஷத்திரக்கூட்டமும் மிகச்சோதியாய் தோன்றக்காணலாம். சென்ற சில மாதங்களாய்ச் சூரியன் அஸ்தமித்தவுட

ஆயுதம் இல்லாரை அடிக்கிறதா?

னே மேற்குத்திக்கில் மிகப் பளபளப்பாய்த்தோன்றிக்கொண்டிருந்த சுக்கிரன் இப்பொழுது அங்கே காணப்படுகிறதா பாருங்கள். காணப்படவில்லையே அந்தக்கிரகம் எங்கே போயிற்றென்று நினைக்கிறீர்கள். சூரியனுக்கு முன்னே போய்விட்டது. ஆனதுபற்றிச் சூரியனுக்கு முன்னேயே பகலில் அது அஸ்தமித்துப் போவதனால் மாலையில் நமது கண்ணுக்குப் புலப்படுவதில்லை. சூரியனுக்குமுன்னே அஸ்தமிப்பதனால் அந்தக்கிரகம் காலையில் சூரியனுக்குமுன்னதாகவே உதயமாகவேண்டுமென்பதை இப்பொழுது நீங்களே பார்த்துத் தெரிந்துகொள்வீர்களல்லவா? ஆம், அது அப்படியே காலையில் கிழக்கே சூரியனுக்கு முன் உதயமாகி இளம்பிறைபோலத் தோன்றுகிறது. அதை மேமாதத்தில் நாம் நன்றாய்க்காணலாம். இப்படிச் சிலமாதம் மாலையிலும் சிலமாதம் காலையிலும் தோன்றுவதனாலேயே ஐரோப்பியர் சுக்கிரனுக்கு காலை மாலை நட்சத்திரம் என்னும் ஒருபெயர் வழங்குகின்றனர்.

சனிக்கிரகம் இப்பொழுது கடகராசியிலிருப்பதால் சூரியாஸ்தமயமான சிறிது நேரத்திற்கெல்லாம் அது நமது தலைக்கு நேராக வானத்தில் தோன்றுகிறது. அதற்கு வடக்கே ஸப்தரிஷிமண்டலமும் தெற்கே வேறு சில நட்சத்திரங்களும் காணப்படும். அதற்கப்பால் ஒன்றின்பின் ஒன்றாய் வரிசையாக முடக்கு நுகத்தடிபோன்ற மகம் என்னும் நட்சத்திரமும் கட்டில் கால்போன்ற பூரம் உத்திரம் என்னும் நான்கு நட்சத்திரங்களும் காணப்படும். தெற்குத் திக்கில் திரிசங்கு சொற்கம் என்று சொல்லப்படும் நட்சத்திரம் நேராக வரும்போது விசுவாமித்திரர் இழுத்துப்போட்டவை யென்று புராணங்களில் சொல்லப்படுகின்ற அனுஷம் முதலிய நட்சத்திரங்களுடன் மிகச் சோதியாகச் சொலிக்கும். குரு அல்லது வியாழன் பத்துமணிக்குச் சற்றுத் தென்கிழக்குப்புறமாக உதயமாகும். முன்மாதம் இராத்திரி 11-மணிக்கு இந்தப் பிரகாசமான கிரகம் சந்திரனுக்குச் சரியாகவந்து கிரகணம்போல் அதின் மண்டலத்தில் மறைந்து மறுபடி வெளிப்பட்டதைப் பலர் பார்த்திருக்கலாமல்லவா! அதேவிதமாக மேமீ 18உ சனிக்கிழமை உதயகாலத்தில் சந்திரன் மேற்கில் சாயும்பொழுது சந்திரக்கிரஸ்தகுருக்கிரகணமுண்டாகும். அப்பொழுது உதயமாகி சூரிய வெளிச்சம் பரவிப்போகுமாதலால் அது வெறுங்கண்ணுக்கு நன்றாய்த் தோன்றுவது கடினம். தூரதிருஷ்டிக் கண்ணாடியிருந்தால் வெகு நன்றாய்த் தெரியும்.

சுக்கிரனைப்போலச் சூரியனோடுகூடவே செல்லுகிற மற்றொரு நட்சத்திரம் புதன். அது சுக்கிரனைப்பார்க்கிலும் சூரியனுக்கு அதிக சமீபத்திலிருப்பதால் சுக்கிரனைப்போல் நன்றாய்த்தோன்றுவதில்லை. இந்த மாதத்தில் சூரியன் அஸ்தமித்தவுடனே மேற்கில் புதன் தோன்றுவதை நன்றாய்க் காணலாம். 5உ செவ்வாயும் புதனும் நெருங்கித்தோன்றும்.

இந்துதேசத்தில் வசிக்கும்

இங்கிலீஷ் துரைசானிகள் தினசரி.

துரைசானி ஒருவர் எழுதியது.

2-ம் பிரிவு.

நான் சொல்லிவரும் துரைசானியானவள் இவ்விதமாகப் பன்னிரண்டுமணிமுதல் இரண்டுமணிவரைக்கும் தன்வீட்டிலுள்ள காரியங்களை யனுசரித்தும், தனக்குப் பிரியமான விஷயங்களுக்குத் தக்கபடியாயும், பொழுது போக்கிக்கொண்டிருப்பாள் என்றல்லவா கடைசியாகச் சொன்னேன். இப்படிப் பொழுதுபோக்கிக்கொண்டு உட்கார்ந்திருக்கும் அறையைப்பற்றிச் சற்று சொல்லுகிறேன். நான் இந்த அறைக்கு "உத்ட்ராயிங்" Withdrawing) என்னும் மொழியின் சுருக்கமாகிய "ட்ராயிங் அறை" அளவு என்று பெயர். "உத் ட்ராயிங் அறை" என்றால் "வந்துவிடும் அறை" என்று அர்த்தம். இதற்கேன் இந்தப் பெயர் என்றால், சாயங்காலவேளையில் துரைகளும் துரைசானிகளும் கூடிச் சாப்பிட்ட பிறகு துரைகள் திராக்ஷாச பானத்தைக் குடித்துக்கொண்டும் சுருட்டுபிடித்துக்கொண்டு மிருப்பது வழக்கம். அந்தச்சமயத்தில் துரைசானிகள் அங்கே இருப்பது தகுதியல்லவென்று இந்த "ட்ராயிங்" அறைக்கு வந்துவிடுவார்களாகையால் இவ்வறைக்கு இவ்விதமானபெயர் உண்டாயிற்று. இந்த "ட்ராயிங்" அறை விசேஷமாய்த் துரைசானிகளுடையதாகையால் வீட்டு எஜமானிக்கு எந்தெந்த விஷயங்களில் பிரியம் என்பதையறிய வேண்டுமானால் இவ்வறையைப்பார்த்தால் தெரியும். அவளுக்குச் சங்கீதத்தின் பேரில் பிரியமிருந்தால், பியானோ (Piano), வையோலின் (Violin) முதலிய சங்கீதவாத்தியங்களையும் பாட்டுப் புத்தகங்களையும் அறையில் காணலாம். சித்திரவேலையில் மனமுடையவளானால் எழுதிமுடியாதசித்திரங்களும் படங்களும் வைத்திருப்பதுமல்லாமல் அறை நேர்த்தியாக அலங்கரித்திருக்கும். மேஜையின்பேரிலும் பீரோக்களிலும் புத்தகங்கள் வைத்திருக்கும். இவைகளைப்பார்த்தால் வீட்டிலிருப்பவர்கள் இவ்விதமான விஷயங்களைப்பற்றிப் படிப்பவர்களென்றும், அவர்கள் இன்னின்ன அபிப்பிராயங்களைக் கொண்டவர்களென்றும் சொல்லக்கூடும். துரைசானிகள் எல்லாருக்கும் படிக்கவும் தைக்கவும் தெரியுமாகையால் "ட்ராயிங்" அறையில் சமாசாரப் பத்திரிகைகளும் தையல்வேலைகளும் அங்கங்கே விழுந்துகிடப்பதை எந்தவீட்டிலும் காணலாம்.

வீட்டிலிருப்பவர்களும் பார்க்கவரும் சிநேகிதர்களுமாகிய துரைகள் துரைசானிகள் எல்லாருங்கூடி உட்கார்ந்திருப்பதற்காக எல்லா இங்கிலீஷ்காரருடைய வீட்டிலும் இரண்டு அறைகள் உண்டு. எவையென்றால் இப்போது சொன்ன "ட்ராயிங்" அறையும், சாப்பிடும் இடமாகிய "டைனிங்" அறையுந்தான். இந்த அறைகள் அல்லாமல், வீட்டு எஜமானுக்கே சொந்தமான அறையொன்றிருப்பதுமுண்டு. இதில் புத்தகங்கள் வைத்திருக்கும் இங்கே துரையானவன் படித்துக்கொண்டும் எழுதிக்கொண்டு மிருப்பான். சிலர் வீட்டில் தனியாக துரைசானிக்கும் ஒரு சிறு அறை இருப்பதுண்டு. இந்த அறைக்கு "பூட்வா" (Boudoir), என்று பெயர் இந்தப் பெயர் பிரெஞ்சு பாஷையில் "உதட்டைப் பிதுக்கிக் கொள்ளுதல்" என்று அர்த்தங்கொள்ளும் அந்தச்சொல்லிலிருந்து வந்தது. ஏனென்பீர்களோ? உதட்டைப் பிதுக்கிக்கொண்டிருப்பது சந்தோஷமில்லாமல் கிலேசமா யிருக்கும்போதல்லவா? வந்த சிநேகிதர்களோடெல்லாம் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருக்கத் துரைசானிக்கு இஷ்டமில்லாமல் தனித்திருக்கப் பிரியமாயிருந்தால் இந்தச்சிறு அறையில் உட்கார்ந்துகொண்டு எழுதிக்கொண்டாவது தனக்குச் சம்மதியான வேலை செய்துகொண்டாவது இருப்பாள். ஒரு வேளை வெகு அன்னியோன்னியமான சிநேகிதர்கள் வந்தால் இந்த அறையிலேயே பேசிக்கொண்டிருப்பதுமுண்டு. ஆனால் எல்லாவீடுகளிலும் இப்படி துரைசானிக்கென்றே ஒரு அறைகிடையாதாகையால் சாதாரணமாய் "ட்ராயிங்" அறையில்தான் கூடிப் பேசிக்கொண்டிருப்பது வழக்கம்.

ஆடாவிட்டது மானியம் நானேவிட்டுக் கொண்டேன்.

அருக்கு ஆர்சதம்.

இங்கேதான் வீட்டிலுள்ளோ ரெல்லாரும் சிநேகிதர்களும் வந்து சேருவார்கள். வீட்டுக்குப் பெரியவர்களாகிய துரையும் துரைசாணியும் இனிமையாகவும் நாகரீகமாகவும் பேசிக்கொண்டிருப்பதுமல்லாமல் சம்பாஷணையிலேயே தங்களுடைய சொந்த அபிப்பிராயங்களைப் பிறருக்குத் தெரிவிப்பதற்கும் அதுதான் ஏற்றசமயம்.

இவ்விதமாக 'ட்ராயிங்' அறையைப் பற்றி எழுதிவருகையில், அநேக வருஷங்களுக்குமுன் நான் சிறுவயதில் ஆஸ்திரேலியா தேசத்தில் என் தாய் தந்தையரோடு இருந்தபோது பிரதிதினமும் நாங்களெல்லாரும் "ட்ராயிங்" அறையில் சந்தோஷமாய்க் கூடிப் பேசிக்கொண்டிருந்தது என் ஞாபகத்துக்கு வருகிறது. சற்றுத் தாழ்ந்ததும் விசாலமானதுமான அந்த அறை என் கண்ணெதிரில் இப்போதிருக்கிறதுபோலவே இருக்கிறது. அந்த அறைக்குள் வைத்திருக்கும் புஷ்பங்களின் வாசனையும் வெளியில் தோட்டத்திலிருக்கும் பூக்களின் பரிமளமும் இப்போதுதான் வீசுகிறதுபோலிருக்கிறது. தோட்டத்தில் வண்டுகள் பறந்து பாடிக்கொண்டிருக்கும் சத்தம் காதில் விழுவதுபோலிருக்கின்றது. அந்த அறைக்கு ப்ரெஞ்சுக்காரர்கள் (French) வீட்டு ஜன்னல்களைப்போல நீண்ட ஜன்னல்களிருக்கும்; அவைகளின் வழியாய் வெளியே யிருக்கும் தோட்டம் தெரியும்; அதுவும் எதிரே தெரிவதுபோலிருக்கிறது. சிறுவயதில் சந்தோஷமாய்க் கழித்தகாலம் எத்தனை நாளானாலும் மறந்துபோகுமா? ஆஸ்த்ரேலியாதேசத்தில் மத்தியானவேளையில் உஷ்ணமாயிருக்கும்; அந்நேரத்தில் "ட்ராயிங்" அறையில் நாங்கள் எல்லாரும் படித்துக்கொண்டும் எழுதிக்கொண்டும், பாடம் எழுதிக்கொண்டும் இப்படி ஏதாவது வேலைசெய்துகொண்டு சந்தோஷமாய்க் காலத்தைக் கழிப்போம். சிலவேளைகளில் பியானோவென்னும் சங்கீதவாத்தியத்தை சுற்றிலும் சிநேகிதர்களும் நாங்களும் உட்கார்ந்துகொண்டு வேடிக்கையாய் வாசித்துக்கொண்டும் பாடிக்கொண்டுமிருப்போம். இப்படி என் தாய் தந்தைகளும் அவர்களுடைய இஷ்டர்களும் "ட்ராயிங்" அறையில் நாகரீகமாய்ச் சம்பாஷித்துக் கொண்டிருந்தபோது சத்விஷயங்களில் அவர்களுக்கிருந்த அபிமானத்தையும் பிறர்விஷயத்தில் அன்பையும் பரோபகார குணத்தையும் சிறுவர்களாகிய நாங்கள் கண்டோம்; அது பிற்காலத்தில் நாங்களும் அவ்வாறே யாவதற்கு எவ்வளவோ உதவி செய்திருக்கவேண்டும்.

இது இருக்கட்டும்; ஞாபகம் வரவே இவைகளையெல்லாம் எழுதிவிட்டேன். நான்விட்ட இடத்திலிருந்து சொல்லவேண்டுமல்லவா? மத்தியான வேளையில் இந்தவிதமாய் "ட்ராயிங்" அறையில் இருப்பார்கள் பொழுது போனபிறகு சாப்பிட நேரமாயிற்றென்று தெரிவிக்கவேலைக்காரார் மணியடிப்பார்கள். "டைனிங்" அறையில் போய்ச் சாப்பிடுவதற்காக முகம் கழுவிக்கொண்டு சுத்தமான வஸ்திரம் தரித்துக்கொண்டு குழந்தைகள் எல்லாரும் சித்தமாயிருப்பார்களாகையால் மணியின் சப்தம் கேட்டவுடனே வருவார்கள். நான்குழந்தையாயிருக்கும்போது எங்கள் வீட்டில் ஒருபூனையைப் பிரியமாய் வளர்த்துவந்தோம். அந்தப்பூனையும் மணியடிக்கும் சங்கதி தெரிந்து அதுவும் வந்துசேரும். "டைனிங்" அறையின் கதவு மூடியிருந்தால் இந்தப்பூனை வருவதையறிந்து திறக்காவிட்டால் கதவண்டைவந்து உட்கார்ந்துகொண்டு நாய்கள் கெஞ்சுவதுபோலக் கெஞ்சிக்கொண்டிருக்கும்; கதவைத் திறக்கிறவரைக்கும் போகாது. இப்படிப் பூனைக்கு ஏதாவது வேண்டியிருக்கும்போது கெஞ்சிக்கேட்கிறதை நான்கேட்டதில்லை:

அரும் அரும் உறவு தாயும்பிள்ளையும் உறவு.

ஆனால் குழந்தைகள் சாப்பிடும்போது பூனைகளும் அவர்கள் பக்கத்திலேயே சுற்றிக்கொண்டிருப்பது ஒரு புதுமையல்ல, வாலைச்சுற்றிக்கொண்டிருக்கும் கடுகுபூனை என்று எவர்க்கும் தெரிந்தவிஷயமே.

குழந்தைகள்வந்து சேர்ந்ததும், சாப்பிடுவதற்கென்று போட்டிருக்கும் மேஜையைச் சுற்றிக் கொள்ளுவார்கள். அவர்களில் ஒருகுழந்தை பயபக்தியாய் சுவாமியைத் தியானித்துத் தாங்கள் சாப்பிடப்போகும் போஜனத்தை யாசீர்வதிக்கவேணுமென்று பிரார்த்திக்க, மற்றவர்களெல்லாரும், இரண்டு கைவிரல்களையும் கோர்த்துக் கைகளைத் தொங்கவிட்டுக்கொண்டு தலையைக் குனிந்து நின்றுகொண்டிருப்பார்கள்.

தெய்வ வணக்கமானவுடனே சாப்பிட ஆரம்பிப்பார்கள். முதலில் கொஞ்சம் சூப் (Soup) என்னும் மாமிசரசமாவது ரோஸ்ட் (Roast) கறியென்னும் சுட்டமாமிசமாவது வேகவைத்த கோழிக்கறியாவது சாப்பிடுவார்கள். பிறகு அரிசிமுதலிய தானியங்களின் மாவினால் முட்டையும் சருக்கரையும் சேர்த்துச்செய்த "புட்டிங்" (pudding) என்ற அல்வாபோன்ற பலகாரத்தைப் புசிப்பார்கள். இதற்குப்பதிலாக சீமை இலந்தைமுதலிய காய்களைச் சமைத்திருப்பதுமுண்டு. நாங்கள் சாப்பிடும்போது பதார்த்தங்களைப் பீங்கான் தட்டுகளில் வைத்து வேலைக்காரர்கள் மாற்றிமாற்றி எல்லாருக்கும் கொடுத்து வருவார்கள். இங்கிலாந்துதேசத்தில் வேலைக்காரர்களைப் போகச் சொல்லிவிட்டு ஆண் குழந்தைகளையே இந்தவேலையைச் செய்யச் சொல்லுவது வழக்கம். இவர்கள் தங்களுக்கு வேண்டிய தட்டுகளை ஒருவரிடத்திலிருந்து ஒருவர் மாற்றிக்கொள்ளுவதுமல்லாமல் தங்கள் தாய்க்கும் சகோதரிகளுக்கும் வேண்டியதைக்கொண்டுவந்து கொடுக்கப்பழகுவார்கள். இப்படிச் சிறுவயதிலேயே ஸ்திரீ ஜனங்களுக்குவேண்டிய பணிவிடைகளைச் செய்யக் கற்றுக்கொள்ளுவதால் பெரியவர்களானபிறகு பந்துக்களானாலும் சரி அன்னியரானாலும்சரி பெண்களாயிருந்தால் அவர்களுக்கு உபசாரமான உதவிகளை லக்ஷணமாய்ச் செய்வார்கள்.

சாப்பிடும்போது குழந்தைகள் பேசக்கூடாதென்று சிலர் சொல்லுகிறார்கள், சிலர் குழந்தைகள் பேசிக்கொண்டு சாப்பிடுவதே நல்லதென்கிறார்கள். சிறுகுழந்தைகள் சீக்கிரத்திலுண்ணுது இதுதான் சரியென்று நானும் நினைக்கிறேன். ஏனென்றால் பேசிருந்தால் நிதானமாய்ச் சாப்பிடுவார்களாகையால் ஜீரணத்துக்கு அநுகூலமாயிருக்கும். அல்லாமலும் அவர்களைத் தாராளமாய்ப் பேசவிட்டால், அவர்கள் மனம் எப்படிப்போகிறதென்று தெரிந்து, அதற்குத்தக்கபடி சரியானவழியில் அவர்களைத் திருப்பலாம்; அதற்கு இதைவிடநல்லசமயம் கிடைக்குமா?

பிள்ளைகளிருப்பது ஒருவருக்குப்பெருந்த பாரமல்லவா? நமக்கெப்படி இஷ்டமோ அப்படிக்குழந்தைகளை வளர்த்து உருவாக்கலாமாகையால் காலொரு வண்ணமாய்ப் பொழுதொருமேனியாய் அவர்களை வெகு ஜாக்கிரதையாய் வளர்த்துவந்தால் அற்புதமான சாமர்த்தியங்களும் லக்ஷணங்களும் உண்டானாலும் ஆகலாமே? தாய் தந்தைகள் ஆணை அடித்துவளர்க்கவேணும் பெண்ணைப் போற்றிவளர்க்கவேணும் என்பதுபோல செம்மையாய்ப் பார்த்துக்கொள்ளாவிட்டால் அவர்களே குழந்தைகளைப் பாழாக்கினதாகுமல்லவா?

தாய்தந்தைகளிடத்தில் ஏதாவது குற்றமிருந்தால் தந்தைகுணம் பிள்ளைக்குண்டு. தாயின் குணம் பெண்ணுக்குண்டென்பதுபோல அது குழந்தைகளுக்கும் வந்துவிடுவதுண்டு; அதனமாக நற்குணங்களைக் கற்றுக்கொள்ளுவதுமுண்டு. அப்

அரும் அற்றதே தாரம் ஊரில் ஒருவனே தோழன்.

போது ஆத்திரப்படாமல் அடுத்தவேலையாக அக்குற்றங்களை நீக்க முயன்றாலன்றி அவைகள் போகமாட்டா. குழந்தைகளை அசட்டையாய் விட்டுவிடாமல் அவர்களிடத்தில் பட்சம்காட்டி அவர்கள் போகும்வழிகளைக் கவனமாய்ப் பார்த்துவந்தால், நாம் அவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதைவிட அதிகமாக ஆதனமான விஷயங்களை நாமே கற்றுக்கொள்ளலாம். இப்படியிருக்கத் தாய்மார்களில் அநேகர் தங்கள் குழந்தைகள் சிசுக்களாயிருக்கும்போது வெகு கவனமாகப் பரிபாலித்துவந்திருக்க, சற்றுப்பெரிய பிள்ளைகளானபிறகு அவர்களைப்பார்த்துக்கொள்ளாமற் போய்விடுவதேன்? கைக்குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளுவதைவிடப் பெரியபிள்ளைகளைக் கிரமமான விதமாய் வளர்த்து வருவது கஷ்டந்தான். மூங்கிலை இளமையில் வளைக்கால் வளையும் முதிர்ந்தால் தொம்பரவர்காலின்றிற் நிற்கும் அதுபோல ஆகும். ஆனால் பெரிய குழந்தைகளைக் கிரமமான வழிக்குக்கொண்டுவரப் பிரயத்தினப்படுவதில் நாமே அநேக சங்கதிகளைக் கற்றுக்கொள்ளலாமாகையால் இந்தவேலை வெகு இன்பமானதுதானே ? இதையறிந்தால் பெண்கள் பெரிய குழந்தைகளைப்பார்த்துக்கொள்ளாமல் விட்டுவிடுவார்களா ? பெண்களுக்குக் கல்வி கற்றுக்கொடுத்தால் குழந்தைகளை சம்ரக்ஷிணை செய்யமாட்டார்களென்று சிலர் துயரப்படுகிறார்கள். இது சரியா? சரியல்ல நாளுக்குநாள் ஆலோசனைசெய்து படிப்படியாய் விவேகமுண்டாகி மென்மேலும் புத்தகங்களை வாசித்து இதர ஜனங்களுடைய அபிப்பிராயங்களையறியும்போது குழந்தைகளைக் கிரமமாகவளர்ப்பது தாயைச்சேர்ந்த பெருத்த கடனென்று தெரியாமற்போகுமா? வெளியே போய்ப் பிள்ளைகளுக்காகப்பாடுபட்டுச் சம்பாதித்துப் பணத்தைச்சேர்த்து அந்தஸ்துள்ளவர்களாக்குவது தகப்பனுடைய கடன். இந்தவேலையே அவனுக்குச் சரியாயிருக்கிறது, அல்லாமலும் விசேஷமாக வீட்டிலிருக்கவும் ஒழியாது. ஆகையால் குழந்தைகளைக் கவனித்து அவர்களை நன்னடக்கையுள்ளவர்களாக்கத் தகப்பனாலாகுமா? தாயோ வீட்டிலேயே இருப்பவள்; அவளுக்குத் தன் குழந்தைகள்வேலையைவிட விசேஷமான காரியம் என்ன ? ஆனால் குழந்தைகள் பெரியவர்கள் ஆகஆக அவர்களை வளர்க்கும் கஷ்டம் அதிகமாகிறது; ஏனென்றால் போகப்போக அவர்களை வழிக்குக் கொண்டுவருவதில் சாந்தமும் கூர்மையான புத்தியும் வேண்டியிருக்கிறது. இளமையில்முயற்சி முதுமையிற்காக்கும். ஆகையால் பெண்கள் எவ்வளவு படித்தவர்களாயிருக்கிறார்களோ அவ்வளவுக்குத் தங்கள் குழந்தைகளைச் செவ்வையாய் வளர்க்கும் சாமர்த்தியம் உண்டாகும்.

போஜனவேளையில் குழந்தைகளைப் பேசவிடவேண்டுமென்று சொன்னதினாலே குழந்தைகளை வளர்ப்பது எவ்வளவோ கஷ்டமான வேலையென்றும், அதற்காகப் பெண்களுக்குக் கல்வி வேண்டியதென்றும் சற்று விஸ்தாரமாக எழுதிவிட்டேன்? அது நிற்க, குழந்தைகள் மத்தியானத்துக்குமேல் சாப்பிடுவார்களென்றல்லவா சொன்னேன்? துரைசானிகள் கிரமமாக வேலைசெய்துவந்தால் இன்னவிதமாக நடப்பார்களென்பதையெழுதுகிறேனாகையால், நான்சொல்லிவரும் துரைசானி குழந்தைகள் சாப்பிடும்போது அவர்களோடு பேசிக்கொண்டிருப்பாள். கொஞ்சநேரத்தில் சாப்பிட்டு முடிந்துபோகும். சாப்பிட்டபிறகு மறுபடியும் எழுந்து நின்றுகொண்டு சுவாமியைப்பார்த்து "எல்லாம் நீங்கள் தந்ததுதான்" என்று வந்தனம் செலுத்திவிட்டு விளையாட ஓடிப்போவார்கள். சாயங்காலம் நான்குமணிக்குமேல் ஐந்துமணிக்குள்ளாக எல்லாரும் வெளியே சவா

ரிபோவது வழக்கமாதலால், அதுவரைக்குமுள்ளகாலத்தைப் பலவிதமாய்க் கழிப்பதுண்டு. இந்தவேளையில் சிநேகிதர்கள் யாரும் பார்க்க வரமாட்டார்கள். துரைசானியானவள் தனதிஷ்டப்படி சாவதானமாய் உடைகள் தரித்துக்கொண்டும் வேறெந்தவேலையாவது செய்துகொண்டுமிருக்கலாம். அதிகாலையில் படுக்கைவிட்டெழுந்திருந்தால் நித்திரைகெட்டிருக்கும் அல்லது அன்றிராத்திரி யார்வீட்டுக்காவது விருந்துக்குப் போகவேண்டியிருந்தால் ஒருவேளை இங்கிலீஷ்காரர் வழக்கப்படி சாப்பிட்டபிறகு கைகோர்த்து ஆடவேண்டியிருக்கும்; திரும்பி வீட்டுக்குவரப் பொழுதுபோகுமாதலால் நித்திரைகெடும்; இப்படி நித்திரைகெட்டிருந்தாலாவது நித்திரைகெடுவதாயிருந்தாலாவது மத்தியானத்துக்குமேல் சற்றுத் தூங்கி எழுந்திருக்கவேண்டியிருக்கும். உஷ்ணதேசமாகிய இந்தியாவிலேயிருக்கும்இங்கிலீஷ்துரைசானிகள் பகலில் சற்று நித்திரைசெய்துஎழுந்திருப்பதே நல்லது; ஏனென்றால்தேகத்துக்கு சௌக்கியம் உண்டாகும். நாலரைமணிநேரத்துக்குத் துரைசானியை எழுப்பி ஒருகோப்பையில் தேத்தண்ணி கொண்டுவந்து கொடுப்பார்கள். இதைச்சாப்பிட்டு ஆயாசம்தீர்ந்தபிறகு வெளியே போவதற்காக உடுத்திக்கொள்ளப்போவாள். ஒருவேளை சாயங்காலம் தேத்தண்ணி சாப்பிட யாராவது இஷ்டர்கள் வருகிறதாகச் சொல்லியிருந்தால், எழுந்ததும் உடுத்திக்கொண்டு "ட்ராயிங்" அறையில் சித்தமாயிருந்து, சிநேகிதர் வந்தபிறகு அவர்களோடு தேத்தண்ணி சாப்பிடுவார்கள்.

ஐந்துமணியாவதற்குமுன்னமே வெளியே போகவேண்டுமென்று எல்லாரும் ஆத்திரப்பட்டுக்கொண்டிருப்பார்கள். ஆனால் துரைசானி கடையில் ஏதாவது வாங்கவேண்டியிருந்தாலும், எங்கேயாவது சபைகூடுமிடத்துக்குப் போகவேண்டியிருந்தாலும், சிநேகிதர்களைப் பார்க்கவேண்டியிருந்தாலும், மற்றவர்கள் புறப்படுவதற்கு முன்னமே வெளியே போகவேண்டிநேரிடும்.

வீட்டிலுள்ளவர்களுக்கு வேண்டியவஸ்திரங்களெல்லாம் துரைசானியே வாங்குவதுவழக்கம். மொத்தமாக வாங்கத்தக்க போஜனபதார்த்தங்களும், இன்னம் வீட்டுக்குவேண்டிய வேறு சாமான்களும் அவள்தான் வாங்கவேண்டும். துரைகள் இந்த வேலை வைத்துக்கொள்ளுவதில்லை. கடைக்குப்போய் வியாபாரம்செய்வதற்கே அவர்களுக்கு இஷ்டமில்லை. ஒவ்வொருநாள் சபை கூடுமிடத்துக்காவது, யாராவது சிநேகிதர் வீட்டுத் தோட்டத்தில் பலபேர் கூடி வேடிக்கையாய்ப் பொழுதுபோக்க வரும்படி அழைத்திருந்தால் அங்கேயாவது, துரையும் போவதாயிருந்தால் துரைசானியானவள் வெளியே சவாரிபுறப்பட்டவுடனே புருஷனுடைய உத்தியோகசாலைக்குப்போய் அங்கிருந்து இருவரும் சேர்ந்து போவார்கள். ஆனால் பிரதிதினமும் இப்படி துரை உத்தியோகத்தைவிட்டு முன்னதாக வந்துவிட ஒழியாது. ஆகையால் சாதாரணதினங்களில் துரைசானியானவள் உத்தியோகம்செய்யுமிடத்திற்குவந்து துரை வேலையாயிருப்பதால் நெடுநேரம் வண்டியிலேயே காத்துக்கொண்டிருப்பதுவழக்கம்.

சிநேகிதர்களைப் பார்க்கவேண்டியிருந்தால் அந்த வேலையையும் சாயங்காலத்திலேதான் செய்யவேண்டும். நமது வீட்டுக்குவந்தவர்களை நாமும்போய் அவர்கள் வீட்டில் காணவேண்டியது மரியாதையல்லவா? கல்யாணமாகாமலிருந்தாலும் கல்யாணமாயிருந்தும் பெண்சாதிகள் தேகசௌக்கியத்திற்காக சீர்மைக்குப்போயிருந்தாலும் துரைகள் வீட்டிலேயேயிராமல் சிநேகிதர்களைப்போய்ப் பார்த்துக்கொண்டு வருவார்கள். மறுபடியும் இவர்களைப்போய்

ப்பார்க்கத் துரைக்கு ஒழியாதாகையால்
துரைசானிதான் போகவேண்டும். அப்படி
யவள்போனாலும் அவர்தன்வீட்டில் கிடை
ப்பது அருமை. எப்போதும் உத்தியோகத்தி
லாவது வெளியேபோய்ச் சிநேகிதரைப்
பார்த்துக்கொண்டாவது காலத்தைக்கழிப்
பவர்களாதலால், அவர்கள் வீட்டிலிருக்க
மாட்டார்கள் என்பது நிச்சயம். ஆனாலும்
அவர்கள் வீட்டுக்குப் போகாமலிருப்பது
மரியாதையல்லவாகையால், துரைசானி
யானவள் அப்படித் தன்னையும் தன் புரு
ஷனையும் பார்க்கவந்திருந்த துரைகள்வீட்
டுக்கெல்லாம்போய் அவர்கள்வீட்டில் இல்
லாததால், தான்வந்திருந்த சங்கதி அவர்
களுக்குத் தெரியும்பொருட்டு, அதற்கென்
றே தன்பெயரை அச்சிட்டிருக்கும் சீட்டொ
ன்றை வேலைக்காரரிடம் கொடுத்துவிட்டு
வந்துவிடுவாள். இப்படி வீடுவீடாய்ப்
போய் வெளியேயிருந்தபடியே சீட்டைக்
கொடுத்துவருவதால் துரைசானிகளுக்கு
வெகுகாலம் அநியாயமாய்ப் போய்விடுகி
றது. ஆகையால் இந்தவழக்கத்தை நிறு
த்திவிட்டு வேறு ஏற்பாடு ஒன்றுசெய்தால்
நல்லதென்று எனக்குத் தோன்றுகிறது.
அண்டைவீட்டுக்காரருக்கும் சிநேகிதர்க
ளுக்கும் மரியாதைசெய்யவேண்டியதுதா
ன்; ஆனால் அதற்காக இப்படி வீணாய்க்
காலத்தைப்போக்காமல் வேறெந்தவிதமா
யாவது அவர்களுக்கு மரியாதைசெலுத்த
வேண்டும். தன்வீட்டுக்குவந்தவர்கள் இன்
னாரென்பதையும் அதற்குப்பதிலாய் அவர்
கள்வீட்டுக்குப்போய்வந்ததையும் ஒரு பு
த்தகத்தில் குறித்துவைப்பதுவழக்கம். இ
துகஷ்டமானவேலையாகையால் வீட்டில் ம
கள் முதலிய பெண்குழந்தைகளிருந்தால்
இந்தவேலையை அவள்வசம் ஒப்புவிப்பது
வழக்கம்.

குழந்தைகளும் தாயோடு சவாரிபோவா
ர்கள். வேறுவண்டியிருந்தால் தங்களைப்
பார்த்துக்கொள்ளும் வேலைக்காரியோடு
தனியாய்ப்போவதுமுண்டு. சூரியன் அஸ்
தமிக்கும்வேளையில் தாய்தகப்பன் குழந்
தைகள் எல்லாரும் சுத்தமான காற்றுள்ள
இடமாகிய கடற்கரையில்வந்து சேருவார்
கள். தகப்பன் காலையில் சாப்பிட்டு உத்தி
யோகத்திற்குப்போனபிறகு சாயங்காலம்
சற்றுநேரம் இப்படிக் கடலோரத்தில் குழந்
தைகள் தகப்பனோடிருக்கிறார்களே இதுதா
ன். என்னசெய்கிறது, குழந்தைகள் தகப்ப
னோடு விசேஷமாய்க்கூடியிருக்கச் சந்தர்ப்
பப்படுகிறதில்லையே. ஆனால் எங்கள் மதப்
படி ஞாயிற்றுக்கிழமைத்தினம் ஓய்வுநாள்
ஆகையாலும், சவாரிபோவது வேலையின்
பேரிலாவது வெளியே போகக்கூடாதாகை
யாலும், அன்றைக்குத் துரையும் துரைசானி
யும் வீட்டிலேயே குழந்தைகளோடும்அன்
னியோன்னியமான சிநேகிதர்களோடும்
பொழுது போக்கிக்கொண்டிருப்பார்கள்.

எழுமணியானபிறகு கடற்கரையினின்று
வீடுவந்துசேருவார்கள். வந்ததும் குழந்
தைகளுக்குப் பாலும்ரொட்டியும் ஊட்டிக்
கடற்பஞ்சைத் தண்ணீரில்தோய்த்து அதி
னால் உடம்பைத்துடைத்து, தலையைவாரி
னவுடன், குளிர்ச்சியாயிருக்கும்படியாய்ப்
பருத்தித்துணியிலாவது மெல்லிய கம்பளி
யிலாவதுசெய்த அங்கியைப்போட்டுக்கொ
ண்டு படுத்துக்கொள்ளச் சித்தமாயிருப்
பார்கள். குழந்தைகளுக்கு இப்படியெ
ல்லாம் செய்துகொண்டிருக்கையில், தா
யும் தகப்பனும் "டின்னர்" என்னும் மாலை
போஜனத்துக்காக உடை தரித்துக்கொண்
டிருப்பார்கள். சாயங்காலம் உலாத்தின
தாலாவது தென்னிஸ் (tennis) என்னும்
பந்தாட்டம் ஆடினதாலாவது உடம்புவே
ர்த்திருந்தால் உடுப்பையெல்லாம் மாற்ற
வேண்டியிருக்கும். தானும் புருஷனுமா
த்திரம் சாப்பிடுவதாயிருந்தால் துரைசானி
அவசரப்படமாட்டாள். சிநேகிதர்கள் சா

ப்பாட்டுக்குவருவதாயிருந்தாலும் தாங்கள்
ஒருவர் வீட்டுக்குப்போய்ச் சாப்பிடுவதா
யிருந்தாலும் வெகுசீக்கிரமாய்ச் சித்தமாக
வேண்டும். தாய் உடைதரித்துக்கொண்
டிருக்கும்போது கூடவே யிருக்கவேண்டு
மென்று சிறுகுழந்தைகளுக்கு ஆசை. தா
யாருடையநகைகளை யெடுத்துப்பார்க்கிற
தும் "எவ்வளவு நன்றாயிருக்கிறாய்" என்று
தாயைப்பார்த்துச் சொல்லுகிறதும், பெ
ண்குழந்தைகள் "நாங்களும் பெரியவர்க
ளானால் இப்படியே உடுத்திக்கொண்டு ந
கைகளை யணிந்து தலையில் இறகுகளையும்
புஷ்பங்களையும் சூடிக்கொள்ளுவோமல்ல
வா" என்று சொல்லுகிறதும் அவர்களு
க்குப் பெரியசந்தோஷம்.

துரைசானி உடுத்திக்கொண்டவுடனே
குழந்தைகள் படுத்துக்கொள்ளப்போவார்
கள். தாயெதிரில் சுவாமியைப்பார்த்து
ஸ்துதிசெய்துவிட்டுக் குழந்தைகள் தங்க
ள்தங்கள் சிறுகட்டில்களில் படுத்துக்கொ
ள்ளுவார்கள். அப்போது தாய் அவர்களை
முத்தமிட்டுவிட்டுச் சாப்பிடப்போவாள்.
குழந்தைகளில் யாருக்காவது தேகசௌ
க்கியம் தப்பியிருந்தால் அந்தக் குழந்தை
யைப்பற்றி வேலைக்காரியோடு பேசிவிட்
டுப்போவாள். ஆனால் இப்படி அடிக்கடி
நேரிடாது. ஏனென்றால் சிறுகுழந்தைக
ளுக்கு இந்தத்தேசம் ஒத்துவருகிறது. சற்
றுப் பெரியவர்களானபிறகுதான் இங்கே
யே யிருக்கச் சரிப்படுகிறதில்லை. குழந்
தைகளுக்கு மருந்துகொடுத்துப் பத்திரமா
ய்ப் பார்த்துக்கொள்ளவேண்டியிருந்தாலும்,
வைத்தியனை வருவிக்கவேண்டி யிருந்தா
லும் இன்னது செய்யவேண்டியதென்று
துரைசானியே தீர்மானம்செய்துகொள்ளு
வாளேயன்றிப் புருஷன்வரைக்கும் வரமா
ட்டாது. ஏனென்றால் துரைக்கு உத்தி
யோகமுதலிய விடங்களில் போதுமான
அலைச்சலுண்டு, தனக்கில்லையென்று தெரி
ந்து துரைசானியானவள் வீட்டுக்கஷ்டங்க
ளையெல்லாம் புருஷனோடுசொல்லி வீணா
ய் என் சங்கடப்படுத்தவேண்டுமென்று வீ
ட்டுத்தொந்தரவுகளையெல்லாம் தானே நிர்
வகித்துக்கொள்ளுவாள். பெண்சாதி புத்தி
சாலியாயிருந்தால் தன்புருஷன் வெளியே
போய்நாளெல்லாம் பிரயாசைப்பட்டு வீட்
டுக்குவரும்போது அதுப்பற்றிருக்கும்படி
செய்வாள். புருஷன் ஆயாசமாய் வீடுவந்
துசேரும்போது பெண்சாதியானவள் மன
தைச் சந்தோஷப்படுத்தவேண்டியதல்ல
வா? கிரமமாய் துரைசானிகள் இவ்விதமா
யிருப்பார்களென்று நான் விவரித்து வரு
கிறேனாகையால், நான் சொல்லிவரும் து
ரைசானிபுருஷன் சாயங்காலம்வந்து சாப்
பிடும்போது வீட்டுத் துக்கங்களையெல்லாம்
கொண்டுவந்து எதிரில்போடாமல், வேடி
க்கையானகதைகளைச் சொல்லி சாதுர்
யமான வார்த்தைகளால் அவனைச் சந்
தோஷப்படுத்துவாள். ஹிந்துக்களாகிய
உங்களுக்குள்ளும் இப்படிச்செய்வதே புத்
திசாலிகளுடைய வழக்கமாயிருக்குமல்ல
வா? விசேஷ சாப்பாடாகிய சாயங்கால
போஜனத்தை நாங்கள் சாப்பிடும்விதமும்
சாயங்காலவேளையை நாங்கள் கழிக்கிறவித
மும் அறிய உங்களுக்குப் பிரியமாயிருந்
தால்வேறொரு சஞ்சிகையில் சொல்லுகி
றேன்.

1888ஆம் வருஷம் டிசம்பர் மீ புதிர் முதலானவைகளை விடுவிக்கும் வகை[illegible]

1. வெளியில் விருத்துக்க[illegible]போது.
2. மூச்சு காற்று.
3. தன் கைகளிரண்டையும் எடுத்து முகத்தின்
மேல் வைத்துக்கொண்டிருப்பதால்.
4. ஒன்று 42 மற்றொன்று 2[illegible] ஆகும்.
5. கோட்டே பெரிது; சா[illegible]ல் வைத்தால்
இரட்டையாகின்றது, [illegible]ல் விரிவா
கின்றது.
6. மூக்குத்தண்டு.
7. ஒரு கெர்ப்பஸ்திரீ தன் கைக்குழந்தையை
யெடுத்துக்கொண்டு வழியிற்போகும்போ
து, மூன்று மாதமான ஒரு பாம்பின்விஷம்
குளத்தின் துறைமுகத்தில் தண்ணீருடன்
கலந்திருந்த நீரைச் சாப்பிட்டதனால் அவ
ர்கள் செத்து மூன்றுநாளாயிற்றென்றும்,
அம்மூவரைக் கொன்ற விஷமுள்ள பாம்பு
செத்து மூன்றுமாதமாயிற்றென்றும், மூ
ன்றுவருஷகாலமாக உலர்ந்திருந்த ஆல
மரத்தின் விறகினால் இவர்களைச்சுட்டதெ
ன்றும் சொன்னான்.

161438
600 008.

Printed and published for the proprietor at
the V. N. Jubilee Press,
No. 1, Umpherson Street, Madras.

All Right Reserved.

THE MAHARANI

In Tamil.

Published every other Month.

"Colored Pictures for laughing eyes,
Stories fresh and lessons wise,
Easy Rhymes and Songs to sing,
Every page with a new Surprise"—
That's what the "Maharani" does bring.

With The Number for June 1889 will begin Vol. III,

ABUNDANT ILLUSTRATIONS

And a new series of Papers contributed by Ladies, and observations on the progress of Vegetation and the Birds & Butterflies peculiar to each Season and its chief Astronomical Events being the SPECIALITY of the new Volume.

NOW IS THE TIME TO SUBSCRIBE!

OBTAINING THE MAHARNI.

THE MAHARANI CAN BE HAD THROUGH THE ADDISON PRESS, MOUNT ROAD, MADRAS, OR
Direct by Post from the Manager of the MAHARANI Office
at the Jubilee Press,

Annual Subscription Payable in Advance.

RUPEES 2. POSTAGE 3 ANNAS.

P. S. Enterprising Retail Tradesmen are required to act as Special Agents to extend the circulation of the **Maharani** *both in Town and Country. Particulars on Application to the Manager.*

HOME SERIES,

In the Vernacular Languages

(FULLY ILLUSTRATED AND MOST SUITABLE FOR PRIZES)

BY V. KRISHNAMA CHARIAR,

Fellow of the Madras University; Author of the Vernacular Fourth Reader, Madras Series, &c., &c.

	Rs.	A.
Select Fables of Æsop in Tamil Verse, with Illustrations ...	0	10
The Story of Pachai Ammal, the Sick-nurse, in Tamil ...	0	6
The Queen-Empress Victoria and Her Empire on which the Sun Never Sets (in Tamil and Telugu) A Jubilee Sketch with a colored Portrait and the Empire Map; 2nd Ed. each ...	0	4
Telugu Picture Alphabet in book form ...	0	5
Tamil Picture Alphabet Do ...	0	5
Tamil Alphabet in Rhyme ...	0	½
Malayalam Picture Alphabet Do ...	0	5
English Alphabet Sheet to make a Double Alphabet with the above books. ...	0	1
Tamil Sheet Alphabet with Enlarged Pictures and Rhymes on Card Board for the use of Nurseries and Infant Schools ...	1	12
Do Do Do Unmounted ...	1	0

TO BE FOLLOWED BY

A Trip through the Countries of the Old World with richly colored Map-Pictures, in Tamil Rhyme and Prose.

N. B. *For the above Series, apply to the School Book and Vernacular Literature Society's and Christian Vernacular Education Society's Depositories, Madras; the Addison Press, and all Booksellers, Madras.*